ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

கம்பநாட்டாழ்வார்

அருளிச்செய்தது.

மூன்றாவது

ஆரணியகாண்டம்.

சென்னைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவர்

திரு - வேங்கடாசலமுதலியாரால்

௰௪ - பிரதிகளைக்கொண்டு - ௯௱ - பாடல்வரையில்பிழைகள்

ஆராய்ந்து - பதிக்கப்பட்டுப்பின்புமற்றப்பாடல்கள்

இவர்பந்துவாகிய

புதுவைமாநகரத்தைச்சார்ந்த - சேமங்கலம்

நாராயணசாமிமுதலியாரால்

ஷெயார் சோதித்தபடியே சோதிக்கப்பட்டு

சரஸ்வதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இது

திரு - வேங்கடாசலமுதலியாரது முக்கிய இஷ்டர்

ஆயலூர்-பொன்னரங்கமுதலியாரால்

நிறைவேறினது.

சாலிவாகனசகாப்தம் - ௲௭௱௯௭ - குரோதிஞ

இதன்விலை - ரூ

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

ஹரிஓம்.



நன்றாக.... குருவாழ்க.... குருவே துணை.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

௩-வது. ஆரணியகாண்டம்.

முதலாவது விராதன்வதைப்படலம்.

காப்பு.

பேதியாது நிமிர் பேத உருவம் பிறழ்கிலா *
ஓதி ஓதி உணரும் தொறும் உணர்ச்சி உதவும் *
வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா *
ஆதிதேவர் அவர் எம் அறிவினுக்கறிவரோ. (௧)

முத்திருத்தி அவ் இருந்தனைய மொய் நகையொடும்
சித்திரக் குனிசிலைக் குமரர் சென்றணுகினார்
அத்திரிப் பெயர் அருந்தவன் இருந்த அமைதி
பத்திரப்பழுமரப்பொழில் துவன்றபழுவம். (௨)

திக்குறும்செறிபரம் தெரிய நின்றதிரள்பொற்
கைக்குறுங்கண்மலைபோல்குமரர்காமமுதல் ஆம்
முக்குறும்பற எறிந்த வினைவான் முனிவனை
புக்கிறைஞ்சினர் அருந்தவன் உவந்துபுகலும். (௩)

குமரர் நீர் இவண் அடைந்துதவுகொள்கை எளிதோ
அமரர்யாவரொடும் எவ்உலகும் வந்த அரவே
எமரின் யார் தவம்முயன்றவர்கள் என்றுருகினன்
தமர் எலாம் வர உகந்தனைய தானமுனிவன். (௪)

அன்னமாமுனியொடன்றவண் உறைந்தவன் அரும்
பன்னிகற்பின் அநுசூயைபணியால் அணிகலன்
துன்னு தூசியொடுசந்திவைசுமந்தசனகன்
பொன்னொடேஉயர் தண்டகவனம்புகுதலும். (௫)

எட்டொடெட்டுமதமாகரிஇரட்டிஅரிமா
வட்டவெங்கண்வளை ஆளிபதினாறுவகையில்
கிட்டவிட்டிடைகிடந்தனசெறிந்தஒருகை
தொட்டமுத்தலைஅயில்த்தொகைமிடற்கழுவொடே. (௬)

செஞ்சுடர்ச்செறிமயிர்ச்சுருள்செறிந்தசெனியன்
நஞ்சுதட்டுருவுபெற்றிடைநடந்ததெனமா
மஞ்சுசுற்றியவயங்குகிரிபாதவிசையில்
பஞ்சுபட்டதுபடப்படியின்மேல்முடுகியே. (எ)

புண்டுரங்கிஅனகண்கள்கனல்பொங்கமழைசூழ்
விண்டுரங்கிடவிலங்கல்கள்குலுங்கவெயிலும்
கண்டுரங்கதிர்குறைந்திடநெடுங்கடல்சுவாம்
மண்டுரங்கவயஅந்தகன்மனம்தளரவே. (அ)

புக்குவாள்அரிமுழங்குசெவியின்பொறிஉற
பக்கம்பின்னுமணிமேருசிகரங்குழைபட
செக்கர்வான்மழைநிகர்த்தஎதிர்உற்றசெருவத்
துக்கவீரர்உதிரத்தின்ஒளிர்செச்சையினொடே. (௯)

படையொடாடவர்கள்பாய்புரவிமால்களிறுதேர்
நடையவாள்அரிகள்கோள்உழுவைநண்ணியஎலாம்
அடையவாரிஅரவால்அசைஅனேகவிதஅம்
தொடையல்மாலைதுயல்வந்துலவுதோள்பொலியவே. (௰)

குன்றுதுன்றினஎனக்குமுறுகோபமதமா
ஒன்றின்ஒன்றிடைஅடுக்கினதடக்கைஉதவ
பின்றுகின்றபிலனிற்பெரியவாயின்ஒருபால்
மென்றுதின்றுவிளியாதுவிரியும்பசியொடே. (௧௧)

பன்னகாதிபர்பணாமணிபறித்தவைபகுத்
தென்னவிண்ணவர்விமானம்இடையிட்டரவிடை
துன்னுகோளினொடுதாரகைதொடுத்ததுமணிச்
சன்னவீரம்இடை[illegible]ர்பினொடுமே. (௧௨)

பம்புசெக்கரெரிஒக்கும்மயிர்பக்கம்எரிய
கும்பம்உற்றஉயர்நெற்றியின்விசித்தொளிகுலா
உம்பருக்கரசன்மால்கரியின்ஓடைஎயிறின்
கிம்புரிப்பெரியதோள்வளையொடும்கிளரவே. (கங)

தங்குதிண்கரியகாளிமைதழைந்துதவழ
பொங்குவெங்கொடுமைஎன்பதுபூங்கிளமமா
மங்குபாதகம்விடம்கனல்வயங்கிதிமிர
கங்குபூசிவருகின்றகலிகாலம்எனவே. (கச)

செற்றவாள்உழுவைவன்செறிஅதள்திருகுற
சுற்றிவாரணஉரித்தொகுதிநீவிதொடர
கொற்றம்மேவுதிசையானையின்மணிக்குலம்உடை
கற்றைமாசுணம்விரித்துவரிகச்சொளிரவே. (கரு)

செங்கணங்கஅரவின்பொருவில்செம்மணிவிராய்
வெங்கணங்கவலயங்களும்விலங்கவிரவி
சங்கணங்கியசலஞ்சலம்அலம்புதவளக்
கங்கணங்களும்இலங்கியகரம்பிறழவே. (கசா)

முந்துவெள்ளிமலைபொன்னின்மலையோடுமுரண
பந்துமுந்துகழல்பாடுபடஊடுபடர்வோன்
வந்துமண்ணின்இடையோன்எனினும்வானின்இமையோர்
சிந்தைஉள்ளும்விழிஉள்ளும்உரன்என்றதிறலோன். (கஎ)

பூதம்அத்தனையும்ஓர்வடிவுகொண்டுபுதிதென்
றோதஒத்தஉருவத்தன்உரும்ஒத்தகுரலன்
காதலித்தயன்அளித்தகடைஇட்டகணிதப்
பாதலக்கமதவெற்பிடைபடைத்தவலியான். (கஅ)

சாரவந்தயல்விலங்கினன்மரங்கள்தறையில்
போரவன்கிரிபிளந்துகவரார்த்திகல்பெரு
வீரவெஞ்சிலையிலோனெதிர்விராதன்எனும்அக்
கோரவெங்கண்உருமேறனகொடுந்தொழிலினான். (ககூ)

நில்லும்நில்லும்எனவந்துநிணம்உண்டநெடுவெண்
பல்லும்வல்எயிறும்மின்னுபகுவாய்முழைதிறந்
தல்லிபுல்லும்அலர்அன்னம்அனையாளைஒருகை
சொல்லும்எல்லையில்முகந்துயர்விசும்புதொடர. (உ0)

காளைமைந்தர் அதுகண்டுகதம்வந்துகதுவ
தோளில்வெஞ்சிலைஇடம்கொடுதொடர்ந்துசுடர்வாய்
வாளிதங்கியவலங்கையவர்வஞ்சனைஅடா
மீள்திஎங்ககல்திஎன்பதுவிளம்பஅவனும். (உக)

ஆதிநான்முகன்வரத்தின்எனதாவிஅகலேன்
ஏதியாவதுவும்இன்றிஉலகியாவும்இகலிற்
சாதியாதனவும்இல்லைஉயிர்தந்தனன்அடா
போதிர்மாதிவளைஉந்திஇனிதென்றுபுகல. (உஉ)

வீரனுஞ்சிறிதுவெண்முறுவல்வெண்ணிலவுக
போரறிந்திலம்இவன்தனதுபொற்பும்முரணும்
தீரும்எஞ்சினனெஞ்சின்உறுசிந்தைதெரியா
பாரவெஞ்சிலையின்நாண்ஒலிபடைத்தபொழுதே. (உங)

இலைகொள்வேல்அடல்இராமன்எழுமேகஉருவன்
சிலைகொள்நாண்நெடியகோதைஒலியேறுதிசைநீர்
மலைகள்நீடுதலம்நாகர்பிலம்வானம்முதலாம்
உலகம்ஏழும்உருமேறெனஒலித்துரறவே. (உச)

வஞ்சகக்கொடியபூசைநெடுவாயில்மறுகும்
பஞ்சரக்கிளிஎனக்கதறுபாவையைவிடா
நெஞ்சுளுக்கினன்எனச்சிறிதுநின்றுநினையா
அஞ்சனகிரிஅனான்எதிர்அரக்கன்அழலா. (உரு)

பேய்முகப்பிணிஅறப்பகைஞர்பெட்பின்உதிரம்
தோய்முகத்ததுகனத்ததுசுடர்க்குதிரையின்
வாய்முகத்திடைநிமிர்ந்துவடவேலைபருகும்
தீய்முகத்திரிசிகைப்படைதிரித்தெறியவே. (உசா)

திசையும்வானவரும்நின்றதிசைமாவும்உலகும்
அசையும்ஆலம்எனஅன்னஅயில்மின்னிவரலும்
வசையில்மேருமுதல்மால்வரைகள்ஏழின்வலிசால்
விசையவார்சிலைஇராமன்ஒருவாளிவிடவே. (உஎ)

இற்றதின்றொடிவ்அரக்கர்குலம்என்றுபகலே
வெற்றவிண்ணினிடைநின்றுநெடுமீன்விழுவபோல்
சுற்றமைந்தசுடர்எஃகமதிரண்டுதுணியா
அற்றகண்டம்அவைஆசையினதந்தம்உறவே. (உஅ)

தூரொடுங்கயில்துணிந்திறுதல்கண்டுசிறிதும்
போரொடுங்கிலன்மறம்கொடுபுழுங்கிநிருதன்
பாரொடுங்குறுகரம்கொடுபெருப்பதம்எலாம்
வேரொடுங்கடிதெடுத்தெதிர்விசைத்துவிடலும். (௨௯)

வட்டம்இட்டகிரிஅற்றுகவயங்குவயிரக்
கட்டமைத்தகதிர்வாளிஎதிரோடவலால்
விட்டவிட்டமலைமீதுஅவன்மெய்யில்விசையால்
பட்டபட்டஇடம்எங்கும்உடல்ஊறுபடலும். (௩௰)

ஓமராமமறைஒருங்கும்உணர்வோர்உணர்வுறும்
நாமராமவரைநல்அறம்நிறுத்தநணுகி
தாமராவணைதுறந்துதரைநின்றவரைஓர்
மாமராமரம்இறுத்ததுகொடெற்றவரலும். (௩௧)

ஈறுசேவகன்இரண்டிரண்டுகணையால்
வேறுவேறுதுணிசெய்தனவிழுத்திவிசையால்
மாறுமாறுநிமிர்தோளிடையும்மார்பினிடையும்
ஆறும்ஆறும்அயில்வெங்கணைஅழுத்தஅவனும். (௩௨)

மொய்த்தமுள்த்தனதுடற்றலைதொளைப்பமுடுகி
கைத்தலத்தில்நிமிரக்கடிதுகன்றிவிசிறும்
மெய்த்தமெய்ப்பெரியகேழல்எனஎங்கும்விசையில்
தைத்தஅக்கணைதெறிப்பமெய்சிலிர்த்ததறவே. (௩௩)

எரியின்வார்கணைஇராமன்விடஎங்கும்நிலையா
துருவிஓடமறம்ஓந்துதல்செயாஉணர்விலன்
அருவிபாயும்வரைபோல்குருதிஆறுபெருகி
சொரியவேகவிகெட்டுணர்வுசோர்வுறுதலும். (௩௪)

மெய்வரத்தினன்மிடற்படைவிடப்படுகிலன்
செய்யும்மற்றும்இகல்என்றுசினவாள்உருவிவன்
கய்துணித்தும்எனமூர்த்துகடுகிப்படர்புயத்
தெய்வில்மற்பொருவுதோள்இருவர்ஏறநிருதன். (௩௫)

உண்டெழுந்தஉணர்வவ்வயின்உணர்ந்துமுடுகி
தண்டெழுந்தனையதோள்கொடுசுமந்துதழுவி
பண்டெழுந்தனதுவன்கதிபதிற்றின்முடுகி
கொண்டெழுந்தனன்விழுந்தழிகொழுங்குருதியான். (௩௬)

முந்துவான்முகடுறக்கடிதுமுட்டிமுடுகி
சிந்துசோரியொடுசோரிகைதிரிந்தனன் அரோ
வந்துமேருவினைநாள்தொறும்வலம்செய்தொழில்வோர்
இந்துசூரியரைஒத்திருவரும்பொலியவே. (௫௭)

சுவணவண்ணநெடுகண்ணன் உறைதோளன்விசைதோய்
அவனன்விண்ணிடைநிமிர்ந்துபடர்கின்றவன் அறம்
சிவணதன்னசிறைமுன் அவரோடேகுசெலவத்
துவணன்என்னும்நெடுமன்னவனும்ஒத்தனன் அரோ. (௫௮)

மாதயாஉடையதன்கணவன்வஞ்சன்வினையில்
போதலோடும்அலமந்தனள்புலர்ந்துபொடியில்
கோதையோடும்ஒசிகொம்பெனவிழுந்தனள்குலச்
சீதைசேவல்பிடிஉண்டசிறைஅன்னம்அனையாள். (௫௯)

பின்னைத்தும்உதவும்துணைபெருள்உணாபெருள்
மின்னைய்இடைநுடங்கிடவிரைந்துதொடர்வாள்
அன்னையேஅனையஅன்பின்அறவோர்கள்தமைவிட்
டென்னையேநுகர்திஎன்றனள்எழுந்துவிழுவாள். (௬௰)

அழுதுவாய்குழறிஆர்உயிர்அழுங்கிஅலையா
எழுதுபாவைஅனையாள்நிலைஉணர்ந்திளையவன்
தொழுதுதேவிதுயர்கூரவிளையாடல்தொழிலோ
பழுதுவாழிஎனஊழிமுதல்வன்பகர்வுறும். (௬௧)

ஏகநின்றநெறிஎல்லைகடிதேறிஇனிதிற்
போகல்நன்றெனநினைந்தனன் இவன்பொருவிலோய்
சாகல்இன்றுபொருள்அன்றெனநகும்தகைமையோன்
வேகவெங்கழலின்உந்தலும்விராதன்விழவே. (௬௨)

தோளிரண்டும்வடிவாள்கொடுதுணித்துவிசையால்
மீளிமொய்ம்பினர்குதித்தலும்வெகுண்டுபுருவத்
தேளிரண்டும்நெரியச்சினவுசெங்கண்அரவக்
கோளிரண்டுசுடரும்தொடர்வதிற்குறுகலும். (௬௩)

புண்ணிடைப்பொழிஉயிர்ப்புனல்பொலிந்துவரவும்
விண்ணிடைப்படர்தல்விட்டெழுவிகற்பம்நினையா
என்னுடைக்குரிசில்எண்ணிஇளையோய்இவனைஇம்
மண்ணிடைக்கடிதுபொத்துதல்வழக்கெனவுமே. (௬௪)

மதநல்யானை அனையான் நிலம்வகிர்ந்தகுழிவாய்
நதம்உலாவுநளிநீர்வயின் அழுந்தநவைதீர்
அதவம்ஆய்நறுநெய்உண்டுலகில்அன்பர்க்குதித்
துதவுசேவடியினால்அமலன்உந்துதலுமே. (௪௫)

பட்டதன்மையும்உணர்ந்துபடர்சாபம்இடமுன்
கட்டவன்பிறவிதந்தகடைஆனஉடல்தான்
விட்டுவிண்ணிடைவிளங்கினன்விரிஞ்சன்எனஓர்
முட்டைதந்ததனில்வந்தமுதல்முன்னவனிலே. (௪௬)

பொறியின்ஒன்றிஅயல்சென்றுதிரிபுத்திஉணரான்
நெறியின்ஒன்றிநிலைநின்றநினைவுண்டதனினும்
பிறிவில்அன்புதனிபண்டுடையபெற்றிதனினும்
அறிவுவந்துதவநம்பனைஅறிந்துபகர்வான். (௪௭)

வேறு.

வேதங்கள்அறைகின்றஉலகெங்கும்விரிந்தனஉன்
பாதங்கள்இவைஎன்னின்படிவங்கள்எப்படியோ
ஓதங்கொள்கடல்அன்றிஒன்றினொடொன்றொவ்வா
பூதங்கள்தொறும்உறைந்தால்அவைஉன்னைப்பொறுக்குமோ (௪௮)

கடுத்தகராம்கதுவநிமிர்கையெடுத்துமெய்கலங்கி
உடுத்ததிசைஅனைத்தினும்சென்றொலிகொள்ளஉறுதுயரால்
அடுத்தபெருந்தனிமூலத்தரும்பரமேபரமேஎன்
றெடுத்தொருவாரணம்அழைக்கநீயோஅஞ்சேல்என்றாய். (௪௯)

புறங்காண அகம்காணப்பொதுமுகத்தின்அருள்நோக்கம்
இறங்காததாமரைக்கண்எம்பெருமான்இயம்புதிஆல்
அறங்காத்தற்குனக்கொருவர்ஆரும்ஒருதுணைஇன்றி
கறங்காகும்எனத்திரியநீயேயோகடவாய்தான். (௫௰)

துறப்பதேதொழிலாகத்தோன்றினோர்தோன்றியக்கால்
மறப்பரோதம்மைஅதுஅன்றாகில்மற்றவர்போல்
பிறப்பரோஎவர்க்கும்தாம்பெற்றபதம்பெறல்அரிதோ
இறப்பதேபிறப்பதேஎனும்வினையாட்டினிதுகந்தோய். (௫௧)

பனிநின்றபெரும்பிறவிக்கடல்கடக்கும்படிபற்றி
நனிநின்றசமயத்தோர்எல்லாரும்நன்றென்ன
தனிநின்றதத்துவத்தின்தகைமூர்த்திநீஆகில்
இனிநின்றமுதல்தேவர்என்கொண்டென்செய்வாரே. (௫௨)

ஆரணியகாண்டம்.

ஓயாதமலர்அயனேமுதல்ஆகஉளர்ஆகி
மாயாதவானவர்க்கும்மற்றொழிந்தமன்உயிர்க்கும்
நீயாகிலமுதல்த்தாதைநெறிமுறையால்இன்றெடுத்த
தாயாவார்யாவரோதருமத்தின்தனிமூர்த்தி. (௫௩)

நீயாதிபரம்பரமும்நின்னவேஉலகங்கள்
ஆயாதசமயமும்நின்அடியவேஅயல்இல்லை
தீயாரின்ஒளித்திஆல்வெளிநின்றால்தீங்குண்டோ
வீயாதபெருமாயைவிளையாட்டும்வேண்டுமோ. (௫௪)

தாய்தன்னைஅறியாதகன்றில்லைதன்கன்றை
ஆயும்அறியும்உலகின்தாய்ஆகில்ஐய
நீய்அறிதிஎப்பொருளும்அவைஉன்னைநிலைஅறியா
மாயைஇதுஎன்கொலோவாராதேவரவல்லாய். (௫௫)

பன்னல்ஆம்என்றுலகம்பலபலவும்நினையும்ஆல்
உன்னலாற்பெருந்தெய்வம்உயர்ந்துளோர்ஒழுக்கன்றே
அன்னஊர்தியைமுதல்ஆம்அந்தணர்மாட்டருந்தெய்வம்
நின்னலால்இல்லாமைநெறிநின்றார்நினையாரோ. (௫௬)

பொருவரியசமயங்கள்புகல்கின்றபுத்தேளிர்
இருவினையும்உடையார்போல்அருந்தவம்நின்றியற்றுவார்
திருஉறையும்மணிமார்பநினக்கென்னைசெயற்பால
ஒருவினையும்இல்லார்போல்உறங்குதிஆல்உறங்காதாய். (௫௭)

அரவாகிச்சுமத்திஆல்அயில்எயிற்றின்ஏந்துதிஆல்
ஒருவாயின்விழுங்குதிஆல்ஓர்அடியால்ஒளித்திஆல்
திருவானநிலமகளைஇதுஅறிந்தால்சீறுளோ
மருவாரும்துழாய்அலங்கல்மணிமார்பில்வைகுவாள். (௫௮)

மெய்யைத்தான்சிறிதுணர்ந்துநீவிதித்தமன்உயிர்கள்
உய்யத்தான்ஆகாதோஉனக்கென்னகுறைஉண்டோ
வையத்தார்வானத்தார்மழுவாளிக்கன்றளித்த
ஐயத்தால்சிறிதைய்யம்தவிர்ந்தாரும்உளர்ஐயா. (௫௯)

அன்னம்ஆய்அருமறைகள்அறைந்தாய்நீஅவைஉன்னை
முன்னம்ஆர்ஓதுவித்தார்எல்லாரும்முடிந்தாரே
பின்னம்ஆய்ஒன்றுதல்பிறிந்தேயோபிறியாதோ
என்னமாமாயம்இவைஏனம்ஆய்மண்இடந்தாய். (௬௰)

ஒப்பிறையும்பெறல்அரியஒருவராமூவர்உவந்துறையும்
அப்புறையுள்துறந்தடியேன்அருந்தவத்தால்அணுகுதலால்
இப்பிறவிக்கடல்கடந்தேன்இனிப்பிறவேன்இருவினையும்
துப்புறழும்நீர்த்தசுடர்த்திருஅடியால்துடைத்தாய்நீ. (௬௧)

வேறு.

இற்றெலாம்இயம்பினான்
நிற்றலோடும்நீஇவ்ஆ
றுற்றவாறுணர்த்தென
வெற்றியான்விளம்பினான். (௬௨)

கள்ளமாயவாழ்வெலாம்
விள்ளஞானம்வீசுதாள்
வள்ளல்வாழிகேளென
உள்ளவாறுணர்த்தினான். (௬௩)

இம்பர்உற்றிதெய்தினேன்
வெம்புவிற்கைவீரபேர்
தும்புருத்தனதன்றூழ்
அம்பரத்துளேன்அரோ. (௬௪)

கரக்கவந்தகாமநோய்
துரக்கவந்ததோமினால்
இரக்கம்இன்றிள்விறன்
அரக்கமைந்தன்ஆயினேன். (௬௫)

அன்னயக்கன்ஆதியாய்
இன்னல்தீரும்இசையான்
நின்னதாளின்நீங்கும்என்
றுன்னும்எற்குணர்த்தினான். (௬௬)

அன்றுமூலம்ஆதியாய்
இன்றுகாறும்ஏழைமையேன்
நன்றுதீதுநாடலேன்
தின்றுதீயதேடினேன். (௬௭)

தூண்டநின்றதொன்மைதான்
வேண்டநின்றவேதநூல்
பூண்டநின்பொலம்கொள்தாள்
தீண்டஇன்றுதேறினேன். (௬௮)

தெறுத்துவந்ததீதெலாம்
அறுத்தஉன்னைஆதனேன்
ஒறுத்ததன்மைஊழியாய்
பொறுத்திஎன்றுபோயினான். (௬௯)

தேவுகாதல்சீரியோன்
ஆவிபோயினான்என
பூவுலாவுபூவையோ
டேவலாரும்ஏகினார். (௭௰)

கய்கொள்காலவேலினார்
மெய்கொள்வேதமெய்யர்வாழ்
மொய்கொள்சோலைமுன்னினார்
வய்கல்தானும்வைகினார். (௭௧)

௫௰ - வது. விராதன்வதைப்படலம்முற்றும். ஆக திருவிருத்தம். [௭௧]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௨ -.வது. சரபங்கர்பிறப்புநீங்குபடலம்.

குரவங்குவிகோங்கலர்கொம்பினொடும்
இரவங்கண்உறும்பொழுதேகினர்ஆல்
சரவங்கன்இருந்துதவம்கருதும்
மரவங்கிளர்கோங்கொளிர்வாசவனம். (௧)

செவ்வேலவர் சென்றனர் சேறல் உறும்
அவ்வேலையின் எய்தினன் ஆயிரம் ஆம்
தவ்வா திரவும் பொலி தாமரையின்
வெவ்வேறலர் கண்ணினன் விண்ணவர் கோன். (௨)

அன்னச்செலவிற்படிமேல் அயல்சூழ்
பொன்னிற்பொலிவார் அணிபூண் ஒளிமேல்
மின்னிற்செறிகற்றை விரிந்தன போல்
பின்னிச்சுடரும் பிறழ்பேர் ஒளியான். (௩)

வானிற்பொலி தோகையர் கண்மலர் வண்
கானிற்படர் கட்களிவண்டொடு கார்
மேனித்திருநாரதன் வீணை இசைத்
தேனிற்பொலியும் செவிவண்டுடையான். (௪)

அனையின் துறை ஐம்பதொடைம்பது நூல்
வினையின் தொகை வேள்வி விரும்பிய மா
முனைவன் முது தேவரின் மூவர் அலார்
புனையும் முடி அன்று பொலன் கழலான். (௫)

செம்மா மலராள் நிகர் தேவியொடும்
மும்மா மத வெண்நிற முன் உயர் தாள்
வெம்மா மிசையான் விரி வெள்ளி விளங்
கம்மா மலை அண்ணலையே அனையான். (௬)

தானின்றயலின்றொளிர் தண்கதிரோன்
யானின்றதென் என்றொளி எஞ்சிடமா
வானின்ற பெரும்பதம் வந்துருவாய்
மேனின்றென நின்றொளிர் வெண்குடையான். (௭)

திசைகட்டிய மால்கரி தெட்டமதப்
பசைகட்டின கிட்டின பற்பல போர்
விசைகட்டழி தானவர் விட்டவர் பேர்
இசைகட்டிய ஒத்திவர் சாமரையான். (௮)

தீர்வில் திரி செங்கதிர் தங்குவதோர்
ஊர் உற்றதெனப் பொலி ஒண்முடியான்
போர் வித்தகன் நேமி பொறுத்த வன்மா
மார்வில் திருவிற்பொலி மாலையினன். (௯)

செற்றிக் கதிர்த் தொலி செம்மணியின்
கற்றைச் சுடர் விட்டெறி கஞ்சுகியான்
வெற்றித் திருவின் குளிர் வெண் நகைபோல்
சுற்றிக் கிளரும் சுடர் தோள்வளையான். (௰)

பல்லாயிர மாமணி பாடம் உறும்
தொல்லாரணி கால் சுடரின் தொகை தாம்
எல்லாம் உடன் ஆய் எழலால் அயல்மேல்
வில்லால் ஒளிர் மேகம் எனப் பொலிவான். (௧௧)

மாறு உலகம் தனில் மன்றல் பொரும்
தேனுறு நலம் செயி தொங்கலினான்
மீனேறு கடுத் துயர் வென்றி அவாம்
வாணுடியர் கண் எனும் வாள் உடையான். (௧௨)

வெல்வான் நகையால் விசையால் விடு நாள்
எல்வான் சுடர் மாலை இராவணன் மேல்
நெல்வாளும் அருத நிறம் பிறழா
வல்வாய் மழையா வயிரப் படையான். (௧௩)

நின்றான் எதிர் நின்ற நெடுந் தவனும்
சென்றான் எதிர் கொண்டு சிறப்பமையா
என்றான் இவண் எய்திய ஆறெனலும்
பொன்றாத பொலங்கழலோன் புகலும். (௧௪)

நின்றாய் இயல் நீதி நெடுந்தவம் இன்
றென்றும் விளம்பரி தென்றுணர்வான்
அன்றான் மகன் நின்னை அழைத்தனன் ஆல்
பொன் ஆர் சடை மாதவ போதி ஆல். (௧௫)

எந்தாய் உலகி யாவையும் எவ் உயிரும்
தந்தான் உறையும் நெறி தந்தனன் ஆல்
நந்தாத பெருந்தவ நாடனீ
வந்தாய் என்னில் நின் எதிரோ வருவான். (௧௬)

எல்லா உலகிற்கும் உயர்ந்தமையான்
சொல்லா வகை நீ உணர் தொன்மையை ஆல்
நல்லாய் உடனே நட நீ எனலும்
அல்லேன் எனவால் அறிவான் அறைவான். (௧௭)

சொற்பொங்கு பெரும்புகழோய் தொழில்மாய்
சிற்பங்களின் விவணசேர்குவெனே
அற்பம்கருதேன் என் அருந்தவமோ
கற்பம்பல சென்றது காணுதி ஆல். (௧௮)

சொற்றும்தரம் அன்றித்சூழ்கழலாய்
பெற்றும்பெறுகில்லதொர்பெற்றியதே
மற்றென்பலசொல் இவண்வந்துதவம்
முற்றும்பகல்தானும்முடித்தனன் ஆல். (௧௯)

சிறுகாலை இலாநிலையோதிரியா
குறுகாநெடுகாகுணம்வேறுபடா
உறுகால்கிளர்பூதம்எலாம்உகினும்
மறுகாநெறிஎய்துவென்வான் உடையாய். (௨௰)

என்றின்னவிரம்பிடும்எல்லையின்வாய்
வன்றிண்சிலைவீரரும்வந்தணுகா
ஒன்றும்கிளர்ஒத்தையிருல்உணர்வார்
நின்றென்னைகொல் இன்னதெருநினைவார். (௨௧)

கொம்பொத்தனநால்ஒளிர்கோள்வயிரக்
கம்பக்கரிநின்றதுகண்டனம்ஆல்
இம்பர்த்தலைமாதவர்பால் இவன் ஆம்.
உம்பர்க்கரசெய்தினன் என்றுணரா. (௨௨)

மானே அனையாளொடுமைந்தனையும்
பூனேர்பொழிலின்புறமேநிறுவா
ஆனேறென ஆளரிஎற்றிதென
தானே அவ் அகன்பொழில்சாருதலும். (௨௩)

கண்டாமவைஆயிரமும்கதுவ
கண்டாமணிபோல்கருநாயறெனக்
கண்டான் இமையோர்இறைகாசினியின்
கண்டான் அருநான்மறையின்கனியை. (௨௪)

காணுமனம்நொந்துகவன்றனன் ஆல்
ஆணுதனை அந்தணர்நாயகனை
நாணுளும்வணங்கியநன்முடியால்
தாணுகியதோள்கொடவற்றெருழுவான். (௨௫)

வேறு.

துவசம்ஆர்தொல்அமருள்துன்னாரைச்செற்றும்
சுருதிப்பெருங்கடலின்சொற்பொருள்கற்பித்தும்
திவசமாநல்அறத்தின்செந்நெறியில்உய்த்தும்
திருஅளித்தும்வீடளித்தும்சிங்காமைத்தங்கள்
கவசம்ஆய்ஆர்உயிர்ஆய்த்தவம்ஆய்க்கண்ஆய்
கடைஇலாஞானம்ஆய்க்காப்பானைக்காணா
அவசம்ஆய்ச்சிந்தைஅழிந்தயலேநின்றான்
அறியாதான்போலஅறிந்தெல்லாம்சொன்னான். (உசு)

தோய்ந்தும்பொருள்அனைத்தும்தோயாதுநின்ற
சுடரோதொடக்கறுத்தோர்சுற்றமேபற்றி
நீய்ந்தஅரியநெடுங்கருணைக்கெல்லாம்
நிலயமேவேதநெறிமுறையின்நேடி
ஆய்ந்தஉணர்வின்உணர்வேபகையால்
அலைப்புண்டடியேம்அடியோற்றஅந்நாள்
ஈய்ந்தவரம்உதவஎய்தினையேஎந்தாய்
இருநிலத்தவோநின்இணைஅடித்தாமரைதாம். (உஎ)

மேவாதவர்இல்லைமேவினரும்இல்லை
வெளியோடிருள்இல்லைமேல்கீழும்இல்லை
மூவாதமைஇல்லைமூத்தமையும்இல்லை
முதல்இடையோடறில்லைமுன்றுபின்இல்லை
தேவாஇங்கிவ்வோநீசென்றநிலைஎன்றால்
சிலைள்ந்நிவற்தெம்மைச்சேவடிகள்நோவ
காவாதொழியில்பழிபெரிதோஅன்றேல்
கருங்கடலில்கண்வளராய்கைம்மாறும்உண்டோ. (உஅ)

நாழிநவைதீர்உலகெலாம்ஆக
நளினத்துநீதந்தநான்முகனார்தாமே
ஊழிபலபலவும்நின்றளந்தால்ஒன்றும்
உலவாப்பெருங்குணத்தஉத்தமனேமேல்நாள்
தாழிதனாஆகத்தண்தயிர்நீர்ஆக
தடவரையேமத்தாகத்தாமரைக்கைநோவ
ஆழிகடைந்தமுதம்எங்களுக்கேஈய்ந்தாய்
அவுணர்கள்தாம்நின்அடிமைஅல்லாமைஉண்டோ. (உகூ)

ஒன்றாகிமூலத்தொருவம்பலவாகி
உணர்வும்உயிரும்பிறிதாகிஊழி
சென்றாசாறும்காலத்தநிலையதாகித்
திறத்துலகம்தான்ஆகிச்செஞ்செவேநின்ற
நன்றாயஞானத்தனிக்கொழுந்தேஎங்கள்
நவைதீர்க்கும்நாயகமேநல்வினையேநோக்கி
நின்றாரைக்காத்திஅயற்பேரைக்காய்தி
நிலைஇல்லாத்தீவினையும்நீதந்ததன்றே. (க௦)

வல்லைவரம்பில்லாதமாயவினைதன்னால்
மயங்கினரோடெய்திமதிமயங்கிமேல்நாள்
அல்லைஇறையவன்நீஆதிஎனப்பேசுற்
றலமருவேம்முன்னைஅறப்பயன்உண்டாக
எல்லைவலயங்கள்நின்உடைமைஎன்றநீநாள்
எரியோனைத்தீண்டிஎழுவர்எனநின்ற
தொல்லைமுதல்முனிவர்குழுற்றபோதே
தொகைநின்றஐயம்துடைத்திலையோஎந்தாய். (கக)

வேறு.

இன்னனபலநினைந்தேத்தினன்இயம்பா
துன்னுதல்இடைஉரைதெனநனிதுணிவான்
தன்னிகர்முனிவனைத்தரவிடைஎன்னா
பொன்னொளிர்நெடுமுடிப்புரந்தரன்போனான். (கஉ)

போனவன்அகநிலைபுலமையின்உணர்வான்
வானவர்தலைவனைவரவெதிர்கொண்டான்
ஆனவன்அடிதொழஅருள்வரஅழுதான்
தானடஇடவகைதழுவினன்றுறைவான். (கங)

ஏழையும்இரவலும்வருகெனஇனிதா
வாழியஅவரொடும்வந்தனன்மகிழ்வால்
ஊழியின்முதல்முனிஉறையுளைஅணுகா
ஆழியில்விழிதுயில்அவன்எனமகிழ்வான். (கச)

அவ்வையின்அழகனும்வைகினன்அறிஞன்
செவ்வியஅறஉரைசெவிவயின்உதவ
நவ்வியின்விழியவளொடுநனிஇருளை
கவ்வியநிசிஒருகடைஉறும்அளவில். (கரு)

விலகிடுநிழலினன்வெயில்விரிஅயில்வாள்
இலகிடுசுடரவன் இசைஎனதிசைதோய்
அலகிடல்அரியதன்அவிர்கரநிரையால்
உலகிடுநிறைஇருள்உறையினைஉரிவான். (௩௬)

ஆயிடைஅறிஞனும்அவன்எதிர்அழுவத்
தீயினைநறைமழுவதொர்தெளிவினைஉடையான்
நீய்விடைதருகெனநிறுவினன்நெறியால்
காய்எரிவரன்முறைகடிதினில்இடுவான். (௩௭)

வரிசிலைஉழவனும்மறைஉழவனைநீ
புரிதொழில்எனைஅதுபுகலுதிஎனலும்
திருமகள்தலைவசெய்திருவினைஉறயான்
எரிபுகநினைகுவென்அருள்என இறைவன். (௩௮)

யான்வரும்அமைதியின்இதுசெயல்எவனோ
மான்வருதனிஉரிமார்பினைஎனலும்
மீன்வருகொடியவன்விறல்அடும்மறவோன்
ஊன்வரும்உவகையின்உரைநனிபுரிவான். (௩௯)

ஆயிரம்முகம்உளதவம்அயர்குவென்நான்
நீயிவண்வருதிகொல்எனும்நிலைஉடையேன்
போயினஇருவினைபுகல்உறுவிதியால்
மேயினைஇனிஒருவினைஇலைவிறலோய். (௪௰)

இந்திரன்அருளினன்இறுதிசெய்பகலா
வந்தனன்மருவுதிமலர்அயன்உலகம்
தந்தனன்எனஅதுசாரலென்உரவோய்
அந்தம்இல்உயர்பதம்அடைதலைமுயல்வேன். (௪௧)

ஆதலின்இதுபெறஅருள்எனஉலையா
காதலியவளொடுகதழ்எரிமூழ்கி
போதலைமருவினன்ஒருநெறிபுகலா
வேதமும்அறிவருமிகுபொருள்உணர்வோன். (௪௨)

தேவரும்முனிவரும்உறுவதுதெரிவோர்
மாவரும்நறுவிரைமலர்அயன்முதலோர்
ஏவரும்அறிவினில்இருவினைஒருவிப்
போவதுகருதும்அவ்அருநெறிபுக்கான். (௪௩)

அண்டரும்அகிலரும்அறிவருநெறியால்
உண்டவன்ஒருபெயர்உணர்குனர்உறுமே
றெண்டகும்நெடிதெனில்இறுதியில்அவனை
கண்டவர்உறுபொருள்கருதுவதெளிதே. (௪௪)

உ-வது. சரபங்கர்பிறப்புநீங்குபடலமுற்றும். ஆகூ திருவிருத்தம் [௱௧௫].

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௩-வது. அகத்தியப்படலம்.

அனையவன் இறுதியின் அமைவுநோக்கலின்
இனியவர் இன்னலின் இரங்குநெஞ்சினர்
குனிவருதிண்சிலைக்குமரர்கொம்பொடும்
புனிதனதுறையுள்நின்றரிதில்போயினர். (௧)

மலைகளும்மரங்களும்மணிக்கற்பாறையும்
அலைபுனல்நதிகளும்அருவிச்சாரலும்
இலைசெறிபழுவமும் இனியசூழலும்
நிலைமிகுதடங்களும் இனிதுநீங்கினர். (௨)

பண்டைய அயன்தருபாலகில்லரும்
முண்டரும்மோனரும்முதலினோர்கள் அத்
தண்டகவனத்துறைதவத்துளோர்கள்தாம்
கண்டனர் இராமனைக்களிக்கும்சிந்தையார். (௩)

கனைவருகடுஞ்சினத்தரக்கர்காயஓர்
வினைபிறிதின்மையின்வெதும்புகின்றனர்
அனையவர்கானகத்தமுதளாவிய
புனைவரஉயிர்வரும்உலவையோல்கின்றார். (௪)

ஆய்வரும்பெருவலிஅரக்கர்நாமமே
வாய்வெரிஅலமரும்மறுக்கம்நீங்கினர்
தீய்வருவனத்திடைஇட்டுத்தீர்ந்ததோர்
தாய்வரநோக்கியகன்றின்தன்மையார். (௫)

கரக்கருங்கடுந்தொழில்அரக்கர்காய்தலில்
பொரத்திடம்இன்மையிற்புழுங்கிச்சோருனர்
அரக்கர்என்கடலிடைஆழ்கின்றார்ஒரு
மரக்கலம்பெற்றெனமறுக்கம்நீங்கினர். (௬)

தெரிஞ்சுறநோக்கினர்செய்தசெய்தவம்
அருஞ்சிறப்புதவநல்அறிவுகைதர
விரிஞ்சுறப்பற்றியபிறவிவெந்துயர்ப்
பெருஞ்சிறைவீடுபெற்றனையபெற்றியார். (எ)

வேண்டினவேண்டினர்க்களிக்கும்மெய்த்தவம்
பூண்டுளர்ஆயினும்பொறையின்ஆற்றலால்
மூண்டெழுவெகுளியைமுதலின்நீக்கினார்
ஆண்டுறைஅரக்கரால்அலைப்புண்டார்அரோ. (அ)

எழுந்தனர்எய்தினர்இருண்டமேகத்தின்
கொழுந்தெனநின்றஅக்குரிசில்வீரனை
பொழிந்தெழுகாதலிற்பொருந்தினார்அவன்
தொழுந்தொறும்தொழுந்தொறும்ஆசிசொல்லுவார். (கூ)

இனியதோர்சாலைகொண்டேகிஇவ்வயின்
நனிஉறைஎன்றவற்கமையம்நல்கித்தாம்
துனிஇடம்சார்ந்தனர்தங்கிமாதவர்
அனைவரும்எய்தினர்அல்லல்சொல்லுவான். (ய)

எய்தியமுனிவரைஇறைஞ்சிஏத்துவந்
தையனும்இருந்தனன்அருள்என்என்றலும்
வையகம்காவலன்மதலைவந்ததோர்
வெய்யவெங்கொடுந்தொழில்விளைவுகேள்என்று. (கக)

இரக்கம்என்றொருபொருள்இலாதநெஞ்சினர்
அரக்கர்என்றுளர்சிலர்அறத்தின்நீங்கினார்
நெருக்கவும்யாம்படர்நெறிஅலாநெறி
துரக்கவும்அருந்தவத்துறையுள்நீங்கினேம். (கஉ)

வல்லியம்பலதிரிவனத்துமான்என
எல்லியும்பகலும்நொந்திரங்கிஆற்றலெம்
சொல்லியஅறநெறித்துறையும்நீங்கினேம்
வில்லியல்மொய்ம்பினுய்வீடுகாண்குமோ. (கங)

மாதவத்தொழுகலெம்மறைகள்யாவையும்
ஓதலெம்ஓதுவார்க்குதவல்ஆற்றலெம்
மூதெரிவளர்க்கிலெம்முறையின்நீங்கினேம்
ஆதலில்அந்தணரேயும்ஆகிலேம். (கச)

இந்திரன் எனில் அவன் அரக்கர் ஏயின
சிந்தையில் சென்னியில் கொள்ளும் செய்கையான்
எந்தை மற்றியாருளர் இடுக்கண் நீக்குவார்
வந்தனை யாம் செய்த தவத்தின் மாட்சியால். (கரு)

உருளுடை நேமியால் உலகை ஓம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ போக்கிலா
இருளுடை வைகலேம் இரவி தோன்றினாய்
அருளுடை வீர நின் அபயம் யாம் என்றார். (கசு)

வேறு,

புகல் புகுந்திலரேல் புறத்தண்டத்தின்
அகல்வரேனும் என் அம்பொடும் வீழ்வர் ஆல்
தகவில் துன்பம் தவிருதிர் நீர் என
பகலவன் குல மைந்தன் பணிக்கின்றான். (கஎ)

வேந்தன் வீயவும் யாய் வரம் மேவவும்
ஏந்தல் எம்பி வருந்தவும் என் நகர்
மாந்தர் வன் துயர் கூரவும் யான் வனம்
போந்தது என் உடைப் புண்ணியத்தால் என்றான். (கஅ)

அறந்தவா நெறி அந்தணர் தன்மையை
மறந்த புல்லர் வலி தொலையேன் எனில்
இறந்து போகினும் நன்றிது அல்லது
பிறந்து யான் பெறும் பேறு என்பது யாவதோ. (ககூ)

நிவந்த வேதியர் நீ விரும்பியவர்
கவந்த பந்தக் களி நடம் கண்டிட
அமைந்த வில்லும் அருங்கணைத் தூணியும்
சுமந்த தோளும் பொறைத் துயர் தீரும் ஆல். (உ0)

ஆவுக்காயினும் அந்தணர்க்காயினும்
யாவர்க்கேனும் எளியவர்க்காயினும்
சாவப் பெற்றவரே தகைவான் உறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார். (உக)

சூர் அறுத்தவனும் சுடர் நேமியும்
ஊர் அறுத்த ஒருவனும் ஓம்பினும்
ஆர் அறத்தினொடன்றி நின்றார் அவர்
வேர் அறுப்பென் வெருவன்மின் நீர் என்றான். (உஉ)

உரைத்தவாசகம்கேட்டுவந்தோங்கிட
இரைத்தகாதலர்ஏகியஇன்னவர்
திரித்தகோலினர்தேமறைபாடினர்
நிருத்தம்ஆடினர்நின்றுவிளம்புவார். (உ௩)

தோன்றல்நீமுனியில்புவனத்தொகை
மூன்றுபோல்வனமுப்பதுகோடிவந்
தேன்றபோதும்எதிர்அலஎன்றலில்
சான்றுவேதம்தவம்பெருஞானமே. (உ௪)

அன்னதாதலின்ஏயினஆண்டெலாம்
இன்னல்காத்திங்கினிதுறைவாய்என
சொன்னமாதவர்பாதம்தொழுதுயர்
மன்னர்மன்னவன்மைந்தனும்வைகினான். (உ௫)

ஐந்தும்ஐந்தும்அமைதியின்ஆண்டவண்
மைந்தர்தீதிலர்வைகினர்மாதவர்
சிந்தைஎண்ணிஅகத்தியற்சேர்கென
இந்துநன்னுதல்தன்னொடும்ஏகினார். (உ௬)

விடர்அகங்களும்வேய்செறிகானமும்
படரும்சில்நெறிபய்ப்பயநீங்கினார்
சுடரும்மேனிச்சுதீக்கணன்என்னும்அவ்
இடர்இலான்உறைசோலைசென்றெய்தினார். (உ௭)

அருக்கன்அன்னமுனிவனைஅவ்வழி
செருக்கில்சிந்தையர்சேவடிதாழ்தலும்
இருக்கஇண்டென்றினியகூறினன்
மருக்கொள்சோலையில்மைந்தரும்வைகினார். (உ௮)

வைகும்வைகலின்மாதவன்மைந்தன்பால்
செய்கையாவையும்செய்திவண்செல்வநீ
எய்தயான்செய்ததெத்தவம்என்றனன்
ஐயனும்அவற்கன்பினன்கூறுவான். (உ௯)

சொன்னநான்முகன்தன்வழிதோன்றினர்
முன்னையோருள்உயர்தவம்முற்றினார்
உன்னில்யார்உளர்உன்அருள்எய்திய
என்னில்யார்உளர்இற்பிறந்தார்என்றான். (௩௰)

உவமைநீங்கியதோன்றல்உரைக்கெதிர்
நவமைநீங்கியநற்றவன்சொல்லுவான்
அவம்இலாவிருந்தாகிஎல்லல்அமை
தவம்எலாம்கொள்கதக்கணையாஎன்றான். (௬௧)

மறைவலான்எதிர்வள்ளலும்கூறுவான்
இறைவநின்அருள்எத்தவத்திற்கெளி
தறைவதீண்டொன்றகத்தியற்காண்பதோர்
குறைகிடந்ததினிஎனக்கூறினான். (௬௨)

நல்லதேநினைந்தாய்அதுநானும்முன்
சொல்லுவான்துணிகின்றதுதோன்றல்நீ
செல்திஆண்டவற்சேருதிசேர்ந்தபின்
இல்லைநின்வயின்எய்தல்இல்லாதன். (௬௩)

அன்றியும்நின்வரவினைஆதரித்
தின்றுகாறும்நின்றேமுறும்ஆல்அவற்
சென்றுசேருதிசேருதல்செவ்வியோய்
நன்றுதேவர்க்கும்யாவர்க்கும்நன்றரோ. (௬௪)

வழியும்கூறிவரம்பகல்ஆசிகள்
மொழியும்மாதவன்மொய்மலர்த்தாள்தொழா
பிழியும்தேனிற்பிறங்கருவித்திரள்
பொழியும்சோலைவிரைவினில்போயினர். (௬௫)

வேறு.

ஆண்தகையர்அவ்வயின்அடைந்தமைஅறிந்தான்
ஈண்டுவகைவேலைதுணைஏழ்உலகம்எய்த
மாண்டவரதன்சரண்வழங்கஎதிர்வந்தான்
நீண்டதமிழால்உலகைநேமியின்அளந்தான். (௬௬)

பண்டவுணர்உடற்றினர்படார்களெனவானோர்
எண்டவஎமக்கருள்எனக்குறைஇரந்தார்
கண்டொருகைவாரினன்முகந்தகடல்எல்லாம்
உண்டவர்கள்பின்உமிழ்கஎன்றலும்உமிழ்ந்தான். (௬௭)

தூயகடல்நீர்அடிசில்உண்டுதுரந்தான்
ஆயஅதலால்அமரும்மெய்உடையஅன்னோன்
மாயவினைவான்அவுணன்மாயஅவன்வன்மைக்
காயம்இனிதுண்டுலகின்ஆர்இடர்களைந்தான். (௬௮)

யோகம்உறுபேர்உயிர்கள்தாம்உலைவுறாமல்
ஏகுநெறியாதெனமதித்தடியின்ஏறி
மேகநெடுமாலைதவழ்விந்தைஎனும்விண்தோய்
நாகமதுநாகம்உறநாகம்எனநின்றான். (௩௯)

பூசரவுகூடுமுதலோன்உரையின்மூவா
மாசில்தவன்தெனவடாதுதிசைமேல்நாள்
நீசம்உறவானின்நெடுமாமலையம்நேரா
ஈசன்நிகர்ஆய்உலகுசீர்பெறஇருந்தான். (௪௰)

உழக்குமறைநாலினும்உயர்ந்துலகம்ஓதும்
வழக்கினும்மதிக்கவினினும்மரபின்நாடி
நிழற்பொலிகணிச்சிமணிநெற்றிஉமிழ்செங்கண்
தழற்புரைசுடர்க்கடவுள்தந்ததமிழ்தந்தான். (௪௧)

விண்ணினில்நிலத்தினில்விகற்பஉலகில்யோர்
எண்ணினில்இருக்கினில்இருக்கும்எனயாரும்
உண்ணினைகருத்தினைஉறப்பெறுவென்ஆல்என்
கண்ணினில்எனக்கொடுகளிப்புறுமனத்தான். (௪௨)

இறைத்தமறைநாலினொடியைந்தபிறயாவும்
நிறைத்தநெடுஞானநிமிர்கல்வின்நெடுநாவிட்
டறைத்தும்அயனாலும்அறியாதபொருள்நேர்நின்
றுறைக்குதவும்ஆல்எனும்உணர்ச்சியின்உவப்பான். (௪௩)

உய்ந்தனர்இமைப்பிலர்உயிர்த்தனர்தவத்தோர்
அந்தணர்அறத்தின்நெறிநின்றனர்கள்ஆறு
வெந்திறல்அரக்கர்விடவேர்முதல்அறுப்பான்
வந்தனன்மருத்துவன்எனத்தனிவலிப்பான். (௪௪)

ஏனைஉயிர்ஆமுதலயாவும்இடைவேவித்
தானுகர்அரக்கர்உருமைச்சுடுசினத்தின்
ஆனஅனலைக்கடிதவித்துலகளிப்பான்
வானமழைவந்ததெனமூந்துறுமனத்தான். (௪௫)

கண்டனன்இராமனைவரக்கருணைகூர
புண்டரிகவாள்நயனம்நீர்பொழியநின்றான்
எண்டிசையும்ஏழ்உலகும்எவ்உயிரும்உய்ய
குண்டிகையினிற்பொருவில்காவிரிகொணர்ந்தான். (௪௬)

நின்றவனைவந்தநெடியோன் அடிபணிந்தான்
அன்றவனும்அன்பொடுதழீஇ அழுதகண்ணன்
நன்றுவரவென்றுபலநல்உரைபகர்ந்தான்
என்றும்உளதென்தமிழ்இயம்பிஇசைகொண்டான். (சஎ)

வேதியர்கள்வேதமொழிவேறுபலகூறி
காதல்மிகநின்றெழில்கமண்டலுவின்நன்னீர்
மாதவர்கள்வீசிநெடுமாமலர்கள்தூவ
போதுமணம்நாறுகுளிர்சோலைகொடுபுக்கான். (சஅ)

பொருந்தஅமலன்பொழில்அகத்தினிதுபுக்கான்
விருந்தவன்அமைத்தபின்விரும்பினன்விரும்பி
இருந்தவம்இழைத்தனனில்லிடையில்வந்தேன்
அருந்தவம்முடித்தனைஅருட்கரசஎன்றான். (சகூ)

என்றமுனியைத்தொழுதிராமன்இமையோரும்
நின்றதவம்முற்றும்நெடியோரின்நெடியோரும்
உன்றன்அருள்பெற்றிலர்கள்உன்அருள்சுமந்தேன்
வென்றனன்அனைத்துலகும்மேல்இனிதென்என்றான். (ரு௰)

தண்டகவனத்துறைதிஎன்றுரைதரக்கொண்
டுண்டுவாவித்திசைஎனப்பெரிதுவந்தேன்
எண்டகுகுணத்தினைஎனக்கொடியர்சென்னி
துண்டமதிவைத்தவனைஒத்தமுனிசொல்லும். (ருக)

இண்டுறைதிஐயஇனிஇவ்வயின்இருந்தால்
வேண்டியனமாதவம்விரும்பிலமுடிப்பாய்
தூண்டுகினவாள்நிருதர்தோன்றிஉளர்என்றால்
மாண்டுகமலைந்தெமர்மனத்துயர்துடைப்பாய். (ருஉ)

வாழும்மறைவாழும்மனுநீதிஅறம்வாழும்
தாழும்இமையோர்உயர்வர்தானவர்கள்தாழ்வார்
ஆழிஉழவன்புதல்வஐயம்இலைமெய்யே
ஏழுலகும்வாழும்இனிஇங்குறைதிஎன்றான். (ருங)

செருக்கடைஅரக்கர்புரிதீமைசிதைவெய்தி
தருக்கழிதரக்கடிதுகொல்வதுசமைந்தேன்
வருக்கமறையோர்அவர்வருந்திசையின்முந்தூற்
திருக்கைநலம்நிற்கருள்என்என்றனன்இராமன். (ருச)

விழுமியதுசொற்றனை இவ்வில்லிதிவண்மேல்நாள்
முழுமுதல்வன்வைத்துளதுமூஉலகும்யானும்
வழிபட இருப்பதிதுதன்னைவடிவாளிக்
குழுவழுவில்புட்டிலொடுகோடிஎனநல்கி. (௫௫)

இப்புவனம்முற்றும்ஒருதட்டினிடை இட்டால்
ஒப்புவரவிற்றெனஉரைப்பரியவாளும்
வெப்புருவுபெற்றஅரன்மேருவரைவில்லாய்
முப்புரம்எரித்ததனிமொய்கணையும்நல்கா. (௫௬)

ஓங்கும்மரன்ஓங்கிமலைஓங்கிமணல்ஓங்கி
பூங்குலைகுலாவுகுளிர்சோலைபுடைவிம்மி
தூங்குதிரை ஆறுதவழ்சூழல்அதொர்குன்றின்
பாங்கர்உளதால்உறையுள்பஞ்சவடிமஞ்ச. (௫௭)

கன்னி இளவாழைகனி ஈவகதிர்வாலின்
செந்நெல்உளதேன் ஒழுகுபோதும்உளதெய்வ
பொன்னிஎனல்ஆயபுனல்ஆறும்உளபோதா
அன்னம்உளபொன் இவளொடன்பின்விளையாட. (௫௮)

ஏகிஇனி அவ்வயின் இருந்துறைமின் என்றான்
மேகநிறவண்ணனும்வணங்கிவிடைகொண்டான்
பாகனையசொல்லியொடுதம்பிபரிவிற்பின்
போகமுனிசிந்தைதொடரக்கடிதுபோனான். (௫௯)

௩-வது. அகத்தியப்படலம்முற்றும். ஆ திருவிருத்தம். [௱௭௪]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௪-வது. சடாயுகாண்படலம்.

நடந்தனர்காவதம்பலவும்நன்நதி
கிடந்தனநின்றனகிரிகள்கேண்மையில்
தொடர்ந்தனதுவன்றினசூழல்யாவையும்
கடந்தனர்கண்டனர்கழுகின்வேந்தையே. (௧)

உருக்கியசுவணம்ஒத்துதயத்துச்சிசேர்
அருக்கன் இவ்அகலிடத்தலங்குதிக்கெலாம்
தெரிப்புறுசெறிசுடர்ச்சிகையினுற்சிறை
விரித்திருந்தனன்எனவிளங்குவான்தனை. (௨)

முற்றொருகருமலைமுகட்டுமுன்றினில்
சந்திரன்ஒளியொடுதழுவச்சாத்திய
அந்தம்இல்கனைகடல்அமரர்நாட்டிய
மந்தரகிரிஎனவயங்குவான்தனை. (௩)

மால்திறவிசும்பெழில்மறையத்தன்மணிக்
கால்திறச்சேய்ஒளிகதுவக்கண்அகல்
நீல்திறவரையினில்பவளநீள்கொடி
போல்திறம்பொலிந்தெனப்பொலிகின்றான்தனை. (௪)

தூய்மையன்இருங்கலைதுணிந்தகேள்வியன்
வாய்மையன்மறுவிலன்மதியின்கூர்மையன்
ஆய்மையின்மந்திரத்திருன்ஆம்என
செய்மையின்நோக்குறுசிறுகணான்தனை. (௫)

வீட்டிவாள்அவுணரைவிருந்துகூற்றினை
ஊட்டிவீழ்மிச்சில்தான்உண்டுநாள்தொறும்
தீட்டிமேல்இந்திரன்சிறுகண்யானையின்
தோட்டிபோல்தேய்ந்தொளிர்துண்டத்தான்தனை. (௬)

கோள்இருநாலினோடொன்றுகூடின
ஆள்உறுதிகிரிபோல்ஆரத்தான்தனை
நீள்உறுமேருவின்நெற்றிமுற்றிய
வாள்இரவியிற்பொலிமௌலியான்தனை. (௭)

சொற்பங்கம்உறநிமிர்இசையின்சும்மையை
அற்பங்கம்உறவரும்அருணன்செம்மலை
சிற்பங்கொள்பகல்எனக்கடிதுசென்றுதீர்
கற்பங்கள்எனைப்பலகண்டுளான்தனை. (௮)

ஓங்குயர்நெடுவரைஒன்றில்நின்றது
தாங்கலதிருநிலம்தாழ்ந்துதாழ்வுற
வீங்கியவலியினில்இருந்தவீரனை
ஆங்கவர்அணுகினர்அயிர்க்கும்சிந்தையார். (௯)

இறுதியைத்தன்வயின்இயற்றஎய்தினான்
அறிவிலிஅரக்கன்ஆம்அல்லன்ஆம்எனில்
எறுழ்வலிக்குழுமனைஎன்னஉன்னிஅச்
செறிகழல்வீரரும்செயிர்த்துநோக்கினார். (௰)

வனைகழல்வரிசிலைமதுகைமைந்தரை
அனையவன்தானும்கண்டயிர்த்துநோக்கினான்
வினைஅறுநோன்பினர்அல்லர்வில்லினர்
புனைசடைமுடியினர்புலவரோஎனா. (கக)

புரந்தரன்முதலியபுலவர்யாரையும்
நிரந்தர நோக்குவென்நேமியானும்அவ்
வரந்தரும்இறைவனும்மழுவலாளனும்
கரந்திலர்என்னையான்என்றும்காண்பென்ஆல். (கஉ)

காமன்என்பவனையும்கண்ணினில்நோக்கினேன்
தாமரைச்செங்கண்இத்தடக்கைவீரர்கள்
பூமருபொலன்கழற்பொடியினோடும்ஒப்
பாமெனஅறிகிலன்ஆர்கொல்ஆம்இவர். (கங)

உலகொருமூன்றும்தம்உடைமைஆக்குறும்
அலகறும்இலக்கணம்அமைந்தமெய்யினர்
மலர்மகட்குவமையாளோடும்வந்தஇச்
சிலைவலிவீரரைத்தெரிகிலேன்எனா. (கச)

கருமலைசெம்மலைஅனையகாட்சியர்
திருமகிழ்மார்பினர்செங்கண்வீரர்தாம்
அருமைசெய்குணத்தின்என்துணைவன்ஆழியான்
ஒருவனைஇருவரும்ஒத்துளார்அரோ. (கரு)

எனப்புலநினைப்பினமனத்துள்என்னுவான்
சினப்படைவீரர்மேல்செல்லும்அன்பினான்
கனப்படைவரிசிலைக்காளைநீர்கள்யார்
மனப்படஎனக்குரைவழங்குவீர்என்றான். (கசு)

வினவியகாலையில்மெய்ம்மைஅல்லது
புனைமலர்த்தாரவர்புகல்கிலாமையால்
கனைகடல்நெடுநிலம்காவல்ஆழியான்
வனைகழல்த்தயரதன்மைந்தர்யாம்என்றார். (கஎ)

உரைத்தலும்பொங்கியஉவகைவேலையன்
தரைத்தலைஇழிந்தவர்த்தழுவும்காதலன்
விரைத்தடந்தாரினீர்வேந்தர்வேந்தன்தன்
வரைத்தடந்தோளிணைவலியவோஎன்றான். (கஅ)

மறக்கமுற்றுதலைவாய்மைகாத்தவன்
துறக்கமுற்றான்எனமுன்னம்சொல்லலும்
இறக்கமுற்றான்எனஏக்கம்எய்தினான்
உறக்கமுற்றான்எனஉணர்வுநீங்கினான். (௧௯)

தழுவினர்எடுத்தனர்தடக்கையால்முகம்
கழுவினர்இருவரும்கண்ணின்நீரினால்
வழுவியஇன்உயிர்வந்தமன்னனும்
அழிவுறுநெஞ்சினன்அரற்றினான்அரோ. (௨௰)

வேறு.

பரவலரும்கொடைக்கும்நின்தன்பனிக்குடைக்கும்பொறைக்கும்நெடும்பண்புதோற்ற
கரவலரும்கற்பகமும்உடுபதியும்கடலிடமும்களித்துவாழ
புரவலர்தம்புரவலனேபொய்ப்பகையேமெய்க்கணியேபுகழின்வாழ்வே
இரவலரும்நல்லறமும்யானும்இனிஎன்படநீத்தேகினாயோ. (௨௧)

அலங்காரம்எனஉலகுக்குஅமுதளிக்கும்தனிக்குடையாய்ஆழிசூழ்ந்த
நிலங்காவலதுகிடக்கநிலையாதநிலைஉடையேன்நேயநெஞ்சின்
நலங்காணநடந்தனையோநாயகனேதீவினையேன்நண்பின்நின்றும்
விலங்கானேன்ஆதலினால்விலங்கினேன்இன்னும்உயிர்விட்டிலேன்ஆல். (௨௨)

தயிர்உடைக்கும்மத்தென்னஉலகைநலிசம்பரனைத்தடிந்தஅந்நாள்
அயிர்கிடக்கும்கடல்வலயத்தயல்அறியநீஉடல்நான்ஆவிஎன்று
செயிர்கிடத்தல்செய்யாததிருமனத்தாய்செப்பினாய்திறம்பாநின்சொல்
உயிர்கிடக்கஉடலைவிசும்பேற்றினார்உணர்விறந்தகூற்றினாரோ. (௨௩)

எழுவதோர்இசைபெருகஇப்பொழுதேஒப்பரியஎரியும்தீயில்
விழுவதேநிற்கமடமெல்லியலார்தம்மைப்போல்நிலத்தின்மேல்வீழ்ந்
தழுவதேயானென்னாஅறிவுற்றான்எனஎழுந்தாங்கவனைநோக்கி
முழுவதேழ்உலகுடையமைந்தன்மீர்கேண்மின்எனமுறையிற்சொல்வான். (௨௪)

தக்கன்றனிவயிற்றுதித்தார்ஐம்பதின்மர்தடங்கொங்கைத்தையலாருள்
தொக்கபதின்மூவரைஅக்காசிபனும்புணர்ந்தனன்அத்தோகைமாருள்
மிக்கஅதிதிப்பெயராள்முப்பத்துமுக்கோடிவிண்ணோர்ஈய்ந்தாள்
மைக்கருங்கண்திதிஎன்பாள்அதின்இரட்டிஅசுரர்தமைவயிறுவாய்த்தாள் (௨௫)

தானவரைமுதலோனைத்தனுப்பயந்தாள்மதிஎன்பாள்மனிதர்தம்மூ
டானவருணங்கள்அவயவத்தடைவேபயந்தனள்ஆல்சுரபிஎன்பாள்
தேனுவுடன்கந்தருவம்மற்றுள்ளபிறபயந்தாள்தெரிக்குங்காலை
ஞானமுடைக்குரோதவசைகழுதைமுதலொட்டைபிறவயிறுவாய்த்தாள். (௨௬)

மழைபுரைபூங்குழல்விநதைவான் இடியின் அருணன்உடன்வயிற்றேயன்
தழைபுரையும்சிறைக்கூகையாறுமுதற்பெரும்பறவைதம்மைஈன்றாள்.
இழைபுரையும்தாம்பிரைஊர்க்குருவிசிவல்காடைபலபிறவும்ஈன்றாள்
கழைஎனும்அக்கொடியயர்ந்தாள்கொடிஉடனேசெடிமுதலாக்கண்டஎல்லாம். (உஎ)

வெருட்டிஎழும்கணபணப்பையவியாளரம்எலாம்கத்துருஆம்மின்னும்ஈன்றாள்
மருட்டிகழும்ஒருதலையபுயங்கம்எலாம்சுதைஎன்னும்மாதுதந்தாள்
அருட்டைஎனும்வல்லிதந்தாள்ஓந்திஉடும்பணில்கள்முதல்ஆனஎல்லாம்
தெருட்டிடுமாதிளைஈய்ந்தாள்செலசரம்ஆகியபலவும்தெரிக்குங்காலை. (உஅ)

அதிதிதிதிதனுஅருட்டைசுதைகழையேசுரபிஅனிலவிநதைஆன்ற
மதிஇளைகத்துருஉடனேகுரோதவசைதாம்பிரைஆம்மடநலார்கள்
விதிமுறையேஇவைஅனைத்தும்பயந்தனர்கள்விநதைசுதன்அருணன்மென்தோள்
புதுமதிசேர்நுதல்அரம்பைதனைப்புணரஉதித்தனம்யாம்புவனிமீதே. (உகூ)

அருணன்தன்புதல்வனியான்அவன்படரும்உலகெல்லாம்படர்வேன்ஆழி
இருண்மொய்ம்புகெடத்துரந்ததயரதற்கின்உயிர்த்துணைவன்இமையோரோடும்
வருணங்கள்வகுத்திட்டகாலத்தேவந்துதித்தேன்கழுகின்மன்னன்
தருணங்கொள்பேர்ஒளியீர்சம்பாதிபின்வருசடாயுஎன்றான். (ஙய)

ஆண்டவன்ஈதுரைசெய்யஅஞ்சலித்தமலர்க்கையார்அன்பினோடும்
மூண்டபெருந்துன்பத்தால்முறைமுறையின்நிறைமலர்க்கண்மொய்த்தநீரார்
பூண்டபெரும்புகழ்நிறுவித்தம்பொருட்டால்மேல்உலகம்புக்கதாதை
மீண்டனன்வந்தான்அவனைக்கண்டனமோஒத்தனர்அவ்விலங்கல்தோளார். (ஙக)

மருவினியகுணத்தவரைஇருசிறகால்உறத்தழுவிமக்காள்நீரே
உரியகடன்வினையேற்குஉதவுவீர்உடல்இரண்டுக்குயிர்ஒன்றானான்
பிரியவும்தான்பிரியாதேஇனிதிருக்கும்உடற்பொறைஆம்பிழைபாரா
தெரியதனில்இன்றேபுக்கிறவேனேல்இத்துயரம்மறவேன்என்றான். (ஙஉ

வேறு.

என்றுரைத்தஎருவைஅரசனை
நின்றதாரவர்நோக்கித்தொழுதுகண்
ஒன்றும்முத்தம்உறைஉறைஆய்உக
நின்றுமற்றின்னநீர்மைநிகழ்த்தினார். (ஙங)

உய்விடத்துதவற்குரியானும்தன்
மெய்விடக்கருதாதுவிண்எய்தினன்
இவ்விடத்தினில்எம்பெருமாஅன்னை
கைவிடற்பினையார்களைக்கண்உளார். (ஙச)

தாயில்நீங்கருந்தந்தையில்தன்நகர்
வாயில்நீங்கிவனம்புகுந்தெய்திய
நோயில்நீங்கினென்னுன்னில்என்எங்ஙனே
நீயும்நீங்குதியோநெறிநீங்கலாய். (௩௫)

என்றசொல்லர்இரந்தழிநெஞ்சினர்
நின்றவீரர்நோக்கிநின்றவன்
அன்றுதன்னில்அயோத்தியின்ஐயன்மீர்
சென்றபின்அவர்சேர்குவென்யான்என்றான். (௩௬)

வெந்தவன்வின்அடைந்தான்எனில்வீரர்நீர்
எந்துஞாலம்இனிதளியாதிவண்
போந்ததென்னைபுகுந்ததெல்புந்திபோய்க்
காந்துகின்றதுகட்டுரையீர்என்றான். (௩௭)

தேவர்தானவர்திண்திறல்நாகர்வே
றேவர்ஆகஇடர்இழைத்தார்எனில்
பூவராவுபொலங்கழல்வேலினீர்
சாவர்ஆக்கித்தருவென்அரசென்றான். (௩௮)

தாதைகூறலும்தம்பியைநோக்கினான்
சீதைகேள்வன்அவனும்தன்சிற்றவை
மாதரால்வந்தசெய்கைவரம்பிலா
ஓதவேலைஒழிவின்றுணர்த்தினான். (௩௯)

உந்தைஉண்மையன்ஆக்கிஉன்சிற்றவை
தந்தசொல்லைத்தலைக்கொண்டுதாரணி
வந்ததம்பிக்குதவியவள்ளலே
எந்தைவல்லதுயாவர்வல்லாரெனா. (௪௰)

அல்லித்தாமரைக்கண்ணனைஅன்புற
புல்லிமோந்துபொழிந்தகண்ணீரினன்
வல்லைமைந்தஅம்மன்னையும்என்னையும்
எல்லைஇல்புகழ்எய்துவித்தாய்என்றான். (௪௧)

பின்னரும்அப்பெரியவன்பெய்வளை
அன்னம்அன்னஅணங்கினைநோக்கினான்
மன்னர்மன்னவன்மைந்தஇவ்வாறுதல்
இன்னள்என்னஇயம்புதிஆல்என்றான். (௪௨)

அல்இறுத்தன்தாடகைஆதியர்
வில்இறுத்திடைஎன்மேலைநாள்
புல்இறுத்துயாவும்புகன்றுதன்
சொல்இறுத்தனன்தோன்றல்பின்தோன்றினன். (௪௩)

கேட்டுவந்தனன்கேழ்கிளர்மௌலியான்
தோட்டலங்கலினீர்துறந்தீர்வரம்
நாட்டில்நீவிரும்நன்றுதல்தாரும்இக்
காட்டில்வைகுதிர்காக்குவென்யான்என்றான். (௪௪)

இறைவஎண்ணிஅகத்தியன்இந்துளர்
நிறையும்நன்மணிஆற்றின்அகன்கரைத்
துறையுள்உண்டொருசூழல்அச்சூழல்புக்
குறைதும்என்றனன்உள்ளத்துறைகுவான். (௪௫)

பெரிதும்நன்றப்பெருந்துறைவைகிநீர்
புரிதிர்மாதவம்போதுமின்யான்அது
தெரிவுறுத்துவென்என்றவர்திண்சிறை
விரியும்நீழலிற்செல்லவின்சென்றனன். (௪௬)

ஆயசூழல்அறியஉணர்த்திஅத்
தூயசிந்தையதோம்இல்குணத்தினான்
போயபின்னைப்பொருசிலைவீரரும்
ஏயசோலைஇனிதுசென்றெய்தினார். (௪௭)

வார்ப்பொதிகொங்கைமருங்கிலையம்க்கினை
ஏர்ப்பச்சிந்தனைஇட்டுஅரக்கர்தம்
சீர்ப்பைச்சிக்கத்தேறினன்செக்கையில்
பார்ப்பைப்பார்க்கும்பறவையிற்பார்க்கின்றான். (௪௮)

௪ - வது. சடாயுகாண்படலம்முற்றும் ஆக திருவிருத்தம். [௨௱௨௰௨]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௫ - வது. சூர்ப்பநகைப்படலம்.

புவியினுக்கணிஆய்ஆன்றபொருள்தந்துபுலத்திற்றாகி
அவிஅகத்துறைகள்தாங்கிஐந்திணைநெறிஅளாவி
சவிஉறத்தெளிந்துதண்ணென்றொழுக்கமும்தழுவிச்சான்றோர்
கவிஎனக்கிடந்தகோதாவரியினைவீரர்கண்டார். (௧)

வண்டுறைகமலச்செவ்விவாண்முகம்பொலியவாசம்
உண்டுறைகுவளையொண்கண் ஒருங்குறநோக்கிஊழில்
தெண்டிரைக்கரத்தின்வாரித்திருமலர்தூவிச்செல்வர்க்
கண்டடிபணிவதென்னப்பொலிந்ததுகடவுள்யாறு. (௨)

எழுவுறுகாதலால்இங்கிரைத்திரைத்தேங்கிஏங்கி
பழுவநாட்குவளைச்செவ்விக்கண்பனிபரந்துசோர
வழுவிலாவாய்மைமைந்தர்வனத்துறைவருத்தம்நோக்கி
அழுவதும்ஒத்ததால்அவ்அலங்குநீர்ஆறுமன்றே. (௩)

நாளங்கொள்நளினப்பள்ளிநயனங்கள்அனையநேமி
வாளங்கள்உறைவகண்டுமங்கைதன்கொங்கைநோக்கும்
நீளங்கொள்சிலையோன்மற்றைநேரிழைநெடியநம்பி
தோளின்கண்மனம்வைத்தன்னசுடர்மணித்தடங்கள்கண்டாள். (௪)

ஓதிமம்ஒதுங்கக்கண்டஉத்தமன்உழையள்ஆகும்
சீதைதன்நடையைநோக்கிச்சிறியதோர்முறுவல்செய்தான்
மாதவள்தானும்ஆண்டுவந்துநீர்உண்டுமீளும்
போதகம்நடப்பநோக்கிப்புதியதோர்முறுவல்பூத்தாள். (௫)

வில்லியல்தடக்கைவீரன்வீங்குநீர்ஆற்றின்பாங்கர்
வல்லிகள்நுடங்கக்கண்டான்மங்கைதன்மருங்குல்நோக்க
எல்லிஅம்குவளைக்கானத்திடைஇடைமலர்ந்துநின்ற
அல்லிஅம்கமலம்கண்டாள்அண்ணல்தன்வடிவுகண்டாள். (௬)

அனையதோர்தன்மையால்அவ்அருவிநீர்ஆற்றின்பாங்கர்
பனிதருபடிவப்பஞ்சவடிஎனும்பருவச்சோலை
தனிஇடமதனைநண்ணித்தம்பியால்சமைக்கப்பட்ட
இனியபூஞ்சாலைஎய்திஇருந்தனன்இராமன்இப்பால். (௭)

வேறு.

நீலமாமணிநிறநிருதர்வேந்தனை
மூலம்நாசம்பெறமுடிக்கும்மொய்ம்பினுள்
மேலைநாள்உயிரொடும்பிறந்துதான்விளை
காலம்ஓர்ந்துடன்உறைகடியநோய்அனாள். (௮)

செம்பராகம்படச்செறிந்தகூந்தலாள்
வெம்பராகுத்தனிவிளைந்தமெய்யினுள்
உம்பரானவர்க்கும்ஒண்தவர்க்கும்ஒத்தநீர்
இம்பரானவர்க்கும்ஓர்இறுதிஈட்டுவாள். (௯)

வெய்யதோர்காரணம்உண்மைமேயினள்
வைகலும்தமியள்அவ்வனத்துலைகுவள்
நொய்தின்இவ்உலகெலாம்நுழையும்நோன்மையள்
எய்தினள்இராகவன் இருந்தசூழல்வாய். (௰)

எண்டகும் இமையவர்அரக்கர்எங்கள்மேல்
விண்டனர்விலக்குதிஎன்னமேலைநாள்
அண்டசத்துருந்துயில்துறந்தஐயனை
கண்டனள்தன்கிளைக்கிறுதிகாட்டுவாள். (௧௧)

சிந்தையில்உறைபவற்குருவம்தீர்ந்ததால்
இந்திரற்காயிரம்நயனம்ஈசற்கு
முந்தியமலர்க்கண்ஓர்மூன்றுநான்குதோள்
உந்தியின்உலகளித்தாற்கென்றுன்னுவாள். (௧௨)

கற்றைஅம்சடையவன்கண்ணிற்காய்தலால்
இற்றவன்அன்றுதொட்டின்றுகாறும்தான்
நற்றவம்இயற்றிஅவ்அனங்கன்நல்உரு
பெற்றனன்ஆம்எனப்பெயர்த்துமெண்ணுவாள். (௧௩)

தரங்களின்அமைந்துதாழ்ந்தழகின்சார்பின
மரங்களும்நிகர்க்கிலமலையும்புல்லிய
உரங்களின்உயர்திசைஓம்பும்ஆனையின்
கரங்களேஇவன்மணிக்கரம்என்றுன்னுவாள். (௧௪)

வின்மலைவல்லவன்வீரத்தோளொடும்
கன்மலைநிகர்க்கிலகனிந்தநீலத்தின்
நன்மலைஅல்லதுநாம்மேருவும்
பொன்மலைஆதலால்பொருவலாதென்பாள். (௧௫)

தாருயர்தாமரைத்தடங்கள்தம்மொடும்
கேழுயர்நாட்டத்துக்கிரியின்தோற்றத்தான்
தோளொடுதோள்செலத்தொடர்ந்துநோக்குறில்
நீளியஅல்லகண்நெடியமார்பென்றாள். (௧௬)

அதிகம்நின்றொளிரும்இவ்அழகன்ஆண்முகம்
பொதிஅவிழ்தாமரைப்பூவைஒப்பதோ
கதிர்மதிஆம்எனில்கலைகள்தேயும்அம்
மதிஎனில்மதிக்கும்ஓர்மறுஉண்டென்பர்ஆல். (௧௭)

எவன்செயஇனியஇவ்அழகைஎய்தினேன்
அவன்செயத்திருஉடம்பலசநோற்கின்றான்
நவன்செயத்தகையஇந்நளினநாட்டத்தான்
தவன்செயத்தவன்செய்ததவன்என்என்கின்றாள். (௧௮)

உடுத்தநீர்ஆடையள்உருவச்செவ்வியள்
பிடித்தருநடையினள்பெண்மைநன்றிவள்
அடித்தலம்தீண்டலின்அவனிக்கம்மயிர்
பொடித்தனநிகர்க்கும்ஆவ்புல்என்றுன்னுவாள். (௧௯)

வாணிலமருங்குலான்வயங்குசோதியை
காணலனேகொலோகதிரின்நாயகன்
சேணெலாம்புல்ஒளிசெலுத்திச்சிந்தையின்
நாணலன்மீமிசைநடக்கின்றான்என்றாள். (௨௰)

குப்புறற்கரியமாக்குன்றைவென்றுயர்
இப்பெருந்தோளவன்இதழுக்கேற்பதோர்
ஒப்பெனஉலகமேல்உரைக்கின்உள்ளமே
துப்பெனில்துப்புடையாரைச்சொல்லுகேன். (௨௧)

நற்கலைமதிஉறவயங்குநம்பிதன்
எற்கலைதிருஅரைஎய்திற்றுற
வற்கலைநோற்றனமாசிலாமணிப்
பொற்கலைநோற்றிலபோலும்ஆல்என்றாள். (௨௨)

தொடைஅமைநெடுமழைத்தொங்கல்ஆம்என
கடைகுழன்றிடைநெறிகரியகுஞ்சியை
சடைஎனப்புனைந்திலன்என்னின்மையலார்
உடைஉயிர்யாவையும்உடையும்ஆல்என்றாள். (௨௩)

நாறியநகைஅணிநல்லபல்லினுக்
ஏறியசெவ்வியின்இயற்றுமோஎனை
மாறகல்முழுமணிக்கரசின்மாட்சிதான்
வேறொருமணியினால்விளங்குமோஎன்பாள். (௨௪)

கரந்திவன்இலக்கணம்எடுத்துக்காட்டிய
பரந்தருநான்முகன்பழிப்புற்றான்அரோ
இரந்திவன்இணைஅடிப்பொடியுமீந்திலா
புரந்தரன்உலகெலாம்புரக்கின்றான்என்றாள். (௨௫)

நீத்தமும்பரவையுங்குறுகநெஞ்சிடை
கோத்தஅன்புணர்விடைக்குளிப்பமீக்கொளூ
ஏத்தவம்புரியஒன்றீகலான்பொருள்
காத்தவன்புகழ்எனத்தேயுங்கதிபினாள். (உ௬)

வான்றனில்வரைந்ததோர்மாதர்ஓவியம்
போன்றனள்புலர்ந்தனள்புழுங்குநெஞ்சினள்
தோன்றலசுடர்மணித்தோளின்நாட்டங்கள்
ஊன்றினள்பறிக்கலாள்ஊற்றம்பெற்றிலள். (உ௭)

நின்றனள் இருந்தவன்நெடியமார்பகம்
ஒன்றுவென் அன்றெனின் அமுதம்உண்கினும்
பொன்றுவென்போக்கினி அரிதுபோல்எனு
சென்றெதிர்நிற்பதோர்செய்கைதேடுவாள் (உ௮)

எயிறுடைஅரக்கிஎவ்வுயிரும்இட்டதோர்
வயிறுடையாள்எனமறுக்கும்ஆதலால்
குயிறொடர்குதலைஓர்கொவ்வைச்செவ்விவாய்
மயிறொடர்இயலிஆய்மருவல்நன்றெனா. (உ௯)

பங்கயச்செல்வியைமனத்துப்பாவியா
அங்கையின்ஆயமந்திரத்தைஆய்ந்தனள்
திங்களிற்சிறந்தொளிர்முகத்தள்செவ்வியள்
பொங்கொளிவிசும்பினில்பொலியத்தோன்றினாள்.

வேறு. (௩௰)

பஞ்சிஒளிர்விஞ்சுகுளிர்பல்லவம்அனுங்க
செஞ்செவியகஞ்சம்நிமிர்சீறடியள்ஆகி
அஞ்சொல்இளமஞ்ஞைஎனஅன்னமெனமின்னும்
வஞ்சிஎனநஞ்சமெனவஞ்சமகள்வந்தாள். (௩௧)

பொன்ஒழுகுபூவின்உறைபூவைஎழில்பூவை
பின்எழில்கொள்வாள்இணைபிறழ்ந்தொளிர்முகத்தாள்
கன்னிஎழில்கொண்டதுகலைத்தடமணித்தேர்
மின்இழிவதன்மைஇதுவின்இழிவதென்ன. (௩௨)

காவின்உயர்கற்பகம்உயிர்த்தகதிர்வல்லி
மேனிநனிபெற்றுவிளைகாமநெறிவாசத்
தேனின்மொழிஉற்றினியசெவ்விநனிபெற்றோர்
மானின்விழிபெற்றுமயில்வந்ததெனவந்தாள். (௩௩)

ஆரணியகாண்டம்.

நூபுரமும் மேகலையும் நூலும் அறல் ஓதிப்
பூமுரலும் வண்டும் இவை பூசலிடும் ஓசை
தாம் உரை செய்கின்றதொரு தையல் வரும் என்று
கோமகனும் அத்திசை குறித்தனன் விழித்தான். (௩௪)

விண்ணருள வந்ததொரு மெல் அமுதம் என்ன
வண்ணமுலை கொண்டிடை வணங்க வரு போழ்தத்
தெண்ணருளின் மழைமுகந் துடைத்தெழு மெய்ஞ்ஞானக்
கண்ணருளு கண்ணன் இரு கண்ணின் எதிர் கண்டான். (௩௫)

பேருழைய நாகர் உலகிற் பிறிதில் வானில்
பாருழையின் இல்லதொரு மெல் உருவு பாரா
ஆருழை அடங்கும் அழகிற்கவதி உண்டோ
நேரிழையர் யாவர் இவர் நேர் என நினைந்தான். (௩௬)

அவ்வயின் அவ் ஆசை தன் அகத்துடைய அன்னாள்
செவ்வி முகம் முன்னி அடி செங்கையின் இறைஞ்சா
வெவ்விய நெடுங்கண் அயில் வீசி அயல் பாரா
நவ்வியின் ஒதுங்கி இறை நாணி அயல் நின்றாள். (௩௭)

தீதில் வரவாக திரு நின் வரவு சேயோய்
போத உரை தம் உழை ஓர் புண்ணியம தன்றோ
ஏது பதி ஏது பெயர் யாவர் உறவென்றான்
வேத முதல் பேதையவள் தன் நிலை விரிப்பாள். (௩௮)

வேறு.

பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவன் ஆன செங்கையோன் தங்கை திக்கின்
மாவெலாம் தொலைத்து வெள்ளி மலையெடுத் துலகம் மூன்றும்
காவலான் பின்னை காமவல்லியாம் கன்னி என்றாள். (௩௯)

அவ்வுரை கேட்ட வீரன் ஐயுறு மனத்தான் செய்கை
செவ்விதன் றறிதல் ஆகும் சிறிதின் என் றுணரச் செங்கண்
வெவ்வுரு அமைந்தோன் தங்கை என்றது மெய்ம்மை ஆகில்
இவ்வுரு இயைந்த தன்மை இயம்புதி இயல்பின் என்றான். (௪௰)

தூயவன் பணியா முன்னம் சொல்லுவாள் சோர்விலாள் அம்
மாயவல் அரக்கரோடு வாழ்வினை மதிக்கலாதேன்
ஆய்வுறு மனத்தேன் ஆகி அறந்தலை நிற்பதானேன்
தீவினை தீய நோற்றுத் தேவரிற் பெற்றதென்றாள். (௪௧)

இமையவர் தலைவனேயும் எளிமையின் ஏவல் செய்யும்
அமைதியின் உலகம் மூன்றும் ஆள்பவன் தங்கை ஆகில்
சுமை உறு செல்வத் தோடும் தோன்றலை துணையும் இன்றி
தமியை நீ வருதற்கு ஒத்த தன்மை என் தையல் என்றான். (சஉ)

வீரன் அஃது உரைத்தலோடும் மெய் இலாள் விமலயான் அச்
சீரியர் அல்லார் மாட்டுச் சேர்கிலென் தேவர் பாலும்
ஆரிய முனிவர் பாலும் அடைந்தனென் இறைவ இண்டோர்
காரியம் உண்மை நின்னைக் காணிய வந்தேன் என்றாள். (சங)

அன்னவள் உரைத்தலோடும் ஐயனும் அறிதற்கு ஒவ்வா
நன்னுதல் மகளிர் சிந்தை நன்னெறிப் பால அல்ல
பின்னிது தெரியும் என்னாப் பெய்வளைத் தோளி என்பால்
என்ன காரியத்தை சொல் அஃதியையுமேல் இழைப்பல் என்றான். (சச)

தாமுறு காமத் தன்மை தாங்களே உரைப்பது என்ப
தாமெனல் ஆவதன்றால் அருங்குல மகளிர்க்கு அம்மா
ஏமுறும் உயிர்க்கு நோவேன் என் செய்கேன் யாரும் இல்லேன்
காமன் என்று ஒருவன் செய்யும் வன்மையைக் காத்தி என்றாள். (சரு)

சேண் உற நீண்டு மீண்டு செவ்வரி சிதறி வெவ்வே
றேண் உற மிளிர்ந்து நாளும் இதம் புரண்டிருண்ட வாட்கண்
பூண் இயல் கொங்கை அன்னாள் அம்மொழி புகறலோடும்
நாண் இலள் ஐயன் நோய்யள் நல்லளும் அல்லள் என்றான். (சசா)

பேசலன் இருந்த வள்ளல் உள்ளத்தின் பெற்றிதேரான்
பூசல் வண்டு ஆற்றும் கூந்தல் பொய்மகள் புகன்றனள் கண்
ஆசை கண்டருளின்றுண்டோ அன்றெனல் உண்டோ என்னும்
ஊசலால் உலாவுகின்றாள் மீட்டும் ஓர் உரையைச் சொன்னாள். (சஎ)

எழுதரு மேனியாய் ஈண்டு எய்தியது அறிந்திலாதேன்
முழுதுணர் முனிவர் ஏவல் செய் தொழில் முறையின் முற்றி
பழுதறு பெண்மையோடும் இளமையும் பயன் இன்றாக
பொழுதொடும் நாளும் வாளா கழிந்தன போலும் என்றாள். (சஅ)

நிந்தனை அரக்கி நீதி நிலை இலாள் வினை மற்றெண்ணி
வந்தனள் ஆகும் என்றே வள்ளலும் மனத்துட் கொண்டான்
சுந்தரி மரபிற்கு ஒத்த தொன்மையின் துணிவிதன்றால்
அந்தணர் பாவை நீ யான் அரசரில் வந்தேன் என்றான். (சகூ)

ஆரணமறையோன் எந்தை அருந்ததிக்கற்பின் எம்மோய்
தாரணிபுரந்தசாலகடங்கர்தம்மரபின்னையல்
போரணிபொலங்கொள்வேலாய்பொருந்தலை இகழ்ந்தற்கொத்த
காரணம் இதுவே ஆகின் என் உயிர் காண்பென் என்றாள். (௫௰)

அருத்தியள் அனைய கூற அகத்துறு நகையின் வெள்ளைக்
குருத்தெழுகின்றநீலக்கொண்டல்உண்டாட்டம்கொண்டான்
வருத்தம்நீங்கரக்கர்தம்மில்மானுயர்மணத்தல்நங்கை
பொருத்தம் அன்றென்றுசாலப்புலமையோர்புகல்வர்என்றான்.
(௫௧)

பாவரும்சிரத்தைஆரும்பத்தியின்பயத்தைத்ரா
திராவணன்தங்கைஎன்றதேஜைமைப்பாலதென்று
அராவணைஅமலன்அன்றாய்அறிவித்தேன்முன்னம்தேவர்ப்
பாவினில்நீங்கினேன்அப்பழிபடுபிறவிஎன்றாள். (௫௨)

ஒருவனேஉலகமூன்றித்கோங்கொருதலைவன்ஊங்கில்
ஒருவனேகுபேரன்நின்னேடுடன்பிறந்தவர்கள்அன்னோர்
தருவனேல்கொள்வென்அன்றேல்தமியையேவெறிடத்துச்சார
வெருவுவென்நங்கைஎன்றான்வேதத்தின்அறிவைவென்றான். (௫௩)

காந்தர்ப்பம்என்பதுண்டால்காதலில்கலந்தசிந்தை
மாந்தர்க்கும்மடந்தைமார்க்கும்மறைகளேவகுத்தகூட்டம்
ஏந்தற்பொற்றோளினாய்இதியைந்தபின்எனக்குமூத்த
வேந்தர்க்கும்விருப்பிற்றாகும்வேறும்ஓர்உரைஉண்டென்றாள் ௫௪

முனிவரோடுடையர்முன்னேமுதிர்பகைமுறைமைநோக்கார்
தனியைநீஆதலால்மற்றவரொடும்தழுவற்கொத்த
வினையம்ஈதல்லதில்லைவின்ஞாம்நின்ஆட்சிஆக்கி
இனியர்ஆய்அன்னர்வந்துன்ஏவலின்நிற்பர்என்றாள். (௫௫)

நிருதர்தம்அருளும்பெற்றேன்நின்நலம்பெற்றேன்நின்னோ
டொருவருஞ்செல்வத்தியாண்டும்உறையவும்பெற்றேன்ஒன்றோ
திருநகர்தீர்ந்தபின்னர்செய்தவம்பயந்ததென்று
வரிசிலைவடித்ததோளான்வாள்எயிறிலங்கநக்கான். (௫௬)

விண்ணிடைஇம்பர்நாகர்விரிஞ்சனேமுதலோர்க்கெல்லாம்
கண்ணிடைஒளியின்பாங்கர்கடிகமழ்சாலைநின்றும்
பெண்ணிடைஅரசிதேவர்பெற்றநல்வரத்தால்பின்னர்
மண்ணிடைமணியின்வந்தவஞ்சியேபோல்வாள்வந்தாள். (௫௭)

ஊன்சுட உணங்கு பேழ்வாய் உணர்வில் உருவம் நாறும்
வான்சுடர்ச் சோதி வெள்ளம் வந்திடை வயங்கல் நோக்கி
மீன்சுடர் விண்ணும் மண்ணும் விரிந்த போர் அரக்கர் என்னும்
கான்சுட மூளைத்த கற்பின் கனலியைக் கண்ணில் கண்டாள். (௫௮)

மருஒன்று கூந்தலாளை வனத்திவண் கொண்டுவாரான்
உருவிங்கிதுடையர் ஆகமற்றையோர் யாரும் இல்லை
அரவிந்த மலருள் நீங்கி அடிஇணை படியில் தோய
திருஇங்கு வருவாள் கொல்லோ என்றகம் திகைத்து நின்றாள். (௫௯)

பண்புற நெடிது நோக்கிப் படைக்குனர் சிறுமை அல்லால்
எண்பிறங் கழகிற்கெல்லை இல்லை ஆம் என்று நின்றாள்
கண்பிற பொருளில் செல்லா கருத்தெனின் அஃதே கண்ட
பெண்பிறந்தேனுக் கென்றால் என்படும் பிறருக்கென்றாள். (௬௰)

பொருதிறத்தானை நோக்கிப் பூவையை நோக்கி நின்றாள்
கருதமற்றினி வேறில்லை கமலத்துக் கடவுள் தானே
ஒருதிறத்துணர நோக்கி உருவினுக் குலகமூன்றின்
இருதிறத்தார்க்கும் செய்த வரம்பிவர் இருவர் என்றாள். (௬௧)

பொன்னைப்போல் பொருவில் மேனிப் பூவைப்பூ வண்ணத்தான் இம்
மின்னைப்போல் இடையாளோடும் மேவுமெய் உடையன் அல்லன்
தன்னைப்போல் தகையோர் இல்லா தளிரைப்போல் அடிஇன்னாளும்
என்னைப்போல் இடையே வந்தாள் இகழ்விப்பென் இவளை என்று. (௬௨)

வரும் இவள் மாயம் வல்லள் வஞ்சனை அரக்கி நெஞ்சம்
தெரிவிலள் தேறும் தன்மை சீரியோய் செயலிற்றன்றால்
உருவிது மெய்யதன்றால் ஊன்நுகர் வாழ்க்கையாளை
வெருவினென் எய்திடாமல் விலக்குதி வீர என்றாள். (௬௩)

ஒள்ளிதுன் உணர்வு மின்னே உன்னை ஆர் ஒளிக்கும் இட்டார்
தெள்ளிய நலத்தினால் உன் சிந்தனை தெரிந்த தம்மா
கள்ளவல் அரக்கி போல் ஆம் இவளை நீ காண்டி என்று
வெள்ளிய முறுவல் முத்தம் வெளிப்பட வீரன் நக்கான். (௬௪)

ஆயிடை அமுதின் வந்த அருந்ததிக் கற்பின் அஞ்சொல்
வேயிடைத் தோளினாளும் வீரனைச் சேரும் வேலை
நீயிடை வந்த தென்னை நிருதர் தம் பாவை என்று
காயெரி அனைய கள்ள உள்ளத்தாள் கதித்த லோடும். (௬௫)

அஞ்சினள் அஞ்சி அன்னம்மின் இடைஅலசஒடி
பஞ்சின்மெல் அடிகள்நோவப்பதைத்தனள்பருவக்கால
மஞ்சிடைவயங்கித்தோன்றும்பவளத்தின்வல்லிஎன்ன
குஞ்சரம்அனையவீரன்குவவுத்தோள்தழுவிக்கொண்டாள். (௬௬)

வளைஎயிற்றவர்களோடுவரும்விளையாட்டென்றாலும்
விளைவனதீமையேஆம்என்பதைஉணர்ந்துவீரன்
உளைவனஇயற்றல்ஒல்லைஉன்றிலைஉணரும்ஆகின்
இளையவன்முனியும்நங்கைக்குதிவிளைவின்என்றான். (௬௭)

பொற்புடைஅரக்கிபூவில்புனலினில்பொருப்பில்வாழும்
அற்புடைஉள்ளத்தாரும்அனங்கனும்அமரர்மற்றும்
எற்பெறத்தவம்செய்கின்றார்என்னைநீஇகழ்வதென்னே
நற்பொறைநெஞ்சில்நில்லாக்கள்வியைநச்சிஎன்றாள். (௬௮)

தன்னெடும்தொடர்விலாதேதம்என்னவும்தவிராள்தான்இக்
கன்னெடுமனத்திசொல்லும்கள்ளவாசகங்கள்என்ன
மின்னெடுதொடர்ந்துசெல்லும்மேகம்போல்மிதிலைவேந்தன்
பொன்னெடும்புனிதன்போய்அப்பூம்பொழிற்சாலைபுக்கான்.

புக்கபின்போனதென்னும்உணர்வினள்பொறையுள்நீங்கி
உக்கதாம்உயிரள்ஒன்றும்உயிர்த்திலள்ஒடுங்கிநின்றாள்
தக்கிலள்மனத்துள்யாதும்தழுவிலள்சலமும்கொண்டாள்
மைக்கருங்குழலினாள்மாட்டன்பினில்வலியன்என்பாள். (௭௰)

நின்றிலள்அவனைச்சேரும்நெறியினைநினைந்துபோனாள்
இன்றிவன்ஆகம்புல்லேன்எனில்உயிர்இழப்பென்என்னா
பொன்றிணிசரளச்சோலைப்பளிக்கறைப்பொதும்பர்புக்காள்
சென்றதுபரிதிமேல்பால்செக்கர்வந்திறுத்ததன்றே, (௭௧)

வேறு.

அழிந்தசிந்தையள்ஆய்அயர்வாள்வயின்
மொழிந்தகாமக்கடுங்கனல்மூண்டதால்
வழிந்தநாகத்தின்வன்தொளைவாள்எயிற்
றிழிந்தகார்விடம்ஏறுவதென்னவே. (௭௨)

தாடகைக்கொடியாள்தடமார்பிடை
ஆடவர்க்கரசன்அயில்அம்புபோல்
பாடவத்தொழில்மன்மதன்பாய்கணை
ஓடஉட்கிஉயிர்உலைந்தாள்அரோ. (௭௩)

கலைஉவா மதியே கறி ஆகவன்
சிலையின் மாரனைத் தின்னும் நினைப்பினள்
மலயமாருத மா நெடுங்காலவேல்
உலைய மார்பிடை ஊன்றிடஞ்யும் ஆல். (௭௪)

அலைக்கும் ஆழி அடங்கிட அங்கையால்
மலைக்குலங்களில் தூர்க்கும் மனத்தினள்
நிலைக்கும் வானின் நெடுமதி நீள் நிலா
மலைக்க நீங்கும் மிடுக்கினள் மாந்துவாள். (௭௫)

பூவெலாம் பொடி ஆக இப்பூமியுள்
காவெலாம் ஒடிப்பென் எனக் காந்துவாள்
சேவலோடுறை செந்தலை அன்றிலின்
நாவினுல் வலி எஞ்ச நடுங்குவாள். (௭௬)

அணைவில் திங்களை நுங்க அராவினை
கொணர்வென் ஓடி எனக் கொதித்துன்னுவாள்
பணையின் மென்முலைமேல் பனிமாருதம்
புணர ஆர் உயிர் வெந்து புழுங்கும் ஆல். (௭௭)

கைகளால் தன் கதிர் இளங்கொங்கைமேல்
ஐய தண்பனி அள்ளினள் அப்பினள்
மொய்கொள் தீ இடை வெந்து முருங்கிய
வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்கும் ஆல். (௭௮)

அளிக்கும் மெய் உயிர் கான்றழல் அஞ்சினள்
குளிக்கும் நீரும் கொதித்தெழக் கூசும் ஆல்
விளிக்கும் வேலையை வெங்கண் அனங்கனை
ஒளிக்கல் ஆம் இடம் யாதென உன்னும் ஆல். (௭௯)

வந்து கார்மழை தோன்றினும் மாமணிக்
கந்து காணினும் கைத்தலம் கூப்பும் ஆல்
இந்துகாந்தத்தின் ஈர நெடுங்கலும்
வெந்து காந்த வெதுப்புறு மேனியாள். (௮௰)

வாமமாமதியும் பனிவாடையும்
காமனும் தனைக் கண்டுணராவகை
நாமவாள் எயிற்றேர் கதநாகம் வாழ்
சேமமால் வளையின் முழை சேரும் ஆல். (௮௧)

அன்னகாலை அழல்மிகு தென்றலும்
முன்னில் மும்மடி ஆய் முலை வெந்துக
இன்னவா செய்வதென்றறியாதிரம்
பொன்னின் வார்தளிரில் புரண்டாள் அரோ. (௮௨)

வீரன் மேனி வெளிப்பட வெய்யவள்
கார்கொள் மேனியைக் கண்டனள் ஆம் எனச்
சோரும் வெள்கும் துணுக்கெனும் அவ் உருப்
பேருங்காலம் பிணி இடைப் பேரும் ஆல். (௮௩)

ஆகக் கொங்கையின் அய்யன் என்றஞ்சன
மேகத்தைத் தழுவும் அவை வெந்தன
போகக் கண்டு புலம்பும் அப்புன்மையாள்
மோகத்துக்கொர் முடிவும் உண்டாம் கொலோ. (௮௪)

ஊழி வெங்கனல் உற்றனள் ஒத்தும் அவ்
ஏழை ஆவி இறந்திலள் என்பர் ஆல்
ஆழியானை அடைந்தனள் பின்னையும்
வாழ்தல் ஆம் எனும் ஆசை மருந்தினே. (௮௫)

வஞ்சனைக் கொடுமாலையவர்க்கும் என்
நெஞ்சு புக்கென தாவத்தை நீக்கெனும்
அஞ்சனக் கிரியே அருளாய் எனும்
நஞ்சம் நக்கினள் போல நடுங்குவாள். (௮௬)

காவியோ கயலோ எனும் கண் இணைத்
தேவியோ திருமங்கையில் செவ்வியாள்
பாவியேனையும் பார்க்கும் கொலோ எனும்
ஆவியோயினும் ஆசையின் ஓய்விலாள். (௮௭)

ஆன்ற காதல் அஃதுற எய்துழி
மூன்றுலோகமும் மூடும் அரக்கர் ஆம்
ஏன்ற கார் இருள் நீக்க இராகவன்
தோன்றினன் என வெய்யவன் தோன்றினன். (௮௮)

வேறு.

விடியல் காண்டலின் இண்டு தன் உயிர் கண்ட வெய்யாள்
படி இலாள் மருங்குள் அரவெனை அவண் பாரான்
கடிதின் ஓடினன் எடுத்தொல்லை கரத்தவள் காதல்
வடிவினான் உடன் வாழ்வு தேவாந்தெவண் மதியா. (௮௯)

வந்துநோக்கினள்வள்ளல்போய்ஒருமணித்தடத்தான்
சந்திநோக்கினன்இருந்ததுகண்டனள்தம்பி
இந்துநோக்கியநுதலியைக்காத்தயல்இருண்ட
கந்தம்நோக்கியசோலையில்இருந்ததுகாணாள். (௯௰)

தனிஇருந்தனள்சமைந்ததென்சிந்தனைதாழ்வுற்
றினிஇருந்தெனக்கென்னுறுவதில்எனஎண்ணு
துனிஇருந்தவன்மனத்தினள்தோகையைத்தொடர்ந்தாள்
கனிஇரும்பொழில்காத்தயல்இருந்தவன்கண்டான். (௯௧)

நில்அடீஎனக்கடுகினன்பெண்எனநினைந்தான்
வில்எடாதவள்வயங்கெரிஆம்எனவிரிந்த
சில்லல்ஓதியைச்செங்கையில்திருகுறப்பற்றி
ஒல்வயிற்றுதைத்தொளிகிளர்சுற்றுவாள்உருவி. (௯௨)

ஊக்கித்தாங்கிவிண்படர்வெனென்றுருத்தெழுவாளை
நூக்கிநொய்தினில்வெய்திழையேல்எனநுவலா
மூக்கும்காதும்வெம்முரண்முலைக்கண்களும்முறையால்
போக்கிப்போக்கியசினத்தொடும்புரிகுழல்விட்டான். (௯௩)

அக்கணத்தவள்வாய்திறந்தரற்றியஅமலை
திக்கனைத்தினும்சென்றதுதேவர்தம்செவியும்
புக்கதுற்றதுபுகல்வதென்மூக்கெனும்புழையூ
டுக்கசோரியின்ஈரம்உற்றுருகியதுலகம். (௯௪)

கொலைதுமித்துயர்கொடுங்கதிர்வாளின்அக்கொடியாள்
முலைதுமித்துயர்மூக்கினைநீக்கியமூத்தம்
மலைதுமித்தெனஇராவணன்மணிஉடைமகுடத்
தலைதுமித்தற்குநாட்கொண்டதொத்ததோர்தன்மை. (௯௫)

அதிரமாநிலத்தடிபதைத்தரற்றியஅரக்கி
கதிர்கொள்காலவேல்கரன்முதல்நிருதர்வெங்கதப்போர்
எதிர்இலாதவர்இறுதியின்நிமித்தம்ஆய்எழுந்தாள்
உதிரமாரிபெய்கார்நிறமேகம்ஒத்துயர்ந்தாள். (௯௬)

உயரும்விண்ணிடைமண்ணிடைவிழும்கிடந்துழைக்கும்
அயரும்கைகுலைத்தலமரும்ஆர்உயிர்சோரும்
பெயரும்பெண்பிறந்தேன்பட்டபிழைஎன்பிதற்றும்
துயரும்அச்சமும்தொடர்ந்திலாத்தொல்குடிப்பிறந்தாள். (௯௭)

ஒற்றும்மூக்கினைஉலைஉறுதீஎனஉயிர்க்கும்
எற்றும்கையினைநிலத்தினில்இணைத்தடங்கொங்கை
பற்றும்பார்க்கும்மெய்வெயர்க்கும்தன்பருவலிக்காலால்
சுற்றும்ஓடும்போய்ச்சோரிநீர்சொரிதரச்சோரும். (௩௮)

ஊற்றுமிக்கநீர்அருவியின்ஒழுகியகுருதி
சேற்றுவெள்ளத்துள்திரியவள்தேவரும்இரிய
கூற்றும்உட்கும்தன்குலத்தினோர்பெயர்எலாம்கூறி
ஆற்றுகிற்கிலள்பற்பலபன்னிநின்றழைத்தாள். (௩௯)

வேறு.

நிலைஎடுத்துநெடுநிலத்துநீஇருக்கத்தாபதர்கள்
சிலைஎடுத்துத்திரியும்இதுசிறிதன்றோதேவர்எதிர்
தலைஎடுத்துவிழியாமைசமைப்பதேதழல்எடுத்தான்
மலைஎடுத்ததனிமலையேஇவைகாணவாராயோ. (௪௰)

புலிதானேபுறத்தாகக்குட்டிகோட்படாதென்ன
ஒலிஆழிஉலகுரைக்கும்உரைபொய்யோஊழியினும்
சலியாதமூவருக்கும்வானவர்க்கும்தானவர்க்கும்
வலியானேயான்பட்டவலிகாணவாராயோ. (௪௧)

ஆர்த்தானைக்கரசுந்திஅமரர்கணத்தொடும்அடர்ந்த
போர்த்தானைஇந்திரனைப்பொருதவனைப்போர்தொலைத்து
வேர்த்தானைஉயிர்கொண்டுமீண்டானைவெரிந்பண்டு
பார்த்தானேயான்பட்டபழிவந்துபாராயோ. (௪௨)

காற்றினையும்புனலினையும்கனலினையும்கடுங்காலக்
கூற்றினையும்விண்ணினையும்கோளினையும்பணிகொண்டற்
காற்றினைநீஇன்றிருவர்மானிடவர்க்காற்றாது
மாற்றினையோஉன்வலத்தைச்சிவன்தடக்கைவாள்கொண்டாய். (௪௩)

உருப்படிவம்மன்மதனைஒத்துளரோஆயினும்உன்
செருப்படியில்பொடிஒவ்வாமானிடரைச்சீறுதியோ
நெருப்படியில்பொடிசிதறநிறைந்தமதத்திசையானை
மருப்பொடியப்பொருப்பிடியத்தோள்நிமிர்த்தவலியோனே. (௪௪)

தேனுடையநறுந்தெரியல்தேவரையும்தெறும்ஆற்றல்
தானுடையஇராவணற்கும்தம்பியர்க்கும்தவிர்ந்ததோ
ஊனுடையஉடம்பினர்ஆய்எம்குலத்தோர்க்குணவாய
மானுடவர்மருங்கேபுக்கொடுங்கினதோவலிஅம்மா. (௪௫)

மரனையும் நெடுங்கானில் மறைந்துறையும் தாபதர்கள்
உரனையோ அடல் அரக்கர் ஒய்வையோ உற்றெதிர்ந்தார்
அரனையோ அயனையோ அரியையோ எனும் ஆற்றல்
கரனையோ யான் பட்ட கையறவு காணாயோ. (௱சு)

இந்திரனும் அரன் அயனும் இமையவரும் பணிகேட்ப
சுந்தரி பல்லாண்டிசைப்ப உலகேழும் தொழுதேத்த
சந்திரன் போல் தனிக்குடைக்கீழ் நீ இருக்கும் சபைநடுவே
வந்தடியேன் நாணுது முகம் காட்ட வல்லேனோ. (௱எ)

உரன் நெரிந்து விழ என்னை உதைத்துருட்டி மூக்கரிந்த
நரன் இருந்து தோள் பார்க்க நான் கிடந்து புலம்புவதோ
கரன் இருந்த வனம் அன்றோ இவை படவும் கடவேனோ
அரன் இருந்த மலை எடுத்த அண்ணாவோ அண்ணாவோ. (௱அ)

நசையாலே மூக்கிழந்து நாணம் இலா நான் பட்ட
வசையாலே நினது புகழ் மாசுண்டதாகாதோ
திசையானை விசைகலங்கச் செருச்செய்து மருப்பொசித்த
இசையாலே நிறைந்த புயத்திராவணவோ இராவணவோ. (௱கூ)

கானமதினிடை இருவர் காதொடு மூக்குடன் அரிய
மானமதால் பாவியேன் இவண் மடியக் கடவேனோ
தானவரைக் கருவறுத்துச் சதமகனைத் தளையில் இட்டு
வானவரைப் பணிகொண்ட மருகாவோ மருகாவோ. (௱ய)

ஒருகாலத் துலகேழும் உருத்தெரியத் தனுவொன்றால்
திருகாத சினந்திருகித் திசை அனைத்தும் செலநூறி
இருகாலில் புரந்தரனை இருஞ்சிறையின் இடுவித்த
மருகாவோ மானிடவர் வலிகாண வாராயோ. (௱கக)

கல்லிரும்படைத் தடக்கை அடற்கர தூடணர் முதலா
அல்லிரும் சுடர் மணிப்பூண் அரக்கர் குலத்தவதரித்தீர்
கொல்லிரும்படைக் கும்பகருணனைப்போல் குவலயத்துள்
எல்லிரும் உறங்குதிரோ யான் அழைத்தல் கேளீரோ. (௱கஉ)

என்றின்ன பலபன்னி இகல் அரக்கி அழுதிரங்கி
பொன்றுன்னும் படியகத்துப் புரள்கின்ற பொழுதகத்து
நின்றந்த நதியகத்து நிறைதவத்தின் குறைமுடித்து
வன்றின்னுகச்சிலை நெடுந்தோள் மரகதத்தின் மலைவந்தான். (௱கங)

வந்தானை இடைநோக்கிவயிறலைத் துமழைக்கண்ணீர்
செந்தாரைக்குருதியொடுசெழுநிலத்தைச்செறுக்கி
அந்தோஉன் றிருமேனிக்கண்பிழைத்தவன்பிழையாலே
எந்தாய்யான்பட்டபடி இதுகாணென்றெதிர்விழுந்தாள். (௱கச)

விரிந்தாயகூந்தலாள்வெய்யவினையாதானும்
புரிந்தாள்என்பதுதனதுபொருவரியதிருமனத்தால்
தெரிந்தான் இன்றிளையானே இவளைநெடுஞ்செவியொடுமூக்
கரிந்தான்என்பதும்உணர்ந்தான் அவளை நீஆரென்றான். (௱கரு)

அவ்வுரைகேட்டடல்அரக்கிஅறியாயோ நீஎன்னை
தெவ்வுரைஎன்றோர்உலகும்இல்லாதசிற்றத்தான்
வெவ்இலைவேல்இராவணன் ஆம்வின்உலகம்முதல்ஆய
எவ்வுலகும்உடையானுக்குடன்பிறந்தேன்யானென்றாள். (௱கசா)

தாயிருந்ததலைஅரக்கர்புகல்ஒழியத்தவம்இயற்ற
யாயிருந்தநெடுஞ்சூழற்கென்செயவந்தீர்எனலும்
வேயிருந்தில்எனக்கனலும்வெங்காமவெம்பிணிக்கு
மாமருந்தேநெருனலினும்வந்திலேனுயானென்றாள். (௱கஎ)

செங்கயல்போல்கருநெடுங்கண்தேமருதாமரைஉறையும்
நங்கை இவர்எனநெருனல்நடந்தவரோநாம்என்ன
கொங்கைகளும்குழைக்காதும்கொடிமூக்கும்குறைத்தழித்தால்
அங்கண் அரசெஞ்நவர்க்கழியாதோஅழகென்றாள். (௱கஅ)

மூரல்முறுவலன் இளையமொய்ம்பிளைன்முகம்நோக்கி
விரவினாந்தனை இவள்தன்விடுகாதும்கொடிமூக்கும்
இரதினைந்திவள் இழைத்தபிழைஎன்னென்றிறைவினவ
சூரநெடுந்தகைஅவனைஅடிவணங்கிச்சொல்லுவான். (௱ககூ)

தேட்டந்தான்வாள்எயிற்றில்தின்னவோதீவினையோர்
கூட்டந்தான்புறத்துளதோகுறித்தபொருள்அறிந்திலம்ஆல்
நாட்டந்தான்எரிஉமிழநல்லாள்மேல்பொல்லாதாள்
ஓட்டந்தாள்அரிதின் இவள்உடன்றெழுந்தாள்என [illegible]த்தான்.

ஏற்றவளைவரிசிலையோன் இயம்பாமுன் இகல்அரக்கி
சேற்றவளைதன்கணவன் அருகிருப்பசினம்திருகி
சூற்றவளை நீர்உழக்கும்துறைகெழுநீர்வளநாடா
மாற்றவளைக்கண்டக்கால்அழலாதோமனம்என்றாள். (௱உக)

பேடிப்போர்வல் அரக்கர்பெருங்குலத்தை ஒருங்கவிப்பான்
தேடிப்போந்தனம் இன்று தீமாற்றம் சில விளம்பி
வீடிப்போகாதே இம்மெய்வனத்தைவிட்டகல
ஓடிப்போ என்றுரைத்து உரைகடந்தார்க்கவள் உரைப்பாள். (௱௨௨)

நரைதிரை என்றில்லாத நான்முகனே முதல் அமரர்
கரை இறந்தோர் இராவணற்குக் கரன் இறக்கும்குடி என்றால்
விளையும் இது நன்றன்றோ வருக யான் உரைக்கும்
உரை உரைத்து நமக்குறுதி உணர்வுறுதேல் என்றுரைப்பாள். (௱௨௩)

ஆக்கரியமூக்குங்கை அரிஉண்டாள் என்றுரை
நாக்கரியும் தயமுகனார் நாகரிகர் அல்லாமை
மூக்கரிந்து நும்குலத்தை முதல் அரிந்தீர் இனி உமக்கு
போக்கரிதிவ் அழகை எல்லாம் புல்லிடையே உகுத்தீரோ. (௱௨௪)

வான்காப்போர் மண்காப்போர் மாநாகர் வாழ் உலகம்
தான்காப்போர் இனித்தங்கள் தலைகாத்து நின்றுங்கள்
ஊன்காக்க உரியார்யார் என்னை உயிர் நீர் காக்கில்
யான்காப்பென் அல்லால் அவ் இராவணனார் உளர் என்றாள். (௱௨௫)

காவல் திண்கற்பமைந்தார் தம்பெருமை தாம் கழறார்
ஆவல்பேர் அன்பினால் அறைகின்றேன் ஆம் அன்றே
தேவர்க்கும்வலியான் தன் திருத்தங்கையாள் இவள் இன்ன
மேவர்க்கும்வலியாள் என்றிளையானுக்கியம்பீரோ. (௱௨௬)

மாப்போரில் புறங்காப்பென் வான்சுமந்து செலவல்லேன்
தூப்போலக் கனிபலவும் சுவை உடைய தரவல்லேன்
காப்போரைக் கைத்தென் நீர் கருதியது தருவேன் இப்
பூப்போலும் மெல்லியலாள் பொருள் என்னே புகல்வீர் ஆல். (௱௨௭)

குலத்தாலும் நலத்தாலும் குறித்தனவே கொணர்தக்க
வலத்தாலும் மதியாலும் வடிவாலும் மடத்தாலும்
நிலத்தாரும் விசும்பாரும் நேரிழையார் என்னைப்போல்
[illegible]த்தான் இங்குரியாரைச் சொல்லீரோ வல்லீரேல். (௱௨௮)

போக்கினீர் என் நாசி போய்த்தென் நீர் பொறுக்குவிரேல்
ஆக்குவென் ஓர் நொடிவரையில் அழகமைவென் அருள் கூறும்
பாக்கியம் உண்டெனின் அதனால் பெண்மைக்கோர் பழுதுண்டோ
மேக்குயரும் நெடுமூக்கும் மடந்தையர்க்கு மிகை அன்றோ. (௱௨௯)

விண்டாரோ அல்லாரோ வேண்டாதார் நான் வேண்டின்
உண்டாய காதலின் என் உயிர் என்பது மதன்றே
கண்டாரோ காதலிக்கும் கட்டழகும் விடம் அன்றே
கொண்டாரோ கொண்டாடும் உருப்பெற்றால் கொள்வீரோ. (௱௯௰)

சிவனும் மலர்த் திசைமுகனும் திருமாலும் தெறுகுலிசத்
தவனும் அடுத்தொன்றாகி நின்றன்ன உருவோனே
புவனம் அனைத்தையும் ஒருதன் பூங்கணையால் உயிர் வாங்கும்
அவனும் உனக்கிளையானே இவனே போல் அருள் இலன் ஆல். (௱௯௧)

வேறு.

பொன் உருவப் பொருகழலீர் புழைகாணமூக்கரிவான் பொருள் வேறுண்டோ
இன் உருவம் இது கொண்டிங்கிருந்தொழியும் நம்மருங்கே கள்காள் அப்பால்
பின் இவளை அயல் ஒருவர் பாரார் என்றே அரிந்தீர் பிழைசெய்தீரோ
அன்னதனை அறிந்தன்றோ அன்பிரட்டி பூண்டது நான் அறிவிலேனே. (௱௯௨)

வெப்பழியா நெடுவெகுளி வேல் அரக்கர் ஈதறிந்து வெகுண்டு நோக்கின்
அப்பழியால் உலகனைத்தும் நும்பொருட்டால் அழிந்தனவாம் அறத்தை நோக்கி
ஒப்பழியச் செய்கிலார் உயர்குலத்துத் தோன்றினோர் உணர்ந்து நோக்கி
இப்பழியைத் துடைத்துதவி இனி திருத்திர் என்றொடும் என்றிறைஞ்சி நின்றாள். (௱௯௩)

நாடறியாத் துயர் இழைத்த நவை அரக்கி நின் அன்னை தன்னை நல்கும்
தாடகையை உயிர் கவர்ந்த சரம் இருந்ததன்றியும் நான் தவமேற்கொண்ட
தோடகையது உறுமலர்த்தார் இகல் அரக்கர் குலம் தொலைப்பான் தோன்றி நின்றேன்
போடகைப் புல் ஒழுக்கை வல் அரக்கி என்றிறைவன் புகலும் பின்னும். (௱௯௪)

தரை அளித்த தனி நேமித் தயரதன் தன் புதல்வர் யாம் தாய் சொல் தாங்கி
விரை அளித்த கான் புகுந்தோம் வேதியரும் மாதவரும் வேண்ட நீண்டு
கரை அளித்தற்கரிய படைக்கடல் அரக்கர் குலம் தொலைத்துக் கண்டாய் பண்டை
வரை அளித்த குலமாட நகர் புகுவேம் இவை தெரிய மனக்கொள் என்றான். (௱௯௫)

நெறித்தாரை செல்லாத நிருதர் எதிர் நில்லாதே நெடிய தேவர்
மறித்தார் இன்றிவர் இருவர் மானிடவர் என்றது வல்லை ஆகில்
வெறித்தாரை வேல் அரக்கர் விறல் இயக்கர் முதலினர் நீமிடவோர் என்று
குறித்தாரை யாவரையும் கொணருதியேல் நின் எதிரோ கோறும் என்றான். (௱௯௬)

கொல்லல் ஆம் மாயங்கள் குறித்தனவே கொள்ளல் ஆம் கொற்றம் முற்ற
வெல்லல் ஆம் மற்றியநற்றும் வினை எல்லாம் கடக்கல் ஆம் மேல்வாய் நீங்கி
பல்லெல்லாம் உறத் தோன்றும் பகுவாயாள் என்றது பார்த்தி ஆகில்
நெல்லெல்லாம் சுரந்தளிக்கும் நீர் நாட கேள் என்று நிருதி கூறும். (௱௯௭)

காம்பறியும் தோளானைக் கைவிடேன் எனினும் யான் மிகையே யாகவர்
ஆம்பொறி இல் அடல் அரக்கர் அவரோடே செருச் செய்வான் அமைந்தீர் ஆகில்
தாம்பொறியில் பலமாயம் தரும்பொறிகள் அறிந்து அவற்றைத் தடுப்பென் அன்றே
பாம்பறியும் பாம்பின் கால் எனமொழியும் பழமொழியும் பார்க்கிலீரோ. (௱௬௮)

உளங்கோடல் உனை இழைத்தாள் உளள் ஒருத்தி என்னுதியேல் நிருதரோடும்
களங்கோடற்குரிய செருக்கண்ணியக்கால் ஒருமூவேம் கலந்த காலை
குளங்கோடும் என்றிதுவும் உறுகோளே என்றுணரும் குறிக கோள் இல்லா
இளங்கோவோடு உனை இருத்தில் இருகோளும் சிறை வைத்தாற்கு இளையேன் என்றாள். (௱௬௯)

பெருங்குலா உறு நகர்க்கே கேள்கு நாள் வேண்டும் உருப்பிடிப்பேன் அன்றேல்
அருங்கலாம் உற்றிருந்தான் என்னினும் இங்கு இளையவன் தான் அரிந்த நாசி
ஒருங்கிலா இவளோடும் உறைவென்றோ என்பானேல் இறைவ ஒன்றும்
மருங்கிலாதவளோடும் அன்றோ நீ நெடுங்காலம் வாழ்ந்தது என்பாய். (௱௭௰)

என்றவள் மேல் இளையவன் தான் இலங்கிலை வேல் கடைக்கணியா இவளைக் கண்டு
கொன்றுகளையேம் என்றால் நெடிது அலைக்கும் அருள் என் கொல் கோவே என்ன
நன்றது வே ஆம் அன்றே போகாளேல் ஆக என நாதன் கூற
ஒன்றும் இவர் எனக்கு இரங்கார் உயிர் இழப்பென் நிற்கில் என அரக்கி உன்னா. (௱௭௧)

ஏற்ற நெடுங்கொடி மூக்கும் இருகாதும் முலை இரண்டும் இழந்தும் வாழ
ஆற்றுவென் வஞ்சனையால் உமை உள்ள பரிசு அறிவான் அமைந்த தன்றோ
காற்றினிலும் கனலினிலும் கடியானைக் கொடியானைக் கரனை உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன் என்று சலம் கொண்டு போனாள். (௱௭௨)

௫ - வது. சூர்ப்பநகைப்படலம் முற்றும் ஆக திருவிருத்தம். [௲௱௰௪]

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

௬ - வது. கரன்வதைப்படலம்.

இருந்த மாக்கரன் தாள் இணையின் மிசை
சொரிந்த சோரியள் கூந்தலள் தூம்பென
தெரிந்த மூக்கினள் வாயினள் செக்கர் மேல்
விரிந்த மேகம் என விழுந்தாள் அரோ. (௧)

அழுங்கு நாள் இதென்று அந்தகன் ஆணையால்
தழுங்கு பேரி எனத் தனித்தேங்குவாள்
முழங்கு மேகம் முடித்த வெந்தீயினால்
புழுங்கு நாகம் எனப் புரண்டாள் அரோ. (௨)

வாக்கிற்கொக்கப்புகைமூழ்ந்துவாயினன்
நோக்கிக்கூசலன்றன்னைஇத்தன்மையை
ஆக்கிப்போனவர்ஆர்கொல்என்றான்அவன்
மூக்கிற்சோரிமுழீஇக்கொண்டகண்ணினாள். (௩)

இருவர்மானிடர்தாபதர்ஏந்திய
வரிவில்வாட்கையர்மன்மதன்மேனியர்
தருமநீரர்தயரதன்காதலர்
செருவில்நேருநிருதரைத்தேடுவார். (௪)

ஒன்றும்நோக்கலர்உன்வலிஅங்கறன்
நின்றுநோக்கிநிறுத்தும்நினைப்பினர்
வென்றிவேற்கைநிருதரைவேர்அறக்
கொன்றுநீக்குதும்என்றுணர்கொள்கையார். (௫)

மண்ணில்நோக்கருவானினில்மற்றினில்
எண்ணிநோக்குறின்யாவர்க்கும்நோக்கலாப்
பெண்ணிலநோக்குடையாள்ஒருபேதைஎன்
கண்ணில்நோக்கிஉரைப்பருங்காட்சியாள். (௬)

கண்டுநோக்கரும்காரிகையாள்தனை
கொண்டுபோவல்இலங்கையர்கோக்கென
விண்டுமேல்விழுந்தேனைவெருண்டவர்
துண்டம்ஆக்கினர்மூக்கெனச்சொல்லினாள். (௭)

கேட்டனன்உரைகண்டிலன்கேடினர்
தோட்டருங்கில்தொளைஉறுமூக்கினை
காட்டெனஎழுந்தான்எதிர்கண்டவர்
நாட்டம்தீயஉலகைநடுக்குவான். (௮)

எழுந்துநின்றுலகேழும்எரிந்துக
பொழிந்தகோபக்கனல்உகப்பொங்குவான்
கழிந்துபோயினர்மானிடர்என்னுங்கால்
அழிந்ததோஇவ்அரும்பழிஎன்னும்ஆல். (௯)

வருகதேர்எனும்மாத்திரைமாடுளோர்
இருகைமால்வரைஏழிரேடும்அனார்
ஒருகையால்உலகேந்தும்உரத்தினர்
தருகஇப்பணிஎம்வயிற்றான்என்றார். (௰)

சூலம்வாள்மழுதோமரம்சக்கரம்
காலபாசம்கதைபொரும்கையினார்
வேலைஞாலம்வெருவுறும்ஆர்ப்பினார்
ஆலகாலம்திரண்டன்ன ஆக்கையார். (௧௧)

வெம்புகோபக்கனலர்விலக்கினார்
நம்பிஎம் அடிமைத்தொழில்நன்றென
உம்பர்மேல்இன்றருத்தனைபோதியோ
இம்பர்மேல்இனியாம்உளேமோஎன்றார். (௧௨)

நன்றுசொல்லினிர் நான்இச்சிறார்கள்மேல்
சென்றபோர் செயில்தேவர்சிரிப்பர்ஆல்
கொன்றுசோரிகுடித்தவர்கொள்கையை
வென்றுமீளுதிர்மெல்லியலோடென்றான். (௧௩)

என்னலோடும்விரும்பிஇறைஞ்சினார்
சொன்னநாணிலிஅந்தகன்தூதென
அன்னள்பிற்படர்வார்என ஆயினார்
மன்னன்காதலர்வைகிடம்நண்ணினார். (௧௪)

துமிலப்போர்வல்அரக்கர்க்குச்சுட்டினாள்
அமலத்தொல்பெயர்ஆயிரத்தாழியான்
நிமலப்பாதம் நினைவில்இருந்தஅக்
கமலக்கண்ணனைக்கையினிற்காட்டினாள். (௧௫)

எற்றுவாம்பிடித்தெந்துதும்என்குநர்
பற்றுவாம்நெடும்பாசத்தின்என்குநர்
முற்றுவாம்இறைசொல்முறையால்என
சுற்றினார்வரைசூழ்ந்தன்னதோற்றத்தார். (௧௬)

ஏத்துவாய்மைஇராமன்இளவலை
காத்திதையலைஎன்றுதன்கற்பகம்
பூத்ததன்னபொருவில்தடக்கையால்
ஆத்தநாணின்அருவரைவாங்கினான். (௧௭)

வாங்கிவர்ளொடுவாளிபெய்புட்டிலும்
தாங்கிதாமரைக்கண்ணன்அச்சாலையை
நீங்கிஇவ்வழிநேர்மின்அடாஎன
வீங்குதோளன்மலைதலைமேவினான். (௧௮)

மழுவும்வாளும்வயங்கொளிமுச்சிகைக்
கழுவும்காலவெந்தீஅன்னகாட்சியார்
எழுவின்நீள்தடக்கைஎழுநால்கையும்
தழுவும்வாளிகளால்தலம்சார்த்தினான். (௧௯)

மரங்கள்போல்நெடுவாளொடுதோள்விழ
உரங்களால்அடர்ந்தார்க்குரவோன்விடும்
சரங்கள்ஓடினதைக்கஅவர்கள்தம்
சிரங்கள்ஓடினதீயவள்ஓடினாள். (௨௰)

ஒளிறுவேற்கரற்குற்றதுணர்த்தினாள்
குளிறுகோபவெங்கோளரிமா அட
களிறெலாம்படக்கைதலைமேல்உற
பிளிறியோடும்பிடிஅன்னபெற்றியாள். (௨௧)

அங்கரக்கர்அவிந்தழிந்தார்என
பொங்கரத்தம்விழிவழிபோந்துக
வெங்கரப்பெயரோன்வெகுண்டான்விடை
துங்கரற்கும்தடுப்பருந்தன்மையான். (௨௨)

அழைஎன்தேர்எனக்காக்குவென்போர்படை
உழையர்ஓடிஒருநொடிஓங்கல்மேல்
மழைஎன்மாமுரசெற்றுதிர்வல்என்றான்
முழையின்வாள்அரிஅஞ்சமுழங்குவான். (௨௩)

பேரிஓசைபிறத்தலும்பெட்புறு
மாரிமேகம்வரம்பிலவந்தென
தேரின்சேனைதிரண்டனதேவர்தம்
ஊரும்நாகர்உலகும்உலைந்தவே. (௨௪)

போர்ப்பெரும்பணைபொம்என்முழக்கமா
நீர்த்தரங்கம்நெடுந்தடந்தோள்களா
ஆர்த்தெழுந்ததிறுதியின்ஆர்கலி
கார்க்கருங்கடல்கால்கிளர்ந்தென்னவே. (௨௫)

காடுதுன்றிவிசும்புகரந்தென
நீடிஎங்கும்நிமிர்ந்தநெடுங்கொடி
ஓடும்எங்கள்பகைஎன்றுவந்தெழுந்
தாடுகின்றஅலகையின்ஆட்டமே. (௨௬)

தூறியின் நீங்கிய தாழ்தடக்கைத் துணை
குறிகொளாமதவேழக்குழு அனார்
செறியும்வாளொடுவாள் இடைதேய்த்துகும்
பொறியில்கான் எங்கும்வெங்கனல்பொங்கவே. (௨௭)

மூருடிரண்டுமுழங்குறத்தாக்கொலி
உருடிரண்டெழுந்தேர் ஒலிஉட்புக
அருடிரண்டஅருக்கன் தன்மேல்வழங்
கிருடிரண்டுவெந்தீண்டியதென்னவே. (௨௮)

தலையில்மாசுணம்தாங்கியதாரணி
நிலைநிலாதுழுதுகைநெளிப்புற
உலைவில்ஏழ்உலகத்தினும்ஓங்கிய
மலைஎலாம்ஒருமாடுதொக்கென்னவே. (௨௯)

வேறு.

வல்லியக்குழாங்களோமழையின் இட்டமோ
ஒல்லியத்தொகுதியோ ஓங்குமோங்கலோ
அல்லமற்றரிகளின் அனிகமேஎன
பல்பதினாயிரம்படைக்கைவீரரோ. (௩௰)

ஆளிகள்பூண்டன அரிகள்பூண்டன
மீளிகள்பூண்டன வேங்கைபூண்டன
ஞாளிகள்பூண்டன நரிகள்பூண்டன
கூளிகள்பூண்டன குதிரைபூண்டன. (௩௧)

ஏற்றினம்ஆர்த்தன ஏனம்ஆர்த்தன
காற்றினம்ஆர்த்தன கழுதைஆர்த்தன
தோற்றினமாத்திரத்துலகுசூழ்வரும்
பாற்றினம்ஆர்த்தன பணிலம்ஆர்த்தன. (௩௨)

தேரினம்துவன்றின சிறுகட்செம்முகக்
காரினம்நெருங்கின காலிற்கால்வரு
தாரினம்குழுமின தடைஇல்கூற்றன்ன
பேரினம்கடல்எனப்பெயருங்காலையே. (௩௩)

மழுக்களும்அயிற்களும்வயிரவாட்களும்
எழுக்களும்தோமரத்தொகையும்இட்டியும்
முழுக்களும்முசுண்டியும்தண்டும்முத்தலைக்
கழுக்களும்உலக்கையும்காலபாசமும். (௩௪)

குந்தமும் குலிசமும் கோலும் பாலமும்
அந்தம் இல் சாபமும் சரமும் ஆழியும்
வெந்தொழில் வலயமும் விளங்கு சங்கனு
பந்தமும் கப்பணப் படையும் பாசமும். (கரு)

ஆதியின் அருக்கனும் அனலும் அஞ்சுறும்
சோதிய சோரியும் தூவும் துன்னிய
ஏதிகள் மிடைந்தன இமையவர்க்கெலாம்
வேதனை கொடுத்தன வாகை வேய்ந்தன. (கசு)

ஆயிரம் ஆயிரம் களிற்றின் ஆற்றலர்
மாயிரு ஞாலத்தை விழுங்கும் வாயினர்
தீயெரி விழியினர் நிருதர் சேனையின்
நாயகர் பதின்மரோ டொத்த நால்வரே. (கஎ)

ஆறிரண் டாயிரம் அமைந்த ஆயிரம்
கூறின ஒரு படை குறித்த அப்படை
ஏறின எழின திரட்டி என்பர் ஆல்
ஊறின சேனையின் தொகுதி உன்னுவார். (கஅ)

உரத்தினர் உருமென உரறும் வாயினர்
கரத்தெறி படையினர் கமலத் தோன்றரும்
வரத்தினர் மலையென மழைதுயின் றெழு
சிரத்தினர் தருக்கினர் செருக்கும் சிந்தையார். (ககூ)

விண் அளவிட நிமிர்ந் துயர்ந்த மேனியர்
கண் அளவிட அருமார்பர் காலினால்
மண் அளவிடு நெடு வலத்தர் வானவர்
எண் அளவிட அருஞ் செரு வென்றேறினார். (உ0)

இந்திரன் முதலினோர் எறிந்த மாப்படை
சிந்தின தெறித்துகச் செறிந்த தோளினார்
அந்தகன் அடி தொழு தடங்கும் ஆணையார்
வெந்தழல் உருவு கொண்டனைய மேனியார். (உக)

சூலமும் பாசமும் தொடர்ந்த செம்மயிர்ச்
சாலமும் தறுகணும் எயிறும் தாங்கினார்
ஆலமும் வெளிதெனும் நிறத்தர் ஆற்றலால்
காலனும் காலின் ஏன்றுயிர்க்கும் காட்சியார். (உஉ)

கழலினர் தாரினர் கவசமார்பினர்
நிழல்உறு பூணினர் நெறித்த நெற்றியர்
அழல்உறு குஞ்சியர் அமரை வேட்டுவந்
தெழல்உறு மனத்தினர் ஒருமைஎய்தினார். (௪௩)

மருப்பிரு மதகளிற் றமரர் மன்னனும்
விருப்புறு முகத்தெதிர் விழிக்கில் வெந்திடும்
உருப்பொரு உலைவுறும் உலகம் மூன்றினும்
செருப்பெருத் தினவுறு சிகரத் தோளினார். (௪௪)

குஞ்சரம் குதிரைபேய் குரங்கு கோள்அரி
வெஞ்சினக் கரடிநாய் வேங்கை யாளிஎன்
றஞ்சுறக் கனல்புரை முகத்தர் ஆர்கலி
நஞ்சுதொக் கனைப்புரை நயனத் தார்களும். (௪௫)

எண்கையர் எழுகையர் ஏழும்எட்டும் ஆய்
கண்கனல் சொரிதரு முகத்தர் காலினர்
வண்கையில் வளைத்துயிர் வாரி வாயில்இட்
டுண்கையில் உவகையர் உலப்பிலார்களும். (௪௬)

இயக்கரில் பறித்தன அவுணர் இட்டன
மயக்குறுத் தமரரை வலியில் வாங்கின
துயக்கில் கந்தர்ப்பரைத் துரந்து வாரின
நயப்புறு சித்தரை நலிந்து வவ்வின. (௪௭)

கொடிதழைகவிகைவான் தொங்கல்குஞ்சரம்
படிஉறு பதாகைமீ விதானம் பல்வகை
இடைஇலா தெங்கணும் இசையமீமிசை
மிடைதலின் உலகெலாம் வெயில்இழக்கவே. (௪௮)

எழுவரோ டெழுவர்ஏழ் உலகம் ஏழ்மோடேழ்
தழுவிய வென்றியர் தலைவர் தானையர்
மழுவினர் வாளினர் வயங்கு குலத்தர்
உழுவையோ டரிஎன உடற்றும் சீற்றத்தார். (௪௯)

வில்லினர் வாளினர் இதழின் மீதிடும்
பல்லினர் மேருவைப் பறிக்கும் ஆற்றலர்
புல்லினர் திசைதொறும் புரவித் தேரினர்
சொல்லின முடிக்குறும் துணிவின் நெஞ்சினார். (௫௰)

தூடணன்திரிசிராத்தோன்றல்ஆதியர்
கோடணைமுரசினம்குளிறுசேனையர்
ஆடவர்உயிர்கவர்அலங்கல்வேலினர்
பாடவநிலையினர்பலரும்சுற்றினர். (௫௧)

ஆன்றமைஎறிபடைஅழுவத்தார்கலி
வான்தொடர்மேருவைவளைத்ததாம்என
ஊன்றினதேரினன்உயர்ந்ததோளினன்
தோன்றினன்யாவரும்துணுக்கம்எய்தவே. (௫௨)

அசும்புறுமதகரிபுரவிஆடகத்
தசும்புறுசயந்தனஅரக்கர்தாள்தர
விசும்புறுதூளியால்வெண்மைமேயின
பசும்பரிபகலவன்பைம்பொற்றேர்அரோ. (௫௩)

வனம்துகள்பட்டனமலையின்வான்உயர்
கனம்துகள்பட்டனகடல்கள்தூர்ந்தன
இனம்தொகுதூளியால்இசைப்பதென்இனி
சினம்தொகுநெடுங்கடற்சேனைசெல்லவே. (௫௪)

நிலமிசைவிசும்பிடைநெருக்கலால்நெடு
மலைமிசைமலைஇனம்வருவபோல்மலைத்
தலைமிசைதலைமிசைதாவிச்சென்றனர்
கொலைமிசைநஞ்செனக்கொதிக்கும்நெஞ்சினர். (௫௫)

வேறு.

வந்ததுசேனைவெள்ளம்வள்ளியோன்மருங்குமாய
பந்தமாவினையைமாறப்பற்றறுபெற்றியோர்க்கும்
உந்தருநிலையதாகிஉடன்உறைந்துயிர்கள்தம்மை
அந்தகற்களிக்கும்நோய்போல்அரக்கிமுன்ஆக அம்மா. (௫௬)

தூரியக்குரலின்வானில்முகிற்கணம்துணுக்கம்கொள்ள
வார்சிலைஒலியின்அஞ்சிஉருமெலாம்மறுக்கம்கொள்ள
ஆர்கலிஆர்ப்பின்உட்கிஅசைவுறஅரக்கர்சேனை
போர்வனத்திருந்தவீரர்உறைவிடம்புக்கதன்றே. (௫௭)

வாய்புலர்ந்தழிந்தமெய்யின்வருத்தத்தவழியில்யாண்டும்
ஓய்வில நிமிர்ந்துவீங்கும்உயிர்ப்பினஉலைந்தகண்ண
தீயவர்சேனைவந்துசேர்ந்தமைதெரியச்சென்று
வேய்தெரிந்துரைப்பபோன்றபுள்ளொடும்விலங்கும்அம்மா

தூளியின் படலை வந்து தொடர்வுற மாறும் தூறும்
தாளிடை ஒடியும் ஓசை சடசட ஒலிப்ப கானத்
தாளியும் அரியும் அஞ்சி இரிதரும் அலக்கண் நோக்கி
மீளி மொய்ம்பினரும் சேனை மேல்வந்தது ஏதென்றான். (௫௯)

மின்னின்ற சிலையன் வீரக் கவசத்தன் விசித்த வாளன்
பொன்னின்ற வடிம்பின் வாளிப் புட்டிலன் புகையும் நெஞ்சன்
நின்னின்று காண்டி யான் செய் நிலை என விரும்பி நேரா
முன்னின்று பின் வந்தோனை நோக்கினன் மொழியல் உற்றான். (௬௰)

நெறிக்கொள் மாதவர்க்கு முன்னே நேர்ந்தனன் நிருதர் ஆவி
பறிக்குவென் யானே என்ற பழமொழி பழுதுறாமே
வெறிக்கொள் பூங்குழலினாளை வீர நீ வேண்டினேன் யான்
குறிக்கொடு காத்தி இன்னே கொல்வென் இக்குழுவை என்றான். (௬௧)

மரன்படர் கானம் எங்கும் அதர்பட வந்த சேனை
கரன்படை என்ப தெண்ணிக் கருநிறக் கமலக் கண்ணன்
சரன்படர் புட்டில் கட்டிச் சாபமும் தரித்தான் தள்ளா
உரன்படர் தோளின் மீளாக் கவசம் இட்டுடைவாள் ஆர்த்தான். (௬௨)

மீளருஞ் செருவில் விண்ணும் மண்ணும் என் மேல் வந்தாலும்
நாளுலந் தழியும் என்றே நான் உனக் குரைப்ப தென்னே
ஆளியின் துப்பினாய் இவ் அமர் எனக் கருளி நின்றென்
தோளினைத் தின்னுகின்ற சோம்பினைத் துடைத்தி என்றான். (௬௩)

என்றனன் இளைய வீரன் இசைந்திலன் இராமன் ஏந்தும்
குன்றன தோளின் ஆற்றல் உள்ளத்தின் உணரக் கொண்டான்
அன்றியும் அண்ணல் ஆணை மறுக்கிலன் அங்கை கூப்பி
நின்றனன் இருந்தான் கண்ணீர் நிலன் உறப் புலர்கின்றாள் பால். (௬௪)

குழைஉறு மதியம் பூத்த கொம்பனாள் குழைந்து சோர
தழைஉறு சாலை நின்றும் தனிச்சிலை தரித்த மேரு
மழைஎன முழங்குகின்ற வாள் எயிற்றரக்கர் காண
முழையின் நின்றெழுந்து செல்லும் மடங்கலின் முனிந்து சென்றான்.

தோன்றிய தோன்றல் தன்னைச் சுட்டினள் காட்டிச் சொன்னாள்
வான்றொடர் மூங்கில் தந்த வயங்கு வெந்தீ இதென்ன
தான்றொடர் குலத்தை எல்லாம் தொலைக்குமா சமைந்து நின்றான்
ஈன்றுவந் தெதிர்ந்த வீரன் இவன் இகல் இராமன் என்ன. (௬௬)

கண்டனன் கனகத் தேர்மேல் கதிரவன் கலங்கி நீங்க
விண்டனில் நின்ற வென்றிக் கரன் எனும் விலங்கல் தோளான்
மண்டமர் யானே செய்திம் மானிடன் வலியை நீக்கி
கொண்டனம் வாகை என்றயலுடைஞரைக் குறித்து சொன்னான். (௬௭)

மானிடன் ஒருவன் வந்த வலி கெழு சேனைக் கம்மா
கானிடம் இல்லை என்னும் கட்டுரை கலந்த காலை
யானுடை வென்றி என்னாம் யாவரும் கண்டு நிற்பீர்
ஊனுடை இவனை யானே உண்குவென் உயிரை என்றான். (௬௮)

அவ்வுரை கேட்டு வந்தான் அகம்பன் என்றமைந்த கல்விச்
செவ்வியான் ஒருவன் ஐய செப்புவென் செருவில் சால
வெவ்வியர் ஆதல் நன்றே வீரரில் ஆண்மை வீர
இவ்வயின் உள ஆம் தீய நிமித்தம் என்றியம்பல் உற்றான். (௬௯)

வேறு.

குருதி மாமழை சொரிந்தன மேகங்கள் குமுறி
பருதி வானவன் ஊர் வளைப் புண்டது பாராய்
கருது வீர நின் கொடிமிசை காக்கையின் கணங்கள்
பொருது வீழ்வன புலம்புவ நிலம் படப் புரள்வ. (௭௰)

வாளின் வாய்களை ஈ வளைக்கின்றன வயவர்
தோளும் நாட்டமும் இடம் துடிக்கின்றன தூங்கி
மீளி மொய்ம்பரின் இவுளி வீழ்கின்றன விரவி
ஞாளியோடு நின்றழைக்கின்ற நரிக்குலம் பல ஆல். (௭௧)

பிடி எலாம் மதம் பெய்திடப் பெருங்கவுள் வேழம்
ஒடியும் மால் மருப்புலகுழும் கம்பிக்கும் உயர் வான்
இடியும் வீழ்ந்திடும் எரிந்திடும் பெருந்திசை எவர்க்கும்
முடியின் மாலைகள் புலாலொடு முழுமுடை நாறும். (௭௨)

இனைய ஆதலின் மானிடன் ஒருவன் என்றிவனை
நினையல் ஆவதொன்றன்றது நீதி ஆம் நின்ற
வினை எலாம் செய்து வெல்லல் ஆம் தன்மையன் அல்லன்
புனையும் வாகையாய் பொறுத்தி என் உரை எனப் புகன்றான். (௭௩)

உரைத்த வாசகம் கேட்டலும் உலகெலாம் உலைய
சிரித்து நின்ற எம் சேவகம் தேவரைத் தேய
அரைத்த அம்மி ஆம் அலங்கெழில் தோள் அமர் வேண்டி
இரைத்து வீங்கு வல் மானிடற்கு எளியவோ என்றான். (௭௪)

என்னும்மாத்திரத்தெறிபடை இடிஎன இடியா
மன்னர்மன்னவன்மதலையை வளைந்தன வளைந்து
மின்னும்வால்உளை மடங்கலை முனிந்தன வேழம்
துன்னினால்எனச்சுடுசினத்தரக்கர்தம்தொகுதி. (௭௫)

வளைந்தகாலையில்வளைந்தன இராமன்கைவரிவில்
விளைந்தபோரையும்ஆவதும்விளம்புதும்இசையால்
புளைந்தபாய்பரிபுரண்டனபுகர்முகப்பூட்கை
உளைந்தமால்வரைஉரும்இடிபடஒடிந்தென்ன. (௭௬)

சூலம்அற்றன அற்றனசுடர்மழுத்தொகைவாள்
மூலம்அற்றன அற்றனமுரண்தண்டுபிண்டி
பாலம்அற்றன அற்றனபகழிவெம்பகுவாய்
வேலும்அற்றன அற்றனவில்லொடுபல்லம். (௭௭)

தொடிதுணிந்தன தோளொடுதோமரம்துணிந்த
அடிதுணிந்தன கடகளிறச்சொடுநெடுந்தேர்
கொடிதுணிந்தன குரகதம்துணிந்தன குலமா
முடிதுணிந்தன முளையொடுதுணிந்தன முசலம். (௭௮)

கருவிமாவொடுகார்மதக்கைமலைக்கணத்தோ
டுருவிமாதிரத்தோடின சுடுசரம்உதிரம்
அருவிமாரியில்தேங்கின தவனியில்அரக்கர்
திருவில்மார்பகம்திறந்தன துறந்தனசிரங்கள். (௭௯)

ஒன்றுபத்துநூறாயிரம்கோடிஎன்றுணரா
துன்றுபத்தியஇராகவன்சுடுசரம்தூர்ப்ப
சென்றுபத்திரத்தலைஎனமலைதிரண்டென்ன
கொன்றுபத்தியில்குவித்தனபிணப்பெருங்குன்றம். (௮௰)

காடுகொண்டகார்உலவைகள்கதழ்எரிகதுவ
சூடுகொண்டனஎனத்தொடர்குருதிமீத்தோன்ற
ஆடுகின்றனஅறுகுறைஅயில்அம்புவின்மேல்
ஓடுகின்றனஉயிரையும்தொடர்வனஒத்த. (௮௧)

கைகள்வாளொடுகளம்படக்கழுத்தறக்கவசம்
மெய்கள்போழ்படத்தாள்விழவெருவிடநிருதர்
செய்யமாத்தலைசிந்தினதிசைஉறச்சென்ற
தையலார்நெடுவிழிஎனகொடியனசரங்கள். (௮௨)

மாரிஆக்கியவடிக்கணைவரைபுரைநிருதர்
பேரியாக்கையின்பெருங்கரைவயின்தொறும்பிறங்க
ஏரிஆக்கின ஆறுகள் இயற்றின நிறைய
சோரிஆக்கினபோக்கினவனம்எனும்தொன்மை. (௮௩)

அலைமிதந்தன குருதியின்பெருங்கடல் அரக்கர்
தலைமிதந்தனநெடுந்தடிமிதந்தனதடக்கை
மலைமிதந்தனவாம்பரிமிதந்தனவயப்போர்ச்
சிலைமிதந்தனகொடியொடுமிதந்தனதேர்கள். (௮௪)

ஆயகாலையில் அனல்விழித்தார்த்திகல் அரக்கர்
தீயவார்கணைமுதலிய அடுசினப்படைகள்
மேயமால்வரைஒன்றினைவளைத்தனமேகம்
தூயதாரைகள்சொரிவனஆம்எனச்சொரிந்தார். (௮௫)

சொரிந்தபல்படைதுணிபடத்துணிபடச்சரத்தால்
அரிந்துபோந்தனசிந்திடத்திசைதிசைஅகற்றி
நெரிந்துபார்மகள்முதுகிறவனம்முற்றும்நிறைய
விரிந்தசெம்மயிர்க்கருந்தலைமலைஎனவீழ்த்தான். (௮௬)

கவந்தபந்தங்கள்களித்தனகுளித்தகைமலைகள்
செவந்துபாய்ந்தவெங்குருதியில்திருகியசினத்தால்
நிவந்தவெந்தொழில்நிருதர்தம்நெடுநிணம்தெவுட்டி
உவந்தவன்கழுதுயிர்சுமந்துலக்கிய தும்பர். (௮௭)

மருடரும்களிவஞ்சனைவளைஎயிற்றரக்கர்
கருடன் அஞ்சுறுகண்மணிகாகமுன்கவர்ந்த
இருடரும்புரத்திழுதையர்பழுதறத்தெளிதே
அருடரும்திறத்தறன் அன்றிவலியதுண்டாமோ. (௮௮)

வேறு.

பல்லாயிரம்இருள்கீறியபகலோன்எனஒளிரும்
வில்லாரனைமுனியாவெயில்அயில்ஆம்எனவிழியா
கல்லார்மழைகணமாமுகில்கடைநாள்விடுவனபோல்
எல்லாம்ஒருதொடையாஉடன்எய்தார்வினைசெய்தார். (௮௯)

எறிந்தார்எனஎய்தார்எனநினைந்தார்எனஎறிய
அறிந்தார்எனஅறியாவகைஅயில்வாளியின்அறுத்தான்
செறிந்தாரையும்பிரிந்தாரையும்செறுத்தாரையும்சினத்தால்
மறிந்தாரையும்வலித்தாரையும்மடித்தான்சிலைபிடித்தான். (௯௰)

வானத்தன கடலின் புறவலயத்தன மதிசூழ்
மீனத்தன மிளிர்குண்டலமிறுனத்தன மிடல்வெங்
கானத்தன மலையத்தன திசைசுந்திய கரியின்
தானத்தன காகுத்தன சரம் உந்திய சிரமே. (௯௧)

மண்மேலன மலைமேலன மழைமேலன மதிதோய்
விண்மேலன நெடுவேலையின் மேல்கீழன மிடலோர்
புண்மேலன குருதிப் பொழிதிரை ஆறுகள் பொங்க
திண்மேருவை நகுமார்பினை உருவித்திரிசரமே. (௯௨)

பொலந்தாரினர் அனலின் சிகை பொதிகண்ணினர் எவரும்
வலந்தாங்கிய வடிவெம்படை விடுவார் சரமழையால்
உலந்தார் உடல் கடலோடுற உலவா உடல் உற்றார்
அலந்தார் நிசிசரர் ஆம் என இமையோரொடும் ஆர்த்தார். (௯௩)

இரற்செறி கமலத்தன இரதத்திரள் புளினம்
வீரக்கரி முதலைக்குலம் மிதக்கின்றன உதிக்கும்
பாரக்குடர் மிடை பாசடை படர்கின்றன பல ஆல்
பூரித்திரை உதிரக்கடல் பூழுகிக்கழுதெழவே. (௯௪)

அழைத்தார் சிலர் அயர்ந்தார் சிலர் அழிந்தார் சிலர் கழிந்தார்
உழைத்தார் சிலர் உயிர்த்தார் சிலர் உருண்டார் சிலர் புரண்டார்
குழைத்தாழ்திரைக் குருதிக்கடல் குளித்தார் சிலர் கொலைவாய்
மழைத்தாரைகள் படப் பாரிடை மடிந்தார் சிலர் உடைந்தார். (௯௫)

உடைந்தார்களை நகைசெய்தனர் உருள் தேரினர் உடன் ஆய்
அடைந்தார் படைத்தலைவீரர்கள் பதினால்வரும் அயில்வாள்
மிடைந்தார் நெடுங்கடல் தானையர் மிடல்வில்லினர் விரிநீர்
கடைந்தார் வெருவுற மீதெழு கடு ஆம் எனக் கொடியார். (௯௬)

நாகத்தனி ஒருவில்லியை நளிர்மூப்புரர் முன்னாள்
மாகத்திடை வளைவுற்றனர் என வள்ளலை மதியார்
ஆகத்தெழு கனல் கண்வழி உக உற்றெதிர் அழன்றார்
மேகத்தினை நிகர் வில்லியை வளைத்தார் செருவிளைத்தார். (௯௭)

எய்தார் பலர் எறிந்தார் பலர் மழுஓச்சினர் எழுவால்
பொய்தார் பலர் புடைத்தார் பலர் இடைத்தார் பலர் பொருப்பா
பெய்தார் மழை பிதிர்த்தார் எரி பிறைவாள் எயிற்றரக்கர்
வைதார் பலர் தெழித்தார் பலர் மலை ஆம் என வளைத்தார். (௯௮)

தேர்பூண்டனவிலங்கியாவையும்சிலைபூண்டெழுகொலையால்
பார்பூண்டனமதமாகரிபலிபூண்டனபரிமாத்
தார்பூண்டனஉடல்பூண்டிலதலைவெங்கதிர்தழிவந்
தூர்பூண்டனபிரிந்தால்என இரிந்தார்உயிர்உலந்தார். (௯௯)

மால்பொத்தினமறவோர்உடல்மழைபொத்தினவழிசெம்
பால்பொத்தினநதியிற்கிரர்படிபொத்தினபடர்வான்
மேல்பொத்தினகுழுவிண்ணவர்விழிபொத்தினர்விளைவெங்
கால்பொத்தினர்நமன்தூதுவர்கடிதுற்றுயிர்கவர்வார். (௱)

பேய்ஏற்றினசெருவேட்டெழுபித்தேறினர்பிலவாய்
நாய்ஏற்றினதலைமேல்நெடுநரிஏற்றினஎரிகால்
வாய்ஏற்றினவடிவாளியின்வான்ஏற்றினர்வந்தார்
தீய்ஏற்றிகல்அரிஏற்றெனமுகில்ஏற்றெனச்செறிந்தார். (௱௧)

தலைசிந்தினவிழிசிந்தினதழல்சிந்தினதரைமேல்
மலைசிந்தினபடிசிந்தினவரிசிந்துரம்மழைபோல்
சிலைசிந்தினகணைசிந்தினதிசைசிந்தினதிசையோ
டுலைசிந்தினபொறிசிந்தினஉயிர்சிந்தினஉடலம். (௱௨)

வேறு.

படைப்பெருந்தலைவரும்படைத்ததேர்களும்
உடைத்தடம்படைகளும்ஒழியஉற்றெதிர்
விடைத்தடர்ந்தெதிர்ந்தவர்வீரன்வாளியால்
முடைத்தவெங்குருதியின்கடலின்மூழ்கினார். (௱௩)

சுற்றுறநோக்கினர்தொடர்ந்தசேனையில்
அற்றிலதலைஎனும்ஆக்கைகண்டிலர்
தெற்றினர்எயிறுகள்திருகினார்சினம்
முற்றினர்இராமனைமுடுகுதேரினார். (௱௪)

ஏழிருதேரும்வந்திமைப்பில்முன்பிடை
சூழ்வனகணைகளில்துணியநூறினான்
ஆழியும்புரவியும்ஆளும்அற்றவை
ஊழிவெங்கால்எறிங்கல்ஒத்தவே. (௱௫)

அழிந்தனதேர்அவர்அவனிகீண்டுக
இழிந்தனர்வரிசிலைஎடுத்தகையினர்
ஒழிந்திலர்சரங்களைஉருமின்ஏற்றென
பொழிந்தனர்பொழிகனல்பொடிக்கும்கண்ணினார். (௱௬)

நூறியசரம்எலாம் நுறுங்கவாளியால்
இறுசெய்தவர்சிலைள்ழொடேடையும்
ஆறினோடாறும்ஒர்இரண்டும்அம்பினால்
கூறுசெய்தமர்த்தொழில்கொதிப்பைநீக்கினான். (௱எ)

வில்லிழந்தனைவரும்வெகுளிமீக்கொள
கல்லுயர்நெடுவரைகடிதின்ஏந்தினார்
ஒல்லையின்உருத்துயர்விசும்பின்ஓங்கிநின்
றெல்லுயர்பொறிஉகஎறிதல்மேயினார். (௱அ)

கலைகளின்பெருங்கடல்கடந்தகல்வியான்
இலைகொள்வெம்பகழிள்ம்இரண்டுவாங்கினான்
கொலைகொள்வெஞ்சிலையொடுபுருவம்கோட்டினான்
மலைகளும்தலைகளும்விழுந்தமண்ணினே. (௱௯)

படைத்தலைதலைவர்கள்படலும்பல்படை
புடைத்தடர்ந்தெதிர்அழல்புரையும்கண்ணினார்
கிடைத்தனர்அரக்கர்கள்கீழும்மேலும்ஆய்
அடைத்தனர்திசைகளை அமரர்அஞ்சினார். (௱௰)

முழங்கினபெரும்பணைமூரிமால்கரி
முழங்கினவரிசிலைமுடுகுநாண்ஒலி
முழங்கினசங்கொடுபுரவிமுற்றுற
முழங்கின அரக்கர்தம்முகிலின் ஆர்ப்பரோ. (௱௧௧)

வேறு.

வெம்படைநிருதர்வீசவிண்ணிடைமிடைந்தவீரன்
அம்பிடைஅறுக்கச்சிந்திஅற்றனபடும்என்றஞ்சி
உம்பரும்இரியல்போனார்உலகெலாம்உலைந்துசாய்ந்த
கம்பம்இல்திசையில்நின்றகளிறும்கண்இமைத்தஅன்றே. (௱௧௨)

வேறு.

அத்தலைத்தானையன்அளவில்ஆற்றலன்
முத்தலைக்குரிசில்பொன்முடியன்முக்கணான்
கைத்தலைச்சூலமேஅனையகாட்சியான்
வைத்தலைப்பகழியான்மழைசெய்வில்லினான். (௱௧௩)

அன்னவன்நடுவுறஆழிஊழி இ
தென்னவந்தெங்கணும்இறைத்தசேனையுள்
தன்நிகர்வீரனும்தமியன்வில்லினன்
துன்இருளிடையதோர்விளக்கில்தோன்றினான். (௱௧௪)

ஓங்கொளிவாளினன் உருமின் ஆர்ப்பினன்
வீங்கிய கவசத்தன் வெய்யகண்ணினன்
ஆங்கவன் அணிக்கெதிர் அணிகள் ஆகநேர்
தாங்கினன் இராமனும் சரத்தின் தானையால். (௱௧௫)

தாள் இடை அற்றன தலையும் அற்றன
தோள் இடை அற்றன தொடையும் அற்றன
வாள் இடை அற்றன மழுவும் அற்றன
கோள் இடை அற்றன குடையும் அற்றன. (௱௧௬)

கொடியொடு கொடுஞ்சினப் புரவி கூட்டற
படியிடை படிந்தன பருத்த தேர்பல
நெடியவன் கடகரி புரண்ட நெற்றியின்
இடியொடு முறிந்துவீழ் சிகரம் என்னவே. (௱௧௭)

அற்றன சிரம் என அறிதல் தேற்றலர்
கொற்ற வெஞ்சிலைச் சரம் கோத்து வாங்குவார்
இற்றவர் இருந்தவர் எழுந்து விண்ணினைப்
பற்றின மழை எனப் படை வழங்குவார். (௱௧௮)

கேடகத் தடக்கையர் கிரியின் தோற்றத்தர்
ஆடகக் கவசத்தர் கவந்தம் ஆடவ
பாடகத் தரம்பையர் மருளப் பல்வித
நாடகத் தொழிலினை நடிப்ப ஒத்தவே. (௱௧௯)

கவரி வெண்குடை எனும் நுரைய கைமலை
சுவல் தரு சுறவம் ஆழ் சுழிய தண் துறை
பவர் இனப்படு மணி குவிக்கும் பண்ணைய
உவரியைப் புதுக்கின உதிர ஆறரோ. (௱௨௰)

சண்ட வெங் கடுங்கணை தடியத் தான்சில
திண்டிறல் வளை எயிற்றரக்கர் தேவர் ஆய்
வண்டுழல் புரிகுழல் மடந்தைமாரொடும்
கண்டனர் தம்முடைக் கவந்த நாடகம். (௱௨௧)

ஆய்வளை மகளிரோடமரர் இட்டத்தர்
தூய வெங் கடுங்கணை துணித்த தங்கள் தோள்
பேய் ஒரு தலை கொளப் பிணங்கி வாய்களின்
நாய் ஒரு தலை கொள நகை உற்றார் சிலர். (௱௨௨)

தெரிகணைமூழ்கலில்திறந்தமார்பினர்
இருவினைகடந்துபோய்உம்பர்எய்தினார்
நிருதர்தம்பெரும்படைநெடிதுநின்றவன்
ஒருவன்என்றுள்ளத்தின்உலைவுற்றார்அரோ. (௱௨௩)

கைக்கரிஅன்னவன்பகழிகண்டகர்
மெய்க்குலம்வேரொடும்துணித்துவீழ்த்தின
மைக்கருமனத்தொருவஞ்சன்மாண்பிலன்
பொய்க்கரிகூறியகொடுஞ்சொல்போன்றவே. (௱௨௪)

அஞ்சிறைஅறுபதம்அடைந்தகீடத்தை
தஞ்செனத்தன்மயம்ஆக்கும்தன்மைபோல்
வஞ்சகத்தரக்கரைவளைத்துவள்ளல்தான்
செஞ்சரத்தூய்மையால்தேவர்ஆக்கினான். (௱௨௫)

வலங்கொள்போர்மானிடன்வலிந்துகொன்றமை
அலங்கல்வேல்இராவணற்கறிவிப்பாம்என
சலங்கொள்போர்அரக்கர்தம்உருக்கள்தாங்கின
இலங்கையின்உற்றஅக்குருதியாறரோ. (௱௨௬)

சூழ்ந்ததார்நெடும்படைபகழிசுற்றுற
போழ்ந்துயிர்குடித்தலில்புரளப்பொங்கினான்
தாழ்ந்திலன்மூத்தலைத்தலைவன்சோரியின்
ஆழ்ந்ததேர்அம்பரத்தோட்டிஆர்க்கின்றான். (௱௨௭)

ஊன்றியதேரினன்உருமின்வெங்கணை
வான்தொடர்மழையெனவாய்மையாவர்க்கும்
சான்றெனநின்றஅத்தருமம்அன்னவன்
தோன்றல்தன்திருவுருமறையத்தூவினான். (௱௨௮)

தூவியசரம்எலாம்துணியவெங்கணை
ஏவினன்இராமனும்ஏவிஏழ்இரு
பூவியல்வாளியால்பொலங்கொள்தேர்அழித்
தாவிவெம்பாகனைஅழித்துமாற்றினான். (௱௨௯)

அன்றியும்அக்கணத்தமரர்ஆர்த்தெழ
பொன்றெரிவடிம்புடைப்பொருவில்வாளியால்
வன்றொழில்தீயவன்மகுடமாத்தலை
ஒன்றொழித்திரண்டையும்உருட்டினான்அரோ. (௱௩௰)

தேர்அழிந்தவ்வழித்திரிசிராஎனும்
பேர்அழிந்தனினும்மறம்பிழைத்திலன்
வார்அழிந்துமிழ்சிலைவானநாட்டுழி
கார்இழிந்தால்எனக்கணைகள்சிந்தினான். (௫௱௧)

ஏற்றியநுதலினன்இருண்டகார்மழை
தோற்றியவில்லொடும்தொடரமீமிசை
காற்றிடைஅழிந்தெனக்கார்முகத்தையும்
மாற்றரும்பகழியால்அறுத்துமாற்றினான். (௫௱௨)

வேறு.

வில்இழந்தனன்என்னினும்விழித்தவாள்முகத்தின்
எல்இழந்திலன்இழந்திலன்வெங்கதம்இடிக்கும்
சொல்இழந்திலன்தோள்வலிஇழந்திலன்சொரியும்
கல்இழந்திலன்இழந்திலன்கறங்கெனத்திரிதல். (௫௱௩)

ஆள்இரண்டுநூறனையனஅந்தரத்தொருவன்
நீள்இரும்பெருமாயவெஞ்செருமுயல்வானை
தாள்இரண்டையும்இரண்டுவெங்கணைகளால்தடிந்து
தோள்இரண்டையும்இரண்டுவெங்கணைகளால்துணித்தான். (௫௱௪)

அற்றதாளொடுதோளினன்அயில்எயிறிலங்க
பொற்றைமாமுழைப்புலால்உடைவாயினன்புகுந்து
பற்றஆதரிப்பான்தனைநோக்கினன்பரியான்
கொற்றவார்சிலைச்சரம்கொடுதலையையும்குறைத்தான். (௫௱௫)

திரிசிராஎனும்சிகரம்மண்சேர்தலும்செறிந்த
நிருதர்ஓடினர்தூடணன்விலக்கவும்நில்லார்
பருதிவாளினர்கேடகத்தடக்கையர்பரந்த
குருதிநீரிடைவார்கழல்கொழுங்குடர்தொடக்க. (௫௱௬)

கணத்தின்மேல்நின்றவானவர்கைபுடைத்தார்த்தார்
பணத்தின்மேல்நிலம்குழிஉறக்கால்கொடுபதைத்தார்
திணத்தின்மேல்விழுந்தழுந்தினர்சிலர்சிலர்நிவந்த
பிணத்தின்மேல்விழுந்துருண்டனர்உயிர்கொடுபிழைப்பார் (௫௱௭

வேய்ந்தவாளொடுவேல்இடைமிடைந்தனவெட்ட
ஓய்ந்துளார்சிலர்உலந்தனர்உதிரநீர்ஆற்றில்
பாய்ந்துகால்பறித்தழுந்தினர்சிலர்சிலர்பயத்தால்
நீய்ந்தினார்நெடுங்குருதிஅம்கடல்புக்குநிலையார். (௫௱௮)

கச்சும்வாளும்தம்கால்தொடர்ந்திர்வனகாணார்
அச்சம்என்பதொன்றுருவுகொண்டால்என அழிவார்
உச்சவீரன்கைச்சுடுசரம்நிருதர்நெஞ்சுருவ
துச்சுநின்றனகண்டனர் அவ்வழிதவிர்ந்தார். (௱௩௯)

மண்டிஓடினர்சிலர்நெடுங்கடகரிவயிற்றில்
புண்டிறந்தமாமுழையிடைவாளொடும்புகுவார்
தொண்டைநீங்கியகவந்தத்தைத்துணைவநீஎம்மை
கண்டிலேன் எனப்புகல்எனக்கைதலைக்கொள்வார். (௱௪௰)

அனையர்ஆகியஅரக்கரைஆண்தொழிற்கமைந்த
வினையம்நீங்கியமனிதரைவெருவன்மின் என்ன
நினையும்நான் உமக்குரைப்பதும்உண்டெனநின்றே
துணையும்வார்பரித்தேரினன் தூடணன் சொன்னான். (௱௪௧)

வச்சைஆம்எனும்பயம்மனத்துண்டெனவாழும்
கொச்சைமாந்தரைக்கோல்வளைமகளிரும்கூசார்
நிச்சயம்எனும்கவசம்தான் நிலைநிற்பதன்றி
அச்சம்என்னும் இதோர்உயிர்க்கருந்துணைஆமோ. (௱௪௨)

பூவராவுவேற்புரந்தரனோடுதான்பொன்றா
மூவரோடுதான்முன்நின்றுமுட்டியமுனையில்
ஏவரோடினர்இராக்கதர் நமக்கிடைந்தோடும்
தேவரோடுகற்றறிந்துளிர்ஆம்எனத்திகைத்தீர். (௱௪௩)

இங்கொர்மானிடற்கித்தனைவீரர்கள்இடைந்தீர்
உங்கைவாளொடுபோய்விழுந்தார்புகல்உற்றீர்
கொங்கைமார்பிடைக்குளிப்புறக்களிப்புற்றும்கொழுங்கண்
நங்கைமார்களைப்புல்லுதிரோநலம்நுகர்வீர். (௱௪௪)

செம்புகாட்டியகண்இணைபால்எனத்தெளிந்தீர்
வெம்புகாட்டிடைநுழைதொறும்வெரிந்உறப்பாய்ந்த
கொம்புகாட்டுதிரோதடமார்பிடைக்குளித்த
அம்புகாட்டுதிரோகுலமங்கையர்க்கம்மா. (௱௪௫)

ஏக்கம்இங்கிதன்மேலும்உண்டே இகல்மனிதன்
ஆக்கும்வெஞ்சமத்தாண்மைஅவ்அமரர்க்கும்அரிதா
தாக்கரும்புயத்தும்குலத்தலைமகன்தங்கை
மூக்கொடன்றிஉம்முதுகொடும்போம்பழிமுயன்றீர். (௱௪௬)

ஆரணியகாண்டம்.

ஆரவாழ்க்கையின்வணிகர்ஆய்அமைதிரோஅயில்வேல்
வீரவாட்கொடுவேல்மடுத்தழுதிரோவெறிபோர்த்
தீரவாழ்க்கையில்தெவ்வரைச்செருவிடைப்பறித்த
வீரவாட்கையிர்எங்கணம்வாழ்திரோவிளம்பீர். (௱௪௭)

என்றுதானும்தன்னெறிகடற்சேனையும்இறைநீர்
நின்றுகாண்டிரென்நெடுஞ்சிலைவிளைவேநேரா
சென்றுதாக்கினன்தேவரும்மருள்கொண்டுதிகைத்தார்
நன்றுகாத்திளன்றிராமனும்எதிர்செலநடந்தான். (௱௪௮)

ஊடறுப்புண்டமொய்படைகையொடும்உயர்ந்த
கோடறுப்புண்டகுஞ்சரம்கொடுஞ்சொடுகொடியின்
காடறுப்புண்டகால்இயல்தேர்கதிர்ச்சாலி
சூடறுப்புண்டெனக்கழுத்தறுப்புண்டதுரகம். (௱௪௯)

துருவிஓடினஉயிர்நிலைசுடுசரம்துரந்த
கருவிஓடினகச்சையும்கவசமும்கழல
அருவிஓடினஎனஅழிகுருதிஆறொழுக
உருவிஓடினகேடகத்தட்டொடும்உடலம். (௱௫௰)

ஆய்ந்தகங்கபத்திரங்கள்புக்கரக்கரதாவி
தோய்ந்ததோய்விலாப்பிறைமுகச்சரம்சிரம்துமித்த
காய்ந்தவெஞ்சரம்நிருதர்தம்கவசமார்புருவ
பாய்ந்தவஞ்சகர்இதயமும்பிளந்தனபல்லம். (௱௫௧)

தூடணன்விடுசுடுசரம்யாவையும்துணிய
மாடுநின்றவர்வழங்கியபடைகளும்மாற
ஆடல்கொண்டனன்அளப்பரும்பெருவலிஅரக்கர்
கூடிநின்றஅக்குழாகடல்வறள்படக்குறைத்தான். (௱௫௨)

ஆர்த்தெழுந்தனர்வானவர்அருவரைமரத்தோ
டீர்த்தெழுந்தனகுருதியின்பெருநதிஇராமன்
தூர்த்தசெஞ்சரம்திசைதொறும்திசைதொறும்தொடர்ந்து
போர்த்தவெஞ்சினத்தரக்கரைப்புரட்டினபுவியில். (௱௫௩)

தோன்றுமால்வரைத்தொகைஎனத்துவன்றியநிணச்சே
றூன்றபாழ்வயிற்றலகையைப்புகல்வதென்அமர்வேட்
டேன்றினார்எலாம்உலந்தனர்ஒல்லையில்ஒழிந்தார்
சான்றஇன்உயிர்காலனும்கவர்ந்துமெய்மறந்தான். (௱௫௪)

களிறுதேர்பரிகடுத்தவர்முடித்தலைகவந்தம்
ஒளிறுபல்படைத்தம்குலத்தரக்கர்தம்உடலம்
வெளிறுசேர்பிணம்பிறங்கிய அடுக்கலின்மீதா
குளிறுதேர்கடிதோட்டினன் தூடணன்கொதித்தான். (௱௫௫)

அறங்கொளாதவர் ஆக்கைகள் அடுக்கிய அடுக்கல்
பிறங்கிநீண்டன கணிப்பில பெருங்கடுவிசையால்
கறங்குபோன்றுளதாயினும்பிணப்பெருங்கட்டத்
திறங்கும்ள்றும்அத்தேர்பட்டதியாதென உரைப்பாம். (௱௫௬)

அரிதின்எய்தினன்ஐயைந்துகொய்உளைப்பரிமா
உருளும்ஆழியதொருதனித்தேரினன்உலகத்
திருளைநீக்கியஇந்துவிற்பொலிகின்றஇராமன்
தெருளும்வார்கணைக்கூற்றெதிர்ஆவிசென்றென்ன. (௱௫௭)

சென்றசேனையும்சிலைஉடைமலைஎனத்தேர்மேல்
நின்றதூடணன்தன்னையும்நோக்கியநிமலன்
நன்றுநன்றுநின்நிலைஎனஅருள்இறைநயந்தான்
என்றகாலத்தவ்வெய்யவன்பகழிஒன்றெய்தான். (௱௫௮)

தூரவட்டஎண்திசைகளைத்தனித்தனிசுமக்கும்
பாரஎட்டிறெடிரண்டினில்ஒன்றுபார்புரக்க
பேரவிட்டவன்நுதல்அணிஓடையிற்பிறழும்
வீரபட்டிகைபட்டனவிண்ணவர்வெருவ. (௱௫௯)

எய்தகாலமும்வலியும்நல்லனநினைந்திராமன்
செய்தசேஒளிமுறுவலன்கடுங்கணைதெரிந்தான்
நொய்தின்அங்கவன்நொறில்பரித்தேர்படநூறி
கையின்வெஞ்சிலைஅறுத்தொளிர்கவசமும்கடிந்தான். (௱௬௰)

தேவர்ஆர்த்தெழமுனிவர்கள்திசைதொறும்சிலம்பும்
ஓவில்வாழ்த்தொலிநாற்கடல்முழக்கெனஓங்க
காவடாஇதுவல்லையேல்நீஎனக்கணைஒன்
றேவினான்அவன்எயிறுடைநெடுந்தலைஇழந்தான். (௱௬௧)

வேறு.

தம்பிதலைஅற்றபடியும்தயரதன்சேய்
அம்புபடையைத்துணிபடுத்ததும்அறிந்தான்
வெம்புபடைவிற்கைவிசயக்கரன்வெகுண்டான்
கொம்புதலைகட்டியகுலக்கரிகடிப்பான். (௱௬௨)

அந்தகனும் உட்கிட அரக்கர் கடலோடும்
சிந்துரம் வயப் புரவி தேர் திசை பரப்பி
இந்துவை வளைக்கும் எழிலிக் குலம் எனத் தான்
வந்து வரி வில் கை மதயானையை வளைத்தான். (௱௬௩)

அடங்கல் இல் கொடுந் தொழில் அரக்கர் அவ் அனந்தன்
படம் கிழிதரப் படிதனிற் பல விதப் போர்
கடங்களுந் தடங்களிறு தேர் பரி கடாவி
தொடங்கினர் நெடுந் தகையும் வெங் கணை துரந்தான். (௱௬௪)

துடித்தன கடக்கரி துடித்தன பரித் தேர்
துடித்தன முடித் தலை துடித்தன தொடித் தோள்
துடித்தன மணிக் குடர் துடித்தன தசைத் தோல்
துடித்தன கழற் றுணை துடித்தன இடத் தோள். (௱௬௫)

வாளின் வனம் வேலின் வனம் வார் சிலை வனம் திண்
தோளின் வனம் என்று இவை துவன்றி நிருதப் பேர்
ஆளின் வனம் நின்றதனை அம்பின் வனம் என்னும்
கோளின் வன வன் குழுவினிற் குறைபடுத்தான். (௱௬௬)

தான் உருவு கொண்ட தருமம் தெரி சரம் தான்
மீன் உருவும் மேருவை விலங்கு உருவும் மேல் ஆம்
வான் உருவும் மண் உருவும் வாள் உருவி வந்தார்
ஊன் உருவும் என்னும் இது உணர்த்தவும் உரித்தோ. (௱௬௭)

அன்றிடை வளைந்தவர் குலங்களொடு அடங்க
சென்று உலைவுறும்படி தெரிந்து கணை சிந்த
மன்றிடை நலிந்து வலியோர்கள் எளியோரை
கொன்றனர் நுகர்ந்த பொருளிந்த கடிது கொன்ற. (௱௬௮)

கடுங்கரன் எனப் பெயர் படைத்த கழல் வீரன்
அடங்கலும் அரக்கர் அழிவுற்றிட அழன்றான்
ஒடுங்கல் இல் நிணக் குருதித் தமதின் உள்ளான்
நெடுங் கடலில் மந்தரம் எனத் தமியன் நின்றான். (௱௬௯)

செங்கண் எரி சிந்த வரி வில் பகழி சிந்த
பொங்கு குருதிப் புணரியுள் புகையும் நெஞ்சன்
சங்கமொடு காகம் மிடையக் கடலிரேறும்
வங்கம் எனல் ஆய தொரு தேரின் மிசை வந்தான். (௱௭௰)

செறுத்திறுதியிற்புவனிதீயஎழுதீயின்
மறத்தின்வயிரத்தொருவன்வந்தணுகும்முற்றை
கறுத்தமணிகண்டர்கடவுட்சிலைகரத்தால்
இறுத்தவனும்வெங்கணைதெரிந்தனன்எதிர்ந்தான். (௱௭௧)

தீயுருவகால்விசையசெவ்வியனவெவ்வாய்
ஆயிரம்வடிக்கணைஅரக்கர்பதிஎய்தான்
தீயுருவகால்விசையசெவ்வியனவெவ்வாய்
ஆயிரம்வடிக்கணைஇராமனும்அறுத்தான். (௱௭௨)

ஊழிஎரியிற்கொடியபாய்பகழிஒன்பான்
எழுலகினுக்கும்ஒருநாயகனும்எய்தான்
சூழ்சுடர்வடிக்கணைஅவற்றெதிர்தொடுத்தே
ஆழிவரிவிற்கரனும்அன்னவைஅறுத்தான். (௱௭௩)

கள்ளஅமர்மாயவினைகல்வியின்விளைத்தான்
வள்ளல்உருவைப்பகழிமாரியின்மறைத்தான்
உள்ளம்உலைவுற்றமரர்ஓடினர்ஒளித்தார்
வெள்ளெயிறிதழ்ப்பவளவீரனும்வெகுண்டான். (௱௭௪)

வேறு.

முடிப்பென்இன்றொருமொய்கணையாலென
தொடுத்துநின்றுயர்தோள்உறவாங்கினன்
பிடித்ததிண்சிலைபோர்அகல்வானிடை
இடிப்பின்ஓசைபடக்கடிதிற்றதே. (௱௭௫)

வெற்றிகூறியவானவர்வீரன்வில்
இற்றபோதுதுணுக்கம்உற்றேங்கினர்
மற்றொர்வெஞ்சிலைஇன்மைமனக்கொளா
அற்றதால்எம்வலிஎனஅஞ்சினர். (௱௭௬)

என்னும்மாத்திரத்தேந்தியகார்முகம்
சின்னம்என்றும்தனிமையும்சிந்தியான்
மன்னர்மன்னவன்செம்மல்மரபினால்
பின்னுறத்தன்பெருங்கரம்நீட்டினன். (௱௭௭)

கண்டுநின்றுகருத்துணர்ந்தானென
அண்டர்நாதன்தடக்கையின்அத்துணை
பண்டுபோர்மழுவாளியைப்பண்பினால்
கொண்டவில்லைவருணன்கொடுத்தனன். (௱௭௮)

கொடுத்தவில்லை அக்கொண்டல்நிறத்தினன்
எடுத்துவாங்கிவலம்கொண்டிடக்கையில்
பிடித்தபோதுநெறிபிழைத்தோர்க்கெலாம்
துடித்த ஆல் இடக்கண்ணொடுதோளுமே. (௱௭௯)

ஏற்றிநாண் இமையாமுன் எடுத்தது
கூற்றிரும்குனிக்கக்குனித்தெதிர்
ஆற்றினன் அவன் ஆழிஅம்தேர்சரம்
நூற்றினால் நுண்பொடிபடநூறினன். (௱௮௰)

எந்திரத்தடந்தேர் அழிந்தான் இழந்
தந்தரத்திடை ஆர்த்தெழுந்தம்பெலாம்
சுந்தரத்தனிவில்லிதன்தோள்ளனும்
மந்தரத்தின்மழையின்வழங்கினன். (௱௮௧)

தாங்கிநின்றதயரதராமனும்
தூங்குதூணியிடைச்சுடுசெஞ்சரம்
வாங்குகின்றவலக்கைஓர்வாளியால்
வீங்குதோளொடும்பார்மிசைவீழ்த்தினன். (௱௮௨)

வலக்கைவீழ்தலும்மற்றைக்கையால்வெற்றி
உலக்கைவானத்துரும்எனஓச்சினன்
இலக்குவற்குமுன்வந்தஇராமனும்
விலக்கினான் ஒருவெங்கதிர்வாளியால். (௱௮௩)

விராவருங்கடுவெவ்எயிறிற்றபின்
அராஅழன்றதனையதன்ஆற்றலால்
மராமரம்கையில்வாங்கிவந்தெய்தினன்
இராமன்அங்கொர்தனிக்கணைஏவினன். (௱௮௪)

வரம்அரக்கன்படைத்தலில்மாயையின்
உரம்உடைத்தன்மையால்உலகேழையும்
பரம்முருக்கியபாவத்தினால்வலக்
கரம்எனக்கரன்கண்டம்உற்றான்அரோ. (௱௮௫)

ஆர்த்தெழுந்தனர்ஆடினர்பாடினர்
தூர்த்தமைந்தனர்வானவர்தூய்மலர்
தீர்த்தனும்பொலிந்தான்கதிரோன்திசை
போர்த்தமென்பனிபோக்கியதென்னவே. (௱௮௬)

முனிவர்வந்துமுறைமுறைமொய்ப்புற
இனியசிந்தைஇராமனும்ஈகினான்
அனிகவெஞ்சமத்தார்உயிர்போகத்தான்
தனிஇருந்தஉடல்அன்னதையல்பால். (௱௮௭)

விண்ணில்நீங்கியவெய்யவர்மேனியில்
புண்ணினீரும்பொடிகளும்போய்உக
அண்ணல்வீரனைத்தம்பியும்அன்னமும்
கண்ணநீரினிற்பாதம்கழுவினார். (௱௮௮)

மூத்தம்ஒன்றில்முடிந்தவர்மொய்புணீர்
நீத்தம்ஓடிநெடுந்திசைநேர்உற
கோத்தவேலைக்குரல்எனவானவர்
ஏத்தவீரன்இனிதிருந்தான்அரோ. (௱௮௯)

இங்குநின்றதுணைத்தும்இராவணன்
தங்கைதன்கைவயிறுதகர்த்தனள்
கங்குல்அன்னகரனைத்தழீஇநெடும்
பொங்குவெங்குருதிப்புரண்டாள்அரோ. (௱௯௰)

ஆக்கினேன்மனத்தாசைஅவ்வாசைஎன்
மூக்கினோடுமுடியமுடிந்திலேன்
வாக்கினால்உங்கள்வாழ்வையும்நாளையும்
போக்கினேன்கொடியேன்என்றுபோயினாள். (௱௯௧)

அலங்கல்வேற்கைஅரக்கரைஆசற
குலங்கள்வேர்அறுப்பான்குறித்தாள்உயிர்
கலங்குசூறைவன்போர்நெடுங்கால்என
இலங்கைமாநகர்நொய்திற்சென்றெய்தினாள். (௱௯௨)

௭-வது. கரன்வதைப்படலம் முற்றும். ஆக திருவிருத்தம். [௫௱௫௮]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௮-வது. மாரீசன்வதைப்படலம்.

இளைக்கும்நெடும்பனைஅரக்கர்இறந்ததனைமறந்தனள்போல்இராமன்துங்க
வளைப்புயத்தினிடைக்கிடந்தபேர்ஆசைமனம்கவற்றஆற்றாள்ஆகி
திளைப்பரவைப்பேர்அகழித்திண்நகரில்கடிதோடிச்சீதைதன்மை
உளைப்பெண்எனச்சூர்ப்பநகைவரஇருந்தான்இருந்தபரிசுரைத்தும்மன்னோ. (௧)

நிலை இலா உலகினிடை நிற்பனவும் நடப்பனவும் நெறியின் ஈந்த
மலரின்மேல் நான்முகற்கும் வகுப்பரிது நுனிப்பதொரு வரம்பில் ஆற்றல்
உலைவிலா வகை உழந்த தருமம் என நினைந்தவெலாம் உதவும் தச்சன்
புலன் எலாம் தெரிப்பதொரு புனைமணி மண்டபமதனில் பொலியமன்னோ. (௨)

பண்டலங்கல் திசைக்களிற்றின் பணைமருப்பின் இணை ஒடியப் படர்ந்த பொற்றோள்
விண்டலங்கள் உறவீங்கி எழுந்துதயமால் வரையின் விளங்க மீதில்
குண்டலங்கள் குலவரையை வலம் வருவான் இரவி கொழுங்கதிர் சூழ்கற்றை
மண்டலங்கள் பன்னிரண்டும் நாலைந்தாய்ப் பொலிந்தென வயங்க மன்னோ. (௩)

புலியின் அதள் உடையானும் பொன் ஆடை புனைந்தானும் பூவினானும்
நலியும் வலத்தார் அல்லர் தேவரின் இங்கியாவர் இனி நாட்டல் ஆவார்
மெலியும் இடை தடிக்கும் முலை வேய் இளந்தோள் சேயரிக்கண் வென்றி மாதர்
வலிய நெடும் புலவியினும் வணங்காத மகுட நிரை வயங்க மன்னோ. (௪)

வாளுலாம் முழுமணிகள் வயங்கொளியின் தொகை விழுங்க வயிரக் குன்றத்
தோளெலாம் படிசுமந்த விட அரவின் படநிரையில் தோன்ற ஆன்ற
நாளெலாம் புடை தயங்க நாமநீர் இலங்கையில் தான் வாரி இட்ட
கோளெலாம் கிடந்த நெடுஞ்சிறை அன்ன நிறை ஆரம் குலவ மன்னோ. (௫)

வேறு.

ஆய்வரும் பெருவலி அரக்கர் ஆதியோர்
நாயகர் நவிர் மணி மகுடம் நண்ணலால்
தேய்வுறத் தேய்வுறப் பெயர்ந்து செஞ்சுடர்
ஆய்மணிப் பொலன் கழல் அடி நின்றார்ப்பவே. (௬)

மூவகை உலகினும் முதல்வர் முந்தையோர்
ஏவலர் உதவிய பலியின் ஈங்கல் போல்
தேவரும் அவுணரும் முதலினோர் திசை
தூவிய நறுமலர்க் குப்பை துன்னவே. (௭)

இன்னபோ திவ்வழி நோக்கம் என்பதை
உன்னலர் கரதலம் சுமந்த உச்சியர்
மின்னவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறைமுறை துறையிற் சுற்றவே. (௮)

மங்கையர் திறத்தொரு மாற்றம் கூறினும்
தங்களை ஆம் எனத் தாழும் சென்னியர்
அங்கையும் உள்ளமும் குவித்த ஆக்கையர்
கிங்கரர் எனத் திறல் சித்தர் சேரவே. (௯)

அன்னவன் அமைச்சரைநோக்கிஆண்டொரு
நன்மொழிபகரினும்நடுங்கும்சிந்தையார்
எவ்வினைகொல்பணிஎனஇறைஞ்சுகின்றனர்
கின்னரர்பெரும்பயம்கிடந்தநெஞ்சினர். (௰)

பிரகரநெடுந்திசைப்பெருந்தண்டேந்திய
கரதலத்தண்ணலைக்கண்ணின்நோக்கிய
நரகினர்ஆம்எனநடுங்கும்நாவினர்
உரகர்கள்தம்மனம்உலைந்துகுழவே. (௧௧)

திசைஉறுகரிகளைச்செற்றுத்தேவனும்
வசைஉறக்கயிலையைமறித்துவான்எலாம்
அசைவறப்புரந்தரன்அடர்த்ததோள்களின்
இசையினைத்தும்புருஇசையின்ஏற்றவே. (௧௨)

சேணுயர்நெறிமுறைதிறம்பல்இன்றியே
பாணிகள்பணிசெயப்பழுதில்பண்ணிடை
வீணையின்நரம்பிடைவிளைத்ததேமறை
வாணியின்நாரதன்செவியின்வார்க்கவே. (௧௩)

வேறு.

மேகம்என்னுருத்திகொண்டுவிண்ணவர்தருவும்விஞ்சை
நாகமும்சுரந்ததீந்தேம்புனலொடும்அளாவிநவ்வித்
தோகையர்துகிலில்தோயும்என்பதோர்துணுக்கத்தோடும்
சீகரமகரவேலைக்காவலன்சிந்தமன்றே. (௧௪)

நறைமலர்த்தாதும்தேனும்நளிர்நெடுமகுடகோடி
முறைமுறைஅறையச்சிந்திமுரிந்துகும்மணியும்முத்தும்
தறைஇடைஉகாதமுன்னம்தாங்கினன்தழுவிவாங்கி
துறைதொறும்தொடர்ந்துநின்றுசமீரணன்துடைப்பமன்றே. (௧௫)

வேறு.

மின்றுடைவேத்திரக்கையர்மெய்புகத்
துன்னெடுங்கஞ்சுகத்திகலர்சோர்விலர்
பொன்னொடுவெள்ளியும்புரந்தராதியர்க்
கின்னியல்முறைமுறைஇருக்கைஈயவே. (௧௬)

சூல்மேமுதலியதுறந்துசுற்றிய
சேலையாள்சிறியவாய்ப்புதைத்துச்செங்கையின்
தோளுடைநெடும்பணைதுவைக்கும்தோறெலாம்
காலன்வந்திசைக்கும்நாள்கடிகைகூறவே. (௧௭)

நயங்கிளர் நானம் நெய் அளாவி நந்தல் இல்
வியங்கருப் பூரம் மென் பஞ்சின் மீக் கொளீஇ
கயங்களில் மனை மலர்க் காடு பூத்தென
வயங்கெரிக் கடவுளும் விளக்கம் மாட்டவே. (௧௮)

அதிசயம் அளிப்பதற் கருள் அறிந்து நல்
புதிதலர் கற்பகத் தருவும் பொய் இலா
கதிர் நெடுமணிகளும் கறவை ஆன்களும்
நிதிகளும் முறைமுறை நின்று நீட்டவே. (௧௯)

குண்டலம் முதலிய குலம் கொள் பேர் அணி
மண்டிய பேர் ஒளி வயங்க வீசலால்
உண்டு கொல் இரவினில் உலகம் என்றிலும்
எண்டிசை மருங்கினும் இருள் என்றென்னவே. (௨௰)

கங்கையே முதலிய தீர்த்த கன்னியர்
கொங்கைகள் சுமந்திடை கொடியின் ஒல்கிட
செங்கையில் அரிசியும் மலரும் சிந்தினர்
மங்கலம் முறைமுறை கூறி வாழ்த்தவே. (௨௧)

ஊருவில் தோன்றிய உயிர் பெய் ஓவியம்
காரினில் செருக்கிய கலாப மஞ்ஞை போல்
வார்விசிக் கருவியோர் வகுத்த பாணியின்
தாரியர் அருநடம் நடிப்ப நோக்கியே. (௨௨)

இருந்தனன் உலகங்கள் இரண்டும் ஒன்றும் தன்
அருந்தவம் உடைமையில் அளவில் ஆற்றலில்
பொருந்திய இராவணன் புருவக் கார்முகக
கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே. (௨௩)

தங்கையும் அவ்வழி தமியில் தாங்கிய
செங்கையள் சோரியின் தாரை சேந்திழி
கொங்கையள் மூக்கினள் குழை இல் காதினள்
மங்குலின் ஒலிபடத் திறந்த வாயினள். (௨௪)

முடிமிடை வாயிலில் முறையிட்டார் கலி
கடையுகக் கடல் ஒலி காட்டக் காந்துவாள்
குடதிசைச் செக்கரில் சேந்த கூந்தலாள்
வடதிசை வாயிலில் வந்து தோன்றினள். (௨௫)

தோன்றலும்தொல்நகர்அரக்கர்தோகையர்
ஈன்றெதிர்வயிறலைத்திரங்கிஏங்கினார்
மூன்றுலகுடையவன்தங்கைமூக்கிலள்
தான்றனியவள்வரத்தரிக்கவல்லரோ. (௨௬)

பொருக்கெனநோக்கினர்புகல்வதோர்கிலர்
அரக்கரும்இமைத்தனர்அசனிஆம்என
கரத்தொடுகரங்களைப்புடைத்துக்கண்களை
நெருப்பெழவிழித்துவாய்மடித்துநிற்கின்றார். (௨௭)

இந்திரன்மேலதோஉலகம்இன்றபேர்
அந்தணன்மேலதோஆழியானதோ
சந்திரமௌலிபால்தங்குமேகொலோ
அந்தரம்என்றுநின்றழல்கின்றார்சிலர். (௨௮)

செப்புறற்குரியவர்தெவ்வர்யார்உளர்
முப்புறத்துலகமூர்அடங்கமூடிய
இப்புறத்தண்டத்தோர்க்கியைவதன்றிது
அப்புறத்தண்டத்தோர்ஆம்என்றார்சிலர். (௨௯)

என்னையேஇராவணன்தங்கைஎன்றபின்
அன்னையேஎன்றடிவணங்கல்அன்றியே
உன்னவேஒண்ணுமோஒருவரால்இவள்
தன்னையேஅரிந்தனள்தான்என்றார்சிலர். (௩௰)

போரிலான்புரந்தரன்ஏவல்பூண்டனன்
ஆருலாநேமியான்ஆற்றல்தோற்றுப்போய்
நீரினன்நெருப்பினன்பொருப்பினன்இனி
ஆர்கொல்ஆம்இதெனஅறைகின்றார்சிலர். (௩௧)

சொற்பிறந்தார்க்கிதுதுணியஒண்ணுமே
இற்பிறந்தார்தமக்கியைவசெய்திலள்
கற்பிறந்தாள்எனக்கரன்கொல்ஆம்இவள்
பொற்பிறந்தாக்கினன்புகன்றென்றார்சிலர். (௩௨)

தத்துறுசிந்தையர்தளரும்தேவரில்
பித்துறவல்லரோபிழைப்பில்சூழ்ச்சியார்
முத்திறத்துலகையும்முடிக்கஎண்ணுவார்
இத்திறம்புணர்த்தனர்என்கின்றார்சிலர். (௩௩)

இனிஒருசுற்பம்உண்டெனின்அன்றியே
வனைகழல்வயங்குவாள்வீரர்வல்லரோ
பனிவரும்கானிடைப்பழிப்பில்நான்புடை
முனிவரர்வெருளியின்முடிவென்றார்சிலர். (௩௪)

கறைஅறுதிருநகர்க்கருங்கண்நங்கைமார்
நிறைவளைத்தளிர்க்கைகள்நெரித்துநோக்கினர்
பிறைஉறுபால்எனநிலையிற்பின்றிய
உறையினர்ஒருவர்முன்ஒருவர்ஓடினார். (௩௫)

முழவினில்வீணையில்முரளியாழினில்
தழுவியகுழலினில்சங்கில்தாரையில்
எழுகுரலின்றியேஎன்றும்இல்லதோர்
அழுகுரல்பிறந்ததவ்விலங்கைக்கண்ணரோ. (௩௬)

கள்ளுடைவள்ளமுங்களித்ததும்பியும்
உள்ளமும்ஒருவழிகிடக்கஓடினார்
வெள்ளமும்நாணுறவிரிந்தகண்ணினார்
துள்ளுறுமருங்கினர்தழீக்கொண்டேகினார். (௩௭)

நாந்தகஉழவனைநாட்டும்தண்டத்தர்
காந்தியமனத்தினர்புலவிகைமிகச்
சேர்ந்தகண்அதிகமும்செவந்துநீர்உக
வேந்தனுக்கிளையவன்தாவில்வீழ்ந்தனர். (௩௮)

பொற்றலைமரகதப்பூகம்நேர்வுற
சுற்றியமணிவடம்தாங்கஊசலில்
பற்றியஆடலில்முனிவுற்றேங்கினார்
சிற்றிடைஅலமரத்தெருவுசேர்கின்றார். (௩௯)

எழுவனமலைஎனஎழுந்ததோள்களை
தழுவியவளைத்தளிர்நெகிழத்தாமரை
முழுமுகத்திருகயல்முத்தின்ஆலிகள்
பொழிதரச்சிலர்உளர்பொருமிவிம்முவார். (௪௰)

வேறு.

நெய்ந்நிலையவேல்அரசன்நேருனாஇல்லான்
இந்நிலைஉணர்ந்தபொழுதெந்நிலையன்என்று
மைந்நிலைநெடுங்கண்மழைவான்நிலையதாக
பொய்ந்நிலைமருங்கினர்புலம்பினர்புரண்டார். (௪௧)

மனந்தலைவருங்கணவர்இன்சுவைமறந்தார்
கனந்தலைவருங்குழல்சிறந்தகலைசோர
நனந்தலையகொங்கைகள்ததும்பிடநடந்தார்
அனந்தர்இளமங்கையர்அழுங்கிஅயர்கின்றார். (௪௨)

அங்கையில்அரன்கயிலைகொண்டதிறல்ஐயன்
தங்கைநிலைஇங்கிதுகொல்என்றுதளர்கின்றார்
கொங்கைஇணைசெங்கையின்மலைந்துகுலைகோதை
மங்கையர்கள்நங்கைஎதிர்வந்துவிழுகின்றார். (௪௩)

இலங்கையில்விளங்கும்இவைஎய்தல்இலஎன்றும்
வலங்கையின இலங்கும்அயில்மன்னன்உளன்என்ன
நலங்கையில்அகன்றதுகொல்நம்பின்எனநைந்தார்
கலங்கலினில்அம்கண்இணைவாரிகலுழ்கின்றார். (௪௪)

என்றிளையவன்துயர்இலங்கைநகர்எய்த
நின்றவர்இருந்தவரொடோடுநெறிதேட
குன்றின்அடிவந்துபடிகொண்டல்எனமன்னன்
பொன்றிணிகருங்கழல்விழுந்தனள்புரண்டாள். (௪௫)

மூடினதிருட்படலமூஉலகும்முற்ற
சேடனும்வெருக்கொடுசிரக்குவைநெளித்தான்
ஆடினகுலக்கிரிஅருக்கனும்அயிர்த்தான்
ஓடினதிசைக்கரிகள்உம்பரும்ஒளித்தார். (௪௬)

விரிந்தவலயங்கள்மிடைதோள்படாமீறிட்
டெரிந்தநயனங்கள்எயிறின்புறம்எறிப்ப
நெரிந்தபுருவங்கள்இடைநெற்றியினைமுற்ற
திரிந்தபுவனங்கள்வினைதேவரும்அயர்த்தார். (௪௭)

தென்றிசைநமன்தனொடுதேவர்குலம்எல்லாம்
இன்றிறுதிவந்ததுநமக்கெனஇருந்தார்
நின்றுயிர்நடுங்கஉடல்விம்மநினைவில்லார்
ஒன்றும்உரையாடல்இலர்உம்பரினெடும்பர். (௪௮)

மடித்தபிலவாய்கள்தொறும்வந்துபுகைமுந்த
துடித்ததொடர்மீசைகள்சுறுக்கொளஉயிர்ப்ப
கடித்தகதிர்வாள்எயிறுமின்கலமேகத்
திடித்தஉரும்ஒத்துரமியாவர்செயல்என்றான். (௪௯)

ஆரணியகாண்டம்.

கானிடை அடைந்து புவி காவல் புரிகின்றார்
மீனுடை நெடுங்கொடியினோன் அனையர் மேல்கீழ்
ஊனுடை உடம்புடைமையோர் உவமை ஒவ்வா
மானிடர் தடிந்தனர்கள் வாள் உருவி என்றாள். (ருய)

செய்தனர்கள் மானிடர் எனத் திசை அனைத்தும்
எய்த நகை வந்த தெரிசிந்தின கண் எல்லாம்
நொய்தவர் வலித்தொழில் நுவன்ற மொழி ஒன்றோ
பொய்தவிர் பயத்தை ஒழி புக்கபுகல் என்றான். (ருக)

மன்மதனை ஒப்பர் மணிமேனி வடமேரு
தன் எழில் அழிப்பர் திரள்தோளின் வலி தன்னால்
என்னதனை இப்பொழுதிசைப்பதுலகேழின்
நன்மதன் அழிப்பர் ஓர் இமைப்பில் நனிவில்லால். (ருஉ)

வந்தனை முனித்தலைவர் பால் உடையர் வானத்
திந்துவின் முகத்தர் எறிநீரில் எழுநாளக்
கந்தமலரைப் பொருவு கண்ணர் கழல் கையர்
அந்தம் இல் தவத்தொழிலர் ஆர் அவரை ஒப்பார். (ருங)

வற்கலையர் வார்கழலர் மார்பின் அணிநூலர்
விற்கலையர் வேதம் உறை நாவர் நனிமெய்யர்
உற்கலையர் உன்னை ஒர் துகள்த்தனையும் உன்னார்
சொற்கலை எனத் தொலைவில் துணிகள் சுமந்தார். (ருச)

ஆறுபுலன் அஞ்சினம் அரக்கரை எனச்சென்
றேறுநெறி அந்தணர் இயம்ப உலகெல்லாம்
வேறும் எனும் நுங்கள் குலம் வேரொடும் அடங்க
கோறும் என முந்தை ஒரு சூளுறவு கொண்டார். (ருரு)

மாரர் உளரோ இருவர் ஓர் உலகில் வாழ்வார்
வீரர் உளரோ அவரின் வில்லதனில் வல்லார்
ஆர் ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள் அய்யா
ஓர் ஒருவரோ இறைவர் மூவரையும் ஒப்பார். (ருசா)

தராவலய நேமி உழவன் தயரதப்பேர்
பராவரு நலத்தொருவன் மைந்தர் பழி இல்லார்
விராவருவனத் தவன் விளம்ப உறைகின்றார்
இராமனும் இலக்குவனும் என்பர் பெயர் என்றாள். (ருஎ)

மருந்தனையதங்கைமணிநாசிவடிவாளால்
அரிந்தவரும்மானிடர் அறிந்தும் உயிர்வாழ்வார்
விருந்தனையவாளொடும்விழித்திறையும்வெள்கா
திருந்தனன் இராவணனும் இன் உயிர் கொடின்னும். (ருஅ)

கொற்றமதமுற்றிவலியால் அரசுகொண்டேன்
உற்றபயன்மற்றிதுஒல்காமுறைஇறந்தேன்
முற்றஉலகத்துமுதல்வீரர்முடிஎல்லாம்
அற்றபொழுதத்திதுபொருந்தும்எனல்ஆமே. (ருகூ)

மூளும்உளதாயபழிஎன்வயின்முடித்தோர்
ஆளும்உள ஆம் அவர தார் உயிரும்உண்டாம்
வாளும்உளதோ தவிடம்உண்டவன்வழங்கும்
நாளும்உளதோளும்உள நானும்உளன் அன்றோ. (சுய)

புத்துறவுமப்பழிபுகுந்ததெனநாணி
தத்துறுவதென்னைமனனேதளரல்அம்மா
எத்துயர்உனக்குளதினிப்பழிசுமக்க
பத்துளதலைப்பகுதிதோள்கள்பலஅன்றே. (சுக)

என்றுரைசெயாநகைசெயாஎரிவிழிப்பான்
வன்துணைஇலா இருவர்மானிடரைவாளால்
கொன்றிலர்களா நெடியகுன்றுடையகானில்
நின்றகரனேமுதலினோர் நிருதர் என்றான். (சுஉ)

வேறு.

அற்றவன்உரைத்தலோடும்அழுதிழிஅருவிக்கண்ணள்
எற்றியவயிற்றள்பாரின் இடைவிழுந்தேங்குகின்றாள்
சுற்றமும்தொலைந்ததையநொய்தெனச்சுமந்தகையள்
உற்றதுதெரியும்வண்ணம்ஒருவகைஉரைக்கல்உற்றாள். (சுங)

சொல்லென்றென்வாயிற்கேட்டார்தொடர்ந்தெழுசேனையோடும்
கல்லென்றஒலியிற்சென்றார்கரன்முதற்காளைவீரர்
எல்ஒன்றுகமலச்செங்கண் இராமன் என்றிசைத்தஏந்தல்
வில்ஒன்றில்கடிகைமூன்றில்ஏறினர்விண்ணில்என்றாள். (சுச)

தாருடைத்தானையோடும்தம்பியர்தமியென்செய்த
போரிடைமடிந்தார் என்றஉரைசெவிபுகாதமுன்னம்
காரிடைஉரும்மின்மாரிகனலொடும்பிறக்குமாபோல்
நீரொடுநெருப்புகான்றனநெடுங்கண்கள்எல்லாம். (சுரு)

ஆயிடை எழுந்த சீற்றத் தழுந்திய துன்பம் ஆழித்
தீயிடை உருக்கும் நெய்யின் சீற்றத்திற் கூற்றம்செய்ய
நீயிடை இழைத்த குற்றம் என்னைகொல் நின்னை இன்னே
வாயிடை இதழும் மூக்கும் வலிந்தவர் கொய்ய என்றான். (௬௬)

என்வயின் உற்ற குற்றம் யாவர்க்கும் எழுதொணாத
தன்மையன் இராமனோடும் தாமரை தவிரப் போந்தாள்
மின்வயின் மருங்குல் கொண்டாள் வேய்வயின் மென்தோள் கொண்டாள்
பொன்வயின் மேனி கொண்டாள் பொருட்டினால் புகுந்ததென்றாள். (௬௭

ஆர் அவள் என்னலோடும் அரக்கியும் ஐய ஆழ்ந்த
தேர் அவள் திரண்ட கொங்கை செம்பொன் செய் குலிகச் செப்பு
பார் அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்தது அம்மா
பேர் அவள் சீதை என்றே வடிவெலாம் பேசலுற்றாள். (௬௮)

காமரம் முரலும் பாடல் கள் எனக் கனிந்த இன்சொல்
தேமலர் நிறைந்த கூந்தல் தேவர்க்கும் அணங்கு ஆம் என்ன
தாமரை இருந்த தையல் சேடி ஆம் தரமும் அல்லள்
யாம் உரை வழங்கும் என்பது ஏழைமைப்பாலது அன்றே. (௬௯)

மஞ்சொக்கும் அளகஓதி மழையொக்கும் வடித்த கூந்தல்
பஞ்சொக்கும் அடிகள் செய்ய பவளத்தின் விரல்கள் ஐய
அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக்கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள். (௭௰)

ஈசனார் கண்ணின் வெந்தான் என்றும் இத்திழுதைச் சொல் இவ்
வாசம் நாறு ஓதியாளைக் கண்டனன் அல்லன் ஆற்றல்
பேசல் ஆம் தகைமைத்து அல்லாப் பெரும்பிணி பிணிப்ப நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான் அனங்கன் அவ் உருவம் அம்மா. (௭௧)

தெவ்உலகத்தும் காண்டி சிரத்தினிற் பணத்தினோர்கள்
அவ்உலகத்தும் காண்டி அலைகடல் உலகிற் காண்டி
வெவ்உலை உற்ற வேலை வாளினை வென்ற கண்ணாள்
இவ்உலகத்தாள் அங்கம் யாவர்க்கும் எழுதொணாதாள். (௭௨)

தோளையே சொல்லுகேனோ சுடர்முகத்து உலவுகின்ற
வாளையே சொல்லுகேனோ அல்லவை வழுத்துகேனோ
மீளவும் திகைப்பதல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன்
நாளையே காண்டி அன்றே நான் உனக்குரைப்பதென்னே. (௭௩)

வில்லொக்குந்நுதலென்றாலும்வேலொக்கும்விழியென்றாலும்
பல்லொக்கும்முத்தென்றாலும்பவளத்தைஇதழ்என்றாலும்
சொல்லொக்கும்பொருள்ஒவ்வாதால்சொல்லலாம்உவமைஉண்டோ
நெல்லொக்கும்புல்என்றாலும்நேர்உரைத்தாகவற்றே. (எச)

இந்திரன்சசியைப்பெற்றான்இருமூன்றுவதனத்தோன்தன்
தந்தையும்உமையைப்பெற்றான்தாமரைச்செங்கணானும்
செந்திருமகளைப்பெற்றான்சீதையைப்பெற்றாய்நீயும்
அந்தரம்பார்க்கில்நன்மைஅவர்க்கில்லைஉனக்கேஐயா. (எரு)

பாகத்தில்ஒருவன்வைத்தான்பங்கயத்திருந்தபொன்னை
ஆகத்தில்ஒருவன்வைத்தான்அந்தணன்நாவில்வைத்தான்
மேகத்தில்மின்னைமன்னவென்றநுண்ணிடையைநீயும்
மாகத்தோள்வீரபெற்றால்எங்ஙனம்வைத்துவாழ்தி. (எசா)

பிள்ளைபோல்பேச்சினாளைப்பெற்றபின்பிழைக்கலாற்றாய்
கொள்ளைபோகின்றசெல்வம்அவளுக்கேகொடுத்திஐய
வள்ளலேஉனக்குநல்லேன்மற்றுநின்மனையில்வாழும்
கிள்ளைபோல்மொழியார்க்கெல்லாம்கேடுசூழ்கின்றேன்அன்றே. (எஎ)

தேர்தந்தஅல்குற்சீதைதேவர்தம்உலகின்இம்பர்
வார்தந்தகொங்கையார்தம்வயிறுதந்தாளும்அல்லள்
தார்தந்தகமலத்தாளைத்தருக்கினர்கடையச்சங்க
நீர்தந்ததனைவெல்வான்நிலந்தந்துநிரம்பிற்றன்றே. (எஅ)

மீன்கொண்டோடும்வேலைமேகலைஉலகம்எத்தத்
தேன்கொண்டோடும்கூந்தல்சிற்றிடைச்சீதைஎன்னும்
மான்கொண்டோடும்நீஉன்வாள்வலிஉலகம்காண
யான்கொண்டோடும்வண்ணம்இராமனைத்தருதிஎன்பால். (எகூ)

தருவதுவிதியேஎன்றால்தவம்பெரிதுடையர்என்னும்
வருவதுவருநாள்அன்றிவறிதுகைகூடவற்றோ
ஒருபதுமுகமும்கண்ணும்உருவமும்மார்பும்தோள்கள்
இருபதும்படைத்தசெல்வம்எய்துவதினிநீஎந்தாய். (அ௦)

இன்னவள்தன்னைஉன்பால்உய்ப்பன்என்றெடுக்கல்உற்ற
என்னைஅவ்விராமன்தம்பிஇடைபுகுந்திலங்குவாளால்
முன்னைமூக்கரிந்துவிட்டான்முடிந்ததென்வாழ்வும்உன்னில்
சொன்னபின்உயிரைநீப்பான்துணிந்தனன்என்னச்சொன்னாள். (அக)

கோபமும்மறனும்மானக்கொதிப்பும்என்றினையஎல்லாம்
பாபம்நின்றிடத்துநில்லாப்பெற்றிபோல்பற்றுவிட்ட
தீபம்ஒன்றொன்றைஉற்றால்என்னலாம்செயலிற்புக்க
தாபமும்காமநோயும்ஆருயிர்கலந்தஅன்றே. (அஉ)

கரனையும்மறந்தான்தங்கைமூக்கினைக்கடிந்துநின்றான்
உரனையும்மறந்தான்உற்றபழியையும்மறந்தான்வெற்றி
அரனையும்கொண்டகாமன்அம்பினால்முனைப்பெற்ற
வரனையும்மறந்தான்கேட்டமங்கையைமறந்திலாதான். (அங)

சிற்றிடைச்சீதைஎன்னும்நாமமும்சிந்தைதானும்
உற்றிரண்டொன்றாய்நின்றால்ஒன்றொழித்தொன்றைஉன்ன
மற்றொருமனமும்உண்டோமறக்கலாம்வழிமற்றியாதோ
கற்றனர்ஞானம்இன்றேல்காமத்தைக்கடக்கல்ஆமோ. (அச)

மயிலுடைச்சாயலாளைவஞ்சியாமுன்னம்நீண்ட
எயிலுடைஇலங்கைநாதன்இதயமாம்சிறையில்வைத்தான்
அயிலுடைஅரக்கன்உள்ளம்அவ்வழிமெள்ளமெள்ள
வெயிலுடைநாளில்உற்றவெண்ணெய்போல்வெதும்பிற்றன்றே. (அரு)

விதியதுவலியினாலும்மேலுளவினையினாலும்
பதியுறுகேடுவந்துகுறுகியபயத்தினாலும்
கதியுறுபொறியின்வெய்யகாமநோய்கல்விநோக்கா
மதியிலிமறையச்செய்ததீமைபோல்வளர்ந்ததன்றே. (அசு)

பொன்மயமானதங்கைமணம்புகப்புன்மைபூண்ட
தன்மையோஅரக்கன்தன்னைஅயர்த்ததோர்தகைமையாலோ
மன்மதன்வாளிதூவிநலிவதோர்வலத்தன்ஆகுன்
வன்மையைமாற்றும்ஆற்றல்காமத்தேவழிந்ததன்றே. (அஎ)

எழுந்தனன்இருக்கைநின்றேழுலகத்துளோரும்
மொழிந்தனர்ஆசிஓசைமுழங்கினசங்கம்எங்கும்
பொழிந்தனபூவின்மாரிபோயினர்புறத்தோர்எல்லாம்
அழிந்ததுசிந்தையோடும்ஆடகக்கோயில்புக்கான். (அஅ)

பூவினால்வேய்ந்துசெய்தபொங்குபேர்அமளிகொங்கைத்
தேவிமார்குழுவும்நீங்கச்சேர்ந்தனன்சேர்தலோடும்
நாவிநாறுதிநவ்விநயனமும்குயமும்புக்குப்
பாவியாக்கொடுத்தவெம்மையயப்பயப்பரந்ததன்றே. (அகூ)

வேறு.

தூக்கல்ஆகலாதகாதல்நூறுநூறுகோடியாய்
பூக்கவாசவாடைவீசுசீதநீர்பொதிந்தமென்
சேக்கைவீகரிந்துதிக்கயங்கள்எட்டைவென்றதோள்
ஆக்கைதீயஉள்ளம்மையஆவிவேவதாயினான். (௯௰)

தாதுகொண்டசீதமேவுசந்துசந்தமென்றளிர்
போதுகொண்டடுத்தபோதுபொங்குதீமருந்தினால்
வேதுகொண்டதென்னமேனிவெந்துவெந்துவிம்முதீ
ஊதுவன்துருத்திபோல்உயிர்த்துயிர்த்துயங்கினான். (௯௧)

தாவியாதுதீதெனாதுதையலாளைமெய்யுறப்
பாவியாதபோதிலாதபாவிமாழைபானல்வேல்
காவியானகண்ணிமேனிகாணலூறும்ஆசையால்
ஆவிசாலநொந்துநொந்தழுங்குவானும்ஆயினான். (௯௨)

பாங்கிடந்தமாதிரம்பரித்தபாழியானையின்
கரங்கிடந்தகொம்பொடிந்திரங்கவென்றகாவலன்
மரங்குடைந்ததும்பிபோல்அனங்கன்வாளிவந்துவந்
துரங்குடைந்துநொந்துநொந்துளைந்துளைந்தொதுங்கினான். (௯௩

கொன்றைதுன்றுகோதையோடொர்கொம்புவந்தென்னெஞ்சிடை
நின்றதுண்டுகண்டதென்றழிந்தழுங்குநீர்மையான்
மன்றல்தங்கலங்கல்மாரன்வாளிபோலமல்லிகைத்
தென்றல்வந்தெதிர்ந்தபோதுசீறுவானும்ஆயினான். (௯௪)

அன்னகாலைஅங்குநின்றெழுந்தழுங்குசிந்தையான்
இன்னவாறுசெய்வன்என்றொரெண்ணிலான்இரங்குவான்
பன்னுகோடிதீபமாலைபாலையாழ்பழித்தசொல்
பொன்னனார்எடுக்கஅங்கொர்சோலையூடுபோயினான். (௯௫)

வேறு.

மாணிக்கம்பனசம்வாழைமரகதம்வயிரம்தேமா
ஆணிப்பொன்வேங்கைகோங்கம்அரவிந்தராகம்பூகம்
சேணுயக்குநீலஞ்சாலம்குருவிந்தம்தென்னம்வெள்ளி
பாணித்தென்பளிங்குநாகம்பாடலம்பவளம்மன்றோ. (௯௬)

வானுறநிவர்ந்தசெங்கேழ்மணிமரந்துவன்றிவான
மீனொடுமலர்கள்தம்மில்வேற்றுமைதெரிதல்தேற்றா
தேனுகுசோலைநாப்பண்செம்பொன்மண்டபத்துள்ஆங்கோர்
பானிறஅமளிசேர்ந்தான்மையுள்ளுற்றயங்கிறைவான். (௯௭)

கனிகளின்மலரின்வந்தகள்ளுண்டுகளிகள் அன்ன
வனிதையர்மழலை இன்சொற்கிளையுங்குயிலும்வண்டும்
இனியனமிழற்றுகின்ற இயாவையும் இலங்கைவேந்தன்
முனியும்என்றவிந்தவாயமூங்கையர்போன்றஅன்றே. (௯௮)

பருவத்தால்வாடைவந்தபசும்பனிஅனங்கபாணம்
உருவிப்புக்கொளித்தபுண்ணிற்குளித்தலும்உளைந்துவிம்மி
இருந்தான்யாதடாவென்றியம்பினன் இயம்பலோடும்
வெருவிப்போய்ச்சிசிரம்நீங்கிவேனில்வந்திறுத்ததன்றே. (௯௯)

வன்பனைமரமும்தீயமலைகளும்குளிரவாழும்
மென்பனிஎரிந்ததென்றால்வேனலைவிளம்பலாமோ
அன்பெனும்விடம்உண்டாரை ஆற்றலாம்மருந்தும்உண்டோ
இன்பமும்துன்பந்தானும்உள்ளத்தோடியைந்தஅன்றே. (௱)

மாதிரத்திறுதிகாறுந்தன்மனத்தெழுந்தமையல்
வேதனைவெப்பஞ்செய்யவேனலும்வெதுப்புங்காலை
யாதிதிங்கிதனில்முன்னைச்சிசிரம்நன்றிதனைநீக்கி
கூதிராம்பருவந்தன்னைக்கொணருதிர்விரைவின்என்றான். (௱௧)

கூதிர்வந்தடைந்தகாலைகொதித்தனகுவவுத்திண்டோள்
சீதமுஞ்சுடுமோமுன்னைச்சிசிரமேகாணென்றான்
ஆதியாய்அஞ்சும்அன்றேஅருளலதியற்றஎன்ன
யாதுமிங்கிருதுவாகாதியாவையும்அகற்றும்என்றான். (௱௨)

என்னலும்இருதுவெல்லாம்ஏகினயாவுந்தத்தம்
பன்னரும்பருவம்செய்யாயோகிபோலபற்றுநீத்த
பின்னரும்உலகம்எல்லாம்பிணிமுதற்பாசம்வீசித்
துன்னரும்தவத்தின்எய்தும்துறக்கம்போல்தோன்றிற்றன்றே. ௱௩

கூலத்தார்உலகம்எல்லாம்குளிர்ப்பொடுவெதுப்பும்நீங்க
நீலத்தார்அரக்கன்மேனிநெய்யின்றிஎரிந்ததன்றே
காலத்தால்வருவதொன்றோகாமத்தால்கனலும்வெந்தீச்
சீலத்தால்அவிவதன்றிச்செய்யத்தான்ஆவதுண்டோ. (௱௪)

நாரம்உண்டெழுந்தமேகம்தாமரைவளையநாறு
சாரம்உண்டிருந்தசீதச்சந்தனத்தளிர்மென்றோதா
டாரம்உண்டிருந்தும்சிந்தைஅயர்கின்றான்அயல்நின்றாரை
ஈரம்உண்டென்பர்ஓடி இந்துவைக்கொணர்மின்என்றான். (௱௫)

வெஞ்சினத்தரக்கன் ஆண்டவியன் நகர்மீதுபோதும்
நெஞ்சிலன் ஒதுங்குகின்றநிறைமதியோனைநோக்கி
அஞ்சலைவருதிநின்னை அழைத்தனன் அரசன் என்னச்
சஞ்சலம் துறந்துதான் அச்சந்திரன் உதிக்கலுற்றான். (௱௬)

அயிர்உறக்கலந்தநன்னீர் ஆழிநின்றாழிநீத்துச்
செயிர்உறக்கலந்ததாண்டோர்தேய்வுவந்துற்றபோது
வயிரமுற்றுடைந்துசென்றோர்வலியவற்செல்லுமாபோல்
உயிர்தெறக்காலன் என்பான் ஒத்தனன் உதயம்செய்தான். (௱௭)

பராவருகதிர்கள்எங்கும்பரப்பிமீப்படர்ந்துவானில்
தராதலத்தெவரும்பேணுவவனையேசலிக்குநீரால்
அராவணைதுயிலும்அண்ணல்காலம்ஓர்ந்தற்றம்நோக்கி
இராவணன் உயிர்மேல்உய்த்ததிகிரியுமென்னலானான். (௱௮)

அருகுறுபாலின்வேலைஅமுதெலாம்அளைந்துவாரிப்
பருகினன்பரந்துபாய்ந்தநிலாச்சுடர்ப்பனிமென்கற்றை
நெரிஉறுபுருவச்செங்கண் அரக்கற்குநெருப்பின்நாப்பண்
உருகியவெள்ளிஅள்ளிவீசினால்ஒத்ததன்றே. (௱௯)

மின்னிலந்திரிந்ததன்னவிழுநிலாமிதிலைசூழ்ந்த
சென்னலங்கழனிநாடன்றிருமகள்செவ்விகேளா
நன்னலம்தொலைந்துசோரும்அரக்கனைநாணுந்தோலாத்
துன்னலன்ஒருவன்பெற்றபுகழ்எனச்சுட்டதன்றே. (௱௰)

கருங்கழற்காலன் அஞ்சும்காவலன்கறுத்துநோக்கித்
தருங்கதிர்ச்சீதையாக்கைச்சந்திரற்றருதிர்என்ன
முருங்கியதணலின்மாரிவிடத்தினைமுகக்குஞ்சீற்றத்
தருங்கதிர் அருக்கன்தன்னை ஆர் அழைத்தீர்கள்என்றான். (௱௧௧)

அவ்வழிச்சிலதர்அஞ்சிஆதியாய்அருள்இல்லாரை
இவ்வழித்தருதும்என்பதியம்பலாம்இயல்பிற்றன்றால்
செவ்வழிக்கதிரோன்என்றும்தேரின்மேல்அன்றிவாரான்
வெவ்வழித்தெனினும்திங்கள்விமானத்தின்மேலன்என்றார். (௱௧௨)

வேறு.

பணந்தாழல்குற்பணிமொழியார்க்கன்புபட்டார்படுங்காமக்
குணந்தான்முன்னம்அறியாதான்கொதியாநின்றான்மதியாலே
தணந்தாமரையின்தனிப்பகைஞன்என்னுந்தகைமைஒருதானே
உணர்ந்தான்உணர்வுற்றவன்மேல்இட்டுயிர்தந்துய்க்கஉனாசெய்வான். ௱௩

தேயாநின்றாய் மெய்வெளுத்தாய் உள்ளங்கறுத்தாய் நிலைதிரிந்து
கரியாநின்றாய் ஐ நதீயுங்கண்டார் சொல்லக்கேட்டாயோ
பாயாநின்றமலர் வாளிபறியாநின்றார் இன்மையால்
ஓயாநின்றேன் உயிர்காத்தற்குரியார் யாவர் உடுபதியே. (௲௰௪)

ஆற்றார் ஆகில் தம்மைக்கொண்டடங்காரோ என் ஆர்உயிர்க்குக்
கூற்றாய்நின்ற குலச்சனகி குவளைமலர்ந்த தாமரைக்குத்
தோற்றாய் அதனால் அகங்கறுத்தாய் மெலிந்தாய் வெதும்பத்தொடங்கினாய்
மாற்றார் செல்வங்கண்டழிந்தால் வெற்றி ஆகவற்றுமோ. (௲௰௫)

என்னைப்பன்னி இடருழவா இரவோடிவனைக்கொண்டகற்றி
முன்னைப்பகலும் பகலோனும்வருக என்றான் மொழியாமுன்
உன்னற்கரிய உடுபதியும் இரவும் ஒழிந்த ஒருநொடியில்
பன்னற்கரிய பகலவனும் பகலும் வந்து பரந்தவால். (௲௰௬)

இருக்கின் மொழியார் எரிமுகத்தின் இந்த நெய்யின் அவிர் செம்பொன்
உருக்கி அனைய கதிர்பாய அனல்போல் விரிந்த உயர்கமலம்
அருக்கன் எய்த அமைந்தடங்கி வாழா அடாத பொருள் எய்திச்
செருக்கி இடையே திருஇழந்த சிறியோர் போன்ற சேதாம்பல். (௲௰௭)

நாணிநின்ற ஒளிமழுங்கி நடுங்காநின்ற உடம்பினன் ஆய்
சேணினின்றுபுறஞ்சாய்ந்து அகங்குற்றாம்பின் செல்லப்
பூணின் வெய்யோன் ஒருதிசையே புகுதப்போவான் புகழ்வேந்தர்
ஆணைசெல்ல நிலை அழிந்த அரசர்போன்றான் அல் ஆண்டான். (௲௰௮)

வேறு.

மணந்தபேர் அன்பரை மலரின் சேக்கையுள்
புணர்ந்தவர் இடை ஒரு வெகுளி பொங்கலால்
கணங்குழை மகளிர்கள் கங்குல் நீங்கிட
உணர்ந்திலர் கனவினும் ஊடல் தீர்ந்திலர். (௲௰௯)

தள்ளுறும் உயிரினர் தலைவர் நீங்கலால்
நள்ளிரவிடை உறும் நடுக்கம் நீங்கலார்
கொள்ளையின் அலர்தரு குவளை நாள்மலர்
கள்ளுகுவன எனக் கழுங்கண்ணினார். (௲௨௰)

அணைமலர்ச் சேக்கையுள் ஆடல் தீர்ந்தனர்
பணைகளைத் தழுவிய பவளவல்லிபோல்
இணைமலர்க் கைகளின் இறுகவின் உயிர்த்
துணைவரைத் தழுவினர் துயில்கின்றார் சிலர். (௲௨௰௧)

அளிஇனம்கடந்தொறும்ஆர்ப்பவாய்கதிர்
ஒளிபடஉணர்ந்திலஉறங்குகின்றன
தெளிவிலஇன்றுயில்விளையும்சேக்கையுள்
களிகளைநிகர்த்தனகளிநல்யானையே. (௱௨௨)

விரிந்துறைதுறைதொறும்விளக்கம்யாவையும்
எரிந்திழுதஃகலஒளிஇழந்தன
அருந்துறைநிரம்பியஉயிரின்அன்பரைப்
பிரிந்துறைதரும்குலப்பேதைமாரினே. (௱௨௩)

புனைந்திதழ்உரிஞ்சுறுபொழுதுபுல்லியும்
வனைந்திலவைகறைமலரும்மாமலர்
நனைந்தலஅமளியில்துயிலும்நங்கைமார்
அனந்தரின்நெடுங்கணேமொடாத்தவாமரோ. (௱௨௪)

இச்சையில்துயில்வதற்கியாவர்கண்களும்
நிச்சயம்பகலும்தம்இமைகள்நீக்கலர்
பிச்சையும்இடுதும்என்றுணர்வுபேணலர்
வச்சையர்நெடுமனைவாயில்ஆனவே. (௱௨௫)

நஞ்சுறுபிரிவினைநாளின்நீரம்ஒர்
தஞ்சுறவிடுவதோர்தயாவுதாங்கலால்
வெஞ்சிறைநீங்கியவினையினர்என
நெஞ்சுறக்களித்தனநேயப்புள்எலாம். (௱௨௬)

நாண்மதிக்கல்லதுநடுவண்எய்திய
ஆணையின்நீக்கலாவவரிற்பாய்வன
மாண்வினைப்பயன்படாமாந்தர்வாயில்சேர்
பாணரிற்றளர்ந்தனபாடல்தும்பியே. (௱௨௭)

அருமணிச்சாளரம்அதனின்ஊடுபுக்
கெரிகதிர்இன்துயில்எழுப்பின்றவும்
மருளொடுதெருளுறுநிலையர்மங்கையர்
தெருளுறமெய்ப்பொருள்தெளிந்திலாரினே. (௱௨௮)

ஏவலின்வன்மையைஎண்ணல்தேற்றலா
நாவலர்இயற்றியநாளின்நாமநூல்
காவலின்இனிதுணர்கணிதமாக்களும்
கூவுறுகோழியும்துயில்வுகொண்டவே. (௱௨௯)

இனையன உலகினில் நிகழும் எல்லையில்
கனைகழல் அரக்கனும் கண்ணில் நோக்கினான்
நினைவுறு மனத்தையு நெருப்பிற் றீய்க்குமால்
அனைய அத்திங்களே ஆகுமால் என்றான். (௱௬௰)

திங்களோ அன்றிது செல்வ செங்கதிர்
பொங்குளைப் பச்சையம் புரவித் தேரதால்
வெங்கதிர் சுடுவதே அன்றி மெய்யுறத்
தங்கு தண்கதிர் சுடத் தகாதென்றார் சிலர். (௱௬௧)

வேறு.

நீலச்சிகரக் கிரி அன்னவன் நின்ற வெய்யோன்
ஆலத்தினும் வெய்யன் அகற்றி அரற்றுகின்ற
வேலைக் குரலைத் தவிர்கென்று விலக்கி மேலை
மாலைப் பிறைப்பிள்ளையைக் கூவுதிர் வல்லை என்றான். (௱௬௨)

சொன்னான் நிருதர்க்கிறை அம்மொழி சொல்லலோடும்
அன்னாளின் நிரம்பிய அம்மதி ஆண்டொர் வேலை
முன்னாளின் இளம்பிறை ஆகிமுளைத்த தென்றால்
என்னாரும் அருந்தவம் அன்றி இயற்றலாமோ. (௱௬௩)

குடபாலின் முளைத்தது கண்ட குணங்கள் தீயோன்
வடவா அனல் அன்றெனில் மண்பிடர் வைத்த பாம்பின்
விடவாள் எயிறன்றெனில் என்னை வெகுண்ட மாலை
அடவாள் உருவிக் கொடு தோன்றிய தாகும் அன்றே. (௱௬௪)

தாருண் சடிலத் தலைவைத்தது தண்தரங்கம்
மோதும் கடலிற் கிடைமுந்து பிறந்த போதே
ஓதும் கடுவைத் தன்மிடற்றில் ஒளித்த தக்கோன்
ஈதும் கடுவாம் என எண்ணிய எண்ணம் அன்றே. (௱௬௫)

உருமொக்க உலைந்துயிர் நுங்கிய திங்கள் ஒடித்
திருமிச் சிறுமின் பிறைநீமை குறைந்ததில்லை
கருமைக் கறைநெஞ்சினில் நஞ்சு கலந்த பாம்பின்
பெருமைச் சிறுமைக் கொருபெற்றி குறைந்ததுண்டோ. (௱௬௬)

கன்னக் கனியும் இருள் தன்னையும் காண்டும் அன்றே
முன்னைக் கதிர் நன்றி தகற்றுதிர் முன்பு சான்ற
என்னைச் சுடும் என்னில் இவ்வேழுலகத்தும் வாழ்வோர்
பின்னைச் சிலர் உய்வர் என்றதற் கொருபேச்சும் உண்டோ. (௱௬௭)

ஆண்டப்பிறைநீங்கலும்எய்தியதந்தகாரம்
தீண்டற்கெளிதாய்ப்பலதேய்ப்பனதேய்க்கலாகி
வேண்டிற்கரபத்திரத்தீர்த்துவிழுத்தலாகிக்
காண்டற்கினிதாய்ப்பலகந்துதிரட்டலாகி. (௱௩௮)

முருடேர்ந்துருட்டற்கெளிதென்பதென்முற்றும்முற்றிப்
பொருடங்கில்கேழ்விச்சுடர்புக்குவழங்கல்இன்றிக்
குருடங்கிதென்னக்குறிக்கொண்டுகண்ணோட்டங்குன்றி
அருடீர்ந்தநெஞ்சிற்கரிதென்பதவ்அந்தகாரம். (௱௩௯)

விள்ளாதுசெறிந்திடைமேல்உறஓங்கிளங்கும்
நள்ளாதிருள்அந்தகன்ஞாலம்விழுங்கவோடும்
எள்ளாதுலகியாவையும்யாவரும்வீயும்என்ப
துள்ளாதுமிழ்ந்தான்விடம்உண்டஒருத்தன்என்றான். (௱௪௰)

வேலைத்தலைவந்தொருவன்வலியால்விழுங்கும்
ஆலத்தின்அடங்குவதன்றிதறிந்துணர்ந்தேன்
ஞாலத்தொடுவிண்முதல்யாவையும்நாவில்நக்கும்
காலக்கனல்கார்விடம்உண்டுகறுத்ததன்றே. (௱௪௧)

அம்பும்அனலும்நுழையாக்கனஅந்தகாரத்
தும்பர்மழைகொண்டயல்ஒப்பரிதாயதுப்பின்
கொம்பர்குரும்பைக்குலம்கொண்டதுதிங்கள்தாங்கி
வெம்பும்தமியேன்முன்விளக்கெனத்தோன்றும்அன்றே. (௱௪௨)

மருளோடுவந்தமயக்கோமதிமற்றும்உண்டோ
தெருளாதிதென்றேதினிமைஇழைத்தாலும்ஒவ்வா
இருளோடிருகுன்றலம்கொண்டிருண்டநீலச்
சுருளோடும்வந்தோர்சுடர்மாமதிதோன்றும்அன்றே. (௱௪௩)

புடைகொண்டெழுகொங்கையும்அல்குலும்புல்கிநிற்கும்
இடைகண்டிலம்அல்லதெல்லாஉருவும்தெரிந்தாம்
விடம்நுங்கியகண்ணுடையார்இவர்மெல்லமெல்ல
மடமங்கையராய்என்மனத்தவர்ஆயினரோ. (௱௪௪)

பண்டேஉலகேழினும்உள்ளபடைக்கணாரைக்
கண்டேன்இவர்போல்வதோர்பெண்ணுருக்கண்டிலேன்ஆல்
உண்டேஎனின்வேறினிஎங்கைஉணர்த்திநின்ற
வண்டேறுகோதைமடவாள்இவள்ஆகும்அன்றே. (௱௪௫)

பூண்டிப்பிணியால்உறுகின்றதுதான்பொருதாள்
நேண்டிக்கொடுவந்தனள்செய்வதொர்மாறும்உண்டோ
காண்டற்கினியாள்உருக்கண்டவட்கேட்கும்ஆற்றால்
ஈண்டிப்பொழுதேவிரைந்தெங்கையைக்கூவுகென்றான். (௱௪௬)

என்றான்எனலும்கடிதேகினர்கூவும்எல்லை
வன்றாள்நிருதக்குலம்வேர்அறமாய்த்தல்செய்வாள்
ஒன்றாதகாமக்கனல்உட்டெறலோடும்நாசி
பொன்றாழ்குழைதன்னொடும்போகினள்போய்ப்புகுந்தாள். (௱௪௭)

பொய்ந்நின்றநெஞ்சிற்கொடியாள்புகுந்தாளைநோக்கி
நெய்ந்நின்றகூர்வாளவன்நேர்உறநோக்குநங்காய்
மைந்நின்றவாட்கண்மயில்நின்றனைவந்தெதன்முன்னர்
இந்நின்றவள்ஆம்கொல்இயம்பியசீதைஎன்றான். (௱௪௮)

செந்தாமரைக்கண்ணொடும்செங்கனிவாயினோடும்
சந்தார்தடம்தோளொடும்தாழ்தடக்கைகளோடும்
அந்தார்அகலத்தொடும்அஞ்சனக்குன்றமென்ன
வந்தான்இவன்ஆகும்அவ்வல்வில்இராமன்என்றாள். (௱௪௯)

பெண்பால்உருநான்இதுகண்டதுபேதைநீஇன்
றெண்பாலும்இலாததோர்ஆண்உருவென்றிஎன்னே
கண்பால்உறும்மாயைகவற்றுதல்கற்றநம்மை
மண்பாலவரோகொல்விளைப்பவர்மாயைஎன்றான். (௱௫௰)

ஊன்றும்உணர்வப்புறம்ஒன்றிலும்ஓடல்இன்றி
ஆன்றும்உளதாநெடிதாசைகனற்றநின்றாய்க்
கேன்றுன்எதிரேவிழிநோக்கும்இடங்கள்தோறும்
தோன்றும்அனையாள்இதுதொல்நெறிஆகும்என்றாள். (௱௫௧)

அன்னாள்அதுகூறஅரக்கனும்அன்னதாக
நின்னால்அவ்இராமனைக்காண்குறும்நீர்என்என்றான்
என்னாள்அவன்என்னைஇத்தீர்வரும்இன்னல்செய்தான்
அன்னாள்முதல்யானும்அயர்த்திலன்ஆகும்என்றாள். (௱௫௨)

ஆமாம்அதடுக்கும்என்ஆக்கையோடாவிரைய
வேமால்வினையேற்கினிஎன்விடிவாகும்என்னக்
கோமான்உலகுக்கொருநீகுறைகின்றதென்னே
பூமான்குழலாள்தனைஉவ்வுதிபோதிஎன்றாள். (௱௫௩)

என்றாள் அகன்றாள் அவ் அரக்கனும் இடறிந்தான்
ஒன்றும் உணர்ந்திலன் ஆவி உலைந்து சோர்ந்தான்
நின்றாரும் நடுங்கினர் நின்றார நாளினாலே
பொன்றாதுளன் ஆயினன் அத்துணை போலும் அன்றே. (௱௫௪)

இறந்தார் பிறந்தார் என இன்னுயிர் பெற்ற மன்னன்
மறந்தான் உணர்ந்தான் அவண் மாடு நின்றானை நோக்கிக்
கறந்தால் என நீர் தரு சந்திரகாந்தத்தாலே
சிறந்தார் மணிமண்டபம் செய்கெனச் செப்புகென்றான். (௱௫௫)

வந்தான் நெடுவான் உறை தச்சன் மனத்துணர்ந்தான்
சிந்தாவினை அன்றியும் செய்வினை யாலும் செய்தான்
அந்தாம நெடுந்தறி ஆயிரத்தால் அமைத்த
சந்தார் மணிமண்டபம் தாமரையோனும் நாண. (௱௫௬)

காந்தம் அமுதின் துளிகால்வன காலமீனின்
வேந்தன் ஒளி அன்றிய மேலொடு கீழ் விரித்தான்
பூந்தென் றல்புகுந்து உறைசாளரம் உம்பு ஊனைந்தான்
ஏந்தும் மணிக் கற்பகச் சீதளக்கா இழைத்தான். (௱௫௭)

ஆணிக்கமை பொற்கை மணிச்சுடர் ஆர் விளக்கம்
சேணுற்றிருள் சீப்ப அத்தெய்வ மடந்தைமார்கள்
பூணிற்பொலிவார் புடை ஏந்திடப் பொங்கு தோளான்
மாணிக்க மானத்திடை மண்டபம் காண வந்தான். (௱௫௮)

அல்லாயிர கோடி அடுக்கிய தொத்த தேனும்
நல்லார் முகமாம் நளிர் வான் நிலவீன்ற நாமப்
பல்லாயிர கோடி பனிச்சுடர் இன்ற திங்கள்
எல்லாம் உடனாய் இருள் ஓட்டி இரிந்த தன்றே. (௱௫௯)

பொற்புற்றன மாமணி ஒன்பதும் பூவில் நின்ற
கற்பத்தருவின் கதிர் நாள் நிழற் கற்றை நாற
அற்பற்றழியப் பகல் ஆக்கிய தால் அருக்கன்
நிற்பத் தெளிகின்றது நீள் சுடர் மேன்மை அன்றோ. (௱௬௰)

ஊறோசை முதற்பொறி யாவையும் ஒன்றின் ஒன்றா
தேறா நிலை உற்றதொர் சிந்தையன் செய்கை ஓரான்
வேறாய பிறப்பிடை வேட்கை விசித்த தீர்ப்ப
மாறோர் உடல் உற்றென மண்டபம் வந்து புக்கான். (௱௬௧)

வேறு.

தண்டலிற்றவம்செய்வோர்தாம்வேண்டியதரவேநல்கும்
மண்டலம்கரவேலைஅழுதொடும்வந்ததென்ன
பண்டருகரும்புசேரும்பசுமரம்உயிர்த்தபைம்பொற்
றண்டளிர்மலரிற்செய்தசீதளச்சேக்கைசார்ந்தான். (௱௯௨)

நேரிழைமகளிர்கூந்தல்நிறைநறைவாசம்நீந்தி
வேரியம்சாரச்சோலைவேனிலான்விருந்துசெய்ய
வார்கலிஅழுவம்தந்தமருந்தெனஒருவர்ஆவி
தீரினும்உதவற்கொத்ததென்றல்வந்திறுத்ததன்றே. (௱௯௩)

சாளரத்தூடுவந்துதவழ்தலும்தரித்தல்தேற்றான்
நீளரத்தங்கள்சிந்திநெருப்புகநோக்கும்நீரான்
வாள்மனைபுகுந்ததாண்டோர்மாசுணம்வரக்கண்டன்ன
கோளுறக்கொதித்துவிம்மிஉழையனைக்கூவிச்சொன்னான். (௱௯௪)

கூவலின்உயிர்த்துசின்னீர்உலகினைக்குப்புற்றென்ன
தேவரின்ஒருவன்என்னைஇன்னலும்செய்யத்தக்கான்
ஏவலின்அன்றிவந்திங்கிவ்வழியெய்திற்றென்னக்
காவலின்உழையர்தம்மைக்கொணருதிர்கடிதில்என்றான். (௱௯௫)

அவ்வழிஉழையர்ஓடிஆண்டவற்குணர்த்தலோடும்
வெவ்வழிஅமைந்தசெங்கண்வெருவுறநோக்கிவெய்யோன்
செவ்வழிதென்றலோற்குத்திருத்தினிர்நீர்கொல்என்ன
இவ்வழிஇருந்தகாலைத்தடைஅவற்கில்லைஎன்றார். (௱௯௬)

காற்றினேன்தன்னைவாளாமுனிதலிற்கண்டதில்லை
கூற்றுவந்தென்னைஇன்னேகுறுகும்ஆல்குறித்தஆற்றல்
வேற்றரும்கருங்கட்சீதைமெய்அருள்புனையேன்என்றால்
ஆற்றலால்அடுத்ததென்னும்அமைச்சனைக்கொணர்திர்என்றான்.

ஏவினசிலதர்ஓடிஏனைநற்றுணையில்எங்கும்
கூவினர்கூவலோடும்குறுகினர்கொடித்திண்டேரர்
மாவினர்சிவிகைமேலர்மும்மதக்களிற்றர்வையத்
தேவரும்வானந்தன்னில்தேவரும்சிந்தைசிந்த. (௱௯௮)

வந்தமந்திரியரோடுமாசறமனத்தில்எண்ணிச்
சிந்தையில்நினைந்துசெய்யும்செய்கையன்தெளிவில்நெஞ்சன்
அந்தரம்செல்வதாண்டேர்விமானத்தில்ஆரும்இன்றி
இந்திரியம்அடக்கிநின்றமாரிசன்இருக்கைசேர்ந்தான். (௱௯௯)

இருந்தமாரீசன் அந்த இராவணனெய்தலோடும்
பொருந்தியபயத்தன் சிந்தைபொருமுற்றுவெருவுகின்றான்
கருந்தடமலை அன்னானை எதிர்கொண்டுகடன்கள்யாவும்
திருந்தியசெய்து செவ்வித்திருமுகம்நோக்கிச்செப்பும். (௱௭௰)

வேறு.

சந்தமலர்த்தண் கற்பகநீழற்றலைவற்கும்
அந்தகனுக்கும் அஞ்ச அடுக்கும் அரசாள்வாய்
இந்தவனத்தென் இன்னல் இருக்கைக்கெளியோரின்
வந்தகருத்தென் சொல்லுதியென்றான் மருள்கின்றான். (௱௭௧)

ஆனதனைத்தும் ஆவிதரித்தேன் அயர்கின்றேன்
போனது பொற்பும் மேன்மையும் மற்றென்புகழோடும்
யானதுனக்கின்றெங்கன் உரைக்கென் இனிதென்னா
வானவருக்கும் நாண அடுக்கும் வசைமன்றே. (௱௭௨)

வன்மைதரித்தோர் மானிடர் மற்றங்கவர் வாளால்
நின்மருகிக்கும் நாசிஇழக்கும் நிலைநேர்ந்தார்
என்மரபுக்கும் நின்மரபுக்கும் இதன்மேலோர்
புன்மைதெரிப்பின் வேறினியெற்றே புகல்வேலோய். (௱௭௩)

திருகுசினத்தார் முதிரமலைந்தார் சிறியோர் நாள்
பருகினரென்றால் வென்றநலத்தின் பழிஅன்றோ
இருகைசுமந்தாய் இனிநின் இருந்தாய் இகல்வேல்உன்
மருகர்உலந்தார் ஒருவன்மலைந்தான் வரிவில்லால். (௱௭௪)

வெப்பழியாதென் நெஞ்சம் உலர்ந்தேன் விளிகின்றேன்
ஒப்பழிவென்றே போர்செயல்ஒல்லேன் உடன்வாழும்
துப்பழிசெவ்வாய் வஞ்சியைவவ்வத்துணைகொண்டிட்
டிப்பழிநின்னாற்றீரியவந்தேன் இவனென்றான். (௱௭௫)

இச்சொல் அனைத்தும் சொல்லிஅரக்கன் எரிகின்ற
கிச்சின் உருக்கிட்டுய்த்தனன் என்னக்கிளராமுன்
சிச்சிஎனத்தன் மெய்ச்செவி பொத்தித்தெருமந்தான்
அச்சம்அகற்றிச்செற்றமனத்தோடறைகின்றான். (௱௭௬)

மன்னா நீநின் வாழ்வைமுடித்தாய் மதிஅற்றாய்
உன்னால் அன்றீதூழ்வினைஎன்றே உணர்கின்றேன்
இன்னா நெஞ்சன் ஏனும் உரைப்பன் இதம்என்னாச்
சொன்னான் அன்றே அன்னவனுக்குத் துணிவெல்லாம். (௱௭௭)

அற்றகரத்தோடுன் தலைநெய்ச்அனல்மூன்றில்
பற்றினைஉய்த்தாய்பற்பலகாலம்பசிகூர
உற்றுயிர் உள்ளேதேயஉலந்தாய்உடைமைஅன்றோ
பெற்றனைசெல்வம்பின்னைஇகழ்ந்தாற்பெறல்ஆமோ. (௱௭௮)

திறத்திறனாலோசெய்தவம்முற்றித்திருஉற்றாய்
மறத்திறனாலோசொல்லுதிசொல்லாய்மறைவல்லோய்
அறத்திறனாலேஎய்தினைஅன்றோஅதுநீயும்
புறத்திறனாலேபின்னும்இழக்கப்புகுவாயோ. (௱௭௯)

நாரங்கொண்டார்நாடுகவர்ந்தார்நடைஅல்லா
வாரங்கொண்டார்மற்றொருவர்க்காய்மனைவாழும்
தாரங்கொண்டார்என்றிவர்தம்மைத்தருமந்தான்
இருங்கண்டாய்கண்டகர்உய்ந்தார்எவர்ஐயா. (௱அ௰)

அந்தரம்உற்றான்அகலிகைபொற்பால்அழிவுற்றான்
இந்திரன்ஒப்பார்எத்தனையோர்தாம்இழிவுற்றார்
செந்திருஒப்பார்எத்தனையோர்நின்திருஉண்பார்
மந்திரம்அற்றார்உற்றதுரைத்தாய்மதிஅற்றாய். (௱அக)

செய்தாய்என்னும்தீவினையோடும்பழிஅல்லால்
எய்தாதெய்தாதெய்தின்இராமன்உலகின்றான்
வைதால்அன்னவாளிகள்கொண்டுன்வழியோடும்
கொய்தான்அன்றேகொற்றமுடித்தன்குலம்எல்லாம். (௱அஉ)

என்றால்என்னேஎண்ணலையேநீகரன்என்பான்
நின்றானைக்கும்மேல்உளன்என்னும்நிலைஅம்மா
தன்றானைக்குற்றாரொடுமாளத்தனுஒன்றால்
கொன்றான்முற்றும்கொல்லமனத்திற்குறிகொண்டான். (௱அ௩)

வெய்யோர்யாரோவீரவிராதன்துணைவெய்யோர்
ஐயோபோனான்அந்நெறியோடும்உம்பர்க்கவன்என்றால்
உய்வார்யாரோநம்மில்எனக்கொண்டுணர்தோறும்
நையாநின்றேன்நீஇதுணர்த்துறலிவாயோ. (௱அ௪)

மாண்டார்மாண்டார்நீஇனிமாள்வார்தொழில்செய்ய
வேண்டாவேண்டாசெய்தெனில்உய்வான்விதிஉண்டோ
ஆண்டார்ஆண்டார்எத்தனைஎன்கேன்அறம்நோனார்
ஈண்டார்ஈண்டார்நின்றவர்எல்லாம்இலர்அன்றே. (௱அ௫)

எம்பிக்கும் என் அன்னைதனக்கும் இறுதிக்கோர்
அம்புய்க்கும் போர் வில்லிதனக்கும் அயல் நிற்கும்
தம்பிக்கும் நம் ஆண்மைதவிர்ந்தே செய நிற்கும்
கம்பிக்கும் என் நெஞ்சவன் என்றே கவல்கின்றேன். (௩௮௬)

நின்றும் சென்றும் வாழ்வனயாவும் நிலையாவால்
ஒன்றும் என்றும் மெய்ம்மையுணர்ந்தாம் புலையாடற்
கொன்றும் உன்றாய் என் உரைகொள்ளாய் உயர்செல்வத்
தென்றும் என்றும் வைகுதி ஐயா இனி என்றான். (௩௮௭)

வேறு.

கங்கைசடைவைத்தவனொடும் கயிலைவெற்போர்
அங்கையின் எடுத்தனதாடெழிமணித்தோள்
இங்கொர்மனிதற்கெளிய என்றனை எனத்தன்
வெங்கண் எரியப்புருவம் மீதுறவிடைத்தான். (௩௮௮)

நிகழ்ந்ததை நினைத்திலை என் நெஞ்சின் நிலை அஞ்சா
திகழ்ந்தனை எனக்கிளைய நங்கைமுகம் எங்கும்
அகழ்ந்தனைய தொப்புற அமைத்தவனை ஐயா
புகழ்ந்தனை தனிப்பிழை பொறுத்தனன் இதென்றான். (௩௮௯)

தன்னை முனிவுற்றதறு கட்டகவிலோனைப்
பின்னை முனிவுற்றிடும் எனத்தவிர்தல் பேறு
துன்னை முனிவுற்றுன குலத்தை முனிவுற்றாய்
என்னை முனிவுற்றிலை இதென்ன இசைத்தான். (௩௯௰)

எடுத்தமலையே நினையின் ஈசன் இகல்வில்லாய்
வடித்தமலையே இறுவலித்தினவாரிப்
பிடித்தமலை நாண் இடைபிடித்தொருவன் மேல்நாள்
ஒடித்தமலை உம்பர்முகடுற்றமலை அன்றே. (௩௯௧)

யாதும் அறியாய் உரைகொளாய் இகல் இராமன்
கோதைபுனையாமுன் உயிர்கொள்ளைபடும் அன்றே
பேதைமதியால் இதுஒர் பெண்உருவம் என்றாய்
சீதைஉருவோ நிருதர் தீவினையதன்றே. (௩௯௨)

உஞ்சுபிழையாய் உறவினோடும் என உன்னு
நெஞ்சுபறைபோதும் அது நீ நினையகில்லாய்
அஞ்சும் எனதாருயிர் அறிந்தருகு நின்றாய்
நஞ்சுநுகர்வாரை இது நன்றெனவும் நன்றே. (௩௯௩)

ஈசன்முதல்மற்றும் இமையோர்உலகும்மற்றைத்
தேசமுதல்முற்றும்ஓர் இமைப்பின்உயிர்தின்ப
கோசிகன் அமைத்தகடவுட்படைகொதிப்போ
டாசிலகணிப்பில இராமன் அருள்நிற்ப. (௱௯௪)

வேதனைசெய்காமவிடமேலிடமெலிந்தாய்
தீதுரைசெய்தாய் இனையசெய்கைசிதைவன்றே
மாதுலனும்ஆய்மரபின்முந்தைஉறவந்தேன்
ஈதுரைசெய்தேன் அதனைஎந்தைதவிர்கென்றான். (௱௯௫)

என்னவுரை அத்தனையும்எத்தனையும்எண்ணச்
சொன்னவனைமேயசினஅரக்கர்பதிசொன்னான்
அன்னைஉயிர்செற்றவனைஅஞ்சிஉறைகின்றாய்
உன்னைஒருவற்கொருவன்என்றுணர்கைநன்றே. (௱௯௬)

திக்கயம்ஒளிப்பநிலைதேவர்கெடவானம்
புக்கவர்இருக்கைபுகைவித்துலகம்யாவும்
சக்கரம்நடத்தும்எனையோதயரதன்தன்
மக்கள்நலிகிற்பதிறநன்றுவலிஅன்றே. (௱௯௭)

மூவுலகினுக்கும்ஒருநாயகமுடித்தேன்
மேவலர்கிடைக்கில்இதன்மேல்இனியதுண்டோ
ஏவல்செயகிற்றிலைதாணைவழிஎண்ணிக்
காவல்செய்அமைச்சர்கடன்நீகடவதுண்டோ. (௱௯௮)

மறுத்தனைஎனப்பெறினும்நின்னைவடிவாளால்
ஒறுத்துமனம்உற்றதுமுடிப்பதொழில்கல்லேன்
வெறுப்பனகிளத்தல்உறும்இத்தொழிலைவிட்டென்
குறிப்பின்வழிநிற்றிஉயிர்கொண்டுழலின்என்றான். (௱௯௯)

வேறு.

அரக்கன் அஃதுரைத்தலோடும்அறிந்தனன்அடங்கிநெஞ்சம்
தருக்கினர்கெடுவர்அன்றேதத்துவநிலைஇற்றன்றே
செருக்கினிற்றீர்தும்என்பார்தம்மின்ஆர்செருக்கர்என்று
உருக்கியசெம்பின்உற்றநீர்எனஉலாக்கல்உற்றான். (௨௱)

உன்வயின்உறுதிநோக்கிஉண்மையின்உணர்த்தினேன்மற்
றென்வயின்இறுதிநோக்கிஅச்சத்தால்இசைத்தேன்அல்லேன்
நன்மையும்தீமைஅன்றேநாசம்வந்துற்றபோது
புன்மையின்உற்றநீராய்செய்வதுபுகல்திஎன்றான். (௨௱௧)

என்றலும் மனமுழந்து புல்லிற்றிய வெகுளி நீங்கிக்
குன்றெனக் குவிந்த தோளாய் மாரவேள் கொதிக்கும் அம்பால்
பொன்றலில் இராமன் அம்பால் பொன்றலே புகழ் உண்டன்றே
தென்றலைப் புகையைச் செய்த சீதையைத் தருதி என்றான். (௨௱௨)

ஆண்டையான் அனைய கூற அரக்கர்கோன் இருவரோடும்
பூண்ட என் மானம் தீரத் தண்டகம் புக்க போழ்தில்
தூண்டிய சரங்கள் பாயத் துணைவர் பட்டுருள அஞ்சி
மீண்டயான் சென்று செய்யும் வினை என்கொல் விளம்புகென்றான். (௨௱௩)

ஆயதாங் கனைய கூற அரக்கர்கோன் ஐய நோய் தன்
தாயை ஆருயிர் உண்டானை யான் கொலச் சமைந்து நின்றேன்
போயையா புணர்ப்ப தென்னே என்பது பொருந்திற் றன்றே
மாயையால் வஞ்சித் தன்றே வவ்வுதல் அவளை என்றான். (௨௱௪)

புறத்தினி உரைப்ப தென்னே புரவலன் தேவி தன்னைத்
திறத்துழி அன்றி வஞ்சித் தெய்துதல் சிறுமைத் தாகும்
அறத்துள தொக்கு மன்றே அமர்த்தலை வென்று கொண்டுன்
மறத்துறை வளர்த்தி மன்ன என்ன மாரீசன் சொன்னான். (௨௱௫)

ஆனவன் உரைக்க நக்க அரக்கர்கோன் அவரை வெல்லத்
தானையும் வேண்டுமோ என் தடக்கை வாள் தக்க தன்றே
ஏனையர் இறக்கில் தானும் தமியளாய் இறக்கும் அன்றே
மானவள் ஆதலாலே மாயையின் வலித்தும் என்றான். (௨௱௬)

தேவியைத் தீண்டா முன்னம் இவன் தலை சரத்திற் சிந்திப்
போம் வகை புணர்ப்பன் என்று புந்தியாற் புகல்கின் றேற்கும்
ஆம் வகை ஆயிற் றில்லை யார் விதி விளைவை ஓர்வார்
ஏவது செய்வ தல்லால் இல்லையே வேறொன் றென்றெண்ணா. (௨௱௭)

என்ன மாமாயம் யான் மற்றியற்றுவ தியம்பு கென்றான்
பொன்னின் மானாகிப் புக்குப் பொன்னை மால் புணர்த்து கென்ன
அன்னது செய்வென் என்னா மாரீசன் அமைந்து போனான்
மின்னும் வேல் அரக்கர் கோனும் வேறொரு நெறியிற் போனான். (௨௱௮)

வேறு.

மேனாள் அவர் வில் வலி கண்டமையால்
தானாக அமைந்து சமைந்திலனால்
மானாகுதி என்றவன் வாய் மொழியால்
போனான் மனமும் செயலும் புகல்வாம். (௨௱௯)

வெஞ்சுற்றம் நினைந்துறும் வீரனைவே
றஞ்சுற்றமறுக்குறும் ஆழ்குழி நீர்
நஞ்சுற்றுறு மீனின் நடுக்குறுவான்
நெஞ்சுற்றதொர் பெற்றி நினைப்பரிதால். (௨௱௰)

அக்காலமும் வேள்வியின் அன்றிவனோ
டெக்காலும் நலிந்தும் ஒழிந்துபெருஞ்
மூக்காலும் முடிந்திடுவான் முயல்வான்
புக்கான் அவ் இராகவன் வைகுபுனம். (௨௧௧)

தன்மானமிலாத தயங்கொளிசால்
மின்வானமும் மண்ணும் விளங்குவதோர்
பொன்மான் உருவங்கொடு போயினனால்
நன்மான் அனையாள் தனை நாடுறுவான். (௨௧௨)

கலைமான் முதலாயின கண்டவெலாம்
அலைமானுறும் ஆசையின் வந்தனவால்
நிலையா மனவஞ்சனை நேயம் இலா
விலைமாதர்கண் யாரும் விழுந்தெனவே. (௨௧௩)

பொய்யாமெனஓர்ந்து புறஞ்சொலினால்
நையா இடைநோவ நடந்தனளால்
வைதேகி தன் வால்வளை மென்கைகளும்
கொய்யாமலரால் மலர்கொய்துறுவாள். (௨௧௪)

உண்டாகிய கேடுடையார் துயில்வாய்
எண்டாலும் இயைந்தியையா உருவம்
கண்டார் எனல் ஆம்வகை கண்டனளால்
பண்டாரும் உறா இடர்பாடுறுவாள். (௨௧௫)

காணா இது கைதவம் என்றுணராள்
பேணா நலம்கொடு பேணினளால்
வாணாளை இராவணன் மாளுதலால்
வீணாளின் அறம்புவி மேவுதலால். (௨௧௬)

நெற்றிப்பிறையாள் நுணம்தின்றிடலும்
முற்றிப்பொழிகாதலின் முந்துறுவாள்
பற்றித்தருகென்பன் எனப்பதையா
வெற்றிச்சிலைவீரனை மேவினளால். (௨௧௭)

ஆணிப்பொனின் ஆகியதாய்கதிரால்
சேணிற்சுடர்கின்றது திண்செவிகால்
மாணிக்கமயத்தொருமான் உளதால்
காணத்தகும்என்றனள்கைதொழுவாள். (உகஅ)

இம்மான் இந்நிலத்தினில் இல்லைஎனு
எம்மான் இதனைச்சிறிதெண்ணல்செயான்
செம்மானவள்சொற்கொடுதேமலரோன்
அம்மானும்அருத்தியன் ஆயினனால். (உககூ)

ஆண்டங்கிளையோன் உரையாடினனால்
வேண்டும்எனலால்விளைவன்றிதனுன்
பூண்டுஞ்சுபொலம்கொடியோய்அதுநாம்
காண்டும்எனும்வள்ளல்கருத்துணர்வான். (உஉய)

காயம்கனகம்மணிகால்செவிவால்
பாயும்உருவோடிதுபண்பெனலால்
மாயம்எனல்அன்றிமனக்கொளவே
ஏயும்இறைஐயுறவன்றளவே. (உஉக)

நில்லாஉலகின் நிலைநேர்மையினால்
வல்லாரும்உணர்ந்திலர்மன்னுயிர்தாம்
பல்லாயிரகோடிபரந்துளவால்
இல்லாதன இல்லை இளங்குமரா. (உஉஉ)

என்னென்றுநினைத்தனிழைத்துளநம்
கன்னங்களின்வேறுளகாணுதும்ஆல்
பொன்னின்ஒளிமேனிபொருந்தியஃதே
அன்னங்கள்பிறந்ததறிந்திலையோ. (உஉங)

முறையும்முடிவும்இலமொய்உயிர்என்
றிறைவன் இளையானொடியம்பினனால்
பறையுந்துணை அன்னதுபல்நெறிபோய்
மறையும்எனஎண்ணிழைவருந்தினளால். (உஉச)

வேறு.

அனையவள்கருத்தை உன்னா அஞ்சனக்குன்றம்அன்னான்
புனையிழைகாட்டதென்றபோயினன் பொருதசிந்தைக்
கனைகழற்றம்பிபின்புசென்றனன் கடிகைஒன்றா
வினைஎனவந்துநின்றமான் எதிர்விழித்ததன்றே. (உஉரு)

நோக்கியமானை நோக்கி நுதி இழை மதியின் ஒன்றும்
தூக்கிலன் நன்றிதென்றான் அதன் பொருள் சொல்லல் ஆகும்
சேக்கையின் அரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த
பாக்கியம் உடைமை அன்றோ அன்னது பழுதுபோமோ. (௨௨௬)

என்றனக்கும் என்னலாகும் இளையவ இதனை நோக்காய்
தன்றனக்கும் உவமையல்லாற் றனை ஒக்கும் உவமை உண்டோ
பன்னக்கத் தரளம் ஒக்கும் பசும்புல் மேற்படரும் மென்று
மின்றனக்கும் செம்பொன் மேனி வெள்ளியின் விளங்கும் புள்ளி. (௨௨௭)

வரிசிலை மறவலோனே மான் இதன் வடிவை உற்ற
அரிவையர் மைந்தர் யாரோ ஆதரங் கூர்கிலாதார்
உருகிய மனத்தவாகி உளர்வன பறப்ப யாவும்
விரிசுடர் விளக்கம் கண்ட விட்டில் போல் வீழ்வ காணாய். (௨௨௮)

ஆரியன் அனைய கூற அன்னது தன்னை நோக்கிச்
சீரிய தன்றிதென்று சிந்தையிற் றெளிந்த தம்பி
காரியமென்னை ஈண்டு கண்டது கனக மானால்
வேரியம் தெரியல் வீர மீள்வதே மேன்மை என்றான். (௨௨௯)

அற்றவன் பகரா முன்னம் அனகனை அழகியாளும்
கொற்றவன் மைந்த மற்றைக் குழைவுடை உழையை வல்லை
பற்றினை தருதியாயிற் பதியிடை அவதி எய்தப்
பெற்றுழி இனிதுண்டாடப் பெறற்கரும் தகைமைத்தென்றாள். (௨௩௰)

ஐய நன் மருங்கு நங்கை அஃதுரை செய்ய ஐயன்
செய்வென் என்றலைய நோக்கித் தெளிவுடைச் செம்மல் செப்பும்
வெய்ய வல் அரக்கர் வஞ்சம் விரும்பினார் வினையிற் செய்த
கைதவமான் என்றன்னல் காணுதி கடையில் என்றான். (௨௩௧)

மாய மேல் மடிவாம் அன்றே வாளியின் மடிந்தபோது
காய்சினத் தவளைக் கொன்று கடன் கழித்தோமும் ஆகும்
தூய தேற் பற்றிக் கோடும் சொல்லிய இரண்டின் ஒன்று
தீயதே உளைத்தி என்றான் தேவலா இடுக்கண் தீர்ப்பான். (௨௩௨)

பின்னின்றார் இளையர் என்றும் உணர்கிலம் பிடித்த மாயம்
என்னென்றும் தெளிதல் தேற்றும் யாவதீதென்றும் ஓராம்
முன்னின்றார் முறையின் நின்றார் முனிந்துரை வேட்டை முற்றல்
பொன்னின்ற வயிரத் தோளாய் புகழுடைத்தாம் அன்றென்றான். (௨௩௩)

பகையுடை அரக்கர் என்றும் பலர் என்றும் பயிலும் மாயம்
மிகையுடைத்தென்றும் பூண்ட விரதத்தை விடுதும் என்றால்
நகையுடைத்தாகும் அன்றே ஆதலின் நன்றிதன்று
தகையுடைத் தம்பிக்கந்நாட் சதுமுகன் தாதை சொன்னான். (௨௩௪)

அடுத்தவும் எண்ணிச் செய்தல் அண்ணலே அமைதி அன்றோ
விடுத்திதன் பின் நின்றார்கள் பலர் உளர் எனினும் வில்லால்
தொடுத்த வெம் பகழி தூவித் தொடர்ந்தனன் விரைந்து சென்று
படுக்குவன் அது அன்றாயிற் பற்றினென் கொணர்வன் என்றான். (௨௩௫)

ஆயிடை அன்னம் அன்னாள் அமுதுகுத்தனைய செய்ய
வாயிடை மழலையின் சொற் கிளியினிற் குழறி மாழ்கி
நாயக நீயே பற்றி நல்கலை போலும் என்னாச்
சேயரிக் குவளை முத்தம் சிந்துபு சிதறிப் போனாள். (௨௩௬)

போனவள் புலவி நோக்கிப் புரவலன் பொலன் கொள் தாராய்
மானிது நானே பற்றி வல்லையின் வருவன் அன்றே
கானியல் மயில் அன்னானைக் காத்தனை இருத்தி என்னா
வேனகு சரமும் வில்லும் வாங்கினன் விரையல் உற்றான். (௨௩௭)

முன்னரும் மகவாய் வந்த மூவரில் ஒருவன் போனான்
அன்ன மாரீசன் என்றே அயிர்த்தனன் இதனை ஐய
இன்னமும் காண்டி வாழி என்னா இருகை கூப்பிப்
பொன்னனாள் புக்க சாலை காத்தனன் புறத்து நின்றே. (௨௩௮)

மந்திரத்திளையோன் சொன்ன வாய்மொழி மனத்துக் கொள்ளான்
சந்திரற் குவமை சான்ற வதனத்தாள் சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய் முறுவலன் சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளினான் அம்மானினைத் தொடரல் உற்றான். (௨௩௯)

பிதிர்த்தது மெல்ல மெல்ல வெறித்தது வெருவி மீதிற்
குதித்தது செவியை நீட்டிக் குரபதம் உரத்தைக் கூட்டி
உதித்தெழும் ஊதை உள்ளம் என்றிலவ உருவச் செல்லும்
கதிக்கொரு கல்வி வேறே காட்டிய தொத்ததன்றே. (௨௪௰)

நீட்டினான் உலகம் மூன்றும் நின்றெடுத்தளந்த பாதம்
மீட்டுநாம் உரைத்தநீசம் மாவேறும் ஏழ் அண்டம் உண்டோ
ஓட்டினான் தொடர்ந்ததன்னை ஒழிவற நிறைந்ததன்மை
காட்டினான் அன்றி அன்றக் கடுமையார் கணிக்கற்பாலார். (௨௪௧)

குன்றிடைஇவரும்மேகக்குழுவிடைகுதிக்கும்கூடச்
சென்றிடின்அகலும்தாழிற்றீண்டலாம்தகைமைத்தாகும்
நின்றதேபோலநீங்கும்நிதிவழிநேயம்நீட்டும்
மன்றல்அம்கோதைமாதர்மனம்எனப்போயிற்றம்மா. (௨௬௨)

காயம்வேறாகிச்செய்யும்கருமம்வேறாகிற்றன்றே
ஏயுமேஎன்னின்முன்னம்எண்ணமேஇளவற்குண்டே
ஆயுமேல்உறுதல்செல்லாஅரக்கரானவர்கள்செய்த
மாயமேஆயதேநான்வருந்தியதென்றான்வள்ளல். (௨௬௩)

வேறு.

பற்றுவான்இனிஅல்லன்பகழியால்
செற்றுவானிற்செலுத்தல்உற்றான்என
மற்றமாயஅரக்கன்மனக்கொளா
உற்றவேகத்தின்உம்பரின்ஓங்கினான். (௨௬௪)

அக்கணத்தினில்ஐயனும்வெய்யதன்
சக்கரத்திற்றகைவரிதாயதோர்
செக்கர்மேனிப்பகழிசெலுத்தினான்
புக்கதேயம்புக்கின்னுயிர்போகவே. (௨௬௫)

நெட்டிலைச்சரம்வஞ்சனைநெஞ்சுறப்
பட்டதப்பொழுதேபகுவாயினால்
அட்டதிக்கினும்அப்புறமும்புக
விட்டழைத்தொருகுன்றெனவீழ்ந்தனன். (௨௬௬)

வெய்யவன்தன்உருவொடுவீழ்தலும்
செய்யதன்றெனச்செப்பியதம்பியை
ஐயன்வல்லன்என்ஆர்உயிர்வல்லன்நான்
உய்யவந்தவன்வல்லன்என்றுன்னினான். (௨௬௭)

ஆசைநீளத்தாற்றினன்வீழ்ந்தஅந்
நீசன்மேனியைநின்றுடன்நோக்கினான்
மாசில்மாதவன்வேள்வியில்வந்தமா
ரீசனேஇவன்என்பதும்தேறினான். (௨௬௮)

உழைத்தவாளிஉரம்புகப்புல்லியோன்
இழைத்தமாயையின்என்குரலால்இசைத்
தழைத்ததுண்டதுகேட்டயர்வெய்துமால்
மழைக்கண்ஏழைஎன்றுள்ளம்வருந்தினான். (௨௬௯)

மாற்றம்இன்னதுமாயமாரீசன் என்
றேற்றம்முன் உணர்ந்தான் எனின் என்னுடை
ஆற்றல்தேரும் அறிவினன் ஆதலால்
தேற்றுமால் இளையோன் எனத்தேறினான். (௨௫௰)

மாள்வதேபொருளாகவந்தான் அலன்
சூள்வதோர்பொருள் உண்டிவன்சொல்லினால்
மூள்வதேதம் அதுமுடியாமுனம்
மீள்வதேநலன்என்றவன்மீண்டனன். (௨௫௧)

௮ - வது. மாரீசன்வதைப்படலம்முற்றும். ஆ. திருவிருத்தம் [௮௱௭]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௯ - வது. சடாயுவதைப்படலம்.

சங்கடுத்ததனிக்கடல்மேனியார்க்
கங்கடுத்தநிலைமை அறைந்தனம்
கொங்கடுத்தமலர்க்குழற்கொம்பனாட்
கிங்கடுத்ததகைமை இயம்புவாம். (௧)

எயிறலைத்தமுழைதிறந்தேங்கிய
செயிர்தலைக்கொண்டசொற்செவிசேர்தலும்
குயிறலத்திடையுற்றதோர்கொள்கையாள்
வயிறலைத்துவிழுந்துமயங்கினாள். (௨)

பிடித்துநல்கிவ்உழையெனப்பேதையேன்
முடித்தனன்முதல்வாழ்வெனமொய்குழல்
கொடிப்படிந்ததெனநெடுங்கோள் அரா
இடிக்குடைந்ததெனப்புரண்டேங்கினாள். (௩)

குற்றம்வீய்ந்தகுணத்தின் எம்கோமகன்
மற்றைவாளரக்கன்புரிமாயையால்
இற்றுவீய்ந்தனன் என்னவும் என் அயல்
நிற்றியோ இளையோய் ஒருநீ என்றாள். (௪)

வேறு.

எண்மையார் உலகினின் இராமற்கேற்றம்ஓர்
திண்மையார் உளர் எனச்செப்பற்பாலதோ
பெண்மையால் உரைசெயப்பெறுதிரால் என
உண்மையான் அனையவட்குணரக்கூறினான். (௫)

ஏழுமேகடலுலகேழும்ஏழுமே
சூழுமேழ்மலைஅவைதொடர்ந்தசூழல்வாய்
வாழுமேமழையர்சிறுவலிக்குவாரமர்
தாழுமேஇராகவன்தனிமைமதையலீர். (௬)

பாரொனக்கனல்எனப்புனல்எனப்பகர்
பேரொனத்திசையெனமுனியிற்பெருமால்
காரொனக்கரியஅக்கமலக்கண்ணனே
யாரொனக்கருதிஇவ்இடரின்ஆழ்கின்றீர். (௭)

இடைந்துபோய்த்திரிசிரற்கிராமன்எவ்வம்வந்
தடைந்தபோதழைக்குமேஅழைக்குமாம்எனின்
மிடைந்தபோரண்டங்கள்மேலகீழன
உடைந்துபோம்அயன்முதல்உயிரும்தீயுமால். (௮)

மாற்றம்என்பகர்வதுமண்ணும்வானமும்
போற்றவன்திரிபுரம்எரித்தபுங்கவன்
ஏற்றிநின்றெய்தவில்லிற்றதெம்பிரான்
ஆற்றலின்அமைவதோர்ஆற்றல்உண்மையோ. (௯)

காவலன்இன்றும்நீர்கருதிற்றெய்துமேல்
மூவகைஉலகமும்முடியும்முந்துற
தேவரும்முனிவரும்முதலசெவ்வியோர்
எவரும்வீய்ந்துளார்அறமும்எஞ்சுமால். (௰)

பரக்கஎன்பகர்வதுபகழியண்ணவன்
துரக்கஅங்கதுபட்டதொலைந்துசோர்கின்ற
அரக்கன்அவ்உரைஎடுத்தரற்றினன்அதற்
கிரக்கம்உற்றிரங்கலிர்இருந்திர்இன்றென்றான். (௧௧)

என்றவன்இயம்பலும்எடுத்தசீற்றத்தள்
கொன்றனஇன்னலள்கொதிக்கும்உள்ளத்தள்
நின்றநின்நிலைஇதுநெறியிற்றன்றெனா
வன்றறுகண்ணினள்வயிர்த்துக்கூறுவாள். (௧௨)

ஒருபகல்பழகினோர்உயிரைஈவரால்
பெருமகன்உலைவுறப்பெற்றிகேட்டும்நீ
வெருவலைநின்றனைவேறென்யான்இனி
எரியிடைவீழ்ந்துயிர்இறப்பன்இன்றென. (௧௩)

தாமரைவனத்திடை தாவும் அன்னம்போல்
தாமவெங்காட்டிடைத் தொடர்கின்றாள் தனைச்
சேமவிற்குமரனும் விலக்கிச் சீறடிப்
பூமகணொந்திடலம் புலவிச் சொல்லுவான். (௧௪)

துஞ்சுவதென்னை நீர் சொன்ன சொல்லையான்
அஞ்சுவன் மறுக்கிலேன் அவலம் தீர்ந்தினி
இஞ்சிரும் அடியனேன் ஏங்குகின்றனன்
வெஞ்சின விதியினை வெல்லவல்லமோ. (௧௫)

போகின்றேன் அடியனேன் பொருந்திவந்துகே
டாகின்றதாசன் தன் ஆணை நீர் மறுத்
தேகின் நீர் இருக்கின் நீர் தமியள் என்றுபின்
வேகின்றசிந்தையான் விடைகொண்டேகினான். (௧௬)

இருப்பனேல் எரியிடை இறப்பரால் இவர்
பொருப்பனையாய் இடைபோவனே எனில்
அருப்பயில் கேடுவந்தடையும் ஆருயிர்
விருப்பனேற்கென் செயல் என்று விம்மினான். (௧௭)

அறந்தனக்கு அழிவிலாதாகின் ஆக்கலாம்
இறந்துபாடவர்க்குறும் இதனின் இவ்வழி
துறந்துபோம் இதனையே துணிவன் தொல்வினைப்
பிறந்துபோந்திதுபடும் பேதையேன் எனா. (௧௮)

போவதுபுரிவன் நான் புகுந்ததுண்டெனில்
காவல்செய் எருவையின் தலைவன் கண்ணுறும்
ஆவதுகாக்கும் என்றறிவித் தவ்வழி
தேவர்செய் தவத்திறற்செம்மல் ஏகினான். (௧௯)

இளையவன் ஏகலும் இறவுபார்க்கின்ற
வளையெயிற்றிராவணன் வஞ்சம் முற்றுவான்
முளைவரித்தண்டொரு மூன்றும் முப்பகைத்
தளை அரி தவத்தவர் வடிவம் தாங்கினான். (௨௰)

ஊணிலனும் என உலர்ந்த மேனியன்
சேணெறிவந்ததோர் வருத்தச் செய்கையன்
பாணியின் நடத்திடைப் படிக்கின்றான் என
வீணையின் இசைபடவே தம்பாடுவான். (௨௧)

பூப்பொதி அவிழ்ந்தன நடையன் பூதலம்
தீப்பொதிந்தாமென மிதிக்கும் செய்கையன்
காப்பரும் நடுக்குறும் காலன் கையினன்
மூப்பெனும் பருவமும் முனியமுற்றினான். (௨௨)

தாமரைக் கண்ணொடே தவத்தின் மாலையன்
ஆமையின் இருக்கையன் வளைந்த ஆக்கையன்
நாமநூல்யார்பினம் நணுகினான் அரோ
தூமனத் தருந்ததி இருந்த சூழல்வாய். (௨௩)

தோமறு சாலையின் வாயில் துன்னினான்
நாமுதற் குழறிட நடுங்குப் சொல்லினான்
யாவர் இவ் இருக்கையுள் இருந்துளீர் என்றான்
தேவரும் மருள்கொளத் தெரிந்த மேனியான். (௨௪)

தோகையும் இவ்வழித் தோயில் சிந்தனைச்
சேகறு நோன்பினர் என்னுஞ் சிந்தையாள்
பாகியல் கிளவியாள் பவளக் கொம்பர் போன்
றேகுமின் இன்னென எதிர்வந்தெய்தினாள். (௨௫)

வெற்பிடை மதம்என வெயர்க்கும் மேனியன்
அற்பின் நற்றிரைப்புரள் ஆசை வேலையன்
பொற்பினுக் கணியினைப் புகழின் சேக்கையைக்
கற்பினுக் கரசியைக் கண்ணில் நோக்கினான். (௨௬)

தூங்கலில் உருவினைச் சொல்லின் உம்பரும்
ஓங்கிய அழகினாள் உருவம் காண்டலும்
ஏங்கினன் மனநிலை யாதென் றுன்னுவாம்
வீங்கின மெலிந்தன விரதத் தோள்களே. (௨௭)

புனமயிற் சாயலின் எழிலிற் பூநறைச்
சுனைமடுத் துண்டிசை முரலும் தும்பியின்
இனமெனக் களித்துள தென்ப தென் அவன்
மனமெனக் களித்தன கண்ணின் மாலையே. (௨௮)

செயிதழ்த் தாமரைச் சேக்கை நீர்த்திவண்
மேயவள் மணிநிற மேனி காணுதற்
கேயுமே இரு[illegible]திங்கிளைமைப்பில் நாட்டங்கள்
ஆயிரம் இல்லையென் றல்லல் எய்தினான். (௨௯)

அரைகடைஇட்டமூக்கோடிஆயுவும்
புரைதபுதவத்தில்யான்படைத்தபோதுமே
நிரைவளைமுன்கையின்நின்றநங்கையின்
கரைஅறுநல்நலக்கடற்கென்றுன்னினான். (௫௰)

தேவரும்அவுணரும்தேவிமாரொடும்
கூவல்செய்தொழிலினர்குடிமைசெய்திட
மூவுலகமும்இவர்முறையின்ஆளயான்
ஏவல்செய்துய்குவன்இனிஎன்றுன்னினான். (௫௧)

உளைவுறுதுயர்முகத்தொளிஇதாம்எனின்
முளைஎயிறிலங்கிடும்முறுவல்என்படும்
தளைஅவிழ்குழல்இவட்கண்டுதந்தவென்
இளையவட்களிப்பன்என்அரசென்றெண்ணினான். (௫௨)

ஆண்டையான்அனையனஉன்னிஆசைமேல்
மூண்டெழுசிந்தனைமுறையிலோன்தனைக்
காண்டலும்கண்ணின்நீர்துடைத்தகற்பினாள்
ஈண்டெழுந்தருளும்என்றினையகூறினாள். (௫௩)

ஏத்தினள்எய்தலும்இருத்திர்ஈண்டென
வேத்திரத்தாசனம்விதியின்நல்கினாள்
மாத்திரிதண்டயல்வைத்தவஞ்சனும்
பூத்தொடர்சாலையின்இருந்தபோழ்தினே. (௫௪)

நடுங்கினமலைகளும்மரனும்நாஅவிந்
தடங்கினபறவையும்விலங்கும்அஞ்சின
படங்குறைந்தொதுங்கினபாம்பும்பாதகக்
கடுந்தொழில்அரக்கனைக்காணும்கண்ணினே. (௫௫)

இருந்தவன்யாவதிவ்இருக்கைஇங்குறை
அருந்தவன்யாவன்நீர்யாரைஎன்றலும்
விருந்தினர்இவ்வழிவிரகிலார்எனப்
பெருந்தடங்கண்ணவள்பேசல்மேயினாள். (௫௬)

தயரதன்தொல்குலத்தலைவன்தம்பியோ
டுயர்குலத்தன்னைசொல்உச்சிஏந்தினான்
அயர்விலதிவ்வழிஉறையும்அன்னவன்
பெயரினைத்தெரிகுதிர்பெருமையீர்என்றாள். (௫௭)

கேட்டனன்கண்டிலன்கெழுவுகங்கைநீர்
நாட்டிடைஒருவனைநண்ணினேன்மலர்
வாட்டடங்கண்ணினீர்யாவன்மாமகள்
காட்டிடைஅரும்பகல்கழிக்கின்றீர்என்றான். (௫௮)

அனகமாம்நெறிபடர்அடிகள்நும்மலால்
நினைவதோர்தெய்வமேயிலாதநெஞ்சினன்
சனகன்மாமகள்பெயர்சனகிகாகுத்தன்
மனைவியான்என்றனள்மறுவில்கற்பினாள். (௫௯)

அவ்வழிஅனையனஉணர்ந்தஆயிழை
வெவ்வழிவருந்தினீர்விளைந்தழப்பினீர்
இவ்வழிஇருவினைகடக்கஎண்ணினீர்
எவ்வழிநின்றும்இங்கெய்தினீர்என்றாள். (௬௰)

இந்திரற்கிந்திரன்எழுதலாகலாச்
சுந்தரன்நான்முகன்மரபிற்றோன்றினான்
அந்தரத்தோடுமெவ்வுலகும்ஆள்கின்றான்
மந்திரத்தருமறைவைகும்நாவினான். (௬௧)

ஈசன்ஆண்டிருந்தபேர்இலங்குமால்வரை
ஊசிவேரொடும்பறித்தெடுக்கும்ஊற்றத்தான்
ஆசைகள்சுமந்தபேர்அளவில்யானைகள்
பூசல்செய்மருப்பினைப்பொடிசெய்தோளினான். (௬௨)

நிற்பவர்கடைத்தலைநிறைந்ததேவரே
சொற்பகும்மற்றவன்பெருமைசொல்லுங்கால்
கற்பகமுதலியநிதியம்கையன
பொற்பகம்மானநீர்இலங்கைப்பொன்நகர். (௬௩)

ஏனைதிலோத்தமைமுதலேழையர்
வானகம்துறந்துவந்தவன்தன்மாட்சியால்
ஊனமில்அடைப்பைகால்வருடல்ஒண்செருப்
பானவைமுதற்றொழில்அவரதாகுமே. (௬௪)

சந்திரன்இரவிஎன்பவர்கள்தாம்அவன்
சிந்தனைவழிநின்றுதிரிவர்தேசுடை
இந்திரன்முதலியஅமரர்ஈண்டஅக்
கந்தடுகோயிலின்காவலாளரே. (௬௫)

பொன்னகரத்தினும் பொலன்கொள் நாகர்தம்
தொன்னகரத்தினும் தொடர்ந்த மாநிலத்
தென்னகரத்தினும் இனிய ஈண்டவன்
நன்னகரத்தன நவை இலாதன. (௪௬)

தாளுடைமலருளான் தந்த அந்தமில்
நாளுடைவாழ்க்கையன் நாரியாகத்தன்
வாளுடைத்தடக்கையன் வாரிவைத்தவெங்
கோளுடைச்சிறையினன் குணங்கள் மேயினான். (௪௭)

வெம்மைதீர் ஒழுக்கினன் விரிந்தகேள்வியன்
செம்மையோன் மன்மதன் திசைக்கும் செவ்வியன்
எம்மையோர் அனைவரும் இறைவர் என்றெனும்
மும்மையோர் பெருமையும் முற்றும் பெற்றியான். (௪௮)

அனைத்துலகினும் அழகமைந்த நங்கையர்
எனைப்பலர் அவன்தனதருளின் இச்சையோர்
நினைத்தவர் உருகவும் உதவநேர்கிலன்
மனக்கினியாள் ஒருமாதை நாடுவான். (௪௯)

ஆண்டையான் அரசுவீற்றிருந்த அந்நகர்
வேண்டியான் சிலபகல் உறைய வேண்டினேன்
நீண்டனன் இருந்தவற்பிரிந்த நெஞ்சினேன்
மீண்டனன் என்றனன் வினையப் உன்னுவான். (௫௰)

வேதமும் வேதியர் அருளும் வெஃகலாச்
சேதனை மன்னுயிர் தின்னும் தீவினைப்
பாதக அரக்கர் தம்பதியின் வைகுதற்
கேதுஎன் உடலுடம்பிலைக என்றெண்ணுவீர். (௫௧)

வனத்திடைமாதவர் மருங்குவைகலீர்
புனத்திருநாட்டிடைப் புனிதர் ஊர்புக
நினைத்திலீர் அறநெறி நினைக்கிலாதவர்
இனத்திடை வைகினீர் என்செய்தீர் என்றாள். (௫௨)

வேறு.

மங்கையஃதுரைத்தல் கேட்ட வரம்பிலான் மறுவிற்றீர்ந்தார்
வெங்கண்வாள் அரக்கர் என்னை வெருவலிர் மெய்ம்மை நோக்கில்
திங்கள்வாண் முகத்தினாளே தேவிர்தீயர் அன்றே
எங்கள் போலியர்க்கு நல்லார் திருத்தரோ போலும் என்றான். (௫௩)

சேயிழை அன்னசொல்லத்தீயவற்சேர்தல்செய்தார்
தூயவர் அல்லர்சொல்லிற்றொன்னெறிதொடர்ந்தோர்என்றாள்
மாயவல்அரக்கர்வல்லர்வேண்டுருவரிக்கஎன்ப
தாயவள்அறிதல்தேற்றாள் ஆதலின் அயல்ஒன்றெண்ணாள். (௫௪)

அயிர்த்தனள் ஆகும்என்றோர் ஐயுறவகத்துக்கொண்டான்.
பெயர்த்ததுதொடைக்களண்ணல்பிறிதுறப்பேசலுற்றான்
மயக்கரும்உலகம்மூன்றின்வாழ்பவர்க்கணையவல்லோர்
இயற்கையிற்றிரியின்அல்லால்இயற்றலாம்நெறிஎன்என்றான். (௫௫)

திறந்தெரிவஞ்சன்அச்சொற்செப்பலும்செப்பமிக்காள்
அறந்தருவள்ளல்ஈண்டிங்கருந்தவம்முயலும்நாளுள்
மறந்தலைதிரிந்தவாழ்க்கைஅரக்கர்தம்வருக்கத்தோடும்
இறந்தனர்முடிவர்பின்னர்இடர்இலைஉலகம்என்றாள். (௫௬)

மானவள்உரைத்தலோடும்மானிடர்அரக்கர்தம்மை
மீனெனமிளிருங்கண்ணாய்வேர்அறவெல்வர்என்னின்
யானையின்இனத்தைஎல்லாம்இளமுயல்கொல்லும்பின்னும்
கூனுகிர்மடங்கல்ஏற்றைக்குருளைமான்கொல்லும்என்றான். (௫௭)

மின்திரண்டனையபங்கிவிராதனும்வெகுளிபொங்கக்
கன்றியமனத்துவென்றிக்கரன்முதற்கணக்கிலோரும்
பொன்றியபூசல்ஒன்றும்கேட்டிலிர்போலும்என்றாள்
அன்றவர்க்கடுத்ததுன்னிமழைக்கண்நீர்அருவிசோர்வாள். (௫௮)

வாளரிவள்ளல்தன்னால்இலங்கைமாநிருதர்எல்லாம்
கேளொடுமடியும்ஆறும்வானவர்கிளரும்ஆறும்
நாளையேகாண்டிர்அன்றேநவைஇலிர்உணர்கிலீரோ
மீளருந்தருமம்தன்னைவெல்லுமோபாவம்என்றாள். (௫௯)

தேனிடைஅமுதளாயவன்னமென்கிலசொல்மாலை
தானுடைச்செவிகளூடுதவழ்உறத்தளிர்த்துவீங்கும்
ஊனுடைஉடம்பின்நாணும்உருகெழுமானம்ஊன்ற
மானிடர்வலியர்என்றமாற்றத்தாற்சீற்றம்வைத்தான். (௬௰)

சீறினன்உரைசெய்வான்அச்சிலைவலிப்புல்லியோர்கட்
கீறுறுமனிதன்செய்தான்[illegible]ன்றெடுத்தியம்பினையேல்
தேறுதிநாளையேஅவ்இருபதுதிண்டோள்வாடை
வீறியபொழுதுபூளைவீஎனவீவர்அன்றே. (௬௧)

மேருவைப்பறிக்கவேண்டில்விண்ணினைஇடிக்கவேண்டில்
நீரினைக்கலக்கவேண்டில்நெருப்பினைஅவிக்கவேண்டில்
பாரினைஎடுக்கவேண்டில்பலவினைச்சிலசொல்லுவாய்
யாரெனக்கருதிச்சொன்னாய்இராவணற்கரிதென்என்றான். (௬௨)

ஆண்டருதிரள்தோள்சாலஉளவெனில்ஆற்றல்உண்டோ
கரண்டநீர்இலங்கைவேந்தைச்சிறைவைத்தகழற்கால்வீரன்
திரண்டதோள்வனத்தைஎல்லாம்சிறியதோர்பருவந்தன்னில்
இரண்டுதோள்ஒருவன்அன்றேமழுவினால்எறிந்தான்என்றாள். ௬௩

என்றிவள்உரைத்தலோடும்எரிந்தனநயனம்திக்கித்
சென்றனதிரள்தோள்வானம்தீண்டினமகுடம்திண்கை
ஒன்றொடொன்றடித்தமேகத்துருமெனஎயிற்றின்ஒளி
மென்றனவெகுளிபொங்கவிட்டதுமாயவேடம். (௬௪)

இருவினைதுறந்தமேலோர்அல்லர்கொல்இவர்என்றெண்ணி
அரிவையும்ஐயம்எய்தாஆர்இவர்தாம்என்றென்றும்
தெரிவரும்நிலையதாயத்தீவிடத்தரவம்தானே
உருக்கெழுசீற்றம்பொங்கிப்பணம்விரித்துயர்ந்ததொத்தான். (௬௫

ஆற்றவெந்துயரத்தன்னுள்ஆண்டுற்றஅலக்கண்நோக்கின்
ஏற்றம்என்நினைக்கலாகும்எதிர்எடுத்தியம்பலாகும்
மாற்றம்ஒன்றில்லைச்செய்யும்வினைஇல்லைவரிக்கலாகா
கூற்றம்வந்துற்றகாலத்துயிர்எனக்குலைவுகொண்டாள். (௬௬)

விண்ணவர்ஏவல்செய்யவென்றஎன்வீரம்பாராய்
மண்ணிடைப்புழுவில்வாழும்மானிடர்வலியர்என்றாய்
பெண்ணெனப்பிழைத்தாய்அன்றேல்உன்னையான்பிசைந்துதின்ன
எண்ணுவன்எண்ணிற்பின்னைஎன்உயிர்இழப்பன்என்றான். (௬௭)

குலவுறல்அன்னம்முன்னம்யானையும்கும்பிடாஎன்
தலைமிசைமகுடம்என்னத்தனித்தனிஇனிதுதாங்கி
அலகில்பூண்அரம்பைமாதர்அடிமுறைஏவல்செய்ய
உலகம்ஓர்ஏழும்ஆளும்செல்வத்துள்உறைதிஎன்றான். (௬௮)

செவிகளைத்தளிர்க்கையாலேசிக்குறச்சேமம்செய்தாள்
கவினும்வெஞ்சிலைக்கைவென்றிக்காகுத்தன்கற்பினேனைப்
புலிஇடைஒழுக்கம்நோக்காய்பொங்கெரிப்புனிதர்ஈயும்
அவியைநாய்வேட்டதென்னஎன்சொன்னாய்அரக்கஎன்றாள். (௬௯)

புன்றுணை நீரின் நொய்தாய்ப் போதமே புரிந்து நின்ற
இன்னுயிர் இழத்தல் அஞ்சி இற்பிறப் பழிதல் உண்டே
மின்னுயிர்த் தருமிந்சீறுடம்பெங் கணைவிரவா றுன்னம்
உன்னுயிர்க் குறுதி நோக்கி ஒளித்தியால் ஒழிஎன்றாள். (௭௰)

என்றவள் உரைக்க நின்ற இரக்கம் இல் அரக்கன் எய்த
உன்றுணைக் கணவன் அட்டவ் உயர்திசை கடந்த ஒங்கல்
வன்றிறல் மருப்பின் ஆற்றல் மடுத்த என் மார்பின் வந்தாற்
குன்றிடை தொடுத்துவிட்ட பூங்கணை கொல்லதென்றான். (௭௧)

அணங்கினுக் கணங்களே ஆசைநோய் அகத்துப் பொங்க
உணங்கிய உடம்பினேனுக் குயிரினை உதவி உம்பர்
கணங்குழை மகளிர்க் கெல்லாம் பெரும்பதம் கைக்கொள் என்று
வணங்கினன் உலகம் தாங்கும் மலையினும் வலிய தோளான். (௭௨)

வேறு.

துறைவாய் அவன் வந்தடி தாழ்தலும்
கறைவாள் பட ஆவி கலங்கினள் போல்
இறைவா தினையோய் என ஏங்கினளால்
பொறைதான் உயிர் போவது போற் புகல்வாள். (௭௩)

ஆண்டாயிடை நீயவன் ஆயிழையைத்
தீண்டாதெனும் மேலுரை சிந்தை செயத்
தூண்டா நெடுவான் உயர் தோள்வலியாற்
கீண்டான் நிலம் யோசனை கீழொடு மேல். (௭௪)

கொண்டான் உயர் தேர்மிசை கோல்வளையாள்
கண்டாள் தன தாருயிர் கண்டிலளால்
மண்டான் உறும் மின்னின் மயங்கினளால்
விண்டான் வழியாய் எழுவான் விரைவான். (௭௫)

விடுதேர் என வெங்கனல் வெந்தழியும்
கொடிபோற் புரள்வாள் குலைவாள் அயர்வாள்
துடியா விழுவாள் துயரால் எழுவாள்
கடிதாய் அறனே இதுகா எனுமால். (௭௬)

மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா உயிரோ நிலைதேறினர் போய்
உலையா வலியாருழை நீர் உரையீர். (௭௭)

செஞ்சேவகனார் நிலை நீர் தெரிவீர்
மஞ்சேய்பொழிலேவன் தேவதைகாள்
அஞ்சேல்என நல்குதிரேல் அடியேன்
உஞ்சால் அதுதான் இழிவோ உரையீர். (௭௮)

நிருதாதியர் வேர்அற நீள்முகில்போல்
சரதாரைகள் வீசினிர் சார்கிலிரோ
வரதா இளையோய் மறுத்துயிலாப்
பரதா இளையோய்ப் பிழை பூணுதிரோ. (௭௯)

கோதாவிரியே குளிர்வாய்க் குழைவாய்
மாதா வனையாய் மனனே தெளிவாய்
ஓதாதுணர்வார் உழைஓடினை போய்
நீதான் வினையேன் நிலை சொல்லலையோ. (௮௰)

மூந்துஞ்சினைகாள் முழைவாழ் அரிகாள்
இந்தந் நிலையேனுடுமேன் படுத்தகை நா
ளைந்தும் தலைபத்தும் அலைத்துலையச்
சிந்தும்படி கண்டு சிரித்திடுவீர். (௮௧)

வேறு.

என்றின்ன பலவும் பன்னி இரியல் உற்றாற்றுவாளைப்
பொன்றுன்று புணர் மென்கொங்கைப் பொலன் குழாய் போரில் என்னைக்
கொன்றன்னை மீட்பர் கொல்லம் மானிடர் கொள்கலன்று
வன்றின்மை எந்தூற்றக்கான் வாழ்க்கை நாள் வழிதலீழ்வான். (௮௨)

வாக்கினால் அன்னான் சொல் மாயையால் வஞ்சமான் ஒன்
றாக்கினாய் ஆக்கி உன்னை ஆருயிர் உண்ணுங்கூற்றைப்
போக்கினாய்ப் புகுந்து கொண்டு போகின்றாய் பொருதாள் நின்னைக்
காக்குமா காண்டியாயில் கடவல் உன் தேனான் என்றாள். (௮௩)

மீட்டும் ஒன்றுரை செய்வாள் நீவிரனேல் வினாவில் மற்றுன்
கூட்டராம் அரக்கர் தம்மைக் கொன்றுங்கை கொங்கையுழக்கும்
வாட்டினார் வனத்தில் உள்ளார் மானிடர் என்றவார்த்தை
கேட்டிலையிம் மாயம் செய்த தச்சத்தினிலென்ர்ச்சி அன்றே. (௮௪)

மொழிதரும் அன்றில் நங்கை கேள் இதுமரணியியாக்கை
இழிதருமனிதரோடேயான் செருள் தீபன்னவில்(?)ல்
விழிதரும் நெற்றியான் தன் வெள்ளி வெற்பெடுத்த தோட்குப்
பழிதரும் அதனிற் சாலப்பயன்தரும் வஞ்சம் என்றான். (௮௫)

யாவையும் அதனைக் கேளாத் தங்குலப் பகைஞர் தம்பால்
போவது குற்றம் வாளிற் பொருவது நாணம் போலாம்
ஆவது கற்பினாளை வஞ்சிக்கும் ஆற்றலேயாம்
ஏவம் என்பழி தான் என்னை இரககயில் அரக்கர்க்கென்றாள். (௮௬)

என்னும் அவ்வேலையின்கண் எங்கடா போவதென்றா
நின்னிவென்றிடித்த சொல்லன் நெருப்பிடைபரப்புங் கண்ணன்
மின்னென விளங்கும் வீரத் துண்டத்தன் மேருவென்னும்
பொன்னெடுங்குன்றம் வானில் வருவதே போலும் மெய்யான். (௮௭)

பாழிவன்கிரிகள் எல்லாம் பறித்தெழுந்தோன்றொடொன்று
பூழியின் உதிர விண்ணில் புடையுறக் கிளர்ந்து பொங்கி
ஆழியும் உலகும் ஒன்றாய் அழிதரூஉ முழுதும் வீசும்
ஊழிவெங்காற்றிதென்ன இருசிறை உளைத மோத. (௮௮)

வேறு.

சாகைவன் தலையொடு மரமும் தாழமேல்
மேகமும் விண்ணின் மீச்செல்ல மீமிசை
மாகவெங் கலுழன் ஆம் வருகின்றான் என
நாகமும் படம் ஒளித்தொதுங்கி நையவே. (௮௯)

யானையும் யாளியும் முதலயாவையும்
கானொடு மரத்தொடு தூறு கல் இவை
மேனிறைந்திருசிறை வீச்சின் ஏறலால்
வானமும் கானமும் மாறுகொண்டவே. (௯௰)

உத்தமன் தேவியை உலகொடோங்கு தேர்
வைத்தனைக் குவடெங்குவானிலோ
டித்தனி திசையையும் மறைப்பன் இன்றெனப்
பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினான். (௯௧)

வந்தனன் எருவையின் மன்னன் மாண்பிலான்
எந்திரத் தேர் செலவொழிக்கும் எண்ணினான்
சிந்துரக்கால் சிரம் செக்கர் சூடிய
கந்தரக் கயிலையை நிகர்க்கும் காட்சியான். (௯௨)

வேறு.

ஆண்டுற்ற அணங்கினை அஞ்சல் என்றுத்
தீண்டுற்றிலன் என்றுணர் சிந்தையினான்
மூண்டுற்றெழு வெங்கதம் முற்றிலனால்
மீண்டுற்றுரையாடலை மேயினனால். (௯௩)

கெட்டாய்கிளையோடும்நின்வாழ்வையெலாம்
சுட்டாய் இதுஎன்னதொடங்கினைநீ
பட்டாயெனவேகொடுபத்தினியை
விட்டேகுதியால்விளிகின்றிலையால். (௧௪)

பேதாய்பிழைசெய்தனைபேருலகில்
மாதாஅனையாளைமனக்கொடுநீ
யாதாகநினைத்தனைஎண்ணம்இலாய்
ஆதாரம்நினக்கினியாருளரோ. (௧௫)

உய்யாமல்மலைந்துமர்ஆருயிரை
மெய்யாகஇராமன்விருந்திடவே
கையாரமுகந்துகொடுந்தகனர்
ஐயாபுதிதுண்டதறிந்திலையோ. (௧௬)

கொடுவெங்கரிகொல்லியவந்ததன்மேல்
விடும்உண்டைகடாவவிரும்பினையே
அடுமென்பதுணர்ந்திலையாயினும்வன்
கடுஉண்டுயிரின்நிலைகாணுதியோ. (௧௭)

எல்லாஉலகங்களும்இந்திரனும்
அல்லாதவர்மூவரும்அந்தகனும்
புல்வாய்புலிகண்டதுபோல்வதலால்
வில்லாளனைவெல்லும்மிடுக்குளரோ. (௧௮)

இம்மைக்குறவோடும்இறந்தழியும்
வெம்மைத்தொழிலிங்கிதன்மேல் இலையால்
அம்மைக்கருமாநரகந்தருமால்
எம்மைக்கிதமாகஇதெண்ணினைநீ. (௧௯)

மூத்தேவரின்மூலமுதற்பொருளாம்
அத்தேவர் இம்மானிடர்ஆதலினால்
எத்தேவரொடெண்ணுவதெண்ணம்இலாய்
பித்தேறினையாதல்பிழைத்தனையால். (௨௰)

புரம்பற்றியபோர்விடையோன்அருளால்
வரம்பெற்றவும்மற்றுளவிஞ்சைகளும்
உரம்பெற்றனஆவனஉண்மையினேன்
சரம்பற்றியசாபம்விடுத்தனையே. (௨௧)

வாளுள்பவன்மைந்தன்வளைத்தவிலான்
தானேவரின்இன்றுதடுப்பரிதால்
நானேஅவனுய்ப்பன்இந்நன்றுதலைப்
போனீகடிதென்றுபுகன்றிடலும். (௩௨)

கேட்டான்நிருதர்க்கிறைகேழ்கிளர்தன்
வாட்டாரைநெருப்புகவாய்மடியா
ஓட்டாய்இனிநீஉரைசெய்குனைக்
காட்டாய்கடிதென்றுகனன்றுரையா. (௩௩)

வரும்புண்டரவாளியின்மார்புருவிப்
பெரும்புண்படுறாவகைபேருதிநீ
இரும்புண்டநீர்மீளினும்என்னுழையிற்
கரும்புண்டசொல்மீள்கிலள்காணுதியால். (௩௪)

வேறு.

என்னும்அளவிற்பயமுன்னின்இரட்டிஎய்த
அன்னம்அயர்கின்றதுநோக்கிஅரக்கன்யாக்கை
சின்னம்உறும்இப்பொழுதேசிலைநீதிஎங்கள்
மன்னன்மகன்வந்திலன்என்றுவருந்தல்அன்னை. (௩௫)

முத்துக்கனபோல்முகத்தாவிமுலைக்கண்வீழ்த்
தத்துற்றயமோல்தலைதாலபலத்தின்ஏனும்
கொத்தொப்பனகொண்டிவன்கொண்டனஎன்றுஐகை
பத்திற்கும்இன்றேபலிஇவதுபார்த்திஎன்றான். (௩௬)

இடிப்பொத்துமுழக்கின்இருஞ்சிறைவீசிஎற்றி
முடிப்பத்திகளைப்படிஇட்டுமுழங்குதுண்டம்
கடிப்பக்கடிதுற்றவன்காண்டகும்நீண்டவீணைக்
கொடிப்பற்றிஒடித்துயர்வானவர்ஆசிகொண்டான். (௩௭)

அக்காலைஅரக்கன்அரக்குருக்கன்னகண்ணான்
எக்காலமும்இன்னதொர்இடர்வுற்றிலாதான்
நக்கான்உலகேழும்நடுங்கிடநாகம்அன்ன
கைக்கார்முகத்தோடுடைப்புருவம்குனித்தான். (௩௮)

சுண்டப்பிறைவாள்எயிற்றுள்சரதாரைமாரி
மண்டக்கிறகால்அடித்தான்சிலவள்ளுகிரால்
கண்டப்படுத்தான்சிலகாலனும்காணஉட்கும்
துண்டப்படையால்சிலதுண்டதுண்டங்கள்கண்டான். (௩௯

மீட்டும்அனுகாநெடுவெங்கண்அனந்தநாகம்
வாட்டும்கலுழன்எனவன்தலைபத்தின்மீதும்
நீட்டும்நெடும்மூக்கெனும்நேமியன்சேமவிற்கால்
கோட்டும்அளவின்மணிக்குண்டலம்கொண்டெழுந்தான். (௱௰)

எழுந்தான்தடமார்பினின்ஏழிரண்டேழுவாளி
அழுந்தாதுகழன்றிடப்பெய்தெடுத்தார்த்தரக்கன்
பொழிந்தான்புகர்வாளிகள்மீளவும்போர்ச்சடாயு
விழுந்தான்எனஅஞ்சினர்விண்ணவர்வெய்துயிர்த்தார். (௱௧௧)

புண்ணிற்புதுநீர்பொழியப்பொலிபுள்ளின்வேந்தன்
மண்ணிற்கரனேமுதலோர்உதிரத்தின்வாரிக்
கண்ணிற்கடலென்றுநுகர்ந்ததுகான்றமீள
விண்ணிற்பொலிகின்றதொர்வெண்ணிறமேகமென்ன. (௱௧௨)

ஒத்தான்உடனேஉயிர்த்தான்உருத்தான்அவன்தோள்
பத்தோடுபத்தின்நெடும்பத்தியிற்றத்திமூக்கால்
கொத்தாநகத்தாற்குடையாக்கிழியாற்புடையா
முத்தாரமார்பிற்கவசத்தையும்மூட்டறுத்தான். (௱௧௩)

அறுத்தானைஅரக்கனும்ஐம்பதோடைம்பதம்பு
செறித்தான்தடமார்பிற்செறித்தலும்தேவர்அஞ்சி
வெறித்தார்வெறியாழன்இராவணன்வில்லைப்பல்லால்
பறித்தான்பறவைக்கிறைவிண்ணவர்பண்ணைஆர்ப்ப. (௱௧௪)

எல்விட்டவெள்ளிக்கயிலைப்பொருப்பீசனோடும்
மல்விட்டதோளால்எடுத்தான்சிலைவாயின்வாங்கி
வில்விட்டுயர்ந்தநெடுமேகமெனப்பொலிந்தான்
சொல்விட்டவன்தோள்வலியாருளர்சொல்லவல்லார். (௱௧௫)

மீளாநிறத்தாயிரக்கண்ணவன்விண்ணின்ஓட
வாளால்ஒறுத்தான்சிலைவாயிடைநின்றும்வாங்கித்
தாளால்இறுத்தான்தழல்வண்ணன்தடக்கையில்லைத்
தோளால்இறுத்தான்துணைத்தாதைதன்அன்பிற்றோழன். (௱௧௬)

ஞாலம்எடுப்பான்தனதாற்றலுக்கேற்றநல்வில்
மூலமொடிப்புண்டதுகண்டுமுனிந்தநெஞ்சன்
ஆலம்மிடற்றான்புரம்அட்டதோர்அம்புபோலும்
சூலம்எடுத்தான்எறிந்தான்மறம்தோற்றிலாதான். (௱௧௭)

ஆற்றான் இவன்என் றுணராதெனதாற்றல்காணென்
றேற்றான் எருவைக்கிறைமுத்தலைஎஃகம்மார்பின்
மேற்றான் இதுசெய்பவர்யாரெனவிண்ணுளோர்கள்
தோற்றாது நின்றார் தமதோள்புடைகொட்டி ஆர்த்தார். (௱௧௮)

பொன்னோக்கியர்தம்புலன்நோக்கியபுன்கணோரும்
இன்னோக்கியரில்வழிஎய்தியநல்விருந்தும்
தன்னோக்கியநெஞ்சுடையோகியர் தன்மைசார்ந்த
மெய்ந்நோக்கியர்நோக்கமும் ஆம்எனமீண்டதவ்வேல். (௱௧௯)

வேகம்முடன் வேல்இழந்தான் படைவேறெடாமுன்
மாகம்மறையும்படி நீண்டவயங்குமான்தேர்ப்
பாகன் தலையைப்பறித்துப்படர்கற்பினுள்பால்
மோகம்புடைத்தான் உளைவெய்தமுகத்தெறிந்தான். (௱௨௰)

எறிந்தான் அதுநோக்கி இராவணன் நெஞ்சின் ஆற்றல்
அறிந்தான் முனிந்தாண்டொர் ஆட்கத்தண்டுவாங்கிப்
பொறிந்தாங்கெரியின்கிளைபொங்கிஎழப்புடைத்தான்
மறிந்தான் எருவைக்கிறைமால்வரைபோலமண்மேல். (௱௨௧)

மண்மேல்விழுந்தான் விழலோடும்வயங்குமான்தேர்
கண்மேல்ஒளியும்தொடராவகைதான்கடாவி
விண்மேல்எழுந்தான் எழமெல்லியலாளும்வெந்தீ
புண்மேல்நுழையத்துடிக்கின்றனள் போற்புரண்டாள். (௱௨௨)

கொழுந்தே அனையாள் குழைந்தேங்கியகொள்கைகண்டான்
அழுந்தேல் அவலத்திடை அஞ்சலை அன்னம் என்று
எழுந்தான் உயிர்த்தான் அடஎங்கினிப்போவதென்று
விழுந்தான் அவன்தேர்மிசைவிண்ணவர்பண்ணையார்ப்ப. (௱௨௩)

பாய்ந்தான் அவன்பன்மணித்தண்டுபறித்தெறிந்தான்
ஏய்ந்தார்கதித்தேர்ப்பரிஎட்டிரெட்டும் எஞ்சித்
தேய்ந்தாசறவீசிஅத்திண்டிறற்றுண்டவாளாற்
சாய்ந்தான் கவர்ந்தான் உயிர்காலனும்கைவிதிர்த்தான். (௱௨௪)

திண்டேர் அழித்தாங்கவன் திண்புறம்சேர்ந்த தூணி
விண்டான் மறைப்பச்செறிகின்றனவில்லிலாமை
மண்டார் அமர்தான் வழங்காமையில்வச்சைமாக்கள்
பண்டாரம்ஒக்கின்றனவள்ளுகிராற்பறித்தான். (௱௨௫)

மாச்சிச்சிரம்பாய்ந்தவன் மார்பினும் தோள்கள் மேலும்
ஓச்சிச்சிறகாற்புடைத்தான் கடித்தான் உலையா
மூச்சிற்ற இராவணனும் முடிசாய்ந்திருந்தான்
போச்சித்தனை போலும்நின் ஆற்றலெனப்புகன்றான். (௩௨௬)

அவ்வேலையினே முனிந்தான் முனிந்தாற்றலன்ன
வெவ்வேல் அரக்கன் விடலாம்படை வேறுகாணான்
இவ்வேலையினே இவன் இன்னுயிர் உண்பன் என்னாச்
செவ்வேபிழையா நெடுவாள் உறைதீர்த்தெறிந்தான். (௩௨௭)

வலியின் தலைதோற்றிலன் மாற்றருந்தெய்வவாளால்
நலியுந்தலை என்றது அன்றியும்வாழ்க்கைநாளும்
மெலியுங்கடைசென்றுளதாகலின் விண்ணின் வேந்தன்
குலிசம் எறியச்சிறைஅற்றதொர்குன்றின் வீழ்ந்தான். (௩௨௮)

விரிந்தார்சிறைகீழ் உறவீழ்ந்தனமண்ணின் விண்ணோர்
இரிந்தார் இழந்தாள் துணை என்ன முனிக்கணங்கள்
பரிந்தார்படர்விண்டுவின் நாட்டவர்பைம்பொன்மாரி
சொரிந்தார் அதுநோக்கியசீதை துளக்கம்உற்றாள். (௩௨௯)

வெள்கும் அரக்கன் நெடுவிண்புக ஆர்த்துமிக்கான்
தொள்கின்றலைஎய்தியமானெனச்சோர்ந்துறைநவாள்
உள்கும்உயிர்க்கும்உயங்கும்ஒருசார்வுகாணாள்
கொள்கொம்பொடியக்கொடிவீழ்ந்ததுபோற்குலைந்தாள். (௩௩௰)

வேறு.

வன்றுணைஉரன்எனவைத்தமன்னனும்
பொன்றினன்எனக்கினிப்புகல்என்என்கின்றாள்
இன்றுணைபிரிந்திரிந்தின்னல்எய்திய
அன்றிலம்பெடைஎனஅரற்றினாளரோ. (௩௩௧)

பின்னவன்உரையினைமறுத்துப்பேதையேன்
அன்னவன்தனைக்கடிதகற்றினேன்பொரு
மன்னவன்சிறைஅறமயங்கினேன்விதி
இன்னமும்எவ்வினைஇயற்றுமோஎனா. (௩௩௨)

அல்லல்உற்றேனைவந்தஞ்சல்என்றஇந்
நல்லவன்தோற்பதேநரகன்வெல்வதே
வெல்வதும்பாவமோவேதம்பொய்க்குமோ
இல்லையோஅறமெனாஇரங்கிஏங்கினாள். (௩௩௩)

ணிலேன் உரைகொடு நடந்த நம்பியீர்
நீணில அறநெறி நின்றோர்க்கெலாம்
ஆணியை உந்தையர்க்கமைந்த அன்பனைக்
காணிய வம்மென மனக்கலங்கி விம்மினாள். (௩௧௪)

கற்பழியாமை என் கடமையாயினும்
பொற்பழியா வலம்பொருந்தும் போர்வலான்
விற்பழி உண்டது வினையினேன் வந்த
இற்பழி உண்டதென் றிரங்கி ஏங்கினாள். (௩௧௫)

எல்லையில் விசும்பிடை இருந்த நேமியாய்
சொல்லியலாய் நெறி தொடர்ந்த தோழமை
நல்லியல் அருங்கடன் கழித்த நம்பியைப்
புல்லுதியோ எனப் பொருமிப் பொங்கினாள். (௩௧௬)

ஏங்குவாள் தன்னையும் இறகிழந்தவன்
ஆங்குறு தன்மையும் அரக்கன் நோக்கினான்
வாங்கினன் தேரிடை வைத்த மண்ணொடும்
வீங்கு தோள் மீக்கொடு விண்ணின் ஏகினான். (௩௧௭)

விண்ணிடை வெய்யவன் ஏகும் வேகத்தால்
கண்ணொடு மனமவை சுழன்ற கற்பினாள்
உண்ணிறை உணர்வழிந்தொன்றும் ஓர்ந்திலள்
மண்ணிடைத் தன்னையும் மறந்து சாம்பினாள். (௩௧௮)

ஏகினன் அரக்கனும் எருவை வேந்தனும்
மோகவெந்துயர் சிறிதாறி மூர்ச்சியா
மாகமேல் நோக்கினன் வஞ்சன் வல்லையில்
போகுதல் கண்டகம் புலர்ந்து சொல்லுவான். (௩௧௯)

வந்திலர் மைந்தர் நம் மருகிக்கெய்திய
வெந்துயர் துடைத்தனர் என்னும் மெய்ப்புகழ்
தந்திலர் விதியினார் தருமவேலியைச்
சிந்தினர் மேலினிச் செயல் எனும் கொலோ. (௩௨௰)

வெற்றியர் உளர் எனின் மின்னின் நுண்ணிடைப்
பொற்றொடிக்கிந்நிலை புகுதற்பாலதோ
உற்றதை இன்னதென் றுணரகிற்றிலேன்
சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ. (௩௨௧)

பஞ்சணை பாம்பணையாகப் பள்ளிசேர்
அஞ்சனவண்ணனே இராமன் ஆதலால்
வெஞ்சின அரக்கனால் வெல்லற்பாலனோ
வஞ்சனை இழைத்தனன் கள்ளமாயையால். (௱௪௨)

வேறற அரக்கரை வென்று வெம்பழி
தீரும் என் சிறுவனும் தீண்ட அஞ்சுமால்
ஆரியன் தேவியை அரக்கன் நன்மலர்ப்
பேருலகளித்தவன் பிழைப்பில் சாபத்தால். (௱௪௩)

பருஞ்சிறை இன்னன பன்னி உன்னுவான்
அருஞ்சிறை உற்றனளாம் எனாமல் நம்
பொருஞ்சிறகு இற்றதேல் பூவை கற்பெனும்
இருஞ்சிறகு இறுமெனா இடரும் நீங்கினான். (௱௪௪)

அஞ்சிறை குருதியால் அழிந்து சோர்வுற
வஞ்சியை மீட்கிலேன் என்னும் மானமும்
செஞ்செவே மக்கள்பால் சென்ற காதலும்
நெஞ்சுறத் துயின்றனன் உணர்வு நீங்கலான். (௱௪௫)

வஞ்சியை அரக்கனும் வல்லைகொண்டுபோய்ச்
செஞ்செவே திருஉருத் தீண்ட அஞ்சுவான்
நஞ்சியல் அரக்கியர் நடுவண் ஆயிடைச்
சிஞ்சுபவனத்திடைச் சிறைவைத்தானரோ. (௱௪௬)

இன்னிலை இனையவன் செயல் இயம்பினாம்
பொன்னிலை மானின்பின் தொடர்ந்து போகிய
மன்னிலை அறிகென மங்கை ஏவிய
பின்னிளையவன் நிலை பேசுவாமரோ. (௱௪௭)

ஒருமகள் தனிமையை உன்னி உள்ளுறும்
பருவரல் மீதிடப் பதைக்கும் நெஞ்சினான்
பெருமகன் தனைத் தனிப்பிரிந்து பேதுறும்
திருநகர் தீரும் அப்பரதன் செய்கையான். (௱௪௮)

தெண்டிரைக் கல்மனை விரைவிற் செல்கின்றான்
புண்டரீகத் தடங்காடு பூத்தொரு
கொண்டல் வந்திழிந்தெனக் கோலத்தான் தனைக்
கண்டனன் மனமெனக் களிக்கும் கண்ணினான். (௱௪௯)

துண்ணெனும்அவ்உரைதொடாத்தோகையும்
பெண்ணெனும்பேதைமைமயக்கப்பேதுறல்
உண்ணிறைசோருமென்றாசல்ஆடும்அக்
கண்ணனும்இளவலைக்கண்ணுற்றனரோ. (௩௫௰)

வேறு.

புன்சொற்கடந்தபகுவாய்அரக்கன்உரைபொய்எனாதுபுகல்வாள்
வன்சொற்கடந்துமடமங்கைஎவ்வநிலைதேரவந்தமருளே
தன்சொற்கடந்துதளர்கின்றநெஞ்சம்உடையேன்மருங்குதனியே
என்சொற்கடந்துமனமும்தளர்ந்தஇளவீரன்வந்தஇயல்பே. (௩௫௧)

என்றன்னிஎன்னைவிதியார்முடிப்பதெனஎண்ணிநின்றஇறையைப்
பொன்றன்னுவிற்கைவயவீரன்வந்துபணிதாள்இறைஞ்சுபொழுதில்
மின்றன்னுநூலின்மணிமார்பழுந்தவிளைவோடுபுல்லிஉருகா
நின்றன்னிவந்தநிலையென்கொல்என்றுநெடியோன்விளம்பநொடிவான். (௩௫௨)

இல்லாநிலத்தின்இசையாதவெஞ்சொல்எழஅஞ்சிஎவ்வமுறையால்
வல்வாய்அரக்கன்உரையாகும்என்னமதியாள்மறுக்கம்உறுவாள்
நில்லாதுமற்றிதறிபோதிஎன்னநெடியோய்புயத்தின்வலிஎன்
சொல்லால்மனத்தின்அடையாள்சினத்தின்முனிவோடுநின்றுதுவள்வாள். (௩௫௩)

ஏகாதுநிற்றியெனின்யான்நெருப்பினிடைவீழ்வன்என்றுமுடுகா
மாகானகத்தினிடைஓட்டலோடும்மனம்அஞ்சிவஞ்சவினையேன்
போகாதிருக்கின்இறவாதிருக்கைபுணராள்எனக்கொடுணரா
ஆகாதிறக்கைஅறன்அன்றெனக்கொடிவண்வந்ததென்னஅமலன். (௩௫௪)

சாவாதிருத்தலிலளானதுற்றதனையோதடுக்கமுடியா
ஆவாஅலக்கண்உறுவாள்உரைத்தபொருளோஅகத்தின்அடையா
காவாநிலத்தின்வருமேதமற்றதொழியாதுகைக்கொடகலப்
போவார்பிரிக்கமுயல்வார்புணர்த்தபொருளாம்இதென்றுதெருளா. (௩௫௫)

வந்தாய்திறத்தில்உளதன்றுகுற்றம்மடவாள்மறுக்கம்உறுவாள்
சிந்தாகுலத்தொடுரைசெய்தசெய்கைஅதுதீருமென்றுதெளிவாய்
முந்தேதடுக்கவொழியாதெடுத்தவினையேன்முடித்தமுடிவால்
அந்தோகெடுத்ததெனஉன்னிஉன்னிஅழியாதஉள்ளம்அழிவான் (௩௫௬)

மாணிக்கநின்றுபயறுதென்னைபயில்பூவைஅன்னகுயிலைக்
காணிற்கரந்ததுயர்தீரும்அன்றிஅயலில்லைஎன்றுகடுகிச்
சேணுற்றகன்றநெறியூடுசென்றுசிலைவாளிஅன்னவிசைபோய்
ஆணிப்பசும்பொன்அனையாள்இருந்தஅவிர்சோலைவல்லைஅணுகா. (௩௫௭

வேறு.

ஓடிவந்தனன் சாலையின் சோலையின் உதவும்
தோடிவர்ந்தபூஞ்சுரிகுழலாள் தனைக்காணான்
கூடுதன்னுடை யதுபிரிந்தாருயிர்குறியா
நேடிவந்தது கண்டிலதாமென நின்றான். (௱௫௮)

கைத்தசிந்தையன் கனங்குழை அணங்கினைக்காணா
துய்த்துவாழ்தர வேறொருபொருளிலான் உதவ
வைத்தமாநிதி மண்ணொடுமறைந்தனவாங்கிப்
பொய்த்துளோர்கொளத்திகைத்து நின்றானையும்போன்றான். (௱௫௯)

மண்சுழன்றது மால்வரைசுழன்றது மதியோர்
எண்சுழன்றது சுழன்றதவ்வெறிகடலேழும்
விண்சுழன்றது வேதமுஞ்சுழன்றது விரிஞ்சன்
கண்சுழன்றது சுழன்றது கதிரொடுமதியும். (௱௬௰)

அறத்தைச்சீறும்கொல் அருளையேசீறும்கொல் அமரர்
திறத்தைச்சீறும்கொல் முனிவரைச்சீறும்கொல் தீயோர்
மறத்தைச்சீறும்கொல் என்கொலோமுடிவென்று மறையின்
நிறத்தைச்சீறும்கொல் நெடுந்தகையோனென நடுங்கா. (௱௬௧)

நீலமேனிநன்னெடியவன் மனநிலைதிரிய
மூலகாரணத்தவனொடும்முடிவுறமுற்றும்
காலம் ஆமெனக்கடையிடுகணிக்கரும்பொருள்கள்
மேலகீழுறக்கீழன மேலுறும்வேலை. (௱௬௨)

தேரினாழியும் தெரிந்தனம் தீண்டுதல் அஞ்சிப்
பாரினோடுகொண்டகழ்ந்ததும் பார்த்தனம் பயன் இன்
றேருந்தன்மைஈதென்னென்ப தூரன் இலாதவர்போல்
தூரம்போதல்முன் தொடர்தும் என்றிளையவன் தொழலும். (௱௬௩)

ஆமதேஇனி அமைவதென்றமலனும் மெய்யில்
தாமவார்கணைப்புட்டிலும்முதலிய தாங்கி
ஏமமால்[illegible]மரன் இவைமடிதரவயவர்
பூமிமேல் அவன் தேர்சென்ற நெடுநெறிபோனார். (௱௬௪)

மண்ணின்மேல் அவன் தேர்சென்றசுவடெலாமாய்ந்து
விண்ணின் ஓங்கியதொருநிலைமெய்யுறவெய்த
புண்ணினூடுறுவேலெனமனம்மிகப்புழுங்கி
எண்ணிநாம் இனிச்செய்வதென் இளவலே என்றான். (௱௬௫)

தெற்குநோக்கியதெனும்பொருள்தெரிந்தனைத்திண்டேர்
மற்குநோக்கியதிரள்புயத்தண்ணலேவானம்
விற்குநோக்கியபகழியின்நெடிதன்றுவிம்மி
நிற்குநோக்கினன்பயத்ததென்றிளையவன்நேர்ந்தான். (௱௬௬)

ஆகும்அன்னதேகருமம்என்றத்திசைநோக்கி
ஏகியோசனைஇரண்டுசென்றார்இடைஎதிர்ந்தார்
மாகமால்வரைகால்பொரமறிந்ததுமானப்
பாகவீணையின்கொடிஒன்றுகிடந்ததுபார்மேல். (௱௬௭)

கண்டுகண்டகரோடும்அக்காரிகைபொருட்டால்
அண்டராதியர்க்காரமர்விளைந்ததென்றயிர்த்தார்
துண்டவாளினிற்சுடர்க்கொடிதுணிந்ததென்றுணராப்
புண்டரீகக்கண்புனல்வரப்புரவலன்புகல்வான். (௱௬௮)

நோக்கினால்ஐயநொய்திவண்எய்தியநந்தை
ஊக்கினால்இதுமுறிந்ததுமுடிந்ததால்மொய்ம்பிற்
றாக்கினால்நடுவடுத்ததுதெரிகிலம்தமியன்
யாக்கைதேம்பிடும்எண்ணரும்பருவங்களிறந்தான். (௱௬௯)

நன்றுசாலவும்நடுக்கருமிடுக்கினன்நாமும்
சென்றுகூடலாம்பொழுதெலாம்தடுப்பதுதிடனால்
வென்றுமீட்கினும்மீட்குமால்வேறுறஎண்ணி
நின்றுதாழ்ந்தொருபயன்இல்லைஎன்றனும்நெடியோன். (௱௭௰)

தொடர்வதேநலமாம்எனப்படிமிசைச்சுற்றிப்
படருங்கால்எனக்கறங்கெனச்செல்லுவார்பார்த்தார்
மிடல்கொள்வெஞ்சிலைவிண்ணிடுவில்முறிந்தென்னக்
கடவின்மாடுயர்திலாளனக்கிடந்ததுகண்டார். (௱௭௧)

சிலைகிடந்ததால்இலக்குவதேவர்நீர்கடைந்த
மலைகிடந்தெனவலியதேவடிவினால்மதியின்
கலைகிடந்தெனக்காட்சியன்இதுகடித்தொடித்தான்
நிலைகிடந்தவாநோக்கெனநோக்கினன்நின்றான். (௱௭௨)

நின்றுபின்னரும்நெடுநெறிகடந்துறநிமிரச்
சென்றுநோக்கினன்திரிசிகைத்திருநெடுஞ்சூலம்
ஒன்றுபல்கணைமழையுறப்பட்டிலஓரிரண்டு
குன்றுபோல்அவண்கிடந்தனகுறுகினர்உற்றார். (௱௭௩)

மறித்தும்சென்றனர்வானிடைவயங்குறவழங்கி
எறிக்கும்சோதிகள்யாவையும்தொக்கனஎனலாம்
நெறிக்கொள்கானகம்மறைதரநிருதர்கோன்நெருக்கிற்
பறித்துவீசியகவசமும்கிடந்ததுபார்த்தார். (௱௭௪)

கான்கிடந்ததுமறைதரக்கால்வயக்கலிமா
தான்கிடந்ததுசாரதிகிடந்துழிச்சார்ந்தார்
ஊன்கிடந்ததோள்உதிரமும்கிடந்துளதுலகின்
வான்கிடந்ததுபோல்பவன்கிடந்துழிவந்தார். (௱௭௫)

கண்டலங்குதங்கைத்தலம்விதிர்த்தனர்கவிஞர்
விண்டலத்துறந்திறுதியின்விரிகதிர்வெய்யோன்
மண்டலம்பலமண்ணிடைக்கிடந்தெனமணியின்
குண்டலம்பல்குலமணிப்பூண்களின்குவியல். (௱௭௬)

தோளணிக்குலம்பலவுளகுண்டலத்தொகுதி
வாளிமைப்பனபலஉளமணிமுடிபலவால்
நாளனைத்தையும்கடந்தனன்தமியன்நம்தாதை
யாளிபோல்பவர்பலருளர்பொருதனர்இளையோய். (௱௭௭)

திருவின்நாயகன்உரைசெயச்சுமித்திரைசிங்கம்
தருவின்நீளியதோள்பலதலைபலவன்றால்
பொருதுதாதையைஇத்தனைநெறிக்கொடுபோனான்
ஒருவனேஅவன்இராவணன்ஆமெனஉரைத்தான். (௱௭௮)

மடலுளொட்டியதாரிளையோன்தனைமதியா
மிடலுளொட்டங்கள்தீயுகநோக்கினன்விரைவான்
உடலுளொட்டியகுருதியம்பாவையின்உம்பர்
கடலுளொட்டியவரையெனத்தாதையைக்கண்டான். (௱௭௯)

துள்ளியோங்குசெந்தாமரைநயனங்கள்சொரியத்
தள்ளியோங்கியஅமலன்தன்தனிஉயிர்த்தந்தை
வள்ளியோன்திருமேனியிற்றழல்நிறவண்ணன்
வெள்ளியோங்கலில்அஞ்சனமலைஎனவீழ்ந்தான். (௱௮௰)

உயிர்த்திலன்ஒருநாழிகைஉணர்விலன்கொல்என்
றயிர்த்ததம்பிபுக்கங்கையின்எடுத்தனன்அருவிப்
புயற்கலந்தநீர்தெளித்தலும்புண்டரீகக்கண்
வெயர்த்துப்பைப்பையஅயர்வுதீர்ந்திளையனவிரும்பும். (௱௮௧)

வேறு.

ந்தாதையனைத்தனையர் கொலையும் நேர்ந்தார்
முந்தாரோ உள்ளார் முடிந்தான் முனை ஒருவன்
எந்தாயோ எற்காக நீயும் இறந்தனையோ
அந்தோ வினையேன் அருங்கூற்றம் ஆனேனே. (௱௮௨)

பின்னுறுவதோராதே பேதுறுவேன் பெண்பாலாள்
தன்னுறுவல் தீர்ப்பான் தனியுறுவதோராதே
உன்னுறவும் நீதீர்த்தாய் ஓர் உறவும் இல்லாதேன்
என்னுறுவான் வேண்டி இடருறுவேன் எந்தாயே. (௱௮௩)

மாண்டேனே அன்றே மறையோர்குறை முடிப்பான்
பூண்டேன் விரதம் அதனால் உயிர் பொறுப்பேன்
நீண்டேன் மரம்போல நின்றொழிந்தபுன் தொழிலேன்
வேண்டேன் இம்மாமாயப்புலப் பிறவி வேண்டேனே. (௱௮௪)

என்றாரம்பற்றண்ணலென்றுரையைச் சான்றோயைக்
கொன்றானும் நின்றான் கொலையுண்டு நீ கிடந்தாய்
வன்றாட்சிலை ஏந்தி வாளிக்கடல் சுமந்து
நின்றேனும் நின்றேன் நெடுமரம்போல் நின்றேனே. (௱௮௫)

சொல்லுடையார் என்போல் இனி உளரோ தொல்வினையேன்
இல்லுடையாள் காண இறகுடையாய் எண்ணிலாப்
பல்லுடையாய் உன்னைப் படை உடையான் கொன்றகல
வில்லுடையேன் நின்றேன் விறலுடையேன் அல்லேனோ. (௱௮௬)

அன்னபலபலவும் பன்னி அழும் மயங்கும்
தன்னேரிலாதானும் தம்பியும் அத்தன்மையனாய்
உன்னவுணர்வு சிறிதுள் முளைப்பப்புள் அரசும்
இன்னுயிர்ப்பான் இருவரையும் நோக்கினான். (௱௮௭)

உற்றதுணராதுயிர் உலைய வெய்துயிர்ப்பான்
கொற்றவனைக் கண்டான் தன் உள்ளங்குளிர்ப்புற்றான்
இற்ற இருஞ்சிறகும் இன்னுயிரும் ஏழுலகும்
பெற்றனனே ஒத்தான் பெயர்த்தேன் பழி என்றான். (௱௮௮)

பாக்கியத்தால் இன்றென் பயனில் பழியாக்கை
போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரோ வாரும் என்று
தாக்கி அரக்கன் மகுடத்தலை துமித்த
மூக்கினால் உச்சி முறை முறையே மோக்கின்றான். (௱௮௯)

வஞ்சனையால்வந்தவரவென்பதென்னுடைய
நெஞ்சகமேமுன்னேநினைவித்ததானாலும்
அஞ்சொல்மயிலை அருந்ததியை நீங்கினிரோ
எஞ்சலிலா ஆற்றல் இருவீரும் என்றுரைத்தான். (௱௯௰)

வேறு.

என்றவன் இயம்பலும் இளையகோமகன்
ஒன்றும் ஆண்டுறுபொருள் ஒழிவுறாவகை
வன்றிறல்மாயமான்வந்ததாதியாய்
நின்றதும்நிகழ்ந்ததும்நிரப்பினானரோ. (௱௯௧)

ஆற்றலோன் அவ்வுரை அறைய ஆணையால்
ஏற்றுணர்ந்தெண்ணி அவ் எருவைவேந்தனும்
மாற்றரும் துயர் அவர்மனக்கொளாவகை
தேற்றுதல் நன்றென இனையசெப்புவான். (௱௯௨)

அதிசயம் ஒருவரால் அமைக்கல் ஆகுமோ
துதியறுபிறவியின் இன்பதுன்பந்தான்
விதிவசம்என்பதைமேற்கொளாவிடில்
மதிவலியால்விதிவெல்லவல்லமோ. (௱௯௩)

தெரிவுறு துன்பம்வந்தூன்றச்சிந்தையை
இரிவுசெய்தொழியுமதிமுழுதநீரதால்
பிரிவுசெய்துலகெலாம்பெறுவிப்பான்தலை
அரிவுசெய்விதியினார்க்கரிதுண்டாகுமோ. (௱௯௪)

அலக்கணும் இன்பமும் அணுகுதாள் இவை
விலக்குவம்என்பதுமெய்யிற்றாகுமோ
இலக்கமுப்புரங்களைஎய்தவில்லியார்
தலைக்கலத்திரந்ததுதவத்தின்பாலதோ. (௱௯௫)

பொங்குவெங்கோளராவிசும்புபூத்தன
வெங்கதிர்ச்செல்வனைவிழுங்கிநீங்குமால்
அங்கண்மாஞாலத்தைவிளக்கும்ஆய்கதிர்த்
திங்களும்ஒருமுறைவளரும்தேயுமால். (௱௯௬)

அந்தரம்வருதலும்அனையதீர்தலும்
சுந்தரத்தோளினிர்தொன்மைநீரதால்
மந்திர இமையவர்குருவின்வாய்மொழி
இந்திரன் உற்றனனன்னஒன்றுமோ. (௱௯௭)

அடக்கரும்பெருவலிச்சம்பரப்பெயர்க்
கடைத்தொழில் அவுணனால்குலிசக்கையினான்
படைத்தனன்பழியது பகழியில்வலாய்
துடைத்தனன் நுந்தைதன் குவவுத்தோளினால். (௱௯அ)

வேறு.

பிள்ளைச்சொற்கிளியனாளைப்பிரிவுறல்உற்றபெற்றி
தள்ளுற்றஅஃறுமுட்டேவர்துயரமுந்தந்ததேயாற்
கள்ளப்போர்அரக்கர்என்னுங்களையினைக்களைந்துவாழ்தி
புள்ளிற்கும்புலனில்பேய்க்குந்தாயன்னபுலவுவேலோய். (௱௯௯)

வடுக்கண்வார்கூந்தலாளை இராவணன்மண்ணினோடும்
எடுத்தனன்ஏகுவானை எதிர்ந்தெனதாற்றல்கொண்டு
தடுத்தனென் ஆவதெல்லாம் தவத்தான் தந்தவாளால்
படுத்தனன் இங்குவீழ்ந்தேன் இது இன்றுபட்டதென்றான். (௨௱)

கூறினமாற்றம்சென்றுசெவித்துளைகுறுகாமுன்னம்
ஊறினஉதிரம்செங்கண்உயிர்த்தனஉயிர்ப்புச்செந்தீ
ஏறினபுருவம்மேன்மேல்இழிந்தனசுடர்கள்எங்கும்
கீறினதண்டகோளம்கிழிந்தனகிரிகள்எல்லாம். (௨௱௧)

மண்ணகந்திரியநின்றமால்வரைதிரியமற்றைக்
கண்ணகன்புனலும்காலும்கதிரொடும்திரியக்காவல்
விண்ணகம்திரியமேலைவிரிஞ்சனும்திரியவீரன்
எண்ணரும்பொருள்கள்எல்லாம்என்பதுதெரிந்ததன்றே. (௨௱௨)

குறித்தவெங்கோபம்யார்மேற்கோளுறுங்கொல்லென்றஞ்சி
வெறித்துநின்றுலகமெல்லாம்விம்முறுகின்றவேலைப்
பொறிப்பிதிர்படலைச்செந்தீப்புகையொடுபொடிப்பப்பொம்மென்
றெறிப்பமீதார்முறுவல்தோன்றஇராமனும்இயம்பலுற்றான். (௨௱௩)

பெண்டனிஒருத்திதன்னைப்பேதைவாளரக்கன்பற்றிக்
கொண்டனன்ஏகநீஇக்கோளுறக்குலுங்கல்செல்லா
எண்டிசைஉறுதியான உலகங்கள் இவற்றைஇன்னே
கண்டவானவர்களோடும்களையும்ஆறின்றுகாண்டி. (௨௱௪)

தாரகைஉதிருமாறும்தனிக்கதிர்பிதிருமாறும்
போரகல்வானமெங்கும்பிறங்கெரிபிறக்குமாறும்
நீரொடுநிலனும்காலும்நின்றவும்கிடந்தயாவும்
வேரொடும்அழியுமாறும்விண்ணவர்விளியுமாறும். (௨௱௫)

இக்கணம்ஒன்றில்நின்றவேழொடேழுசான்ற
மிக்கனபோன்றுதோன்றும்உலகங்கள்விளியுமாறும்
திக்குடைஅண்டகோளம்புறத்தவும்தீய்ந்துநீறின்
மொக்குளின்உடையுமாறும்காணெனமுனியும்வேலை. (௨௱௬)

வெஞ்சுடர்க்கடவுள்மீண்டுமேருவில்மறையல்உற்றான்
எஞ்சலில்திசையில்நின்றயானையும்இரியல்போன
துஞ்சினஉலகமெல்லாம்என்பதும்துணிந்தநெஞ்சின்
அஞ்சினன்இளையகோவும்அயல்உளோர்க்கவதிஉண்டோ. (௨௱௭)

இவ்வழிநிகழும்வேலைஎருவைகட்கிறைவன்யாதும்
செவ்வியோய்முனியல்வாழிதேவரும்முனிவர்தாமும்
வெவ்வலிவீரநின்னால்வெல்லுமென்றேமுற்றாய்வார்
எவ்வலிகொண்டுவெல்வார்இராவணன்செயலைஎன்றான். (௨௱௮)

நாட்செய்தகமலத்தண்ணல்நல்கினநவையில்ஆற்றல்
தோட்செய்தவீரம்என்னிற்கண்டனைசொல்லும்உண்டோ
தாட்செய்தகமலத்தானேமுதலினர்தலைபத்துள்ளாற்
காட்செய்கின்றார்கள்அன்றிஅறம்செய்கின்றார்கள்யாரோ. (௨௱௯)

தெண்டிரைஉலகம்தன்னிற்செறுனர்மாட்டேவல்செய்து
பெண்டிரின்வாழ்வர்அன்றேஇதுஅன்றோதேவர்பெற்றி
பண்டுலகளந்தோன்நல்கப்பாற்கடல்அமுதம்அந்நாள்
உண்டிலராகில்இந்நாள்அன்னவர்க்குய்தலுண்டோ. (௨௱௰)

வம்பிழைகொங்கைவஞ்சிவனத்திடைத்தமியள்வைகக்
கொம்பிழைமானின்பின்போய்க்குலப்பழிகூட்டிக்கொண்டீர்
அம்பிழைவரிவிற்செங்கைஐயன்மீர்ஆயுங்காலை
உம்பிழைஎன்பதல்லால்உலகம்செய்பிழையும்உண்டோ. (௨௧௧)

ஆதலால்முனிவாய்அல்லைஅருந்ததிஅனையகற்பிற்
காதலாள்துயரம்நீக்கித்தேவர்தம்கருத்துமுற்றி
வேதநூல்முறையின்யாவும்விதியுளிநிறுவிவேறும்
தீதுளதுடைத்திஎன்றான்சேவடிக்கமலம்சேர்வான். (௨௧௨)

புயனிறவண்ணன்ஆண்டப்புண்ணியன்புகன்றசொல்லைத்
தயரதன்பணியிதென்னச்சிந்தையிற்றழுவிநின்றான்
அயலினிமுனிவதென்னைஅரக்கரைவருக்கம்தீர்க்கும்
செயலினிச்செயலென்றெண்ணிக்கண்ணியசீற்றம்தீர்ந்தான் (௨௧௩

ஆயபின் அமலன் தானும் ஐய நீ அமைதி என்னை
வாயிடை மொழிந்த தன்றி மற்றொரு செயலும் உண்டோ
போயதவ் அரக்கன் எங்கே புகலெனப் புள்ளின் வேந்தன்
ஏய்வினை உணர்வும் தேய உரைத்திலன் உயிருந் தீர்ந்தான். (௨௧௪)

சீதங்கொள் மலரு ளோனுந் தேவரும் என்ப தென்னே
வேதங்கள் காண்கிலாமை வெளிநின்றே நடையும் வீரன்
பாதங்கள் கண்ணீர் தீர்ப்பார்த்தான் படிவங்கொள் நெடியபஞ்ச
பூதங்கள் விளியும் நாளும் போக்கிலா உலகம் புக்கான். (௨௧௫)

வீடவன் எய்தும் வேலை விரிஞ்சனே முதல மேலோர்
ஆடவர்க் கரசனோடு தம்பியும் அழுது சோரக்
காடமர் மரமும் யாவும் கற்களுங் கரைந்து சாய்ந்த
சேடரும் பாரி னோர்க்குங் கரஞ்சிரஞ் சேர்ந்த தன்றே. (௨௧௬)

அறந்தலை நின்றி லாத அரக்கனின் ஆண்மை தீர்ந்தேன்
துறந்தனன் தவஞ்செய் வேனோ துறப்பனோ உயிரைச் சொல்லாய்
பிறந்தனன் பெற்று நின்ற பெற்றியாற் பெற்ற தாதை
இறந்தனன் இருந்துளேன் யான் என்செய்கேன் இளவல் என்றான்.

என்றலும் இளைய கோவும் இறையினை இறைஞ்சி யாண்டும்
வென்றியாய் விதியின் தன்மை பழியில் விளைந்ததொன்றோ
நின்றினி நினைவ தென்னே நெருக்கிய அரக்கர் தம்மைக்
கொன்றபின் அன்றோ வெய்ய கொடுந்துயர் குளிப்ப தென்றான்.

எந்தைநீ இயம்பி நிறனை எளிமையன் ஆகின்மைச்
சந்தவார் குழலி னோடுந் துறந்தனை தனியே யானும்
உந்தையை உயிர்கொண் டானை உயிருண்ணும் ஊற்றம் இல்லாச்
சிந்தையை ஆகி நின்று செய்தவஞ் செய்கை என்றான். (௨௧௯)

அவ்வழி இளவல் கூற அறிவனும் அயர்வு நீங்கி
இவ்வழி இனைய எண்ணின் ஏழைமைப் பால தென்று
வெவ்வழி பொழியுங் கண்ணீர் விலக்கினன் விளிந்த தாதை
செவ்வழி உரிமை யாவுந் திருத்துவஞ் சிறுவன் என்றான். (௨௨௰)

இந்தனம் எனைய என்னக் காரகில் இட்டத் தோடும்
சந்தனங் குவித்து வேண்டுந் தருப்பையுந் திருத்திப் பூவும்
சிந்தினன் மணலின் வேதி தீர்த்த இயற்றித் தெண்ணீர்
தந்தனன் தாதை தன்னைத் தடக்கையால் எடுத்துச் சார்வான். (௨௨௧)

ஏந்தினன் இருகைதன்னால் ஏற்றினன் ஈமந்தன்மேல்
சார்ந்தோடுமலரும்நீருஞ்சொரிந்தனன்தலையின்சாரல்
காந்தெரிகஞலமூட்டிக்கடன்முறைகடவாவண்ணம்
நேர்ந்தனன்நிரம்புந்நன்னூல்மந்திரநெறியின்வல்லான். (௨௨௨)

கிளித்தனகளித்தமேனிதாமரைக்கெழுவுசெம்பூத்
துளித்தன அனையஎன்னத்துள்ளிசோர்வெள்ளேக்கண்ணன்
குளித்தனன்கொண்டலாற்றுக்குளித்தபின்கொண்டநன்னீர்
அளித்தனன்அரக்கர்ச்செற்றசீற்றத்தான்அவலந்தீர்ந்தான். (௨௨௩)

மீட்டினிஉரைப்பதென்னேவிரிஞ்சனேமுதலமேல்கீழ்
காட்டின உயிர்கள்எல்லாம்அருந்தின களித்தபோலாம்
பூட்டியகைகளால்அப்புள்ளினுக்கரசைக்கொள்கென்
றூட்டியநன்னீர் ஐயன்உண்டநீர்ஒத்ததன்றே. (௨௨௪)

பல்வகைத்துறையும்வேதப்பலிக்கடன்பலவுமாற்றி
வெல்வகைக்குமரன்நின்றவேலையின்வேலைசார்ந்தான்
தொல்வகைக்குலத்தின்வந்தான்துன்பத்தாற்புனலுந்தோய்ந்து
செல்வகைக்குரியஎல்லாஞ்செய்குவான்என்னவெய்யோன். (௨௨௫)

௯ - வது. சடாயுவதைப்படலம்முற்றும். ஆக திருவிருத்தம். [௩௬௨]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௰ - வது. அயோமுகிப்படலம்.

அந்திவந்தணுகும்வேலை அவ்வழிஅவருநீங்கிச்
சிந்துரச்சென்னித்தாண்டோர்மைவரைச்சேக்கைகொண்டார்
இந்திரர்க்கடங்கல்செல்லா இராக்கதர்எழுந்ததென்ன
வெந்துயர்க்கூற்றம்ஆனைவிரிஇருள்வீங்கிற்றன்றே. (௧)

தேனுகஅருவிசிந்தித்தெருமரல்உறுவபோலக்
கானமும்மலையும்எல்லாம்கண்ணின்நீர்உகுக்குங்கங்குல்
மானமுஞ்சினமுந்தானைமரணமும்மைந்தர்சிந்தை
ஞானமுந்துயருந்தம்முள்பலையெனநலிந்ததன்றே. (௨)

மெய்யுறஉணர்வுசெல்லா அறிவினைவினையின் ஊக்கும்
பொய்யுறுபிறவிபோலப்போக்கரும்பொங்குகங்குல்
நெய்யுறுநெருப்பின்வீங்கிநிமிர்தரஉயிர்ப்புநீளக்
கையுறவுறுகின்றானாற்காணலாங்கரையிற்றன்றே. (௩)

யாமதுதெரிதல்தேற்றும்இன்நகைச்சலகிஎன்னும்
தாமருதிருவைநீத்தோமுகமதிகாண்கிலாதோ
தேமருதெரியல்வீரன்கண்ணெனத்தெரிந்தசெய்ய
தாமரைகங்குற்போதுங்குவியலாத்தன்மைஎன்றோ. (௪)

பெண்ணியல்தீபம்அன்னபேரொழிலாட்டிமாட்டு
நண்ணியபிரிவுசெய்தநவையிலாநவையின்உள்ளத்
தெண்ணியதறிதல்தேற்றும்இமைத்திலஇராமன்என்னும்
புண்ணியன்கண்ணும்வன்றேட்டம்பிகண்போன்றவன்றே. (௫)

வண்டுளர்கோதைச்சீதைவாண்முகம்பொலியவானில்
கண்டனன்என்றுவீரற்காங்கொருகாதல்காட்டத்
தண்டமிழ்த்தென்றல்என்னும்கோளராத்தவழும்சாரல்
விண்டலம்விளங்கும்செவ்விவெண்மதிவிரிந்ததன்றே. (௬)

களியுடைஅனங்கக்கள்வன்கரந்துறைகங்குற்காலம்
வெளிபடுத்துலகம்எங்கும்விளக்கியநிலவின்வெள்ளம்
நளிஇருட்பிழம்பொன்றீண்டுநஞ்சொடுகலந்தநாகத்
தொளைஎயிற்றூன்றல்உற்றதாமெனச்சுட்டதன்றே. (௭)

இடம்படுமானத்துன்பம்இருடரவெண்ணித்தீர்ந்தான்
விடம்பரந்தனையதாயவெண்ணிலாவெதுப்பவீரன்
படம்பரந்தனையஅல்குற்பால்பரந்தனையஇன்சொல்
தடம்படுகண்ணினாள்தன்தனிமையைநினையலுற்றான். (௮)

வேறு.

மடித்தவாயன்வயங்குஉயிர்ப்பினன்
துடித்துவீங்கிஒடுங்குறுதோளினன்
பொடித்ததண்டளிர்ப்பூவொடுமால்கரி
ஒடித்தகொம்பனையாள்திறத்துன்னுவான். (௯)

வாங்கும்வில்லனும்வரும்வரும்என்றிரு
பாங்கும்நீள்நெறிபார்த்தனளோஎனும்
வீங்கும்வேலைவிரிதிரைஆமென
ஏங்கிஏங்கிஒடுங்கும்உயிர்ப்பினன். (௰)

தன்னில்லைநந்திலள் என்பதுசாலுமோ
பின்னினைந்தவிலங்கும்எயிற்றினன்
நின்னில்என்றுநெருங்கியபோதவள்
என்னினைந்தனளோஎன எண்ணுமால். (௧௧)

நஞ்சுகாலும்நகைநெடுநாகத்தின்
வஞ்சவாயின்மதியெனமட்குவாள்
வெஞ்சினம்செய் அரக்கர்தம்வெம்மையை
அஞ்சினன்கொலென்றையுறுமாலென்பான். (௧௨)

பூண்டமானமும்போக்கருங்காதலும்
தூண்டநின்றிடைதோமுறும்ஆருயிர்
மீண்டுமீண்டுவெதுப்பவெதும்பினன்
வேண்டுமேஎனக்கின்னமும்வில்என்பான். (௧௩)

வில்லைநோக்கிநகும்மிகவீங்குதோள்
கல்லைநோக்கிநகும்கடைக்கால்வரும்
சொல்லைநோக்கித்துணுக்கெனும்தொன்மறை
எல்லைநோக்கினர்யாவரும்நோக்குவான். (௧௪)

கூதிர்வாடைவெங்கூற்றினைநோக்கினன்
வேதவேள்விவிதிமுறைமேவிய
சீதைஎன்வயிற்றீர்ந்தனளோஎனும்
போதிகம்எனப்பொம்என்உயிர்ப்பினன். (௧௫)

நின்றபல்உயிர்காத்தற்குநேர்ந்தயான்
என்றனக்குலமங்கைஓர்ஏந்திழை
தன்றுயர்க்குத்தகவிலன்ஆயினேன்
நன்றுநன்றென்வலியெனநாணுமால். (௧௬)

சாயுந்தம்பிதிருத்தியதண்டளிர்
தீயுமங்கவைதீர்க்கெனும்செல்விருந்
தாயுமனைவிபுழுங்கஅழுங்குமால்
வாயும்நெஞ்சும்புலரமயங்குவான். (௧௭)

பிரிந்தன்றுகொல்பேர்அபிமானம்கொல்
தெரிந்ததில்லைத்திருமலர்க்கண் இமை
பொருந்தஆயிரம்கற்பங்கள்போக்குவான்
இருந்துகண்டிலன்கங்குலின் இறமோ. (௧௮)

வென்றி வேற்கை இளையவன் மேல் எலாம்
ஒன்று போல உலப்பில நாள்கள் தாம்
நின்றநாண்டி அன்றேற நெடுங்கங்குல் தான்
இன்று நீள்வதற்கேதுஎன் என்றுமால். (௧௯)

நீண்ட மாலை மதியினை நித்தமும்
மீண்டுமீண்டு மெலிந்தனை வெள்குவாய்
பூண்ட பூணவன் வாண்முகம் போதர
இன்று சால விளங்கினை என்றுமால். (௨௰)

நீணிலாவின் இசை நிறைதன் குலத்
தாணி ஆயபதிவர அன்னது
நாணி நாடு கடந்தனன் ஆம்கொலோ
சேணுலாம் தனித்தேரவன் என்றுமால். (௨௧)

சுட்ட கங்குல் நெடிதெனச் சோர்கின்றான்
முட்டமைந்த நெடுமுடக் கோடெடு
கட்டிவாளரக்கன் கதிரோனையும்
இட்டனன் கொல் இருஞ்சிறை என்றுமால். (௨௨)

துடியின் நேரிடை தோன்றலன் ஆம்எனில்
கடிய கார் இருள் கங்குலின் கற்பம் போய்
முடியுமாகில் முடியும் இம்மூரி நீர்
நெடியமா நிலம் என்னநினைக்குமால். (௨௩)

திறத்தின் ஆயின செய்தவத்தோர் உற
ஒறுத்து ஞாலத்துயிர்தனை உண்டுடல்
மறத்தினார்கள் வலிந்தனர் வாழ்வரேல்
அறத்தினால் இனி ஆவதென் என்றுமால். (௨௪)

தேனின் தெய்வத் திருநெடு நாண் சிலை
பூணின் றெய்யும் பொருகணை வீரனும்
மேனின் றெய்ய விமலனை நோக்கினான்
தானும் தேர்கிலனாய்த் தடுமாறுவான். (௨௫)

உழந்த யோகத்தொருமுதல் கோபத்தால்
இழந்த மேனியுள் எண்ணி இரங்கினான்
கெழுந்தகைக் கொருவன் மைகிடைக்குமேல்
பழந்துயர்க்குப் பரிவுறும் பான்மையால். (௨௬)

நீலமானநிறத்தன்நினைப்பிடைச்
சூலமாகத்தொலைவுறுமெல்லையின்
மூலமாமலர்முன்னவன்முற்றுறும்
காலமாமெனக்கங்குல்கழிந்ததே. (௨௭)

வேறு.

வெள்ளஞ்சிலம்புபாற்கடலின்விரும்பும்துயிலைவெறுத்தளியின்
கள்ளுஞ்சிலம்பும்பூங்கோதைக்கற்பின்கடலிற்படிவாற்குப்
புள்ளுஞ்சிலம்பும்பொழில்சிலம்பும்புனலுஞ்சிலம்பும்புனைகோவம்
உள்ளுஞ்சிலம்பும்சிலம்பாவால்உயிர்உண்டாகும்வகையுண்டோ. (௨௮)

மயிலும்பெடையும்உடன்திரியமானும்கலையும்மருவிவரப்
பயிலும்பிடியும்கடகரியும்வருவதிரிவபார்க்கின்றான்
குயிலும்கரும்பும்செழுந்தேனும்குழலும்யாழும்கொழும்பாகும்
அயிலும்அமுதும்சுவைநீத்தமொழியைப்பிரிந்தால்அழியாதோ. (௨௯)

முடிநாட்டியகோட்டுதயத்துமுற்றஉற்றான்முதுகங்குல்
விடிநாட்கண்டும்கிளிமிழற்றுமென்சொற்கோளாவீரங்காண
அடிநாட்செந்தாமரைஒதுங்கும்அன்னம்இல்லாலியானடைத்த
கடிநாட்கமலத்தெனஅவிழ்த்துக்காட்டுவான்போல்கதிர்வெய்யோன். (௩௰)

பொழிலைநோக்கும்பொழில்உறையும்புள்ளைநோக்கும்பூங்கொம்பின்
எழிலைநோக்கும்இளமயிலின்இயல்பைநோக்கும்இயல்பாளுள்
குழலைநோக்கிக்கொங்கையிணைக்குவட்டைநோக்கிஅக்குவட்டின்
தொழிலைநோக்கித்தன்னுடையதோளைநோக்கிநாள்கழிப்பான். (௩௧)

அன்னகாலைஇளவீரன்அடியின்வணங்கிநெடியோயப்
பொன்னைநாடாதின்றிருத்தல்பொருளோஎன்னப்புகழோனும்
சொன்னஅரக்கன்இருக்கும்இடம்துருவிஅறிதும்தொடர்ந்தென்ன
மின்னும்சிலையார்மலைதொடர்ந்தவெயில்வெங்கானம்போயினரால். (௩௨)

வேறு.

ஆசைசுமந்தநெடுங்கிரிஅன்னார்
பாசிலைதுன்றுவனம்பலபின்னாக்
காசறுகுன்றினொடாறுகடந்தார்
யோசனைஒன்பதொடொன்பதுசென்றார். (௩௩)

மட்படிசெய்ததவத்தினில்வந்த
கட்படிகோதையைநாடினர்காணார்
உட்படிகோபம்உயிர்ப்பொடுபொங்கப்
புட்படியுங்குளிர்கார்ப்பொழில்புக்கார். (௩௪)

ஆரியர்சிந்தை அலக்கண் அறிந்தான்
நாரியை எங்கணும் நாடினன் நாடிப்
பேருலகெங்குட் உழன்றனன் பின்னை
மேருவை வெங்கதிர் மீள மறைந்தான். (௩௫)

ஆண்டருகுஞ் செறி அஞ்சன புஞ்சம்
முரண்டன போல் இருள் எங்கணும் மூர்தத்
தெருண்டறிவில்லவர் சிந்தையின் மூந்தி
இருண்டன மாதிரம் எட்டும் இரண்டும். (௩௬)

இளிக்கறை இன் சொல் இயைந்தன பூவை
கிளிக்கறையும் பொழில் கிஞ்சுக வேலி
ஒளிக்கறை மண்டலம் ஒத்துள தாங்கோர்
பளிக்கறை கண்டதில் வைகல் பயின்றார். (௩௭)

அவ்விடை எய்திய அண்ணல் இராமன்
வெவ்விடை போல் இளவீரனை வீர
இவ்விடை நாடினை நீர் கொணர் கென்றான்
தெவ்விடை வில்லவனும் தனி சென்றான். (௩௮)

எங்கணும் நாடினன் நீர் இடைகாணான்
திங்கள் எனத் தமியன் திரிவானை
அங்கவனத்துள் அயோமுகி யான
வெங்கண் அரக்கி விரும்பினள் கண்டாள். (௩௯)

நன்மதியோர் புகல் மந்திர நாமச்
சொன்மதியா அரவிற் றொடர்கிற்பாள்
தன்மதனோடு தன் வெம்மை தணிந்தாள்
மன்மதனும் இவன் என்னு மனத்தாள். (௪௰)

அழுந்திய சிந்தை அரக்கி அலக்கண்
எழுந்துயர் காதலின் வந்தெதிர் நின்றாள்
புழுங்கு மென் நோவொடு புல்லுவன் அன்றி
விழுங்குவனே என விம்மல் உழன்றாள். (௪௧)

இரந்தனன் எய்திய போதிசையாது
கரந்தனனேல் நனி கொண்டு கடந்தென்
உரந்தனில் மேவி உயங்குவன் என்று
விரைந்தெதிர் வந்தனள் தீயினும் வெய்யாள். (௪௨)

உயிர்ப்பின்நெருப்புமிழ்கின்றனள்ஒன்ற
எயிற்றின்மலைக்குலம்மென்றினிதுண்ணும்
வயிற்றவயக்கொடுமாகணம்வீசு
கயிற்றின்இசைத்தமுலைக்குழிகண்ணாள். (௪௩)

பற்றியகோளரியாளிபணிக்கண்
தெற்றியபாதகிலைப்புகிலம்ப
இற்றுகயாவையும்இற்றுறும்அந்நாள்
முற்றியஞாயிறுபோலும்முகத்தாள். (௪௪)

ஆழிவறக்கமுகக்கஅமைந்த
மூழையெனப்பொலிமொய்ப்பிலவாயாள்
கூழைபுறத்துவிரிந்ததொர்கொட்பால்
ஊழிநெருப்பின்உருத்தனைஒப்பாள். (௪௫)

தடிதடவத்தலைபலதழுவத்தாள்
நெடிதடையக்குடர்கெழுமுநிணத்தாள்
படிதடவப்பலபாவம்இசைக்கும்
கடிதடவத்தினள்உருமுகறிப்பாள். (௪௬)

இவைஇறைஒப்பனஎன்னவிழிப்பாள்
அவைகுளிரக்கடிதழலும்எயிற்றாள்
குவைவருலையக்கடல்குவியஅலைப்பாள்
நவைஇல்புவித்திருநாணநடப்பாள். (௪௭)

நீளரவச்சரிதாழ்கைநிறைத்தாள்
ஆளரவப்புலிஆரம்அணைத்தாள்
யாளியினைப்பலதாலிஇசைத்தாள்
கோளரியைக்கொடுதாழ்குழைஇட்டாள். (௪௮)

நின்றனள்ஆசையின்நீர்கலுழுங்கண்
குன்றிநிகர்ப்பகுளிர்ப்பவொளிப்பாள்
மின்றிரிகின்றஎயிற்றின்விளக்கால்
கன்றிருளிற்றிரிகோளரிகண்டான். (௪௯)

பண்டையில்நாசிஇழந்துபதைக்கும்
திண்டிறலாளொடுதாடகைசீராள்
கண்டகராயஅரக்கர்கணத்தோர்
ஒண்டொடியாம்இவள்என்பதுணர்ந்தான். (௫௰)

பாவியராம் இவர் பண்பிலர் நம்பால்
மேவிய காரணம் வேறிலை என்பான்
மாவியல் கானின் வயங்கிருள் வந்தாய்
யாவள் அடி உரைசெய் கடிதென்றான். (௫௧)

பேசினன் அங்கவள் பேசுற நாணுள்
ஊசலுழன்றழி சிந்தையளுந்தான்
நேசமில் அன்பினள் ஆயினும் நின்பால்
ஆசையின் வந்த அயோமுகி என்றாள். (௫௨)

பின்னும் உரைப்பவள் பேரொழில் வீரா
முன்னம் ஒருத்தர் தொடா முலையோடும்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்தென்
இன்னுயிரைக் கடிதீகுதி என்றாள். (௫௩)

ஆறிய சிந்தையள் அஃதுரை செய்யச்
சீறிய கோளரி கண்கள் சிவந்தான்
மாறில வார்கணை இவ்வுரை வாயிற்
கூறிடில் நின் உடல் கூறிடும் என்றான். (௫௪)

மற்றவன் அவ்வுரை செப்ப மனத்தால்
செற்றிலள் கைத்துணை சென்னியின் வைத்தாள்
கொற்றவ நின்னை வந்துயிர் கொள்ளப்
பெற்றிடின் இன்று பிறந்தனன் என்றாள். (௫௫)

வெங்கதம் இல்லவள் பின்னரும் மேலோய்
இங்கு நறும்புனல் நாடுதி என்னின்
அங்கையினல்லனை அஞ்சலை என்றால்
கங்கையின் நீர் கொணர்வன் கடிதென்றாள். (௫௬)

சுமித்திரை சேய் அவள் சொன்ன சொல் அன்ன
கமித்திலன் நின் இருகால் தொடும் நாசி
துமிப்பதன் முன் பகல் என்பது சொல்ல
இமைத்திலள் நின்றனள் இன்ன நினைந்தாள். (௫௭)

எடுத்தனன் ஏகினன் என்றுமை தன்னுள்
அடைத்திவன் வெம்மை அகற்றிய பின்னை
உடற்படுமால் உடனே உறும் நன்மை
இடத்திது வேறலின் என்றயல் சென்றாள். (௫௮)

மோகனை எய்பது முந்தி முயன்றாள்
மாக நெடுங்கிரி போலியை அவ்வா
ஏகினள் உம்பரின் இந்துவோடேகும்
மேகம் எனும்படி நொய்தினின் வெய்யாள். (௫௯)

மந்தரம் வேலையில் வந்ததும் வானத்
திந்திரன் ஊர்பிடி என்னலும் ஆனாள்
வெந்திறல் வேல்கொடு சூர் அடும் வீரச்
சுந்தரன் ஊர்தரு தோகையும் ஒத்தாள். (௬௰)

ஆங்கவள் மார்பொடு கையின் அடங்கிப்
பூங்கழல் வார்சிலை மீளி பொலிந்தான்
வீங்கிய வெஞ்சின வீழ்மத வெம்போர்
ஓங்கல் உரிக்கும் உருத்திரன் ஒத்தான். (௬௧)

இப்படி ஏகினள் அன்னவள் இப்பால்
அப்பிடை தேடி நடந்தனன் ஆவித்
துப்புடை மால்வரை தோன்றலன் என்று
வெப்புடை மெய் உடை வீரன் விரைந்தான். (௬௨)

வேறு.

வெய்தாகிய கானிடை மேவரு நீர்
ஐதாதலினே அயல் ஒன்றுளதோ
நொய்தாய் வரவேகமும் நொய்திலனால்
எய்தாதொழியான் இது என்னை கொலாம். (௬௩)

நீர்கண்டனை இவ்வழி நேடினை போய்ச்
சார்கொண்டனை இத்துணை சார்கிலனால்
வார்கொண்டணி கொங்கையை வவ்வினர்பால்
போர்கொண்டனனே பொருள் உண்டிதெனா. (௬௪)

அஞ்சொற்கிளி அன்ன அணங்கினை முன்
வஞ்சித்த இராவணன் வவ்விலனே
நஞ்சிற்கொடியான் நடலைத் தொழிலால்
துஞ்சுற்றனனே விதியின் துணிவால். (௬௫)

வரிவிற்கை என் ஆருயிர் வந்திலனால்
தருசொற்கருகே தன் ஒருதையலை யான்
பிரிவுற்றனன் என்பதொர் பிழை பெருகத்
தெரிவுற்றிட ஆவி இழந்தனனே. (௬௬)

உண்டாகியகாரிருளொடொருவென்
கண்டான்அயல்வேறொருகண்ணிலனுல்
புண்டானுறநெஞ்சுபுழுங்குறுவென்
எண்டானிலன்எங்ஙனம்நாடுகேனே. (௬௭)

தள்ளாவினையேன்தனியாருயிராய்
உள்ளாய்ஒருநீயும்ஒளித்தனையோ
பிள்ளாய்பெரியாய்பிழைசெய்தனையால்
கொள்ளாஉலகுன்னைஇதோகொடிதே. (௬௮)

பேராஇடர்வந்தனபேர்க்கவலாய்
தீராஇடர்தந்தனைதெவ்வர்தொழும்
வீராஎனைஇன்றுவெறுத்தனையோ
வாராய்ப்புறம்இத்துணைவைகுதியோ. (௬௯)

என்னைத்தரும்எந்தையையன்னையைப்
பொன்னைப்பொருவின்றபொலன்குழையாள்
தன்னைப்பிரிவேன்உளன்ஆவதுதான்
உன்னைப்பிரியாதஉயிர்ப்பலவோ. (௭௰)

பொற்றோடிவர்கின்றபொலன்குழையாள்
தற்றேடிவருந்துதவம்புரிவேன்
நிற்றேடிவருந்தநிரப்பினையோ
எற்றேடினைவந்தஇளங்களிறே. (௭௧)

இன்றேஇறவாதொழிவேன்எமரோ
பொன்றாதொழியார்புகல்வார்உளரோ
ஒன்றாகியஉன்கிளையோரெலாம்
கொன்றாய்கொடியாய்இதுவுங்குணமோ. (௭௨)

மாந்தாமுதல்மன்னவர்தம்வழியில்
வேந்தாகைதுறந்தபின்மெய்உறவோர்
தாந்தாம்ஒழியத்தமியேன்உடனே
போந்தாய்எனைவிட்டனைபோயினையோ. (௭௩)

என்றுஉரையாஎழும்வீழும்இருந்
துன்றுஉணர்வோய்வுறும்ஒன்றலவால்
மின்றுதிடியாதிருள்வாய்விளவி
தென்றுஎனுமென்தனிநாயகனே. (௭௪)

நாடும்பலசூழல்கள்தோறுந்தடந்
தோடும்பெயர்சொல்லிஉளைந்துயிர்போய்
வாடும்வகைசோரும்மயங்குறுமால்
ஆடுங்களிமாமதயானைஅனுன். (௭௫)

கமையாளொடும்என்உயிர்காவலின்நின்
றிமையாதவன்இத்துணைதாழ்வுறுமோ
சுமையால்உலகூடுழல்தொல்வினையேன்
அமையாதுகொல்வாழ்வறியேன்எனுமால். (௭௬)

அறப்பாலுளரேதல்அவன்முன்னவனாய்ப்
பிறப்பாலுறில்வந்துபிறககவெனு
மறப்பால்வடிவாள்கொடுமன்உயிரைத்
துறப்பான்உறுகின்றதொடர்ச்சியின்வாய். (௭௭)

பேர்ந்தான்நெடுமாயையினிற்பிரியா
ஈர்ந்தான்அவள்நாசிபிடித்திளையோன்
சோர்ந்தாள்இடுபூசல்செவித்தொளையில்
சேர்ந்தார்தனுமேதிருமால்தெருளா. (௭௮)

வேறு.

பாரற்றருகானகத்தரக்கர்பல்கழல்
மூரற்றருவெஞ்சமம்மூரல்கின்றார்எதிர்
உரற்றியஓசையன்ஒருத்திஊறுபட்
டரற்றியகுரல்அவள்அரக்கியேகொலாம். (௭௯)

அங்கியின்நெடும்படைவாங்கிஅங்கது
செங்கையிற்கரியவன்றிரிக்கும்எல்லையில்
பொங்கிருள்அப்புறத்துலகம்புக்கது
கங்குலும்பகலெனப்பொலிந்துகாட்டிற்றே. (௮௰)

நெடுவரைபொடிபடநிவந்தமாமரம்
ஒடிவுறநிலமகள்உலையஎங்கெலாம்
சடசடஎனும்ஒலிதழைப்பத்தாக்கவும்
முடுகினன்இராமன்வெங்காலின்மும்மையான். (௮௧)

ஒருங்குயர்ந்துலகின்மேல்ஊழிப்பேர்ச்சியுள்
கருங்கடல்வருவதேஅனையகாட்சித்தன்
பெருந்துணைத்தம்முனைநோக்கிப்பின்னவன்
வருந்தலைவருந்தலைவள்ளியோய்என்று. (௮௨)

வந்தனன் அடியனேன் வருந்தல் வாழி நின்
அந்தயில் உள்ரமென்றறியக் கூறுவான்
சந்தமென்றளிர்புரை சரணம் சார்ந்தனன்
சிந்தினை நயனம்வந்தனைய செய்கையான். (௮௩)

ஊற்றுறு கண்ணில் நீர் ஒழுக நின்றவன்
ஏற்றிளங்கன்றினைப் பிரிவுற்றெங்கணும்
ஆற்றலின் ஆற்றுவதரிதின் எய்திய
பாற்றிரம் பால்முலை ஆவின் பான்மையான். (௮௪)

தழுவினன் பன்முறை தாரைக்கண்ணின் நீர்
கழுவினன் ஆண்டவன் கனகமேனியை
வழுவினையாமென மனக்கொண்டேகினேன்
எழுவென மலையென இயைந்த தோளினாய். (௮௫)

என்னை அங்கெய்தியதியற்புவாயென
அன்னவன் அஃதெலாம் அறியக் கூறலும்
இன்னலும் உவகையும் இரண்டும் எய்தினான்
தன்னவாதொருபொருள் தனக்குமேவ இலான். (௮௬)

ஆய்வுறு பெருங்கடல் அகத்துள் ஏயவன்
பாய்திரை வருதொறும் பரிதற்பாலதாம்
தீவினைப் பிறவி வெஞ்சிறையிற் பட்டயாம்
நோய்வுறுதுயரென நுடங்கல் நோன்மையோ. (௮௭)

மூவகை அமரரும் உலகம் மும்மையும்
மேவரும் பகை எனக்காக மேல்வரின்
ஏவரோ கடப்பவர் எம்பி நீயுளை
யாவதே வலி இனி அரணும் வேண்டுமோ. (௮௮)

பிரிபவர் யாவரும் பிரிக பேரிடர்
வருவன யாவையும் வருக வார்கழல்
செருவலி வீர நிற்றீரும் அல்லது
பருவரல் என்வயிற் பயிலற்பாலதோ. (௮௯)

வன்றொழில் வீர போர் வலி அரக்கியை
வென்றுபோர் மீண்டனன் என விளம்பினாய்
புன்றொழில் அனையவள் புகன்ற சீற்றத்தால்
கொன்றிலை போலுமால் கூறுவாய் என்றான். (௯௰)

தொளைபடுமூக்கொடுசெவிதுமித்துத்
தளைவயின்நகிலொடுதடிந்துநீக்கிய
அரவையிற்பூசலிட்டரற்றினாளென
இளையவன்விளம்பிநின்றிருகைகூப்பினான். (௬௧)

தொல்விருள்தனைக்கொலத்தொடர்கின்றாளையும்
கொல்லலைநாசியைக்கொய்துநீக்கினாய்
வல்லைநீயனுமுதல்மரபிலேனாய்எனப்
புல்லினன்உவகையிற்பொருமிவிம்முவான். (௬௨)

போருந்துயர்அறப்பேர்ந்துளோனென
வீரனும்தம்பியும்விடிவுநோக்குவார்
வாருணைநினைந்தனர்வானநீரினால்
தாரணித்தங்கொருகிரியிற்றங்கினார். (௬௩)

கல்லகல்வெள்ளிடைக்கானகத்துள
பல்லவமலர்கொடுபடுத்தபாயலின்
எல்லையில்துயரினோடிருந்துசாய்ந்தனன்
மெல்லடிஇளையவன்வருடவீரனே. (௬௪)

மயிலியல்பிரிந்தபின்மானநோயினால்
அயில்விலன்ஒருபொருள்அவலம்எய்தலால்
துயில்விலன்என்பதுசொல்லற்பாலதோ
உயிர்நெடிதுயிர்ப்பிடைஊசல்ஆடுவான். (௬௫)

மானவள்மெய்இறைமறக்கலாமையில்
ஆனதோஅன்றெனில்அரக்கர்மாயமோ
கானகம்முழுவதும்கண்ணில்நோக்கும்கால்
சானகிஉருவெனத்தோன்றும்தன்மையே. (௬௬)

கருங்குழற்சேயரிக்கண்ணிற்கற்பினோர்க்
கருங்கலம்மருங்குவந்திருப்பஆசையால்
ஒருங்குறத்தழுவுவன்ஒன்றும்காண்கிலன்
மருங்குல்போல்ஆனதோவடிவும்மெல்லவே. (௬௭)

புண்டரீகப்புதுமலரித்தேன்பொதி
தொண்டையஞ்சேயொளிதுவர்த்தவாய்அமு
துண்டனன்ஈண்டவள்உழையள்அல்லளால்
கண்டுயில்அன்றியும்கனவுண்டாகுமோ. (௬௮)

மண்ணினும்வானினும்மற்றைமூன்றினும்
எண்ணினும்பெரியதோர்இடர்வந்தெய்தினால்
தன்னைநாங்கருங்குழற்சனகன்மாமகள்
என்னினும்நெடியதோகொடியகங்குலே. (௯௯)

அப்புடைஅலங்குமீன்அமரும்ஆர்கலி
உப்புடைஇந்துவென்றுதித்தஊழித்தீ
வெப்புடைவிரிகதிர்விரிப்பமெய்எலாம்
கொப்புளம்பொடித்ததோகொதிக்கும்வானமே. (௱)

இன்னன இன்னனபன்னிஇடழி
மன்னவர்மன்னவன்மதிமயங்கினான்
அன்னதுகண்டனன்அல்கினான்எனத்
துன்னியசெங்கதிர்ச்செல்வன்தோன்றினான். (௱௧)

௰ - வது. அயோமுகிப்படலம்முற்றும். ஆ திருவிருத்தம். [௩௱௩௩]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௧௧ - வது. கவந்தன்படலம்.

நிலம்பொறைஇலதெனநிமிர்ந்தகற்பினள்
நலம்பொறைகூர்தரும்மயிலைநாடிய
அலம்புறுபறவையும்அழுவவாமெனப்
புலம்புறுவிடியலிற்கடிதுபோயினார். (௧)

வேறு.

ஐயைந்துபடுத்தயோசனையின்இரட்டிஅடவிபுடைபடுத்த
வையந்திரிந்தார்கதிரவனும்வானின்நாப்பண்வந்துற்றான்
எய்யுஞ்சிலைக்கைஇருவரும்சென்றிருந்தேநீட்டிஎவ்வுயிரும்
கையின்வளைத்துவயிற்றடக்குங்கவந்தன்வனத்தைக்கண்ணுற்றார். (௨)

வேறு.

வெறுப்பினங்கடையுறயானையேமுதல்
உறுப்புடைஉயிரெலாம்உலைந்துசாய்ந்தன
வெறிப்புறநோக்கினவெருவுகின்றன
பறிப்பரும்வலையிடைப்பட்டபான்மைய. (௩)

மாடுளிதிறந்திலன்புக்கும்மாண்பிலன்
உரலிலாம் ஒருவன்நாட்டுயிர்கள்போல்வன
வெருவுவசிந்துவகுவிவவிம்மலோ
டிரிவனமயங்குவஇயல்புநோக்கினார். (௪)

மால்வரை உருண்டனவருவமாமரம்
கால்பறிந்திடுவன கானயாறுகள்
மேலுளதிசையொடுவெளிகரப்பன
சூல்முதிர்மேகங்கள்சுருண்டுவீழ்வன. (௫)

நாற்றிசைப்பரவையும்இறுதிநாள்உறக்
காற்றிசைத்தெழஎழுந்துலகைக்கால்பரத்
தேற்றிசைதுரந்துவந்திடுங்கின்றன
போற்றிசைசுற்றியகரத்துப்புக்குளார். (௬)

தேமொழிதிறத்தினல் அரக்கர்சேனைவந்
தேமுறவளைந்ததென்றுவகைஎய்தினார்
நேமிமால்வரைவரநெருக்குகின்றதே
ஆமெனல்ஆயதைமதிட்குள்ஆயினார். (௭)

இளவலைநோக்கினன்இராமன்ஏழையை
உளவுசெய்இராவணன்உறையுமூரும்இவ்
அளவையதாகுதல்அறிதிஐயநம்
கிளர்பெருந்துயரமுங்கீண்டதாமென. (௮)

முற்றியஅரக்கர்தம்முழங்குதானையேல்
எற்றியமுரசொலின்னுஞ்சங்கிசை
பெற்றிலதாதலிற்பிறிதொன்றாமெனச்
சொற்றனன்இளையவன்தொழுதுமுன்னினான். (௯)

தெள்ளியஅமுதெழத்தேவர்வாங்கிய
வெள்ளெயிற்றரவந்நாண்வேறோர்நாகந்தான்
தள்ளரும்மாளொடுதலையினால்வளைத்
துள்ளுறக்கவர்வதேஒக்குமூழியாய். (௰)

என்றிலைவிளம்பியஇளவல்வாசகம்
நன்றெனநினைந்தனன்நடந்தநாயகன்
ஒன்றிரண்டியோசனைஉள்புக்கோங்கல்தான்
நின்றெனஇருந்தஅக்கவந்தன்நேர்சென்றார். (௧௧)

வெயிற்சுடர் இரண்டினைமேருமால்வரை
குயிற்றியவாமெனக்கொதிக்குங் கண்ணினன்
எயிற்றிடைக்கிடைஇருகாதம்இட்டிய
வயிற்றிடைவாயெனும்மகரவேலையான். (௧௨)

ஈண்டியபுலவரோடவுணர் இந்துவைத்
தீண்டியநெடுவரைத்தெய்வமத்தினைப்
பூண்டுயர்வடம் இருபுடையும்வாங்கலின்
நீண்டெனக்கிடந்தனநிமிர்ந்தகையினான். (௧௩)

தொகைக்கனற்கருமகன் துருத்தித்தூம்பெனப்
புகைக்கொடிகளொடும்பொடிக்கும்மூக்கினான்
பகைத்தகைநெடுங்கடற்பருகும்பாவகன்
சிகைக்கொழுந்திதுவெனத்திருகுநாவினான். (௧௪)

புரண்டுபாம்பிடைவரவெருவிப்புக்குறை
அரண்டனைநாடியோர்அருவிமால்வரை
முரண்டொகுமுழைநுழைமுழுவெண்திங்களை
இரண்டுகூறிட்டெனஇலங்கெயிற்றினான். (௧௫)

ஓதநீர்மண்ணிவைமுதலஓதிய
பூதமோர்ஐந்தினிற்பொருந்திற்றன்றியே
வேதநூல்வரன்முறைவிதிக்கும்அப்பெரும்
பாதகம்திரண்டுயிர்படைத்தபண்பினான். (௧௬)

வெய்யவெங்கதிர்களைவிழுங்கும்வெவ்வராச்
செய்தொழில்இலைதுயில்செவியின்தொள்ளையான்
பொய்கிளர்வன்மையிற்புரியும்புன்மையோர்
வைகுறுநரகையும்நகும்வயிற்றினான். (௧௭)

முற்றியஉயிரெலாம்முருங்கவாரித்தான்
பற்றியகரத்தினன்பணைத்தபண்ணையிற்
றுற்றியபுகுதரும்தோற்றத்தால்யமன்
கொற்றவாய்தற்செயல்குறித்தவாயினான். (௧௮)

ஓலமார்கடலெனமுழங்கும்ஓதையான்
ஆலமேஎனஇருண்டமைந்தஆக்கையான்
நீலமால்நேமியிற்றலையைநீக்கிய
காலநேமியிற்பெருங்கவந்தக்காட்சியான். (௧௯)

தாக்கியதனைப்பிலக்கால்எறியத்தன்னுடை
மேக்குயர்கொடுமுடிஇழந்தமேருநேர்
ஆக்கையின் இருந்தவன் தன்னை அவ்வழி
நோக்கினர் இருவரும் நுணங்குகேள்வியார். (உ௰)

நீர்புகுநெடுங்கடல் அடங்குநேமிசூழ்
பார்புகுநெடும்பகுவாயைப்பார்த்தனர்
சூர்புகல் அரியதோர் அரக்கர்தொல்மதில்
ஊர்புகுவாயிலோ இது என்றுன்னினார். (உக)

அவ்வழி இளையவன் அமர்ந்துநோக்கிய
வெவ்வியதொருபெரும்பூதம்வில்வலாய்
வவ்வியதன்கையின்வளைத்துவாய்ப்பெய்யும்
செய்வதென் இவணெனச்செம்மல்சொல்லுவான். (உஉ)

பாரிடமேஇதுபரவைசுற்றுறும்
பாரிடம் அரிதெனப்பரந்தமெய்யது
பாரிடம்வலம்வரப்பரந்தகையது
பாரிடந்தெடுத்தமாவனையபாழியாய். (உ௩)

தோகையும்பிரிந்தனள்எந்தைதுஞ்சினன்
வேகவெம்பழிசுமந்துழலவேண்டலேன்
ஆகலின்யான் இனிஇதனுக்காமிடம்
ஏகுதிஈண்டுநின் றிளவலேஎன்றான். (உ௪)

என்றவர் இடர்படஎம்பிதுன்புறச்
சான்றவர் துயர்உறப்பழிக்குஞ்சார்வுமாய்த்
தோன்றலின் என் உயிர் துறந்தபோதலால்
ஊன்றியபெரும்பழிதுடைக்கஒண்ணுமோ. (உ௫)

இல்லியல்புடையநீர் அளித்த இன்சொலாம்
வல்லியவ் அரக்கர் தம்மனையுளாள்எனச்
சொல்லினன் மலைஎனச்சுமந்த தூணியன்
வில்லினன் செல்வனே மிதிலைவேந்தன்பால். (உ௬)

தளைஅவிழ்கோதையைத்தாங்கல் ஆற்றலன்
இளைபுரிந்தளித்தல்மேல் இவர்ந்தகாதலன்
உரைஎனஉரைத்தலின் உம்பரான்என
விளைதல்நன்றாதலின் விளிதல்நன்றென்றான். (உ௭)

வேறு.

ஆண்டான் அன்னயன்னிட ஐயத்திளைவீரன்
ஈண்டியான் உன்பின் ஏகியபின் இவ் இடர்வந்து
மூண்டால் முன்னே ஆருயிரோடும் முடியாதே
மீண்டே போதற்காமெனில் நன்றென் வினை என்றான். (௨௮)

என்றான் என்னாப்பின்னும் இசைப்பான் இடர்தன்னை
வென்றார் அன்றே வீரர்கள் ஆவார் விரவாரில்
தன்றாய் தந்தை தம்முன் எனுந்தன்மையர் முன்னே
பொன்றான் என்றால் நீங்குவதன்றே புகழ் அம்மா. (௨௯)

மானே அன்னாள் தன்னொடு தப்பான் வரையாரும்
கானே வைகக் கண்டுயில் கொள்ளாதயல் காத்தத்
காணென்னேனென்றவர் முன்னே அவரின்றித்
தானே வந்தான் என்றலின் வேறோர் தவறுண்டோ. (௩௰)

என்றாய் உன்முன் ஏவிய யாவும் இசை இன்னல்
பின்றாதெய்திப் பேரிசையாளர்க் கழிவுண்டேல்
பொன்றாமுன்னம் பொன்றுதி என்றாள் உரை பொய்யா
நின்றால் அன்றே நிற்பது வாய்மை நிலை அம்மா. (௩௧)

எற்பெற்றாளும் யானும் எனைத்தோர் வகையாலும்
நிற்பெற்றாற்கும் நிற்கும் நினைப்புப் பிழையாமல்
நற்பொற்றோளாய் நல்லவர் பேண நனிநிற்கும்
சொற்பெற்றால் மற்றாருயிர் பேணித் துறவேமால். (௩௨)

ஓதுங்கால் அப்பல் பொருள் முற்றுற்றொருவாத
வேதஞ் சொல்லும் தேவரும் வீயும் கடைவீயாய்
மாதங்கம் தின்றுய்ந்திவ் வனத்தின் தலைவாழும்
பூதங் கொல்லப் பொன்றுதி போலும் பொருள் உண்டோ. (௩௩)

கேட்டார் கொள்ளார் கண்டவர் பேணார் கிளர் போரில்
தோட்டார் கோதைச் சோர்குழல் தன்னைத் துவளாமல்
விட்டான் என்னும் பேரிசை கொள்ளான் செருவெல்ல
மாட்டான் மாண்டான் என்றபின் மேலும் வசை உண்டோ. (௩௪)

தணிக்கும் தன்மைத் தன்றெனிலன்றித் தகைவாளால்
கணிக்கும் தன்மைத் தல்லவிடத்தின் கனல்பூதம்
பிணிக்குங் கையும் மெய்ப்பில வாயும் பிழையாமல்
துணிக்கும் வண்ணங் காணுதி துன்பந் துறவென்றான். (௩௫)

என்றான்முன்னேசெல்லும்இளங்கோஇறையோற்கு
முன்னேசெல்லமுன்னவன் அன்றனினும்முந்தத்
தன்னேரில்லாத்தம்பிதடுப்பான்பிறர்இல்லை
அன்றுகண்டார்உம்பரும்வெய்துற்றழுதாரால். (௧௬)

வேறு.

இனையராகிய இருவரும்முகத்திருகண்போல்
கனையும்வார்கழல்வீரர்சென்றணுகலும்கவந்தன்
வினையின்எய்தியவீரர்நீர்யாவர்கொல்என்ன
நினையும்நெஞ்சினர்இமைத்திலர்உருத்தனர்நின்றார். (௧௭)

அழிந்துளார் அலர்இகழ்ந்தனர்என்னைஎன்றழன்றான்
பொழிந்தகோபத்தன்புதுப்பொறிமயிர்ப்புறம்பொடிப்ப
விழுங்குவேன்எனவீங்கலும்விண்உறவீரர்
எழுந்ததோள்களைவாள்களால்அரிந்தனர்இட்டார். (௧௮)

கைகள்அற்றுக்குருதியாறொழுகியகவந்தன்
மெய்யின்மேற்கொடுகிழக்குறப்பெருநெறிவிரவும்
சையமாநெடுந்தாழ்வரைத்தலைவரைதன்னோ
டையம்நீங்கியபேரொழில்உவமையன்ஆனான். (௧௯)

ஆனும்நாயகன்அங்கையிற்றீண்டியஅதனால்
ஊனும்சாபத்தின்முந்தியதீவினைமுடித்தான்
தோனும்வாங்கியதோமுடையாக்கையைத்துறவா
நீரம்நீங்கியபறவையின்விண்ணுறநிமிர்ந்தான். (௨௰)

விண்ணின்நின்றவன்விரிஞ்சனேமுதலினர்யார்க்கும்
கண்ணின்நின்றவன்இவனெனக்கருத்துறஉணர்வான்
எண்ணில்அன்னவன்குணங்களைவாய்திறந்திசைத்தான்
புண்ணியப்பயக்கின்றுழிஅரியதெப்பொருளே. (௨௧)

வேறு.

ஈன்றவனேஎப்பொருளும்எல்லைதீர்நல்லறத்தின்
சான்றவனேதேவர்தவத்தின்தனிப்பயனே
மூன்றுகவடாய்முளைத்தெழுந்தமூலமே
தோன்றிஇருவினையேன்சாபத்திடர்தொடைத்தாய். (௨௨)

மூலமேஇல்லாமுதல்வனேநீமுயலும்
கோலமேயார்க்கும்தெரிவரியகொள்கையாய்
ஆலமோஆலின்அடையோஅடைகிடந்த
பாலனோஆதிப்பரனோயகராயே. (௨௩)

காண்பார்க்குங்காணப்படுபொருட்குங்கண்ணாகிப்
பூண்பாய்போல்நிற்றியால்யாதொன்றும்பூணாதாய்
மாண்பால்உலகைவயிற்றொளித்துவாங்குதியால்
ஆண்பாலோபெண்பாலோஅப்பாலோஎப்பாலோ. (௪௪)

ஆதிப்பிரமனும்நீஆதிப்பரமனும்நீ
ஓதியறிபொருளுக்கப்பால்உண்டாகிலும்நீ
சோதிச்சுடர்ப்பிழம்புநீஎன்றுசொல்லுகின்ற
வேதத்துறைசெய்தால்வெள்காரோவேறுள்ளார். (௪௫)

எண்டிசையுந்திண்சுவராக்கீழ்மேனிலைவகுத்த
அண்டப்பெருங்கோயிற்கெல்லாம்அழகுடைய
மண்டலங்கள்மூன்றின்மேலென்றும்மலராத
புண்டரிகமொட்டின்பொகுட்டேபுரையம்மா. (௪௬)

மண்பால்அமரர்வரம்பாருங்காணாத
எண்பால்உயர்ந்தஎரிஓங்குநல்வேள்வி
உண்பாய்நீயூட்டுவாய்நீஇரண்டும்ஒக்கின்ற
பண்பார்அறிவார்பகராய்பரமேட்டி. (௪௭)

நிற்கும்நெடுநீத்தநீரின்முளைத்தெழுந்த
மொக்குளேபோல்முரணிற்றஅண்டங்கள்
ஒக்கஉயர்ந்துளவேதோன்றிஒளிக்கின்ற
பக்கம்அறிதற்கெளிதோபரம்பரனே. (௪௮)

நின்செய்கைகண்டுநினைந்தனவோநீண்மறைகள்
உன்செய்கைஅன்னவைதான்சொன்னஒழுக்கினவோ
என்செய்தேன்முன்னம்அறம்செய்கையெய்தினார்
பின்செல்வதில்லாப்பெருஞ்செல்வம்நீதந்தாய். (௪௯)

மாயப்பிறவிமயல்நீக்கிமாசிலாக்
காயத்தைநல்கித்துயரின்கரையேற்றிப்
பேயொத்தேன்பேதைப்பிணக்கறுத்தஎம்பெருமான்
நாயொத்தேன்என்னநலன்இழைத்தேன்நான்என்றான். (௫௰)

என்றாங்கினிதியம்பிஇன்றறியக்கூறுவனேல்
ஒன்றாதுதேவர்உறுதிக்கெனஉன்னுந்
தன்றாயைக்கண்ணுற்றகன்றனையதன்மையனாய்
நின்றானைக்கண்டான்நெறிநின்றார்நேர்நின்றான். (௫௧)

பாராய் இளையவனே பட்ட இவன் வேறேயோர்
போராளன் தானாய் ஒளியோங்கும் பெற்றியனாய்
நேராகாயத்தின் மிசை நிற்கின்றான் நீ இவனை
ஆராய் என அவனும் ஆர்கொலோ நீ என்றான். (௫௨)

வேறு.

சந்தப்பூண் அலங்கல் வீரதனு எனும் நாமத்தேன் ஓர்
கந்தர்ப்பன் சாபத்தால் இக்கடைப்படு பிறவி கண்டேன்
வந்துற்றீர் மலர்க்கை தீண்ட முன்னுடை வடிவம் பெற்றேன்
எந்தைக்கும் எந்தை நீரே இசைப்பது கேண்மின் என்றான். (௫௩)

கணையுலாம் சிலையினீர் காக்குனர் இன்மையேனும்
இணையிலாள் தன்னை நாடற்கேயன செய்தற்கேற்றும்
புணையிலாதவற்கு வேலை போக்கரிதன்னதே போல்
துணையிலாதவற்கும் இன்னா பகைப்புலம் தொலைத்து நீக்கல். (௫௪)

பழிப்பறு நிலைமை ஆண்மை பகர்வதென் பதுமபீடத்
தழிப்பெருந் தகைமைசான்ற அந்தணன் உயிர்த்த எல்லாம்
அழிப்பதற்கொருவனான அண்ணலும் அறிதிர் அன்றே
ஒழிப்பருந் திறல் பல்பூதகணத்தொடும் உறையும் உண்மை. (௫௫)

ஆயது செய்கை என்பதறத் துறை நெறியின் எண்ணித்
தீயவர்ச் சேர்க்கிலாது செவ்வியோர்ச் சேர்த்துச் செய்தல்
தாயினும் உயிர்க்கு நல்கும் சவரியைத் தலைப்பட்டன்னாள்
ஏயதோர் நெறியின் எய்தி இரலையின் குன்றம் ஏறி. (௫௬)

கதிரவன் சிறுவனான கனகவாள் நிறத்தினானை
எதிரெதிர் தழுவி நட்பின் இனிதமர்ந்தவனின் நீண்ட
வெதிர் பொருந் தோளினானை நாடுதல் விழுமிதென்றான்
அதிர்கழல் வீரர் தாமும் அன்னதே அமைவதானார். (௫௭)

ஆனவன் தொழுது வாழ்த்தி அந்தரம் எழுந்து போனான்
மான அக்குமரர் தாமும் அத்திசை வழிக்கொண்டேகிக்
கானமும் மலையும் நீங்கிக் கங்குல் வந்திறுக்கும் காலை
யானையின் இரட்டை என்ன மதங்கனதிருக்கை சேர்ந்தார். (௫௮)

கக - வது. கவந்தன் படலம் முற்றும். ௫௮ திருவிருத்தம். [௲௱கக]

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

௧௨ - வது. சவரிபிறப்புநீங்குபடலம்.

கண்ணியதருநற்கொத்தகற்பகத்தருவும்என்ன
உண்ணியநல்கும்செல்வம்உறுநறும்சோலைஞாலம்
எண்ணியஇன்பம்அன்றித்துன்பங்கள்இல்லையான
புண்ணியம்புரிந்தோர்வைகும்துறக்கமேபோன்றதன்றே. (௧)

அன்னதாம்இருக்கைநண்ணிஆண்டுநின்றரைவில்காலம்
தன்னையேநினைந்துநோக்கும்சவரியைத்தலைப்பட்டன்றாட்
இன்னுரைஅருளித்தீதின்றிருந்தனைபோலும்என்றான்
முன்னிவந்திகுறுவென்றெண்ணலாவதோர்மூலம்இல்லான். (௨)

ஆண்டவன்அன்பின்ஏத்திஅழுதிழிஅருவிக்கண்ணள்
மாண்டதென்மாயப்பாசம்வந்ததுவரம்பில்காலம்
பூண்டமாதவத்தின்செல்வம்போயதுபிறவிஎன்பாள்
வேண்டியகொணர்ந்துநல்கவிருந்துசெய்திருந்தவேலை. (௩)

ஈசனும்கமலத்தோனும்இமையவர்யாரும்எந்தை
வாசவன்தானும்இண்டுவந்தனர்மகிழ்ந்துநோக்கி
ஆசறுதவத்திற்கெல்லைஅணுகியதிராமற்காய
பூசனைவிரும்பிஎம்பால்போதிஎன்றுபோனார். (௪)

இருந்தனன்எந்தைநீஇண்டெய்துதிஎன்றுதன்மை
பொருந்திடஇன்றுதான்என்புண்ணியம்பூத்ததென்ன
அருந்தவத்தரசிதன்னைஅன்புறநோக்கிஎங்கள்
வருந்துறுதுயரந்தீர்த்தாய்அம்மனைவாழிஎன்றார். (௫)

அனகனும்இளையகோவும்அன்றவண்உறைந்தபின்றை
வினையறுநோன்பினாளும்மெய்ம்மையின்நோக்கிவெய்ய
துனைபரித்தேரோன்மைந்தன்இருந்தவத்துளக்கில்குன்றம்
நினைவரிதாயதீக்கொத்தநெறிஎலாம்நினைந்துசொன்னாள். (௬)

வீட்டினுக்கமைவதானமெய்ந்நெறிவெளியிற்றாகக்
காட்டுறும்அறிஞர்என்னஅன்னவள்கழறிற்றெல்லாம்
கேட்டனன்என்படன்றோகேழ்வியாற்செவிகள்முற்றும்
தோட்டவர்உணர்வின்உண்ணும்அமுதத்தின்சுவையாய்நின்றான்.

பின்னவள்உழன்றுபெற்றயோகத்தின்பெற்றியாலே
தன்னுடல்துறந்துதான்அத்தனிமையின்இனிதுசார்ந்தாள்
அன்னதுகண்டவீரர்அதிசயம்அரவின்றெய்திப்
பொன்னடிக்கழல்களார்ப்பப்புகன்றமாநெறியிற்போனார். (௮)

தண்ணெடுங்கானுங்குன்றுந்திசைகளுந்தவிரப்போனார்
மண்ணிடைவைகல்தோறும்வரம்பிலாமாக்கள்ஆடக்
கண்ணியவினைகள்என்னுங்கட்டழல்கதுவலாலே
புண்ணியம்உருக்கிற்றன்னபம்பையாம்பொய்கைபுக்கார். (௯)

௧௨ - வது. சவரிபிறப்புநீங்குபடலம்முற்றும் ஆக திருவிருத்தம். [௲௨௱]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஆரணியகாண்டம்

முற்றும்.

பக்கம்.	படல அகராதி.	பாட்டு.
௧௫	௩ - வது .... அகத்தியப்படலம்	௫௯
௱௰௧	௰ - வது .... அயோமுகிப்படலம்	௱௧
௪௭	௬ - வது .... கரன்வதைப்படலம்	௱௯௨
௱௪௪	௧௧ - வது .... கவந்தன்படலம்	௫௮
௨௰	௪ - வது .... சடாயுகாண்படலம்	௪௮
௱௰	௯ - வது .... சடாயுவதைப்படலம்	௨௨௫
௯	௨ - வது .... சரபங்கர்பிறப்புநீங்குபடலம்	௪௬
௱௫௨	௧௨ - வது .... சவரிபிறப்புநீங்குபடலம்	௯
௨௯	௫ - வது .... சூர்ப்பணகைப்படலம்	௱௪௨
௭௧	௮ - வது .... மாரீசன்வதைப்படலம்	௨௫௧
௧	௧ - வது .... விராதன்வதைப்படலம்	௭௧

ஆரணியகாண்டம் - க இ படலம் - கக இ - திருவிருத்தம். ௲௨௱
அயோத்தியாகாண்டம் - க இ படலம் - க௨ இ திருவிருத்தம். ௲௨௱௮
பாலகாண்டம் - க இ படலம் - ௨௩ இ - திருவிருத்தம். ௲௪௱௧௭

ஆக காண்டம் - ௩ இ படலம் - ௪௩ இ திருவிருத்தம். [௩௮௨௫]

ஆரணியகாண்டத்தில்.

பிழைபாடும் திருத்தமும்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௫	௩	௨	நல	நல்
௩௧	௬	௩	நாம்	நாம
௪௬	௫	௩	தோன்றின்	தோன்றினின்
௭௯	௦	௨௫	௭ - வது	௬ - வது
௸	௦	௨௭	௮ - வது	௭ - வது
௮௰	௭	௨	கரண்டி	காண்டி
௮௫	௫	௧	பிதுலே	பிதிலே
௮௬	௩	௩	நெரடி	நொடி
௮௯	௨	௪	கராம்	காரம்
௱௩	௦	௯	௮ - வது	௭ - வது
௸	௦	௧௧	௯ - வது	௮ - வது
௱௧௭	௭	௧	மீளர	மீளா
௸	௸	௪	இறுததான்	இறுத்தான்
௱௨௫	௧	௧	மறிதது	மறித்து
௱௨௮	௩	௩	தடுத்னை	தடுத்தனை
௱௩௧	௦	௧௭	௯ - வது	௮ - வது
௸	௦	௧௯	௰ - வது	௯ - வது
௱௪௰	௮	௨	வரல்	வால்
௱௪௨	௪	௪	மேல	மேல்
௱௪௪	௦	௧௩	௰ - வது	௯ - வது
௸	௦	௧௫	௧௧ - வது	௰ - வது
௱௪௬	௩	௨	மூககி	மூக்கி
௱௪௮	௫	௪	பேணித	பேணித்
௱௫௰	௧	௩	வாங்குகி	வாங்குதி,
௱௫௯	௩	௧	கரக்கு	காக்கு
௸	௦	௨௯	௧௧ - வது	௰ - வது
௱௫௨	௦	௧	௧௨ - வது	௧௧ - வது